

ஆரண்ய காண்ட
ஆய்வு
முனைவர் சுந்தர சண்முகனார்
வர்த்தமானன் பதிப்பகம்

# ஆரணிய காண்ட ஆய்வு

உரிமை:
ஆசிரியர்

ஆராய்ச்சி அறிஞர்

**முனைவர் சுந்தர சண்முகனார்**

தமிழ்ப் பேரவைச் செம்மல்

(மதுரை காமராசர் பல்கலைக் கழகம்)

புதுச்சேரி - 11

வானதி பதிப்பகம்

13. தீனதயாளு தெரு

தி. நகர், சென்னை-17.

முதல் பதிப்பு: மே, 1993

1993 ஆம் ஆண்டு புதுவைக் கம்பன் கழக
விழாவில் வெளியிடப் பெற்றது.

ஏ. திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. **37.00**

அச்சகம்:

சபாநாயகம் பிரிண்டர்ஸ்
73-A, கீழரதவீதி
சிதம்பரம் -608 001 போன்: 2350

# பதிப்புரை

அழியா வரம் பெற்ற அருமைத் தாய்மொழிக்குக் கம்பர் பெருமான் வழங்கிய ஒப்பற்ற காப்பிய அணி கம்ப இராமாயணம். வடமொழியில் இராம காதையை வால்மீகி முனிவர் படைத்தார். அதை அடிப்படையாகக் கொண்டு கம்பர் தமது இராம காதையைப் படைத்திருப்பினும், மூலத்திலிருந்து கம்பர் பல இடங்களில் மாற்றங்கள் செய்துள்ளார்.

ஆறு காண்டங்களாகத் தமது காப்பியத்தைச் சிறப்புமிக அமைத்துள்ள கம்பர் பெருமானின் மொழிப் புலமை, கற்பனைத்திறன், சொல்லாட்சி, வடிவமைப்பு, புராணஅறிவு, பொதுநோக்கு, கதை அமைக்கும் திறன் போன்றவற்றை உணர்ந்தால் சுவைக்காத தமிழர் இருக்கமாட்டார்.

ஆறு காண்டங்களுள் ஒன்றான ஆரணிய காண்டம் என்னும் பகுதியிலிருந்து தேர்ந்தெடுத்த பாடல்களோடு, ஏனைய தமிழ் இலக்கிய நூல்களில் உள்ள பொருத்தமான சில செய்யுட்களையும் உலகியல் நடைமுறைகள் சில வற்றையும் ஒப்புமைப்படுத்தி, முனைவர் திரு. சுந்தர சண்முகனார் ஆரணிய காண்ட ஆய்வு என்னும் இந்நூலைப் படைத்துள்ளார். கம்பரது கவித்திறத்தை உரைத்துப் பார்த்து, உண்மையை உணர வைத்து உச்சி முகர்ந்து பாராட்ட வைத்துள்ளார் ஆசிரியர். நம் குழந்தையின் அருமை பெருமையை நம்மிடமே எடுத்துச் சொல்லி நம்மையே வியப்புக்கு உள்ளாக்குகிற உத்தி, இதில் பாராட்டு முகமாய்க் கையாளப்பட்டுள்ளது.

இந்நூலை வெளியிட உதவிய புதுவைக் கம்பன் கழகத் தாருக்கும் அதன் செயலாளரான கம்பவாணர் திரு அ. அருணகிரி அவர்கட்கும் நூலாசிரியர் அவர்கட்கும் அழகுற அச்சிட்டுத் தந்த சிதம்பரம் சபாநாயகம் அச்சகத்தினருக்கும் உளமார்ந்த நன்றி உரியது.

அன்புடன்

**வானதி ஏ. திருநாவுக்கரசு**

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | விராதன் வதைப் படலம் | ... | 9 |
| 2. | சரபங்கன் பிறப்பு நீங்கு படலம் | ... | 29 |
| 3. | அகத்தியப் படலம் | ... | 42 |
| 4. | சடாயு காண் படலம் | ... | 73 |
| 5. | சூர்ப்பணகைப் படலம் | ... | 91 |
| 6. | கரன் வதைப் படலம் | ... | 148 |
| 7. | மாரீசன் வதைப் படலம் | ... | 174 |
| 8. | சடாயு உயிர் நீத்த படலம் | ... | 209 |
| 9. | அயோமுகிப் படலம் | ... | 251 |
| 10. | கவந்தன் வதைப் படலம் | ... | 271 |
| 11. | சபரி பிறப்பு நீங்கு படலம் | ... | 281 |
| | கருத்து வழங்கிய கருவூலங்கள் | ... | 289 |

# ஆசிரியர் கருத்துரை

கம்பரின் பால காண்டம், அயோத்தியா காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம் என்னும் நான்கு காண்டங்கட்கும் இதற்குமுன் திறனாய்வு எழுதியுள்ளேன் - அவற்றை வானதி பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

## ஊக்குவிப்பு

நான்கு நூல்கட்கும் நேரிலும் மடல் வாயிலாகவும் பெரிய பாராட்டு கிடைத்தது. கம்ப ராமாயணத்தின் மற்ற காண்டங்கட்கும் திறனாய்வு எழுதுமாறு அன்பர்கள் பணித்தார்கள். எனவே, இப்போது இந்த 'ஆரணிய காண்ட ஆய்வு' என்னும் நூலை எழுதியுள்ளேன். திறனாய்வு இப்படித்தான் இருக்கவேண்டும் என எவரும் திட்டவட்டமாகக் கூறமுடியாது. தமிழ் எம். ஏ. தேர்வுக்கு யான் படித்தபோது, விருப்பப் பாடமாக 'இலக்கியத் திறனாய்வு' என்னும் பாடத்தைத்தான் எடுத்துக் கொண்டேன். திறனாய்வு பற்றிய சில நூல்களை யான் படித்துள்ளேன். இங்கே என்னால் இயன்றதைச் செய் துள்ளேன்.

## கம்ப ராமாயணப் பதிப்புகள்

கம்ப ராமாயண ஓலைச் சுவடிகள் இருநூற்றுக்கும் மேல் உள்ளன. இந்நூலைப் பலர் பதிப்பித்துள்ளனர். பதிப்புக்குப் பதிப்பு வேறுபாடுகள் உள்ளன. அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பில், முதலில் சொற்களைப் பிரிக்காத பாடல் வடிவமும் அதையடுத்துச் சொற்களைப் பிரித்த

பாடல் வடிவமும் தரப்பட்டுப் பின்பு உரை வரையப் பட்டுள்ளது. இந்தப் பதிப்பையே யான் பின்பற்றியுள்ளேன்.

மலரை இதழ் இதழாகப் பிய்த்தும் கசக்கியும் நுகர்வது பொருந்தாது என்பது அடியேனும் அறிந்த செய்தியே. இருப்பினும், எளிய நடையில் புதுக்கவிதைகள் புறப்பட்டு விட்டதாலும், பிரித்து அமைக்காத மரபுப் பாடல்கள் பலருக்கு மயக்கம் தருவதாலும், யான் சில இடங்களில் பிரிக்காமலும், கடினமான இடங்களில் பிரித்தும் பாடல் களை அமைத்துள்ளேன். இந்த வகையில், அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்புக்கு யான் நன்றிக்கடன் உடையேன்.

**இலக்கணக் குறிப்புகள்**

இடையிடையே இலக்கணக் குறிப்புகள் தந்தால் பாடலின் சுவை குறைந்து விடும் என்பது ஒரு கருத்து. பாடலைப் புரிந்து கொண்டால்தானே சுவைக்க முடியும். எனவே, பாடலைப் புரிந்து கொள்ளவும் சுவைக்கவும் செய்ய உதவும் ஒரு சில இலக்கணக் குறிப்புகளையே அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தந்துள்ளேன்.

**காண்டங்கள்**

கம்ப ராமாயணத்தில் பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என ஆறு பிரிவுகள் உள்ளன. இந்த ஆறனுள் இங்கே எடுத்துக்கொண்டிருப்பது ஆரணிய காண்டம் ஆகும்.

பாலகாண்டம் பருவத்தால் பெற்ற பெயர். அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம் ஆகிய மூன்றும் செயல் நிகழ்ந்த இடத்தால் பெற்ற பெயர்களாகும். சுந்தர காண்டம் செயல் நிகழ்த்தியவரின் பெயரால் பெற்ற பெயராகும். யுத்த காண்டம் செயலால் பெற்ற பெயராகும்.

இந்தப்பெயர்கள் வால்மீகியால் தரப்பட்டவையே. வால்மீகி தம் காண்டங்களின் உட்பிரிவுகட்குச் சருக்கம் என்னும் பெயர் தந்துள்ளார். கம்பர் காண்டங்களின் உட்பிரிவு கட்குப் படலம் என்னும் பெயர் தந்துள்ளார். அண்ணா மலைப் பல்கலைக் கழகப் பதிப்பின்படி, இந்த ஆரணிய காண்டத்தில் பதினொரு படலங்கள் உள்ளன.

**கம்பரும் வால்மீகியும்**

வால்மீகி ராமாயணத்தின் வழிநூலே கம்ப ராமாயணம்; எனினும், கம்பர் வால்மீகியினும் சிற்சில வேறுபாடுகள் கொண்டுள்ளார். அடிப்படையான பெரிய வேறுபாடாவது: வால்மீகி இராமனையும் சீதையையும் மக்கள் போல்கொண்டு அதற்கேற்பக் கதையை அமைத்துச் சென்றுள்ளார். கம்பரோ இருவரையும் திருமால் — திருமகள் ஆகியோரின் தெய்வப் பிறவிகளாகக் கொண்டு அதற்கேற்பக் கதையை அமைத்துச் சென்றுள்ளார்.

கதையின் இடையிடையே இருவர்க்கும் சிறுசிறு மாறு பாடுகள் பற்பல உண்டு. வால்மீகி சொன்னதைக் கம்பர் விட்டிருப்பார் — வால்மீகி சொல்லாததைக் கம்பர் சொல்லி யிருப்பார். புனைவுகளில் இருவர்க்கும் இடையே ஏற்றத் தாழ்வுகள் இருக்கும். ஒரு செய்தியையே வால்மீகி ஒருவித மாகவும் கம்பர் வேறுவிதமாகவும் சில இடங்களில் கூறி யுள்ளனர். ஆரணிய காண்டத்தில் இருவரும் மாறுபடும் இடங்களைக் குறிப்பிடலாம் என முதலில் எண்ணினேன். ஆனால், இதனால் கம்பர் பாடல்களில் உள்ள தெய்வத் தன்மையோடு கூடிய நயமும் சுவையும் கெட்டுவிடும் என்று பின்னர் எண்ணி வேறுபாடுகளைக் குறிப்பிடாமல் விட்டு விட்டேன். ஒரு வரலாற்றையன்று — ஒரு கதை வடிவில் வரலாற்றைப் பலர் எழுதும்போது, இவ்வாறு சில அல்லது பல வேறுபாடுகள் இடம்பெறுவது இயற்கை.

**கம்பரின் காலம்**

கம்பர் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டினர் எனச் சிலரும் பன்னிரண்டாம் நூற்றாண்டினர் எனச் சிலரும் கூறு கின்றனர். எனது கொள்கை இரண்டாவதேயாகும். (இது குறித்து, எனது 'அம்பிகாபதி காதல் காப்பியம்' என்னும் காப்பிய நூலின் முன்னுரையில் விரிவாக எழுதியுள்ளேன்).

எனது 'ஆரணிய காண்ட ஆய்வு' என்னும் இந்த நூலுக்கும் அன்பர்களின் ஆதரவையும் வாழ்த்தினையும் வணங்கி வேண்டுகிறேன்.

உதவி புரிந்துள்ள புதுவை அரசுக்கும், யான் கம்பராமாயண விளக்கம் எழுதத் தூண்டிய புதுவைப் புலவர் உயர்திரு கம்பவாணர் அ. அருணகிரி அவர்கட்கும், இந்த நூலை நன்முறையில் வெளியிட்ட புத்தகவித்தகர் உயர்திரு வானதி ஏ. திருநாவுக்கரசு அவர்கட்கும் மிக்க நன்றி செலுத்துகிறேன். மற்றும், அச்சிட்டுத் தந்த சிதம்பரம் சபாநாயகம் அச்சகத்தாருக்கும் என் நன்றி உரியது. வணக்கம்.

**சுந்தர சண்முகன்**

# 1. விராதன் வதைப் படலம்

*விராதன் என்னும் அரக்கனை இராமன் கொன்றதைப் பற்றிய படலம் இது.*

*சீதையோடு இராம இலக்குவர் அத்திரி முனிவர் உறையும் பழு மரங்களை உடைய சோலைகள் சூழ்ந்துள்ள காட்டுப் பகுதிக்குள் சென்றனர். பாடல்*

**"முத்து இருத்திய திருத்தியன மொய்ந் நகையோடும்**
**சித்திரக் குனி சிலைக் குமரர் சென்றணுகினர்**
**அத்திரிப் பெயர் அருந்தவர் இருந்த அமைதிப்**
**பத்திரப் பழுமரப் பொழில் துவன்று பழுவம்"** (1)

*மொய்ந்நகை = இது அன்மொழித் தொகையாக, அழகிய பற்களை யுடைய சீதையைக் குறிக்கிறது. முத்துகளைத் திருத்தி வரிசையாக அமைத்து வைத்தாற் போன்றிருக்கும் பற்களை உடையவளாம் சீதை.*

*ஈண்டு அருணகிரிநாதரின்*

**"முத்தைத்தரு பத்தித் திருநகை அத்திக்கு இறை"**

*என்னும் திருப்புகழ்ப் பாடல் பகுதி ஒப்பு நோக்கத் தக்கது. அத்தி = தெய்வயானை. அத்திக்கு இறை = தெய்வயானையின் கணவனாகிய முருகன். பத்தி = வரிசை. திருநகை = அழகிய பற்கள். முத்தைத் தரு பத்தித் திருநகை = முத்துகளை வரிசையாகப் பதித்து வைத்தாற் போன்ற அழகிய பற்கள்.*

*திருப்புகழினும் தெளிவாகத் திருச்சிற்றம்பலக் கவிராயர்*

**"வெண்தரளம் பற்களெனக் கோத்தமைத்த பந்தி"**

என்று கூறியுள்ளார். கவிராயர் பந்தி என்றார் — அருணகிரி நாதர் பத்தி என்றார். இரண்டும் ஒன்றே. சீதையின் பற்கள் இத்தகையனவாம்.

சிலைக்குமரர் = வில் ஏந்திய இராம இலக்குவர். இவர்கள் இருந்த இடம் பழுமரப் பொழில்கள் சூழ்ந்ததாம். பழுவம் = காடு.

**"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்**
**நயனுடை யான்கண் படின்"** (216)

என்னும் குறளால் பழுமரங்களின் பயன் அறிய வரும்.

**தமரெலாம் வரல்**

மூவரும் அத்திரி முனிவரின் அருகு அடைந்தனர். உறவினர் அனைவரும் வரின் ஒருவர்க்கு எவ்வளவு மகிழ்ச்சி உண்டாகுமோ - அவ்வளவு மகிழ்ச்சி அடைந்த அத்திரி, அவர்களை நோக்கி, நீங்கள் இவண் அடைந்தது எளிய செய்தியா? தேவர்கள் அனைவரும் மற்றும் எல்லா உலகத்தவரும் வந்தது போன்ற பெருமைக்கு உரிய அரிய செய்தியல்லவா? எம்மனோருள் யார் செய்த தவத்தாலோ நீங்கள் வந்துள்ளீர்கள் - என உள்ளம் உருகி வரவேற்றார்.

**"குமரர் நீர் இவண் அடைந்துதவு கொள்கை எளிதோ**
**அமரர் யாவரொடும் எவ்வுலகும் வந்த அளவோ**
**எமரின் யார்தவம் முயன்றனர்கள் என்று உருகினன்**
**தமரெலாம் வர உவந்தனைய தன்மை முனிவன்"** (3)

உறவினர் ஒருவர் வந்தாலேயே சில வீடுகளில் கசப்பு அடைவர்; அவர் இன்னொருவரையும் உடன் அழைத்துவரின் நிலைமை என்னாம். அன்றியும் உறவினர் அனைவரும் வரின் என்னாகும். உறவினர் அனைவரும் வர மகிழ்ச்சி யடைவது திருமணம் போன்ற நிகழ்ச்சிகளில் உண்டு.

சிலர் திருமணம் போன்ற நாளில் இன்றி, வெற்று நாளில் பலர் வரினும் மகிழ்வது உண்டு.

அதியமானை ஔவையார் பாடியுள்ளார்: ஒரு நாள் மட்டுமன்று. இருநாள் மட்டுமன்று. பலநாள் வரினும் - அடிக்கடி வரினும் பலரோடு வரினும் உணவு தந்து பரிசளிப்பான்.

முதல்நாள் வாழையிலை - இரண்டாம் நாள் தையல் இலை - மூன்றாம் நாள் கையிலே - என்ற மாதிரியில் இல்லை. பலநாள் பலரோடு செல்லினும் முதல்நாள் போலவே எப்போதும் வரவேற்பான்.

**"ஒருநாள் செல்லலம் இருநாள் செல்லலம்**
**பலநாள் பயின்று பலரொடு செல்லினும்**
**தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ"**

(101: 1, 2, 3)

என்பது, அதியமானை ஔவையார் பாடிய புறநானூற்றுப் பாடல். 'தமரெலாம் வர உவந்தனைய தன்மை' என்னும் பகுதி புறநானூற்றுப் பாடலோடு ஒப்பிடற்பாலது.

மூவரும் வந்தது முனிவர்க்குச் செலவாகத் தெரிய வில்லையாம் - உதவியாக இருந்ததாம். இதைத்தான், "இவண் அடைந்து 'உதவு' கொள்கை" என்பது உணர்த்துகிறது. தேவரும் மற்றும் எவ்வுலகத்தாரும் வந்தால் பெறுவது போன்ற மகிழ்ச்சி உண்டாயிற்றாம்.

'எமரின் யார் தாம் முயன்றனர்' என்பதற்கு, இங்கே உள்ள எங்களைப் போல் வேறு யார் உங்களைப் பெறத் தவம் செய்தனர் - ஒருவரும் இல்லை - எனப் பொருள் கொள்ளலாம். இங்கே 'எமரின்' என்பதில் உள்ள 'இன்' ஐந்தாம் வேற்றுமை உருபு ஒப்புப் பொருளில் உள்ளது. எங்களைக் காட்டிலும் வேறு யார் செய்தனர்? எனப்

பொருள் கொள்ளின், 'இன்' எல்லைப் பொருளில் உள்ள தாகும். எம்மவருள் யார் செய்த தவமோ என்றும் பொருள் கொள்ளலாம்.

அரிய பெரிய மேலோர் வரின், யார் செய்த தவத்தாலோ அவர் வந்ததாகக் கூறும் மரபு உண்டு. தயரதன் அவைக்கு விசுவாமித்திரர் வந்தபோது அவரை வரவேற்றுத் தயரதன் கூறினான்:

ஐய, நீ இங்கே எழுந்தருளியது இந்த நாடு செய்த தவமும் அன்று - யான் செய்த தவமும் அன்று - தொன்று தொட்டு வரும் என் குலம் செய்த தவமாகும்.

**"நிலம்செய் தவம் என்றுணரின் அன்று, நெடியோய் என்**
**நலம்செய் வினை உண்டெனினும் அன்று நகர்நீ யான்**
**வலம்செய்து வணங்க எளிவந்த இது முந்து என்**
**குலம்செய் தவம் என்று இனிது கூற முனிகூறும்"**

என்பது பாடல். இராமன் மேலும் காட்டிற்குள் சென்ற போது வழியில் சுதீக்கணன் என்னும் முனிவன் கண்டு போற்றி, ஐய! நீ இவண் வந்தருள யான் என்ன தவம் செய்தேனோ – என்று கூறி வியக்குகிறான்.

**"...... இவண் செல்வ நீ**
**எய்த யான் செய்தது எத்தவம் என்றனன்"**

என்பது அகத்தியப் படலப் பாடல் (29) பகுதியாகும்.

அத்திரி முனிவரும் அவர் மனைவி அனசூயையும் மூவரையும் வரவேற்றுப் போற்றி விருந்தோம்பினர். பின் அனசூயையின் அறிவிப்பின்படித் தண்டக வனத்தில் தங்கினர். பத்து ஆண்டுகள் தங்கியிருந்த இடம் இந்தத் தண்டக வனந்தான்.

**தடை**

அங்கே, விராதன் என்னும் கொடிய அரக்கன் மரங்கள் பெயரவும் மலைகள் பிளக்கவும் இடியேறு போல அதிர முழங்கிக் கொண்டு இராம இலக்குவர் எதிரில் வந்து அவர்கள் செல்லுவதைத் தடுக்கலானான்.

> **"சார வந்து அயல் விலங்கினன் மரங்கள் தரையில்**
> **பேர வன்கிரி பிளந்து உக வளர்ந்து இகல்பெறா**
> **வீர வெஞ்சிலையி னோர்எதிர் விராதன் எனுமக்**
> **கோர வெங்கண் உருமேறன கொடுந்தொழிலினான்"**

கோரமான கண்கள் உடையவனாம் விராதன். ஒருவரின் கண்களைக் கொண்டே அவர் இயல்பை உணர்ந்து கொள்ளலாம். 'அவன் முழிக்கிற முழியைப்பாரு' (முழி-விழி), திருடனை அரச விழி விழிக்கச் சொன்னால் அவன் எப்படி விழிப்பான்' என்னும் பழமொழிகள் இதனை வலியுறுத்தும்.

உரும் ஏறு=பெரிய இடி. இடி போன்றவனாம். இடி தாக்கியவர் அழிவர் என்பது தெரியும். இவன் செயலும் அன்னதே.

இவன் நடந்துவரும் அதிர்ச்சியால் மரங்கள் விழுகின்றன- மலைகள் பிளந்து சிதறுகின்றன - எனில் மாந்தரின் நிலை என்ன? இராம இலக்குவர் இதுவரையும் போர் புரியாத கொடிய மற வில் உடையவர்கள். அவர்கட்கு வேலைதர வந்தான் விராதன்,

**சீதையைப் பற்றல்**

கோரப் பற்களும் குகைபோன்ற வாயும் உடைய விராதன் நில்லுங்கள்-நில்லுங்கள் என்று சொல்லிக் கொண்டே சீதையை ஒரு கையால் பற்றிக் கொண்டு வான் வழியே செல்லலானான்.

**"நில்லும் நில்லும் எனவந்து நிணமுண்ட நெடுவெண்
பல்லும் வல்லெயிறும் மின்னு பகுவாய் முழைதிறந்து
அல்லி புல்லும் மலர் அன்னம் அனையாளை ஒருகைச்
சொல்லும் எல்லையின் முகந்து உயர் விசும்பு
தொடா"**(19)

*நிணம்=ஊன். நிணம் உண்ட நீண்ட வெண்பல் என்றது கோரப் பற்களை. அடுத்து வல் எயிறு என்றது மற்ற பற்களை. பற்கள் மின்னுகின்றனவாம். பிளந்த வாயாகிய குகையைத் திறந்தபடி வந்தான்.*

*அல்லி புல்லும் மலர் அன்னம் அனையாள் சீதை. அல்லி=அக இதழ். அல்லி புல்லும் மலர்=இங்கேதாமரை. தாமரையில் அன்னம் இருக்கும்.*

**"அன்னச் சேவல் அயர்ந்து விளையாடிய
தன்னுறு பெடையைத் தாமரை அடக்க"**

*என்னும் மணிமேகலைப் பகுதி காண்க. அன்னம் அனைய வள் சீதை. தாமரையில் இருக்கும் திருமகளாகிய சீதை எனினும் ஆம்.*

*ஒரு திரை ஓவியத்தில் (சினிமாவில்), முரடன் ஒருவன் குதிரைமேல் இருந்தபடியே கீழே இருந்த கதைத்தலைவியை ஒரு கையால் பற்றித் தூக்கிக் கொண்டு சென்ற காட்சி நினைவிற்கு வருகிறது. இது அன்று தொட்டு இன்று வரை ஏன் என்றும் இருக்கும் போலும். 'வரலாறு மீண்டும் திரும்பும்' என்னும் கருத்துடைய* 'History repeats itself' *என்னும் ஆங்கில மொழி என்றும் நிலைபேறு (சிரஞ்சீவித்துவம்) உடையது போலும். சீதைக்கே இந்த நிலை எனின், மற்ற பெண்களின் நிலைமை என்ன? அதுதான்-இது இன்றைக்கும்* (1993) *நடக்கிறது.*

*'வாய்ப் பேச்சு வாயில் இருக்கும்போதே இது நடந்து விட்டது' என்று கூறும் உலக வழக்காறு ஒன்று உண்டு.*

'வாய்ப்பேச்சு வாயில் இருக்கும் போதே' என்றால், வாயிலிருந்து ஒரு சொல் வெளி வருவதற்குள்ளேயே-என்பது கருத்தாகும். அதைத்தான், 'சொல்லும் எல்லையில்' என்றுள்ளார் கம்பர். அதாவது மிகவும் விரைவில் நிகழ்ந்து விட்டதாம்.

முகந்து உயர் விசும்பு தொடர-உடல் முழுவதையும் தூக்கிக் கொண்டதை 'முகந்து' என்பது அறிவிக்கிறது. ஒரு பொருளை முகத்தல் அளவையால் முகப்பது எளிது. அவ்வாறு எளிதில் பற்றிக் கொண்டானாம். பற்றி விண்ணில் மிக்க உயரத்தில் சென்றானாம். நிற்கவோ, மீளவோ இல்லை-தொடர்ந்து போய்க் கொண்டே யிருந்தான் என்பதைத் 'தொடர' என்பது தெரிவிக்கிறது.

**அடா—அடா:**

வில்லும் அம்பும் தாங்கிய இராமலக்குமணர் விதுரனை விளித்து, அடா வஞ்சகா - இங்கே திரும்பிப்பார் எங்கே போகிறாய் என்று கூவினர்:

> ''வாளி **தாங்கிய விலங்கையவர்** வஞ்சனையடா
> மீடி **எங்கு அகறி என்பது விளம்ப அவனும்'' (2)**

இவர்கள் கூவியதும் விராதனும் குரல் கொடுக்கிறான். 'அடா' வுக்குப் பதில் 'அடா' போடுகிறான்:

அடா மானிடரே! நான்முகன் தந்த அருளிப் பாட்டால் (வரத்தால்) நான் சாகமாட்டேன். உலகமெல்லாம் என்னை எதிர்க்கினும் படைக்கலம் இன்றியே யான் வெல்ல முடியாத நிலை என்பதில்லை – உங்களுக்கு உயிர் தந்தேன் - சீதையை என்னிடம் விட்டுவிட்டு ஓடிப் போங்களடா - என்றான்.

**"ஆதி நான்முகன் வரத்தின் எனது ஆவி அகலேன்**
**ஏதி யாவதும் இன்றி உலகு யாவும் இகலின்**
**சா்தியாதனவும் இல்லை உயிர் தந்தனென் அடா**
**போதிர் மாது இவளை உந்தி இனிது என்று புகல"** (21)

விராதனுக்கு உயிர் போகப் போகிறது - அவன் இராம இலக்குமணர்க்கு உயிர் தந்ததாகக் கூறியுள்ளமை எதிர் மாறான வியப்பு. ஒரு படைக்கலமும் இல்லாமலேயே உலகம் முழுவதையும் அழித்து விடுவானாம். ஆனால் இவன்தான் அழியப் போகிறான். 'கெடுவான் கேடு நினைப்பான்' என்னும் முதுமொழி உண்மைதான்!

இராமாயணம் தொடர்பாக ஒரு கதை சொல்வதுண்டு. அனுமனை இராவணனது எதிரில் கொண்டு போய் விட்டதும், இராவணன் அனுமனை நோக்கி 'நீ யாரடா' என்று வினவினானாம். அதற்கு அனுமன், இராம தூதனடா - அடா - அடா - என்று மூக்கின்மேல் ஒவ்வொரு விரலாக ஏற்றி வைத்துக் கொண்டு பல அடா போட்டா னாம். அதேபோல், இராம இலக்குமணர் போட்ட அடாவுக்கு விராதனும் அடா போட்டுள்ளான். இது ஒரு கவிச் சுவை.

அடா இகழ்ச்சிக் குறிப்பு. பாடலில் அடா ஒன்றாகவும் அதாவது ஒருமையாகவும், போதிர் என்பது பன்மையாகவும் இருப்பினும், உலகியலில் பலரை நோக்கிப் 'போங்கடா' என்று சொல்வது போன்ற வழக்காறாகும் இது.

**மென் முறுவல்**

பிறரது அறியாமையைக் காணினும், சிரிப்பு வரும் என்று தொல்காப்பியர் கூறியுள்ளபடி, விராதன் சொன்னதைக் கேட்டதும், இராமன், இகழ்ச்சி தோன்ற, வெண்ணிலவின் ஒளி போன்ற மென்மையான புன்முறுவல் பூத்தானாம்.

**"வீரனும் சிறிது மென் முறுவல் வெண்ணிலவு உக"** (22)

முறுவல் நிலவாக உருவகப்படுத்தப் பட்டுள்ளது. கிட்கிந்தா காண்டத்திலும் முறுவல் நிகழ்ந்துள்ளது. இராமனது வலிமையை ஆய்வு செய்யச் சுக்கிரீவன் மரா மரத்தை அம்பெய்து துளைக்கும்படிக் கேட்டபோது இராமன் புன்முறுவல் பூத்தானாம்:

**"மறு இலான் அது கூறலும் வானவர்க்கு இறைவன்**
**முறுவல் செய்து"** (4 : 2)

என்பது பாடல் பகுதி. மறு இலான் சுக்கிரீவன். வானவர்க்கு இறைவன் இராமன். மற்றோரிடத்திலும்

**"சிறந்தது போரே என்றான் சேவகன் முறுவல் செய்தான்"** என்று கூறப்பட்டுள்ளது.

**வஞ்சகப் பூசை**

அனைவரும் அஞ்சத் தக்க ஒலியெழும்படி இராமன் வில்லின் நாணை அதிர்த்து ஒலியெழச் செய்தான். கேட்ட விராதன் சிறிது கலக்கமுற்றுப் பின் பூனை வாயில் அகப் பட்ட கிளிபோல் கதறிக் கொண்டிருந்த சீதையை விடுத்து, ஏதோ எண்ணிப் பார்த்து இராமனோடு போர் தொடுக்க லானான்.

**"வஞ்சகக் கொடிய பூசை நெடு வாயில் மறுகும்**
**பஞ்சரக் கிளி எனக் கதறு பாவையை விடா**
**நெஞ்சு உளுக்கினன் எனச் சிறிது நின்று நினையா**
**அஞ்சனக் கிரி அனான் எதிர் அரக்கன் அழலா"** (24)

பூசை = பூனை. பஞ்சரம் = கூண்டு. விடா = விட்டு; அழலா = அழன்று – இவை இரண்டும் 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சம். அஞ்சனக் கிரி அனான் = கரிய மலை போன்ற இராமன். பாவை = சீதை.

விராதனுக்குப் பூனையும் சீதைக்குக் கிளியும் ஒப்பாக்கப் பட்டுள்ளன. பூனையின் வஞ்சகச் செயல்களை விரிக்கின் விராதனின் பொல்லாக் குணத்தை விவரித்த தாகும்.

வஞ்சகனை 'ஆழ்சாடபூதி' என்பர்; அவனுக்குப் பூனையை ஒப்புமையாகக் கூறுவர். 'பூனை போல்' அவன் ஓர் 'ஆழ்சாடபூதி', (கால்நகங்களை மடக்கிக் கொண்டு நடந்து வருவது தெரியாமல் வரும்) பூனையைப் போல் தெரியாமல் வந்து திருடிக்கொண்டு போய் விட்டான்', 'பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்' என்னும் உலகியல் மொழிகள் பூனையின் பொல்லாமையை விளக்கும்.

பாரதிதாசன் இசையமுது என்னும் நூலில் பூனையைப் பாடியிருப்பது வருக:—

**"பூனை வந்தது பூனை — இனிப்**
**போனது தயிர்ப் பானை!**
**பட்டம் பகல்தான் இருட்டும் — அது**
**பானை சட்டியை உருட்டும்**
**சிட்டுக் குருவியும் கோழியும் இன்னும்**
**சின்ன உயிரையும் வஞ்சித்துத் தின்னும்**
**பூனை வந்தது பூனை"**

என்பது காண்க. வீட்டில் வளர்க்கும் விலங்குகளுள் ஆடும் மாடும் மரக்கறி உணவே கொள்ளும்; நாயும் பன்றியும் மரக்கறி, ஊன் இரண்டும் உட்கொள்ளும். பூனையோ, மரக்கறி உணவைத் தொடாது. புலால் தொடர்பான உணவுப் பொருளையே உண்ணும். பால் மாட்டிலிருந்து கிடைப்பதால் பாலும் தயிரும் புலால் உணவே. சிலர் நோன்பு நாளில் பால் அருந்துவதில்லை. பூனை பால் தயிர், இவை கலந்த சோறு போன்றவற்றையும், சிட்டுக் குருவி, கோழி, கிளி முதலியவற்றையும் உண்ணும். இதிலிருந்து, பூனை கொலைக்கார விலங்கு என்பது புலனாகும்,

எனவே, விராதனுக்குப் பூனையை ஒப்பிட்டது சாலப் பொருந்தும். கிளியை வளர்த்துப் பூனை கையில் கொடுத்தது போல' என்பது ஒரு பழமொழி. இங்கே இராமன் விராதனாகிய பூனையின் கையிலிருந்து சீதையாகிய கிளியை மீட்டு விட்டான்.

**பகலில் விண்மீன்:**

இராமனுக்கும் விராதனுக்கும் கடும்போர் மூண்டது. விராதன் இராமன்மேல் மூவிலைவேலை எறிந்தானாம்.

**'தீமுகத் திரிசிகைப்படை திரித்து எறியவே'** (25)

தீ கக்கும் படையாம். திரிசிகை = மூன்று தலை. அதாவது, சூலம் மூன்று இலைவடிவாக இருக்கும். அந்த மூவிலை வேலாகிய சூலம் திரிசிகைப்படை எனப்பட்டது.

இராமன் சூலத்தைத் தடுக்க அதன்மேல் வலிமையுள்ள ஓர் அம்பு எய்தான். உடனே, சூலம், இன்றோடு அரக்கர் குலம் அழிந்தது என்பதற்கு அறிகுறியாக, பகலிலேயே வானத்திலிருந்து விண்மீன்கள் விழுவதுபோல, இரண்டாகப் பிளக்கப்பட, திசைக்கு அப்பால் வெகுதொலைவில் போய் இருதுண்டங்களும் விழுந்தனவாம்:

**''இற்றது இன்றொடு இவ் வரக்கர் குலம் என்று பகலே**
**வெற்ற விண்ணிடை நின்று நெடுமீன் விழுவ போல்**
**சுற்றமைந்த சுடர் எஃகம் அது இரண்டு துணியா**
**அற்ற கண்டம் அவை ஆசையினது அந்தம் உறவே''**
(27)

நெடுமீன் = விண்மீன் எஃகம் = சூலம். கண்டம் = துண்டம். ஆசை = திசை. அந்தம் = இறுதி.

பகலில் விண்மீன்கள் விழுந்தால் தீய நிமித்தமாம். அரக்கர் குலம் அழிந்து போவதற்கு அறிகுறி இது என்று

எண்ணுமாறு, சூலத்தின் துண்டங்கள் விண்மீன்கள் போல் விழுந்தனவாம்.

இது, சிலப்பதிகாரம் - வழக்குரை காதையிலும் அறிவிக்கப்பட்டுள்ளது. பாண்டியன் நெடுஞ்செழியனின் மனைவியாகிய கோப்பெருந்தேவி, இறப்பதற்கு முன்னாள் இரவில், ஞாயிற்றை இருள் விழுங்க, இந்திர வில் இரவில் தோன்ற, பகலில் விண்மீன்கள் விழுந்ததாகக் கனவு கண்டதாகத் தோழியிடம் கூறினாளாம்:

**''கதிரை இருள் விழுங்கக் காண்பன் காண் எல்லா!**
**விடுங்கொடி வில் இர, வெம்பகல் வீழும்**
**கடுங்கதிர் மீன் இவை காண்பென்காண் எல்லா''**
(5, 6, 7)

எல்லா = தோழியே. 'வெம்பகல் வீழும் மீன்' என்பது காண்க. தோழியிடம் கூறிய இக்கனவைக் கணவன் பாண்டியனிடமும் பிறகு கூறினாலாம்.

**''இரவு வில்விடும், பகல் மீன் விழும்**
**இருநான்கு திசையும் அதிர்ந்திடும்**
**வருவதோர் துன்பம் உண்டு**
**மன்னர்க்கி யாம் உரைத்தும்''** (11, 12)

என்பது பாடல் பகுதி. இவ்வாறு கம்பரும் குறிப்பிட்டுள்ளார்.

பின்னர் விராதன் மலைகளையும் மராமரத்தையும் இராமன் மேல் எறிந்தான். அவை துகளாக்கப் பட்டன. பின் இராமன் விராதனின் தோளிலும் மார்பிலும் வலிமை மிக்க பன்னிரண்டு அம்புகளை எறிந்தான்.

முள்ளம் பன்றி, அம்புபோல் நீட்டிக் கொள்ளும் தன் முள் போன்ற மயிர், பகை விலங்குகளின் மேல் சென்று

தைக்கும்படித் தன் உடலை உதறுவது போல், விராதன் தன் உடலில் தைத்துள்ள அம்புகள் கீழே விழும்படித் தன் உடலை உதறினானாம்.

**"மொய்த்த முள்தனது உடல்தலை முளைத்த முடுகிக்**
**கைத்தவற்றின் நிமிரக் கடிது கன்றி விசிறும்**
**எய்த்த மெய்ப்பெரிய கேழலென எங்கும் விசையின்**
**தைத்த அக்கணை தெறிப்ப மெய்சிலிர்த்து உதறவே"** (32)

இது சுவையான உவமையாகும். போர் மறவர்களின் உடம்பு முழுதும் அம்பு தைத்துக் கொண்டிருப்பது நடக்கக் கூடியதே.

தன் கையில் இருந்த வேலை எதிரியின் யானை மேல் போட்டு வெறுங்கையோடிருந்த மறவன், பின் தன் உடம்பில் தைத்துள்ள வேலைப் பிடுங்கிக் கையில் வைத்துக் கொண்டு, போருக்கு வருபவர்கள் யாரும் வரலாம் என்று கூறி மறச் சிரிப்பு சிரித்தான் என்னும் கருத்துடைய-

**"கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்தன்**
**மெய்வேல் பறியா நகும்"** (774)

என்னும் குறள் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது.

மற்றும், உடம்பு முழுதும் அம்புகளால் தைக்கப் பட்டிருக்கும் ஒருவன், கீழே விழுந்து கிடக்கும் காட்சி, அம்புப் படுக்கையின்மேல் படுத்திருப்பதுபோல் தோற்றம் அளித்ததாம்.

இப்படி ஒரு செய்தி புறப்பொருள் வெண்பா மாலையில் கூறப்பட்டுள்ளது. போரி மறவனின் உடலில் மிகுந்த அம்புகள் தைத்திருப்பதால், அவன் கீழே விழுந்தும், அவன் நிலமகளின் மார்பைத் தழுவாதபடி அம்புகள் காத்தனவாம். அதாவது, அவன் மண் மேல் உடல் படும்படி விழ முடிய வில்லை என்பது கருத்து. பாடல்:

**கொளு**

**"விலங்கமருள் வியல் அகலம்**
**வில்லுதைத்த கணைகிழிப்ப**
**நிலந்தீண்டா வகைப் பொலிந்த**
**நெடுந்தகை நிலை உரைத்தன்று"**

**வெண்பா**

**"வெங்கண் முரசதிரும் வேலமருள் வில்லுதைப்ப**
**எங்கும் மருமத் திடைகுளிப்பச்-செங்கண்**
**புலவாள் நெடுந்தகை பூம் பொழில் ஆகம்**
**கலவாமல் காத்த கணை"** (7 : 23 : 1, 2)

*இவ்வாறு விராதன் மேலும் அம்புகள் தைத்தன. பீழ்சுமர் அம்புப் படுக்கையில் கிடந்தார் என்பது பாரதக் கதை.*

**விராதனின் சோர்வு**

*அம்புகள் தைத்ததும், அருவி பாயும் மலை போல் குருதி ஆறு பாயும் உடம்பினனாய், மிடுக்கு வலிமை கெட்டு உணர்வு சோர்ந்தான்:*

**"அருவி பாயும் வரைபோல் குருதி ஆறு பெருகிச்**
**சொரிய வேக வலிகெட்டு உணர்வு சோர்வுறுதலும்"** (33)

*மலையினும் விராதன் உடல் சிறியது; ஆனால், பெரிய மலையினின்றும் வருவது சிறிய அருவி; விராதன் உடலிலிருந்து பாய்வதோ குருதி ஆறு. அருவியினும் ஆறு பெரியதன்றோ? இராமனின் அம்பின் ஆற்றலைப் புலப் படுத்தும் அரிய உவமை இது.*

**விராதனும் கருடனும்**

*விராதன் பல அருளிப்பாடுகள் (வரங்கள்) பெற்றுள்ள மையால் படைக்கலம் ஏவி அவனைக் கொல்லல் அரிது; அவன் தோள்களின்மேல் ஏறி வாள் கொண்டு அவனுடைய*

ணக்களை வெட்ட வேண்டுமென எண்ணி இராம இலக்குமணர் அவன் தோள்களின் மேல் தாவி ஏறிக் கொண்டனர்.

நாடோறும் மேரு மலையைச் சுற்றும் ஞாயிறும் திங்களும் போன்ற இராம இலக்குமணரைச் சுமந்து கொண்டு விராதன் 'கர கர' என்று சுழன்றான்.

இராம இலக்குமணரைத் தோள்களின்மேல் சுமந்து கொண்டிருக்கும் விராதனுக்குக் கம்பர் ஒரு புராண வரலாற்று உவமை கூறியுள்ளார்.

கண்ணபிரானின் பேரனாகிய அனிருத்தன், தன் மகளாகிய உழ்சாவைக் காதலித்ததற்காக வாணன் என்னும் அரக்கன் அவனைச் சிறையில் அடைத்து விட்டானாம். வாணனை வென்று அனிருத்தனைச் சிறை மீட்பதற்காகக் கண்ணபிரானும் (கிருஷ்ணனும்) பலராமனும் பறவை அரசனாகிய கருடன்மேல் ஏறி வந்தார்களாம். கண்ணனையும் பலராமனையும் தோளில் சுமந்த கருடனைப் போல, இராம இலக்குமணரை விராதன் தோளில் சுந்திருந்தானாம்- என்பது கம்பரின் பொருத்தமான உவமையாகும்.

**''முந்து வாள் முகடுற கடிது முட்டி முடுகி**
**சிந்து சோரியொடு சாரிகை திரிந்தனன் அரோ**
**வந்து மேருவினை நாள்தொறும் வலம் செய்து உழல்வோர்**
**இந்து சூரியரை ஒத்து இருவரும் பொலியவே''** (36)

**''சுவண வண்ணனொடு கண்ணன் இருதோள்கள் பொலிய**
**அவண விண்ணிடை நிமிர்ந்து படர்கின்றவன் அறம்**
**சிவண அன்ன சிறைமுன் அவரொடு ஏகு செலவத்து**
**உவணன் என்னும் நெடு மன்னவனும் ஒத்தனனரோ''** (37)

என்பன பாடல்கள்.

இராமன் வரலாற்றுக்குப் பிற்பட்டது கண்ணன் வரலாறு என்னும் கால இடைவெளி பாராது, தோளில் சுமந்த ஒரு செயலைப் பொதுத் தன்மையாகக் கொண்டு அமைதி காணல் வேண்டும்.

இந்த உவமையில் மற்றொரு பொருத்தமும் உள்ளது. இராமனும் கண்ணனும் கரு நிலத்தினர்; இலக்குமனும் பலராமனும் கரு நிறத்திற்கு மாறுபட்ட நிறத்தினர்; அதாவது, இலக்குவன் பொன்னிறத்தனாம் - பலராமன் வெண்ணிறத்தனாம்; ஐரோப்பியரை நாம் வெள்ளைக்காரர் என்கிறோம் - உண்மையில் வெள்ளையாகவா இருக்கிறார்கள்? ஒருவகைப் பொன்னிறமாகத்தானே உள்ளனர்!

கீழே விழுந்துள்ள சீதை, இராம இலக்குமணரை விராதன் தூக்கிச் செல்வதைப் பார்த்து, சேவல் அன்னத்தைப் பிரிந்த பெடை அன்னம்போல் தவித்தாள்.

**"சீதை சேவல் பிடியுண்ட**
**சிறை அன்னம் அனையாள்"** (38)

**நகும்**

பின்னர்ச் சீதை விராதனை நோக்கி, அவர்களை விட்டு விடு - என்னை வேண்டுமானால் விழுங்கி விடு என்றாள். சீதையின் துயரைக் கண்ட இலக்குவன், இனியும் காலம் கடத்தக் கூடாது என இராமனிடன் கூறினான். இராமன் சிரித்தபடியே, இவனைக் கொல்லுதல் எளிய செயலே - அது ஒரு பெரிதன்று என்றான்.

**"சாகல் இன்று பொருளன்று**
**என நகும் தகைமையோன்"** (41)

இராமன் எளிமை பற்றிச் சிரிக்கும் இயல்பு முன்னரும் கூறப்பட்டுள்ளது.

## தேளும் கோளும்

பின்னர் இராமன் விராதனின் இரண்டு தோள்களையும் வாளால் வெட்டி விட்டான். மூவரும் மேலிருந்து கீழே தரைக்கு வந்து விட்டனர். விராதன் வெகுண்டு தேள் போன்ற தன் புருவங்களை நெரித்துக்கொண்டு, ஞாயிற்றையும் திங்களையும் விழுங்க வரும் பாம்புக் கோளைப் போல் (கேதுவைப் போல்) இராம இலக்குமணரை வீழ்த்த ஓடி வந்து நெருங்கினான்.

**"தோளிரண்டும் வடிவாள் கொடு துணித்து விசையான்**
**மீளி மொய்ம்பினர் குதித்தலும் வெகுண்டு புருவத்**
**தேளிரண்டும் நெரியச் சினவு செங்கண் அரவக்**
**கோள் இரண்டு சுடரும் தொடர்வதின் குறுகலும்"** (42)

மீளி மொய்ம்பினர் = இராம இலக்குமணர் = வலிமையர். அரவக் கோள் = பாம்புக் (கேது) கோள். இரண்டு சுடர் = ஞாயிறும் திங்களும்.

புருவத்தைத் தேளாக உருவகித்துள்ளார். புருவத்திற்குப் புருவவில் - வில்புருவம் என்று ஒப்புமை - உருவகம் கூறுவது மரபு. கம்பர் தேளைக் குறிப்பிட்டிருப்பது ஒரு புதுமை. ஆடவன் - அதிலும் அரக்கன் புருவம் தேள் போன்றிருப்பதில் வியப்பில்லை. இப்போது கூட - அரக்கர் அல்லர் - நம் மக்களின் ஆடவர், முகத்தில் என்னென்னவோ செய்து வைத்துக்கொண்டிருப்பதைக் காணலாம்.

ஞாயிறு பிடிப்பு (சூரிய கிரகணம்), திங்கள் பிடிப்பு (சந்திர கிரகணம்) ஆகிய காலத்தில் பாம்புக்கோள் ஞாயிற்றையோ - திங்களையோ பிடித்து விழுங்குவதாக எண்ணிக்கொண்டிருந்தது அந்தக் காலம். இதனால், ஞாயிற்றுக்கும் திங்களுக்கும் பாம்புக் கோள் பகை என்பர்.

குற்றாலக்குறவஞ்சி என்னும் நூலில், கதைத் தலைவி யாகிய வசந்த வல்லி, தன்னைச் சுட்டு வருத்தும் திங்களை நோக்கிக் கூறுவதாகச் சுவையான செய்தி ஒன்றுள்ளது.

திங்களே! என் தலை முடியையும் அதன் பின்னே தொங்கும் பின்னலையும் (சடையையும்) பார்த்து உன் பகையாகிய பாம்பை நான் வைத்திருப்பதாக எண்ணி என்னைச் சுடுகின்றாயா? அல்லது என் முகமதியை அந்தப் பாம்பு விழுங்கப் பார்க்கிறது என்று எண்ணி அந்தப் பாம்பைச் சுடுகின்றாயா? ஐயோ, ஒன்றும் புரியவில்லையே! இது பாம்பு அன்று - பின்னல் சடை - இனிமேலாயினும் தலைவனை அடைய முடியாத என்னைச் சுடுவதை நிறுத்துவாயாக:-

**"நாகம் என்றே எண்ண வேண்டாம் வெண்ணிலாவே இது**
**வாகு குழல் பின்னல் கண்டாய் வெண்ணிலாவே"**

என்பது பாடல் பகுதி.

இவ்வாறு எண்ணும் மரபை ஒட்டி, 'அரவக்கோள் இரண்டு சுடரும் தொடர்வதின் குறுகலும்' என்று பாடியுள்ளார் கம்பர்.

தங்களை நோக்கி வந்த விராதனை இராமன் எட்டி உதைத்து ஒரு குழியில் தள்ளினான். உடனே விராதன் அரக்க உரு நீங்கித் தெய்வ வடிவுடன் தோன்றினான்; இராமனைப் பலவாறு புகழ்ந்து போற்றினான். அவற்றுள் ஒன்று வருமாறு:

**தாயும் கன்றும்**

வாராது வந்தவனே! தாயை அறியாத கன்றோ - கன்றை அறியாத தாயோ இல்லை என்பர். ஆனால், தாயாகிய நீ, கன்றுகளாகிய எல்லா உயிர்களையும் பற்றி

அறிந்துள்ளாய் - கன்றுகளாகிய உயிர்கள் உன்னை அறிய முடியவில்லை. இது என்ன மாயமோ - என்று போற்றினான்.

**"தாய் தன்னை அறியாத கன்றில்லை தன் கன்றை**
**யாயும் அறியும், உலகின் தாயாகின், ஐய,**
**நீயறிதி எப்பொருளும் அவை உன்னை நிலை அறியா**
**மாயை இது என்கொலோ வாராதே வரவல்லாய்"** (54)

ஒரு கன்றைப் பல ஆன் குழாத்துள் விட்டாலும் அது, தன் தாயைத் தேடி அடைந்து விடுமாம்:

**"பல் ஆவுள் உய்த்து விடினும் குழக்கன்று**
**வல்லதாம் தாய்நாடிக் கோடலை"** (101)

என்னும் நாலடியார்ப் பாடல் பகுதி ஒப்பு நோக்கத்தக்கது.

'வாராது வந்த மாமணி' என்பது போல் சொல்வ தெல்லாம், கம்பரின் 'வாராதே வர வல்லாய்' என்னும் தொடரை அடியொற்றியே யாம். கம்பரும், நம்மாழ்வார் அருளிய திருவாய் மொழியில் உள்ள

**"வாரா தாய்போல் வருவானே"** (6:10:9)
என்னும் தொடரை அடியொற்றிக் கூறியிருக்கலாம்.

இவ்வாறு பலவாறாகத் திருமாலின் புகழ்களை எல்லாம், அவரது தெய்வப் பிறவியாகிய இராமன் மேல் ஏற்றிப் புகழ்ந்து போற்றினான்.

**விராதன் வரலாறு**

தன் வரலாறு கேட்ட இராமனுக்கு விராதன் கூற லானான். யான் குபேரன் அவையிலே தும்புரு என்னும் பெயருடன் குபேரனின் உதவியாளனாக இருந்தேன். இடையிலே அரம்பையோடு தொடர்பு கொண்டதால், குபேரன் என்னை அரக்கனாகுக என வைவு (சாபம்) இட்டான். இராமன் திருவடி பட்டதும் மீண்டும் பழைய

வடிவம் பெறுவாய் என்று வைவு விடுவிப்பும் தெரிவித்தான். அதன்படி, யான் கொடிய கிலிஞ்சன் அரக்கனுக்கு மகனாகப் பிறந்து கொடுமைகள் புரிந்து வந்தேன். இப்போது உன் திருவடி பட்டதும் பழைய வடிவம் தாங்கினேன் என்று கூறி, இராமனை வணங்கிச் சென்றான்.

பின் சீதையோடு இராம இலக்குவர் அந்த வனத்தில் உள்ள ஒரு சோலையில் தங்கினர்.

# 2. சரபங்கன் பிறப்பு நீங்கு படலம்

*சரபங்கன் என்னும் முனிவன் பிறப்பு நீங்கி வீடுபேறு அடைந்ததைப் பற்றிய தாதலின் இப்படலம் இப்பெயர்த் தாயிற்று.*

வேறு ஓலைச் சுவடிகள் சிலவற்றில், சரவங்கன் பிறப்பு நீங்கு படலம், சரபங்கப் படலம், சரபங்கர் பிறப்பு நீங்கு படலம் என்றெல்லாம் பெயர்கள் உள்ளன.

விராதன் சென்ற பின், சீதையுடன் இராம இலக்கு மணர் சரபங்க முனிவர் இருந்த குடிலை நெருங்கினர்.

**கண்ணாயிரம்**

அப்போது ஆயிரம் கண்கள் உடைய இந்திரனும் அங்கு வந்தான்.

**"செவ்வேலவர் சென்றனர் சேரல் உறும்**
**அவ்வேலையின் எய்தினன் ஆயிரமாம்**
**தவ்வாது இரவும்பொலி தாமரையின்**
**வெவ்வேறு அலர் கண்ணினன் விண்ணவர் கோன்"**(2)

செவ் வேலவர் = இராம இலக்குமணர். ஆயிரமாம் கண்ணினன் = விண்ணவர்கோன் = இந்திரன்.

இந்திரனுக்கு ஆயிரம் கண்கள் உண்டான வரலாறு தெரிந்ததே. பொதுவாகக் கண்ணுக்குத் தாமரை மலரை ஒப்பிடுவது மரபு. தாமரை மலர் இரவில் குவிந்துவிடும். ஆனால் இந்திரன் கண்களோ மூடுவதில்லை. ஆதலின், இரவிலும் மலர்ந்திருக்கும் தாமரை இருந்தால் எப்படியோ அப்படிப்பட்ட கண்களை உடையவன் என்றார்.

இரவிலும் மலர்ந்துள்ள தாமரை இல்லை; எனவே, இல்லாத பொருளை உவமித்தமையின் இந்த அமைப்பு "இல் பொருள் உவமை அணி" எனப்படும். வடமொழியில் அபூத உவமை என்பர் இதனை.

இந்திரனுக்குக் கண் ஆயிரம் இருப்பதால், அவன் பெயராக மக்கள் கண்ணாயிரம் எனப் பெயர் வைத்துக் கொள்வது உண்டு.

**அழகுப் பரிமாற்றம்**

இந்திரன் உடலில் அணிகலன்கள் அணிந்துள்ளான். அணிகலன்களின் ஒளி அவன் உடலில் பட்டுச் சுடர் வீசுகிறதாம். அதே நேரத்தில், அவனது உடலின் மின்னல் போன்ற ஒளி அணிகலன்களுக்கு மேலும் ஒளி தருகின்றதாம்:

> "... ... ... **அணி பூண் ஒளிமேல்**
> **மின்னின் செறி கற்றை விரிந்தன போல்**
> **பின்னிச் சுடரும் பிறழ்பேர் ஒளியான்"** (3)

என்பது பாடல் பகுதி.

உலகில் சிலர் அணிகலன் அணிந்து கொள்ளின் மிகவும் அழகா யிருப்பர். இவர்களால் அணிகலன்கள் பெருமை பெறுகின்றன. சிலர் அணிகள் அணிந்தாலும் அவ்வளவாக எடுப்பா யிருப்பதில்லை. இவர்களால் அணிகலன்கள் பெருமை இழக்கின்றன.

அணிகலன் அணியாமலேயே இயற்கையாய் அழகாய் இருப்பவர்கள் அணிகலன் அணிந்து கொண்டால் மேலும் அழகாய் இருப்பர். இங்கே, அணிகலனும் அணிபவர்களும் அழகுப் பரிமாற்றம் செய்து கொள்வதைக் காணலாம். இந்திரனது நிலை இதுதான்.

அழகுக்கு அழகு செய்வதாகவும் அணிக்கு அணி பூட்டுவதாகவும் புலவர்கள் பலர் கூறியுள்ளனர்.

கம்பரோ, சீதைக்குத் தோழியர் அணிகலன்கள் அணிந்ததை,

> **"அமிழ்தினைச் சுவை செய்தென்ன அழகினுக்கு**
> **அழகு செய்தார்"** (1:22:3)

என்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், வள்ளுவரோ, சொந்த நகை உள்ளபோது இரவல் நகை ஏன்? - என்று வினவுகிறார்:

> **"பிணையேர் மடநோக்கும் நாணும் உடையாட்கு**
> **அணிஎவனோ ஏதில தந்து"** (1089)

சொந்த நகை என்பது இயற்கை அழகு. மேலே அணிந்து கொள்வது அயலான - இரவலான நகையாகும். இந்திரன் சொந்த நகையோடு இரவல் நகையும் அணிந் துள்ளான் என்பது கருத்து.

**பிரமனது அழைப்பு:**

வந்த இந்திரன் சரபங்க முனிவரை அணுகி, அவரை நான்முகன் அழைத்து வரச் சொன்னதாகக் கூறினான். முனிவர் அதற்கு உடன்படாமல், நான்முகனது சத்திய லோகத்தை அடைந்து பெறும் இன்பத்தை யான் விரும்ப வில்லை எனக் காரணத்துடன் கூறலானார்:

**மறுகா நெறி:**

குறிப்பிட்ட சிறிது காலம் மட்டுமன்றி நிலை திரியாமல் என்றும் நிலைத்திருப்பதும், குறையாததும், விரியாததும், தன்மை வேறுபடாததும், பூதம் எல்லாம் அழியினும் தான் அழியாததுமான இருப்பிடத்தை அடையவே யான் விரும்புகிறேன்:

**"சிறு காலையிலா நிலையோ திரியா**
**குறுகா நெடுகா குணம் வேறுபடா**
**உறுகால் கிளர் பூதமெலாம் உகினும்**
**மறுகா நெறி எய்துவென் வானுடையாய்"** (20)

வான் உடையாய் = வானுலகின் தலைவனாகிய இந்திரனே! மறுகா நெறி என்பது உயரிய வீடு பேறே. இப்பாடலால், நான்முகன் உலகத்து இன்பம் சிறிது காலமே கிடைக்கும் - அவ்வப்போது மாறுபடும் - நிலைமை வேறு படும் - ஒரு காலத்தில் அழியும் - என்னும் செய்தி அறியப் படும். (இந்தக் கால அமைச்சரவை போல).

மற்றும், வீடுபேற் றுலக இன்பம், என்றும் அழியாதது - மிகுதலோ குறைதலோ இல்லாமல் என்றும் ஒரே தன்மைத்து - உயர் தரத்தினின்றும் வேறுபடாதது - எது அழியினும் தான் அழியாதது - என்னும் செய்தியும் இப் பாடலால் தெரியவரும்.

**ஆன் ஏறும் அரி ஏறும்:**

இவ்வாறு இவர்கள் இருவரும் உரையாடிக் கொண் டிருந்த போது, குடிலின் வெளியில் இந்திரனது ஐராவதம் என்னும் யானை நின்றிருந்ததைப் பார்த்த இராமன் உள்ளே இந்திரன் உள்ளான் என்பதை உய்த்துணர்ந்து கொண்டான்.

உலகியலிலும், ஒருவரின் ஊர்தியைக் கொண்டு இன்னார் உள்ளே போயிருக்கிறார் என வெளியில் இருப்பவர்கள் பேசிக் கொள்வது உண்டல்லவா?

பின்னர் இராமன் சீதையையும் இலக்குவனையும் சோலையின் புறத்தே இருக்கச் செய்து தான் மட்டும் தனியாக ஆன் ஏறு போலவும், அரி ஏறு போலவும் பொழிலினுள் புகுந்து சரபங்கரின் குடிலை நோக்கிச் சென்றான்.

**"மானே அனையாளொடு மைந்தனை அப்**
**பூநேர் பொழிலின் புறனே நிறுவா**
**ஆனேறு என ஆள் அரியேறு இது எனத்**
**தானே அவ் அகன் பொழில் சாருதலும்"** (23)

மானே அனையாள் = மான் போன்ற சீதை. மருளும் சீதைக்கு மருளும் மான் ஒப்புமை. மைந்தன் = இலக்கு மணன்; இது இரு பொருள் உடையது. மைந்து என்றால் வலிமை; வலிமை உடைய இலக்குமணன் மைந்தன் எனப் பட்டான். இது ஒரு பொருள். மற்றொன்று: இலக்குமணன் சீதையைத் தாயாக மதித்து மகனைப்போல் பணிந்து பணிவிடை செய்து வருகிறான் ஆதலின், மகன் என்ற பொருளும் மைந்தனுக்குக் கொள்ளலாம்.

ஆன் ஈறு= காளை மாடு. அரி ஏறு = ஆண் சிங்கம். இரண்டு உவமைகள் ஏன்? இராமன் மிடுக்காக நடை போடு வதற்கு ஆன் ஏறு உவமை. ஈண்டு,

**"புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்**
**ஏறுபோல் பீடு நடை"** (59)

என்னும் குறளில் உள்ள 'ஏறு போல் பீடு நடை' என்னும் பகுதி ஒப்பு நோக்கத் தக்கது. ஏறு என்பதற்குச் சிங்கம் எனப் பரிமேழலகரும், ரிழ்சபம் எனப் பரிதியாரும் உரை கூறியுள்ளனர். ஏறுநடை = அசைவும் தலை எடுப்பும் பொருந்திய நடை என்று மணக்குடவர் விளக்கம் அளித்து உள்ளார். சேவல் கோழி தலையை ஆட்டி அசைத்து நிமிர்த்தியும் அமர்க்களமாக நடப்பதாக ஆங்கிலப் பாடல் ஒன்றில் கூறப்பட்டுள்ளதும் இங்கே 'பீடுநடை' யோடு ஒத்து நோக்கத் தக்கது.

அடுத்தது சிங்கநடை. மற்ற விலங்குகள் பின்னால் உள்ளதைப் பார்க்க வேண்டுமெனில் உடல் முழுவதையும்

திருப்பிப் பார்க்க வேண்டும். சிங்கமோ, பின்னால் உள்ளதைப் பார்க்க உடலைத் திருப்ப வேண்டியதில்லை; தலையை மட்டும் திருப்பிப் பின்னால் உள்ளதைப் பார்க்க முடியும். இதற்கு அரிமா நோக்கு - சிங்க நோக்கு என்று பெயர் கூறுவர். ஒரு பாடலில், நடுவில் இருந்து கொண்டு முன் பகுதிக்கும் பின் பகுதிக்கும் கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளும்படியாக உள்ள சொல்லின் அமைப்புக்குச் 'சிங்கநோக்கு' எனப் பெயர் கூறுவர். பவணந்தி முனிவர் இதை 'அரிமா நோக்கம்' (18) என நன்னூலில் குறிப்பிட்டுள்ளார்.

இராமன் முன்னால் வழியைப் பார்த்துச் செல்வதல்லாமல், சீதையின் காவல் கருதிப் பின்னாலும் திரும்பித் திரும்பிப் பார்த்துச் செல்கிறான். விராதன் என்னும் அரக்கன் சீதையைத் தூக்கிச் சென்றதை அதற்குள் மறந்து விட முடியாதன்றோ?

**கால் நோவும் கை நோவும் :**

இராமனைக் கண்ட இந்திரன், இராமனைத் திருமாலாகவே மதித்து பலவாறு போற்றி வணங்கினான். இராமன் வில் ஏந்திக் கால் நோவத் தேவரைக் காக்க வந்தானாம். கை நோவக் கடல் கடைந்து அமிழ்தம் அளித்தானம்.

> **"சிலை ஏந்தி வந்து எம்மைச் சேவடிகள் நோவக்**
> **காவது ஒழியின் பழி பெரிதோ"** (28)
>
> **"தடவரையே மத்தாகத் தாமரைக் கை நோவ**
> **ஆழி கடைந்து அமுதம் எங்களுக்கோ ஈந்தாய்"** (29)

இங்கே திருமால் கடல் கடைந்ததாகக் கூறப்பட்டுள்ளது. கம்பரே வாலிவதைப் படத்தில் வாலி கடல் கடைந்து தேவர்க்கு அமிழ்தம் ஈந்ததாகத் தாரையின் வாயிலாகச் சொல்லியுள்ளார்.

சிவபிரகாச அடிகளார், பிரபுலிங்க லீலை என்னும் நூலில், சிவன் கடைந்ததாகச் சொல்லியுள்ளார்.

பின்னர் இந்திரன் சரபங்க முனிவரிடம் விடைபெற்றுச் சென்று விட்டான்.

**மகிழ்ச்சிக் கண்ணீர் :**

முனிவன் இந்திரன் போய்விட்டதன் காரணத்தை உணர்ந்து,பின் இராமனை வரவேற்றான். இராமன்வணங்க, உணர்ச்சி மேலீட்டால் அழுதான் முனிவன்.

**"போனவன் அகநிலை புலமையின் உணர்வான்**
**வானவர் தலைவனை வரவெதிர் கொண்டான்**
**ஆனவன் அடிதொழ அருள்வர அழுதான்.**
**தானுடை இடவகை தழுவினன் நுழைவான்"** (33)

போனவன் = இந்திரன். வானவர் தலைவன் = திருமாலாகிய இராமன். ஆனவன் = இராமன். தழுவினன் நுழைவான் = சரபங்க முனிவன்.

போன இந்திரனது அகநிலையாவது: இராமன் வந்திருப்பதால் நாம் இங்கே இருப்பது சரியன்று- என்பதாகும். அதைப் புலமையால் உணர்வது என்பது, நுண்ணறிவால்-உய்த்துணர்வால் அறிவது. ஆனவன் அடி தொழ = இராமன் முனிவனின் அடிகளைத் தொழுதான். தான் செல்ல விரும்பும் திருமாலின் இடத்தை விரும்பி நுழைய இருப்பவனாகிய முனிவன், அருள் வர அழுதான் = அன்பு மிக-அருள் பெருக அழுதான்.

முனிவன் அழுதான் என்றால், கட்டாயம் கண்ணீர் வந்திருக்கும். இது மகிழ்ச்சிக் கண்ணீராகும். இதனை வட மொழியில் 'ஆனந்த பாஷ்யம்' என்பர். ஆங்கிலத்தில் Tears of Joy எனலாம். இது இன்னும் உயர்தமிழ் நடையில் 'உவகைக் கலுழ்ச்சி' எனப்படும்.

தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில், இழிவு, இழப்பு, செய்வதறியாத சோர்வு நிலைமை, வறுமை என்னும் நான்கின் காரணமாக அழுகை வரும் என்று கூறியுள்ளார்.

**"இழிவே இழவே அசைவே வறுமையென**
**விளிவில் கொள்கை அழுகை நான்கே"** (5)

என்பது நூற்பா. செயிற்றியனார் தம்பெயர் கொண்ட செயிற்றியம் என்னும் நூலில், அழுகையின் காரணமாகப் பல கூறியுள்ளார் அவையாவன:

**"கவலை கூர்ந்த கருணையது பெயரே**
**அவலம் என்ப அறிந்தோர் அதுதான்**
**நிலைமை இழந்து நீங்கு துணை உடைமை**
**தலைமை சான்ற தன்நிலை அழிதல்**
**சிறையணி துயரமொடு செய்கையற்றிருத்தல்**
**குறைபடு பொருளொடு குறைபாடு எய்தல்**
**சாபம் எய்தல் சார்பிழைத்துக் கலங்கல்**
**காவல் இன்றிக் கலக்கமொடு திரிதல்**
**கடகம் தொட்டகை கயிற்றொடு கோடல்**
**முடியுடைச் சென்னி பிறர் அடியுறப் பணிதல்**
**உளைப்பரி பெருங்களிறு ஊர்ந்த சேவடி**
**தளைத்து இளைத்து ஒலிப்பத் தளர்ந்தவை**
**நிறங்கிளர் அகல நீறொடு சேர்த்தல்**
**மறங்கிளர் கயவர் மனந்தவப் படைத்தல்**
**கொலைக் களம் கோட்டம் கோல் முனைக் கவற்சி**
**அலைக்கண் மாறா அழுகுரல் அரவம்**
**இன்னோர் அன்னவை இயற்பட நாடித்**
**துன்னினர் உணர்க துணிவறிந் தோரே**
**இதன்பயம் இவ்வழி நோக்கி**
**அசைந்தன ராகி அழுதல் என்ப"**

என்பது செயிற்றிய நூற்பா. இதில் கூறப்பட்டுள்ள அனைத்தும், தொல்காப்பியர் கூறியுள்ள நான்கனுள் அடங்கும் என உரையாசிரியர் இளம்பூரணர் கூறியுள்ளார். இது சரியே.

தொல்காப்பியத்தின் மற்றோர் உரையாசிரியராகிய பேராசிரியர் என்பவர், தொல்காப்பியர் கூறாத உவகை (மகிழ்ச்சி) என்பதும் அழுகையின் காரணம் எனத் தமது உரையில் கூறியுள்ளார். இதற்கு எடுத்துக் காட்டாகப் புறநானூற்றுப் பாடல் ஒன்றின் பகுதியையும் தமது உரையில் தந்துள்ளார். இப்பகுதி உள்ள அடிகளையும் பழைய உரையாசிரியர் எழுதியுள்ள உரையையும் இனிக் காண்பாம்:

> **"எறிந்து களம்படுத்த ஏந்துவாள் வலத்தர்**
> **எந்தையொடு கிடந்தோர் எம் புன்தலைப் புதல்வர்**
> **இன்ன விறலும் உளகொல் நமக்கென**
> **மூதில் பெண்டிர் கசிந்து அழ..."**

என்பது பாடல் பகுதி. (19:12-15) இனிப் பழைய உரை வருமாறு:-

"போர்க் களத்தின் கண்ணே வீழ்த்த ஏந்திய வாள் வெற்றியை உடையோராய் எம்தலைவனோடு கிடந்தார்- எம்முடைய புல்லிய தலையையுடைய மைந்தர், இப் பெற்றிப்பட்ட வென்றியும் உளவோ நமக்கு என்று சொல்லி முதிய மறக்குடியில் பிறந்த பெண்டிர் இன்புற்று உவகையால் அழ" — என்பது உரைப்பகுதி.

எனவே, இந்தப் பாடலில் உவகைக் கலுழ்ச்சி இடம் பெற்றிருப்பதைக் காணலாம். (கலுழ்ச்சி = அழுகை).

மாணிக்க வாசகரும் திருவாசகம் அன்னைப் பத்தில் மகிழ்ச்சிக் கண்ணீர் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்; வருக வருக:-

**"கண் அஞ்சனத்தர் கருணைக் கடலினர்**
**உள்நின்று உருக்குவர் அன்னே என்னும்**
**உள்நின்று உருக்கி உலப்பிலா ஆனந்தக்**
**கண்ணீர் தருவரால் அன்னே என்னும்"** (2)

என்பது பாடல் பகுதி. உலப்பிலா = அழியாத. ஆனந்தக் கண்ணீர் = மகிழ்ச்சிக் கண்ணீர்.

கம்பர் பாடலில் உள்ள 'அழுதான்' என்பதும் இத்தகைய மகிழ்ச்சிக் கண்ணீரையே குறிக்கிறது.

நாற்பது ஆண்டுகட்கு முன் கடலூரில் நடைபெற்ற ஒரு திருமணத்தில், மணமகன் ஒலி பெருக்கியின் முன்நின்று கொண்டு நன்றி கூறத் தொடங்கியபோது, தந்தையை இழந்த தம்மை வளர்த்துக் கல்வி கற்பித்து ஆளாக்கிய பெரியார் ஒருவர்க்கு அழுது கொண்டே நன்றி கூறினார். இது 'மகிழ்ச்சிக் கண்ணீர்' என்று அவரே கூறிவிட்டார்.

பின்னர் இராமன், சீதை, இலக்குமணன் ஆகிய மூவரையும் முனிவன் அழைக்க, அவர்கள் முனிவனின் குடிலுக்குச் சென்றனர். முனிவன் இராமனுக்குப் பல நல்லுரைகளைக் கூற இருவரும் அளவளாவி யிருந்தனர். ஒரு விதமாக அன்றைய நாள் கழிந்தது.

**ஞாயிறு தோற்றம்**

மறுநாள் காலை ஞாயிறு தோன்றியதைக் கம்பர் பின்வருமாறு உருவகித்துள்ளார். அதாவது, தனது கதிராகிய கையினால், உலகைப் போர்த்தி மூடிக்கொண் டிருந்த இருளாகிய போர்வையை அகற்றினானாம்:

**"அலகிடல் அரியதன் அவிர்கர நிரையால்**
**உலகிடு நிறைஇருள் உறையினை உரிவான்"** (36)

அளவிட முடியாத ஒளியாகிய கையினால் - என்பது முதலடியின் கருத்து. கரம் = கை. உறை = மேல் உறை — போர்வை. தோலை உரிப்பதுபோல் இருளாகிய போர்வையை உரித்தானாம். கதிராகிய கையால் தாமரை மலர்களின் இதழ்களைத் திறந்தான் எனவும் புலவர்கள் கூறியுள்ளனர்: ஞாயிறு தோன்றின் தாமரை மலரு மன்றோ?

**இருவேறு உழவர்கள்**

முனிவன் தன் மனைவியுடன் தீக் குளிக்க விரும்புவதாக இராமனிடம் கூறினான். அதற்கு இராமன், தீக் குளிப்பதற்கு உரிய காரணம் என்ன என வினவினான்:

**"வரிசிலை உழவனும் மறை உழவனை நீ**
**புரிதொழில் எனையது புகலுதி எனலும்"** (38)

என்பது பாடல் பகுதி.

வரி சிலை உழவன் = வில் ஏந்திய இராமன். மறை உழவன் = மறை (வேதம்) ஓதும் முனிவன். வாள் உழவர் - வில் உழவர் என்னும் ஆட்சிகளைக் கம்பர் வேறிடத்தும் கூறியுள்ளார். சிலை உழவு = வில் போர். மறை உழவு = சொல் போர். ஈண்டு,

**"வில்ஏர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க**
**சொல்ஏர் உழவர் பகை"** (872)

என்னும் திருக்குறள் ஆட்சிகள் ஒப்பு நோக்கத் தக்கன.

இதனைச் சிவப்பிரகாச அடிகளார் மிகவும் தெளிவாகப் பிரபுலிங்க லீலையில் கூறியுள்ளார்:

**"சொல்போர் புரிவா நான்மறை**
**ஆறங்கம் உணர்ந்த தொழுகுலத்தோர்**
**வில்போர் புரிவர் நெடியசிலை**
**இராமன் அனைய விறல்வேந்தர்"** (3:15)

என்பது பாடல் பகுதி, கம்பர் இராமனை 'வரி சிலை உழவன்' என்றார். சிவப்பிரகாசர் அதே இராமனைக் குறிப்பிட்டு 'நெடிய சிலை இராமன் அனைய விறல்வேந்தர் வில்போர் புரிவர்' என்று கூறியிருப்பது குறிப்பிடத் தக்கது.

**முனிவன் பதில்**

ஐயனே! ஆயிரக்கணக்கான தவம் புரிந்துள்ளேன். நீ இங்கே வருவாய் என்ற எண்ணம் உண்டு. என் இரு வினைகளும் தீர்ந்தன. இனி எனக்கு எந்த ஒரு வினையும் இல்லை:

**''ஆயிரம் முகமுள தவம் அயர்குவென் யான்**
**நீயிவண் வருதிகொல் எனும் நிலை உடையேன்**
**போயின இருவினை புகலுறு விதியால்**
**மேயினை இனிஒரு வினை இலை விறலோய்''** (30)

ஆயிரம் முகம் உளதவம் = ஆயிரம் விதமான தவம் — பல வகையான தவங்கள். அவற்றுள் சில: நீருக்குள் இருத்தல், நெருப்பிடையே வேகாது இருத்தல், ஒற்றைக் காலில் நிற்றல், புற்றுமாய் மரமுமாய் உற்றிருத்தல், காட்டில் திரிந்திருத்தல், காற்றை மட்டும் புசித்திருத்தல், தாமரை இலையும் தண்ணீரும் போலவும் புளியம்பழமும் மேலோடும் போலவும் உலகோடு ஒட்டியும் ஒட்டாதும் இருத்தல் — முதலியனவாய் இருக்கும் தவங்கள்.

இராமனது வருகையால் நல்வினை, தீவினை என்னும் இரு வினைகளும் போயின வாம். இங்கே,

**''இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு''** (5)

என்னும் குறள் எண்ணத் தக்கது.

முனிவன் மேலும் கூறினான்: பிரமன் தன் இருப்பிடம் அழைத்து வர இந்திரனை அனுப்பினான். நான் என்றும்

நிலையான வீடு பேற்றை விரும்பினேன். எனவே யான் என் மனைவியுடன் தீக்குளிப்பேன் - விடை தருக - எனக் கூறி, மனைவியுடன் தீக்குளித்து இனிப் பிறப்பு இல்லாத வீடு பேற்றை அடைந்தனன்.

**அதின் உயர்வுக் கோட்பாடு**

சரபங்கன் பெற்ற பேறு மிகவும் உயர்ந்தது எனக் கம்பர் சிறப்பிக்கிறார். மாப்பேர் உலகம் முழுவதையும் யாரும் அறிய முடியாத வகையில் தன்னுள் உண்டவனாகிய திருமாலின் தெய்வப் பிறவியாம் இராமனின் பெயரை உணர்ந்து உள்ளத்தில் நினைப்பவர்கள் பெரும் பேறு மிக உயர்ந்தது எனில், அப்பெயரை ஒலித்து உரு ஏற்றுபவர்கள் பெரும் பேறு அதனின் உயர்ந்தது; அங்ஙனமெனில், அந்த இராமனையே உயரிய நிலையில் நேரில் கண்டு போற்றிய வர்களின் பெரும் பேற்றைச் சொல்லுதல் எளிதோ?

**''அண்டமும் அகிலமும் அறிவரு நெறியால்**
**உண்டவன் ஒருபெயர் உணர்குநர் உறுபேறு**
**எண்தவ நெடிது எனில் இறுதியில் அவனைக்**
**கண்டவர் உறு பொருள் கருதுவது எளிதோ''** (44)

உண்டவன் = திருமால்-இராமன். பெயர் உணர்குநர் = பெயரைத் தியானிப்பவர் - சொல்லி உரு ஏற்றுபவர். எண் = அளவில்; தவ நெடிது = மிகவும் உயர்ந்தது. கண்டவரின் பேற்றைச் சொல்லுதல் எளிதில்லை என்றால், நம்மால் அந்தப் பெரிய பேற்றைச் சொல்லி முடியாது - என்பதாம்.

இந்தப் பாடல் 'கை முதிக நியாயம்' அமைந்த பாடலாகும். 'அதுவே அப்படியெனில், மற்றவை பற்றிச் சொல்லவும் வேண்டுமோ-சொல்லி முடியுமோ' என்பதாகக் கூறுவதற்குக் கை முதிக நியாயம் என வடமொழியில் பெயராகும். பெயரை எண்ணுகிற அதனினும் சொல்லி உருவேற்றுவது உயர்வு - அதனினும் நேரில் கண்டு அருள்

பெறுவது மிகவும் உயர்ந்தது என, அதைவிட உயர்வு - அதைவிட இன்னும் உயர்வு என்ற பொருளில் 'அதின் உயர்வு' என்ற பெயரை, (அதைக் காட்டிலும் உயர்வு என்னும் பொருளில்) கை முதிக நியாயம் என்னும் வடமொழிக்கு நேரான கோட்பாட்டுப் பெயராக யான் (சு. ச.) சூட்டியுள்ளேன். அதாவது, கை முதிக நியாயம் என்பதைத் தமிழில் 'அதின் உயர்வுக் கோட்பாடு' எனக் குறிக்கலாம்.

அசாமிளன் என்னும் கொடியவன், தன் மகனுக்குத் தான் இட்டிருக்கும் கடவுள் பெயரால் மகனை அடிக்கடி அழைத்ததன் பயனாக உயரிய நிலையடைந்தானாம். பிள்ளைகளுக்குக் கடவுள் பெயரை வைப்பதின் நோக்கமே இதுதான் எனப் பெரியவர்கள் கூறுவர். சரபங்கன் இராமன் பெயரைச் சொல்வதோடு நேரிலும் கண்ட பெருமைக்கு உரியவனானான்.

# 3. அகத்தியப் படலம்

இராமனும் அகத்தியரும் தொடர்பு கொண்டதைப் பற்றிக் கூறுவதாதலின் இப்படலம் இப்பெயர் தரப்பட்டது.

சரபங்கரின் தவக் குடிலிலிருந்து புறப்பட்ட இராம இலக்குமணர் சீதை ஆகிய மூவரும் பல காடு மலைகளைக் கடந்து தண்டக வனத்தை அடைந்தனர். அங்கிருந்த பாலகில்லர், முண்டர், மோனர் முதலிய தவ முனிவர்கள் வரவேற்றனர்.

இராமனைக் கண்ட முனிவர்களின் மகிழ்ச்சிக்குக் கம்பர் நான்கு விதமான உவமைகளை நயம்பெறக் கூறியுள்ளார். அவை ஒவ்வொன்றாய் வருக:

1. அரக்கர்களின் கொடுமையால் வருந்தும் முனிவர்கள், இராமனைக் கண்டதும், கனல் கக்கும் காட்டில் வற்றிய மரங்கள், அமிழ்தம் கலந்த தண்ணீர் பெற்றால் எவ்வாறு தழைக்குமோ அவ்வாறு உள்ளம் தழைத்து மகிழ்ந்தனராம்.

**''கனைவரு கடுஞ்சினத்து அரக்கர் காய ஓர்**
**வினை பிறிது இன்மையின் வெதும்பு கின்றனர்**
**அனல் வரு கானகத்து அமுது அளாவிய**
**புனல்வர உயிர்வரும் உலவை போல்கின்றார்''** (4)

அரக்கர் காய்வதால் ஒன்றும் இயற்ற முடியாமல் உள்ளனராம் முனிவர்கள். உலவை = வற்றிய மரம்.

2. அச்சத்தால், கடவுள் பெயரைச் சொல்லாமல் அரக்கர்களின் பெயரையே மாறி மாறி உருவேற்றிக் கொண்டிருந்த முனிவர்கள் இராமனைக் கண்டதும் கலக்கம் நீங்கினர். தீ பற்றிய காட்டில் கன்றை விட்டு வந்த தாய்ப்

பசு மீண்டும் கன்றைக் காக்க வரின், தாயைக் கண்டதும் கன்று மகிழ்வது போல, இராமனைக் கண்டதும் முனிவர்கள் உவகை உற்றனராம்.

**"ஆய்வரும் பெருவலி அரக்கர் நாமமே**
**வாய்வெரீஇ அலமரும் மறுக்கம் நீங்கினார்**
**தீவரு வனத்திடை இட்டுத் தீர்ந்ததோர்**
**தாய்வர நோக்கிய கன்றின் தன்மையார்"** (5)

தீ அரக்கர்கள் - தாய்ப்பசு இராமன்-கன்று முனிவர்கள். திருடன் திருடன் என்று கூவுவது போல், அரக்கர் - அரக்கர் என்று முனிவர்கள் பிதற்றுவர் போலும்.

3) தம்மைச் காத்துக் கொள்ளமுடியாத அளவுக்குக் கடுந்தொழில் புரியும் அரக்கர் தம்மை வருத்துதலால், அவர்களோடு போர் புரியவும் இயலாமல் உள்ளம் புழுங்கிச் சோர்ந்து துன்பக் கடலில் ஆழ்ந்து கொண்டிருந்த தவமுனிவர்கள், இராமனைக் கண்டதும் ஒரு மரக்கப்பல் பெற்றது போல் மயக்கம் நீங்கினர்:

**"கரக்கரும் கடுந் தொழில் அரக்கர் காய்தலின்**
**பொரற்கு இடமின்மையின் புழுங்கிச் சோருநர்**
**அரக்கர் என் கடலிடை ஆழ்கின்றார் ஒரு**
**மரக்கலம் பெற்றென மறுக்கம் நீங்கினார்"** (6)

அரக்கர்கள் ஆழ்கடல்; ஆழ்கடலில் அமிழ்பவர்கள் தவ முனிவர்; மரக்கலம் = இராமன். இராமனாகிய மரக் கலத்தின் உதவியால் அரக்கராகிய கடலைக் கடந்து கரையேறி வீடு பெறுபவர் என்னும் கருத்து,

**"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன்அடி சேரா தார்"** (10)

என்னும் குறளை நினைவுறுத்துகின்றது.

4) செய்த தவமும் பேரறிவும் (ஞானமும்) கை கொடுத்து உதவ, பிறவியாகிய சிறையிலிருந்து விடுதலை பெற்றவர்களைப் போல இராமனை உணர்வுடன் நோக்கி ஆறுதல் பெற்றனர்.

**"தெரிஞ்சுற நோக்கினர் செய்த செய்தவம்**
**அருஞ்சிறப்பு உதவ நல்லறிவு கைதர**
**விரிஞ்சுறப் பற்றிய பிறவி வெம்துயர்ப்**
**பெருஞ்சிறை வீடுபெற் றனைய பெற்றியார்"** (7)

தெரிந்து விரிந்து என்பவற்றைத் தெரிஞ்சு, விரிஞ்சு எனக் கொச்சையாகப் பேசுவது உலக வழக்கில் உண்டு. இந்த அமைப்பு செய்யுளில் இடம் பெறின், இதற்குப் 'போலி' என்னும் பெயர் சூட்டி அமைதி செய்வர் இலக்கண நூலார்.

மேலே இடம் பெற்றுள்ள நான்கு உவமைகளும் ஒன்றின் ஒன்று உயர்வாய் உள்ளன. முன் இரண்டும் அஃறிணை - பின் இரண்டும் உயர்திணை. முதல் இரண்டிலும் முன்னது. இயங்காமல் ஒரே இடத்தில் இருக்கும் மரஇனம் (தாவரம்) ஆகும்; பின்னது, இடம் மாறி இடம் இயங்கக் கூடியது. முன்னது ஓரறிவு உடையது எனப்படுவது. பின்னது ஐயறிவு உடையது எனப்படுவது. பின் இரண்டில் முன் உவமை, கடலிடை மரக்கலம் பெற்றவர்; பின் உவமை பிறவிச் சிறையினின்றும் விடுதலை பெற்று வீடுபேறு எய்தும் பெற்றியர்.

ஒரே நிலைக்கு நான்கு உவமைகள் கூறப்பட்டுள்ளன. இராமனைக் கண்டதும் முனிவர்கள் அடைந்த நன்னம்பிக்கை முனை (Cape of good hope) படிப்படியாக மேன்மேலும் உறுதி பெற்று உவகை மலரச் செய்ததை நான்கு உவமைகளால் நயம்பெற விளக்கியுள்ளார் கம்பர்.

முனிவர்கள் இராமன் முதலிய மூவரையும் வரவேற்றனர். இராமன் ஒவ்வொரு முனிவரையும் தொழுந்தோறும் இராமனுக்கு வாழ்த்து கூறினர். பின், உணவு தந்து ஓம்பித் தங்குவதற்கு ஒரு குடிலும் ஏற்பாடு செய்து தந்தனர்.

அமைச்சர்களை அழைத்து வரவேற்று உடனே தேவை மடலைத் தருவது போல், இராமனைக் கண்டவுடனேயே தங்கள் குறைகளைக் கூறக்கூடாது என எண்ணிய முனிவர்கள், சில நாள் சென்றதும், பலராகக் கூடி இராமன் பால் வந்தனர்.

வந்த முனிவர்களை இராமன் வணங்கி மகிழ்ந்து நீங்கள் புரிய இருக்கும் 'அருள்' என்ன என்று வினவினான். உடனே முனிவர்கள், 'உலகம் காத்த மன்னவனின் மைந்தனே! எங்கள்பால் மிகவும் கொடுஞ்செயல் புரிந்துள்ளனர் அரக்கர்; அதன் விளைவைக் கேள்' எனச் சொல்ல லாயினர்:

**"எய்திய முனிவரை இறைஞ்சி ஏத்துவந்து**
**ஐயனும் இருந்தனன், அருள் என் என்றலும்**
**வையகம் காவலன் மைந்த வந்ததோர்**
**வெய்ய வெங்கொடுந் தொழில் விளைவுகேள் எனா"**

(11)

ஐயன் = இராமன். வையகம் காவலன் = தயரதன். தங்கட்கு விளைவிக்கப்பட்டிருப்பது கொடுந்தொழிலாம் - வெங் கொடுந் தொழிலாம் - வெய்ய்வெங் கொடுந்தொழிலாம் - அதாவது, மிகமிகக் கொடிய ஊறு விளைக்கும் செயல் என்பது கருத்து.

ஒருவரிடம் உதவிக்குச் செல்பவர்கள், அவருடைய அப்பன் - பாட்டன் செய்த உதவிகளைக் குறிப்பிட்டு,

அவர்களைப் போலவே நீங்களும் உதவி செய்ய வேண்டும் என்று கூறிக் குளிப்பாட்டி உதவி பெற்றுப்போவது உண்டு.

(எனது சொந்தப் பட்டறிவு (அனுபவம்) ஒன்றைக் கூறுகிறேன். என் மைத்துனர் மகனுக்கு என் மகளைத் திருமணம் செய்து கொடுத்தேன். ஒருமுறை என் மகள் ஊருக்குச் சென்ற போது, அவ்வூர்த் தொழிலாளர் இருவர் என்னிடம் வந்து, உங்கள் மாமனார் அவ்வளவு தருவார் - உங்கள் மைத்துனர் இவ்வளவு கொடுப்பார் - உங்கள் மருமகன் எவ்வளவோ உதவுவார் என்று என்னிடம் வேப்பிலை அடித்தனர். மட்டமாக எண்ணிவிடப் போகிறார்கள் என்று யான் நினைத்து ஆளுக்கு ஐந்து உரூபா கொடுத்தேன். அவர்கள் வாங்கிக் கொண்டு போய்க் கள்ளுக்கடையில் கொடுத்துவிட்டார்கள். நான் ஏமாந்து கொடுத்து விட்டதாகச் சிலர் என்னைக் கிண்டல் செய்தனர்.)

இந்த முறையிலே - ஆனால் உயர்ந்த முறையிலே முனிவர்கள் 'வையகம் காவலன் மைந்த' என்று இராமனை விளித்துள்ளனர்.

இராமன் முனிவர்களை நோக்கி, நீங்கள் என்பால் செய்யும் 'அருள்' என்ன என்று கேட்டது மிகச்சிறந்த பண்பாட்டின் உயர் எல்லையாகும். அதாவது, இராமன் அவர்களைத் தனக்கு அருள் (உதவி) செய்யும்படிக் கேட்க வில்லை — அவர்கள் தன்னிடம் என்ன உதவி எதிர் பார்க்கின்றனர் என்பதையே அவ்வாறு சொல்லிக்கேட்டான். முனிவர்கள் தன்னிடம் ஓர் உதவி கேட்பதை - அந்த உதவியைத் தான் செய்யப்போவதை, அவர்கள் தனக்குச் செய்யும் உதவியாகக் கருதி இவ்வாறு வினவினான்.

தம்மிடம் உள்ளதைக் கனவிலும் மறைத்தலை அறியாமல் கொடுக்கக் கூடியவர்களிடத்தில் ஒருவர் போய் ஒரு பொருள் தரும்படி இரத்தலும், அவர்கட்கு ஒன்று ஈவது போன்றதே யாகும் என்னும் கருத்தமைந்த—

**"இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்**
**கனவிலும் தேற்றாதார் மாட்டு"** (1054)

என்னும் சுவைமிக்க குறள் ஈண்டு ஒப்பு நோக்கி மகிழ்தற்கு உரியதாகும். இரப்பவர்க்குக் கொடுப்பதால், கொடுப்பவர்க்குப் புகழும் நற்பேறும் கிடைப்பதால் 'இரத்தலும் ஈதலே போலும்' என்று உயர்த்தப்பட்டது.

**அந்தணர் யார்?**

முனிவர்கள் இராமனிடம் தங்கள் துயர்களைக் கூறுவா ராயினர். புலிகள் மிக்க காட்டிலே அகப்பட்டுக் கொண்ட மான்போல், இரக்கம் அற்ற அரக்கர்களால் யாங்கள் வருந்துகிறோம். தவத் துறையிலேயோ - அறத் துறையிலேயோ உரிய முறையில் ஈடுபட முடியவில்லை.

தவம் புரிய இயலாமையாலும், வேதம் ஓதாமையாலும், வேதம் ஓதுவார்க்கு உதவாமையாலும் (ஓதுவிக்காமையாலும்), எரி வளர்த்து வேள்வி செய்யாமையாலும் எங்கட்கு உரிய நெறிமுறையினின்றும் வழுவி விட்டோம்; அதனால் யாங்கள் அந்தணர் என்னும் தகுதிக்கும் உரியரல்ல ராகிவிட்டோம் என்றனர்.

**"மாதவத்து ஒழுகலெம் மறைகள் யாவையும்**
**ஓதலெம் ஓதுவார்க்கு உதவ லாற்றலெம்**
**மூஎரி வளர்க்கிலெம் முறையின் நீங்கி னெம்**
**ஆதலின் அந்தண ரேயும் ஆகிலம்"** (14)

ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் ஆறு தொழில்கள் அந்தணர்கட்கு உண்டு. இதனால் இவர்கள் 'அறு தொழிலோர்' எனப்படுவர்.

''**ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்**'' (560) என்னும் திருக்குறள் பகுதியாலும் இதனை அறியலாம். இங்கே மறைகள் ஓதல், ஓதுவார்க்கு உதவலாகிய ஓது வித்தல், எரி வளர்த்தல் (வேள்வி புரிதல்) என்னும் மூன்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளன. அறு (ஆறு) தொழில் களுள் இவை மூன்றும் இன்றியமையாதவை. இம் மூன்றனுள்ளும் வேதம் ஓதுதல் மிகவும் இன்றியமையாதது. இதனால்தான் ''மறப்பினும் ஓத்துக் கொளலாகும்'' என்றார் திருவள்ளுவர். ஓத்து = வேதம். 'மறப்பினும்' என்பதில் உள்ள 'உம்' என்பது, மறக்கக்கூடாது என்பதைக் குறிப்பாய் அறிவிக்கிறது. வேதம் ஓதுவதால் வேதியர்' என்னும் பெயர் அந்தணர்க்கு உண்டு.

மறைகள் (வேதங்கள்) நான்கு; அவற்றுள் ஒன்று அல்லது இரண்டைக் கூட ஓத முடியவில்லை என்பார் 'மறைகள் யாவையும்' ஓதலெம் என்றார்.

இந்தத் தொழில்களை முறையே செய்பவரே அந்தணராவர் - யாங்கள் செய்யவில்லை யாதலின், அந்தணர் என்னும் தகுதிக்கு உரியரல்லர் என்றனர்.

பழைய செய்தி ஒன்று நினைவிற்கு வருகின்றது. திருப்பராய்த் துறை - தபோவனத் தலைமைத் துறவியா யிருந்த காலஞ் சென்ற தவத்திரு சித்ப வானந்தா அடிகளார், புதுச்சேரி வேத புரீசுவரர் நூல் நிலைய ஆண்டு விழாவிற்கு ஒருமுறை தலைமை தாங்கி உரையாற்று கையில் பின்வருமாறு ஒரு கருத்து தெரிவித்தார்:-

"டாக்டர் மகனை டாக்டர் என்பதில்லை. சோதிடர் மகனைச் சோதிடர் என்பதில்லை. ஆசிரியர் மகனை ஆசிரியர் என்பதில்லை. அவர்களின் பிள்ளைகளும் டாக்டராகவோ - சோதிடராகவோ - ஆசிரியராகவோ இருந்தால்தான் அப்பெயர்கட்குத் தகுதி உடையவராவர். அதேபோல், பிராமணர்களின் பிள்ளைகள் பிராமண ராகார்; அவர்களும் பிராமணர்க்கு உரிய தொழில்களைச் செய்தால்தான் பிராமணர் எனச் சிறப்பிப்பதற்கு உரிய தகுதியினராவர்.

இந்தக் கருத்து சித்பவானந்தாவின் சொந்தக் கருத்து அன்று. இவர் நாற்பது ஆண்டுகட்கு முன் இந்தக் கருத்தைத் தெரிவித்தார். இதே கருத்தைப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே இராமன் காலத்திலேயே - பிராமணர்கள் தெரிவித்ததாக இந்தப் பாடலின் வாயிலாகக் கம்பர் தெரிவித் துள்ளார்.

மேலும் முனிவர்கள் கூறினர், யாங்கள் அரக்கராகிய இருள் நடுவே உள்ளோம்; ஞாயிறு போல் நீ தோன்றி யுள்ளாய்; நீ அருளுடைய வீரன் ஆதலின், யாங்கள் உன் அடைக்கலம் - நீ தான் எங்களைக் காப்பாற்ற வேண்டும் - என்றனர்.

**"இருளிடை வைகலெம் இரவி தோன்றினாய்**
**அருளுடை வீர நின் அபயம் யாம் என்றார்"** (16)

வைகல் = நாள். வரலாற்றில் 'இருள் காலம்' (The Dark Ages) என்று சொல்வது போல, முனிவர்கட்கு இந்த நாள்கள் இருள் நாள்களாகத் தோன்றுகின்றனவாம்.

இராமன் முனிவர்கட்குக் கூறுகிறான்: அரக்கர்கள் என்னிடம் அடைக்கலம் என வந்து வணங்காராயின், அவர்கள் எந்த அண்ட கோளத்தில் செல்லினும் என்

அம்போடு கீழே வந்து வீழ்வர் முறையற்ற துன்பத்தினின்றும் நீவிர் நீங்குவீராக என்று ஆறுதல் கூறினான்.

**''புகல் புகுந்திலரேல் புறத்து அண்டத்தின்**
**அகல்வ ரேனும் என் அம்பொடு வீழ்வரால்**
**தகவில் துன்பம் தவிருதிர்நீர் எனப்**
**பகலவன் குல மைந்தன் பணிக்கின்றான்''** (17)

இராமனின் அம்பு மீண்டும் அவனிடமே வந்து விடுமாதலின் 'அம்பொடு வீழ்வர்' எனப்பட்டது. பகலவன் = ஞாயிறு. முன் ஒரு பாட்டில் இராமனை இரவி என்றார். அதற்கு ஏற்ப ஈண்டு ஞாயிறு குல மைந்தன் என்றார் கம்பர்.

மேலும் இராமன் மொழிகிறான்; அந்தணரின் இயல்பை அறியாத அற்ப அரக்கர்களின் வலிமையை யான் தொலைக்காவிடின், யான் இறந்து போவதே நல்லது; இத்தகைய உதவியைச் செய்யாவிடின் பிறந்ததனால் பெற்ற பேறு யாது?

**''அறம்தவா நெறி அந்தணர் தன்மையை**
**மறந்த புல்லர் வலிதொலையேன் எனின்**
**இறந்து போயினும் நன்று இது அல்லது**
**பிறந்து யான் பெறும் பேறு என்பது யாவதோ''** (19)

இங்கே,

**''நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்**
**வித்தகர்க்கு அல்லால் அரிது''** (235)

**''ஒப்புரவினால் வரும்கேடு எனின் அஃதொருவன்**
**விற்றுக் கோள் தக்க துடைத்து''** (220)

**''சாதலின் இன்னாத தில்லை இனிது அதூஉம்**
**ஈதல் இயையாக் கடை''** (230)

**“கரப்பவர்க்கு யாங்கொளிக்குங் கொல்லோ இரப்பவர்**
**சொல்லாடப் போஒம் உயிர்”** (1070)

என்னும் குறள்கள் ஒத்திட்டு ஆய்வு செய்யத்தக்கன.

மற்றும் இங்கே, மற்றவரைப் போல் எமன் பிடித்துப் போகும்படி இறவாமல், பிறர்க்கு உதவி செய்து செய்து இறந்து போனவர்கள், மிகவும் நோன்பு செய்தவராவர் என்னும் கருத்துடைய -

**“நோற்றோர் மன்ற தாமே கூற்றம்**
**கோளுற விளியார் பிறர்கொள விளிந்தோர்”** (61 : 1, 2)

என்னும் அகநானூற்றுப் பாடல் பகுதியும் எண்ணத் தக்கது.

மேலும் சொல்கிறான் இராமன். என் அம்பால் அரக்கர்களின் தலை போன குறையுடலங்கள் கூத்தாடுவதை நீங்கள் பார்க்கப் போகிறீர்கள். வில்லையும் அம்பறாத் தூணியையும் சுமந்து கொண்டிருக்கும் என் தோள்கள் சுமைத் துன்பம் நீங்கி அதாவது சுமந்த பயனை அடைந்த தாக எண்ணி ஆறுதல் கொள்ளும்:

**“நிவந்த வேதியர் நீவிரும் தீயவர்**
**கவந்த பந்தக் களி நடம் கண்டிட**
**அமைந்த வில்லும் அருங்கணைத் தூணியும்**
**சுமந்த தோளும் பொறைத் துயர் தீருமால்”** (20)

கவந்தம் = குறையுடல். பந்தம் = கூட்டம். இது ஒரு சுவையான - புதுமையான கருத்து வெளியீடாகும். ஏதோ ஒன்றை இவ்வளவு நேரம் சுமந்ததற்கு என்ன பயன் என உலகியலில் கேட்கிறார்கள் அல்லவா? மகன் போரில் தோற்றுவிடின், அவனை வயிறு சுமந்ததால் யாது பயன் என மறக் குல மடந்தை நோவதாக நூல்களில் படிக்கிறோம் அல்லவா? அவ்வாறே, அரக்கர்களை அம்பு எய்து கொன்றால் தோள் சுமந்த பயன் கிட்டியதாகும்.

ஆவும் அந்தணரும் எளியவர்களும் இத்தகைய மற்றவரும் துன்புறாதிருப்பதற்காகத் தம் உயிர் தந்து காப்பவர்களே தேவர்கள் தொழும் தேவராவர்:

**"ஆவுக் காயினும் அந்தணர்க் காயினும்**
**யாவர்க் காயினும் எளியவர்க் காயினும்**
**சாவப் பெற்றவரே தகை வானுறை**
**தேவர்க்கும் தொழும் தேவர்கள் ஆகுவார்"** (21)

எனவே உங்களைக் கட்டாயம் காப்பன் என உறுதி தருகிறான் இராமன். இங்கே,

**"ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்**
**பெண்டிரும் பிணியுடை யீரும் ...........**
**எம்அம்பு கடிவிடுதும் நும் அரண்சேர்மின்"** (9:1-5)

என்னும் புறநானூற்றுப் பாடல் பகுதியும், சீவக சிந்தாமணியில் உள்ள -

**"நன்பால் பசுவே துறந்தார் பெண்டிர்பாலர் பார்ப்பார்**
**என்பாரை ஓம்பே னெனின் யான் அவனாக என்றான்"**
(443)

என்னும் பகுதியும் ஒப்பு நோக்கத் தக்கன.

மற்றும், முருகனும் திருமாலும் சிவனும் வந்து தடுத்துக் காக்கினும், அறநெறி தவறிய அரக்கர்களை வேரோடு அறுப்பேன் - அஞ்சாதீர் - என்று இராமன் துணிவு ஊட்டியதும், முனிவர்கள் மகிழ்ச்சி மேலீட்டால் தம் முக்கோலைச் சுழற்றியும் மறை பாடியும் கூத்து ஆடியும் இராமனைப் புகழ்ந்தனர்.

முனிவர்களின் வேண்டுகோள்படி இராம இலக்குமணரும் சீதையும் பத்து ஆண்டு காலம் அங்கிருந்துவிட்டு, பின் அகத்தியர் இருப்பிடம் நோக்கிச் செல்ல லாயினர்.

செல்லும் வழியில் சுதீக்கணன் என்னும் முனிவன் இவர்களை வரவேற்றான். இராமனும் சுதீக்கணனும் ஒருவரை ஒருவர் புகழ்ந்து பேசிக் கொண்டனர். இறுதியில், சுதீக்கணன் இராமனை நோக்கி, யான் இதுகாறும் செய்து வந்த தவம் எல்லாவற்றையும் - தவப் பயன் யாவற்றையும் கொள்க என்று வேண்டினான்:

**"அவம் இலா விருந்தாகி என்னால் அமை**
**தவமெலாம் கொள்க தக்கணையா என்றான்"** (31)

அவம் இலா விருந்து = பயன் இன்றி வெற்றுபடியாய்ப் போகாத விருந்து அதாவது பயனோடு செல்லும் விருந்து. இங்கே பயன் என்பது, முனிவன் தன் வரமனைத்தையும் காணிக்கையாக்குவது. தட்சணை என்றோ தக்ஷிணை என்றோ எழுதாமல் 'தக்கணை' எனத் தமிழ் வடிவம் தந்திருக்கும் கம்பரின் மொழிக் கொள்கை பாராட்டத் தக்கது.

**அருளும் தவமும்:**

தவத்தைக் காணிக்கையாகத் தருவதாகச் சொன்ன சுதீக்கணனை நோக்கி இராமன் கூறினான். ஐயனே! யான் இங்கு வந்ததும் அருளோடு வரவேற்று ஓம்பினீர்களே-அந்த அருளினும் தவம் பெரிதோ? அந்த அருளே போதும் என்றான்:

**"மறைவலான் எதிர் வள்ளலும் கூறுவான்**
**இறைவ நின்னருள் எத்தவத்திற்கு எளியது?** (32)

என்பது பாடல் பகுதி. மறைவலான் = வேதம் வல்ல முனிவன். வள்ளல் = இராமன். இறைவ எனப்பெருமையுடன் முனிவனை இராமன் விளித்துள்ளான். மறைவலான் ஏற்பவன் வள்ளல் கொடுப்பவன். அங்ஙனம் இருக்க, ஏற்பவன் கொடுப்பவனுக்குக் கொடுக்க முயன்றது பாராட்டத்

தக்கது. கொடுப்பதை வேண்டா என மறுப்பது கொடுப்பதினும் பாராட்டத்தக்கது.

ஒருவரின் தவத்தை இன்னொருவர் பெற்றுக்கொள்வது கர்ணன் தொடர்பான பாரதக் கதையிலும் பிறவற்றிலும் அறிந்ததே. ஒருவர் அரிதின் முயன்று செய்த தவத்தை இன்னொருவர் எளிதில் பெற்றுக் கொள்வதா? அதனால் தான், இங்கே கொடுத்தவரும் கொள்ளாதவரும் மிக்க சிறப்பிற்கு உரியவராவர். ஈண்டு,

**"கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர்**
**கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று"**
(204 : 3, 4)

என்னும் புறப்பாடல் ஒப்பு நோக்கத் தக்கது.

**நீண்ட தமிழ்:**

இராமன் முதலிய மூவரும் சுதீக்கணனிடம் விடை பெற்றுக் கொண்டு, அகத்தியனது இருப்பிடம் நோக்கிச் சென்று நெருங்கினர்.

இவர்களின் வருகையை அறிந்த அகத்தியனின் மகிழ்ச்சி அளவு கடந்ததாய் ஏழுலகும் பரவிற்றாம். நீண்ட தமிழால் உலகை அளந்தவனாகிய அகத்தியனின் திருவடிகளை இராமன் வணங்க அவன் வரவேற்றான்:

**"ஆண்தகையர் அவ்வயின் அடைந்தமை அறிந்தான்**
**ஈண்டு உவகை வேலைதுணை ஏழுலகும் எய்த**
**மாண்ட வரதன் சரண் வணங்க எதிர் வந்தான்**
**நீண்ட தமிழால் உலகை நேமியின் அளந்தான்"** (36)

ஆண் தகையர்=மற ஆண்மையுடைய இராம இலக்குமணர். அவர்கள் வந்தனர் எனில் சீதையும் உடன் வந்தமை சொல்லாமலே விளங்கும்.

இராமன் அகத்தியனிடம் படைக்கலம் பெற்று அரக்கரை வெல்லப் போகிறானாதலின் உவகை ஏழுலகும் பரவியது.

மாண்ட வரதன் = மாண்பு மிக்க இராமன். தன் திருவடிகளை இராமன் வணங்கும் அளவுக்கு அகத்தியன் உயர்ந்தவனாவான்.

அகத்தியன் நீண்ட தமிழால் உலகை நேமியின் அளந்தான் என்பது ஆய்விற்கு உரியது. நேமி = ஆழிப்படை. இங்கே நேமி என்பது இடப்பொருள் (தானி) ஆகுபெயராய் நேமியை உடைய திருமாலைக் குறிக்கிறது. திருமால் மாவலியிடம் மூன்றடி மண் கேட்டு உலகம் முழுவதையும் அளந்தான் அல்லவா! அத்திருமாலைப் போல, அகத்தியன் தமிழால் உலகை அளந்தானாம்.

தமிழால் உலகை அளத்தலாவது, உலகம் முழுவதிலும் தமிழைப் பரவச் செய்தலும், உலகில் உள்ள கலைகளை யெல்லாம் தமிழில் உளவாகச் செய்தலுமாம். இதனால், பண்டு உலக அரங்கில் தமிழுக்கு இருந்த முதன்மையும் சிறப்பும் விளங்கும்.

நீண்ட தமிழ் என்பது, தமிழில் பல்வேறு கலை நூல்கள் நிரம்ப இருந்தமையையும், அது நீண்ட தொலைவில் உள்ள இடங்களில் எல்லாம் பரவியிருந்தது என்பதையும் அறிவிக்கும்.

இப்போது தமிழை உயர்த்தும் நோக்கத்துடன் தமிழின் சிறப்பைக் கூறினால், 'தமிழ் வெறியர்' என்னும் பட்டம் கிடைக்கின்றது. கம்பர் இங்கே அறிவித்ததை விட இன்னும் உயர்வாக எந்தத் தமிழ் வெறியரும் தமிழின் மேன்மையைச் சொல்ல முடியாது. தமிழ் அறிஞர்களைத் தாழ்த்திப் பேசுபவரின் மொழியில் சொல்லப் போனால் கம்பர் மாபெருந் தமிழ் வெறிய ராவார்.

சேக்கிழார் பெரியபுராணத்தில் இதையே சுருக்கி

**"ஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்"** (975)

என்று சிறப்பித்துள்ளார். சுப்பிரமணிய பாரதியார்

"வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!" (23)

"பல்விதமாயின சாத்திரத்தின் — மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு
வள்ளுவன் தன்னை உலகினுக்கே — தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு
சிங்களம் புட்பகம் சாவகம் — ஆதிய
தீவு பலவினும் சென்றேறி — அங்கு
தங்கள் புலிக்கொடி மீன்கொடியும் நின்று
சால்புறக் கண்டவர் தாய்நாடு
விண்ணை இடிக்கும் தலைஇமயம் எனும்
வெற்பை அடிக்கும் திறனுடையார் — சமர்
பண்ணிக் கலிங்கத்து இருள் கெடுத்தார் — தமிழ்ப்
பார்த்திவர் நின்ற தமிழ்நாடு
சீனம் மிசிரம் யவன ரகம் — இன்னும்
தேசம் பலவும் புகழ் வீசிக் — கலை
ஞானம் படைத்தொழில் வாணிபமும் மிக
நன்று வளர்த்த தமிழ்நாடு
செந்தமிழ் நாடேனும் போதினிலே" (20)

என்று தமிழின் பரப்பை விரித்துக் காட்டியுள்ளார். சேக்கிழாரும் பாரதியாரும் தமிழ் வெறியர்களா?

ஞானப்பிரகாச அடிகளார் (Rev. S. Gnana Prakasar, O. M. I.) என்னும் இலங்கைப் பேரறிஞர், 'சொற்பிறப்பு - ஒப்பியல் தமிழ் அகராதி' (An Etymological and comparative Lexicon of the Tamil Language) என்னும் தமது

அகராதியின் முன்னுரையில் பின்வரும் கருத்துகளை வெளியிட்டுள்ளார்.

"தமிழ்ச் சொற்கள் முதல் முதல் மக்களினத்தில் மொழி தோன்றத் தொடங்கிய காலத்தில் எழுந்த சொல்லொலிகளை அடிப்படையாகக் கொண்டவை. தமிழ்ச் சொற்களால் உணர்த்தப்படும் கருத்துகள் மக்களினத்தின் பொதுப் பண்பைக் குறிக்கும் அடிப்படையாகும். எனவே, கூர்ந்து ஆராயின், தமிழ்ச் சொற்களின் வேரிலிருந்தே உலகமொழிகளின் சொற்கள் தோன்றிப் பல்வேறு வடிவம் கொண்டன என்பது புலப்படும்".

மேலே இது காறுங் கூறியவற்றால், "நீண்ட தமிழால் உலகை நேமியின் அளந்தான்" என்று கம்பர் கூறியுள்ளமை முற்றிலும் பொருந்தும் என்பது பெறப்படும்.

அகத்தியன் கடலை உண்டவன் - வாதவியை வயிற்றில் அடக்கிச் செரிக்கச் செய்தவன் – விந்த மலையைக் கீழே ஆழ்த்தியவன் - என்றெல்லாம் அறிவித்த பெருமை போதாது என்று, மீண்டும் தமிழ் வாயிலாக அகத்தியனுக்கு ஒரு சிறப்புக் கூறுகிறார் கம்பர். அதாவது:-

**உயர் தமிழ்**

உலக வழக்கு, செய்யுள் வழக்கு ஆகிய இரு வழக்குகளையும் ஒட்டித் தமிழ் இலக்கணம் அளித்தானாம் அகத்தியன். அந்தத் தமிழ் முதல் முதல் சிவனால் தனக்குக் (அகத்தியனுக்கு) கற்றுக் கொடுக்கப்பட்டதாம். மேலும் அந்தத் தமிழ், வலிந்து கற்கும் நான்கு வடமொழி வேதங்களினும் உயர்ந்ததாம்.

**"உழக்கு மறைநாலினும் உயர்ந்து உலகம் ஓதும்**
**வழக்கினும் மதிக் கவியினும் மரபின் நாடி**
**நிழல்பொலி கணிச்சிமணி நெற்றி உமிழ் செங்கண்**
**தழல்புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ் தந்தான்"** (41)

வேதம் ஒலி வகையால் கற்பதற்குக் கடினமாதலால் 'உழக்கு மறை' என்றார். அதை நோக்க, தமிழ், இன்தமிழ் - மென்தமிழ் - செந்தமிழ் - பைந்தமிழ் - தேன் தமிழ் - அமிழ்தத் தமிழ், - வண் தமிழ் - ஒண் தமிழ் முதலிய அடைமொழிகளைப் பெற்றிருப்பது பொருத்தமே போலும்!

சிவன் ஒளி பொருந்திய மழுப்படையையும் நெற்றிக் கண்ணையும் ஒளி வீசும் செம்மேனியையும் உடைய கடவுளாம்.

'ஆண் தகையர்' என்று தொடங்கும் பாடலால் தமிழின் பரப்பைக் கூறிய கம்பர், இந்தப் பாடலால் தமிழின் உயர்வைச் சொல்கிறார். 'உழக்கு மறை நாலினும் உயர்ந்தது தமிழ்' என்று கூறியுள்ளார். இதைச் சுப்பிரமணிய பாரதியார்

**''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்**
**இனிதாவது எங்கும் காணோம்''** (22-1)

என்ற வடிவத்தில் அறிவித்துள்ளார். சேக்கிழார் பெரிய புராணத்தில்,

**''அசைவில் செழுந் தமிழ்வழக்கே**
**அயல் வழக்கின் துறைவெல்ல''** (192)

என்று கூறித் தமிழ் அவாவைத் தீர்த்துக் கொண்டு விட்டார்.

பரஞ்சோதி முனிவர் தமது திருவிளையாடல் புராணம் - நாட்டுப் படலத்தில்.

**''கண்ணுதல் பெருங்கடவுளும் கழகமோடு அமர்ந்து**
**பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த இப்பசுந் தமிழ் ஏனை**
**மண்ணிடைச் சில இலக்கண வரம்பிலா மொழிபோல்**
**எண்ணிடைப் படக் கிடந்ததா எண்ணவும் படுமோ''**
**(57)**

**"தொண்டர் நாதனைத் தூதிடை**
**விடுத்ததும் முதலை**
**உண்ட பாலனை அழைத்ததும்**
**எலும்பு பெண்ணுருவாக்**
**கண்டதும் மறைக் கதவினைத்**
**திறந்ததும் கன்னித்**
**தண்தமிழ்ச் சொலோ மறுபுலச்**
**சொற்களோ சாற்றீர்"** (58)

என்று பாடித் தமது தமிழ் உணர்வுத் தினவைத் தீர்த்துக் கொண்டார். இப்படியே போனால் இந்தப் பட்டியல் மிகவும் நீளும்.

சிவன் அகத்தியர்க்குத் தமிழ் தந்த செய்தி, காஞ்சிப் புராணத்தில்.

**"வடமொழியைப் பாணினுக்கு வகுத்தருளி**
**அதற்கு இணையாத்**
**தொடர்புடைய தென்மொழியை**
**உலகமெலாம் தொழுதேத்தும்**
**குடமுனிக்கு வலியுறுத்தார்**
**கொல்லேற்றுப் பாகர்"**

எனக் கூறப்பட்டுள்ளது. குடமுனியை உலகம் எல்லாம் தொழுது ஏத்துவது எதற்காக? நீண்ட தமிழை உலகம் முழுவதற்கும் தந்ததனால் என்க.

### என்றும் உளது - இசை தருவது

தமிழால் அகத்தியன் புகழ் பெற்றுள்ளமையைக் கம்பர் மற்றொரு பாடலாலும் அறிவித்துள்ளார். அகத்தியனின் அடிகளை இராமன் வணங்கினானாம். அகத்தியன் மகிழ்ச்சிக் கண்ணீர் - உணர்ச்சிக் கண்ணீர் பெருக இராமனைத் தழுவிக் கொண்டு, நும்வரவு நல்வரவாகுக என்று பல நயமொழி புகன்றானாம். பாடல்.

**"நின்றவனை வந்த நெடியோன் அடி பணிந்தான்**
**அன்று அவனும் அன்பொடு தழீஇ அழுதகண்ணால்**
**'நன்று வரவு' என்று பல நல்உரை பகர்ந்தான்**
**என்றும் உள தென்தமிழ் இயம்பிஇசை கொண்டான்"**
(47)

என்பது பாடல். நெடியோன் = இராமன். அகத்தியன் குறளன் அல்லவா? அழுத கண்ணும் வரவேற்றது போன்ற குறிப்பு பாடலில் மறைந்து கிடைக்கிறது. இப்பொழுது 'நல் வரவாகுக' — Welcome என்றெல்லாம் போடுவதை அப் போதே கம்பர் தொடங்கி வைத்து விட்டார்.

இந்தப் பாடலின் இறுதி அடியில் தமிழின் இரண்டு சிறப்புகள் அறிமுகப்படுத்தப்பட் டுள்ளன. ஒன்று : என்றும் உள்ளது; மற்றொன்று : இசை தருவது.

தமிழ், சமசுகிருதம், இலத்தீன் போன்ற பழம்பெரு மொழிகளுள் சமசுகிருதமும் இலத்தீனும் இப்போது வழக் கிழந்துள்ளன. தமிழ் என்றும் வழக்கு இழக்காமல் நிலையாய் உள்ளது. இது ஒரு சிறப்பு. இங்கே, மனோன் மணீயத்தில் சுந்தரம் பிள்ளை பாடியுள்ள-

**"ஆரியம்போல் உலகவழக்கு அழிந்து**
**ஒழிந்து சிதையா உன்**
**சீரிளமைத் திறம் வியந்து**
**செயல் மறந்து வாழ்த்துதுமே"**

என்னும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பகுதி எண்ணத் தக்கது.

அடுத்தது : தமிழை இயம்பியதால் அகத்தியர் இசை (புகழ்) பெற்றாராம். இருபதாம் நூற்றாண்டில் தமிழ் இயம்பிய தமிழாசிரியர்கட்கு இது கிடைத்ததா? மற்ற பாடத்து ஆசிரியர்களின் பெயர்கட்குக் கடைசியில் தமிழாசிரியர்களின் பெயர்கள் எழுதப்பட்டனவே - அதாவது தமிழாசிரியர்கட்கு 'இறுதி மரியாதை' செய்யப்பட்டதே.

புதுவை மாநிலத்தில் தமிழாசிரியர்கள் போராடி, உயர் நிலைப் பள்ளிகட்கு அன்று — நடுநிலைப் பள்ளிகட்குத் தலைமையாசிரியர் பதவி அளிக்கச் செய்தனர். உடனே, மற்ற பாடத்து ஆசிரியர்கள் போராடியதால், தமிழாசிரியர்கள் தலைமையாசிரியர் பதவியிலிருந்து கீழே இறக்கப் பட்டனர். இப்போது புதுச்சேரி மாநிலத்தில் அரசுக் கல்வித் துறையில் உள்ள அலுவலர்களுள் யாரும் இதற்குப் பொறுப்பாளர் ஆகார். இது முன்பு எப்போதோ நடந்தது. ஆனால், அந்தக்காலத்தில் அகத்தியர் தமிழை இயம்பியதால் புகழ் பெற்றாராம். காலத்தின் கோலம் என்னே!

தமிழ் நாட்டின் வடக்கே இருந்து கொண்டு காட்டில் இராமனை வரவேற்ற அகத்தியர் எந்த மொழியில் பேசி யிருப்பார்? இராமனோடு எந்த மொழியில் உரையாடி யிருப்பார்? — என்பதை அறிஞர்கள் ஆய்க. மற்றும், கம்பராமாயணம் சுந்தர காண்டத்தில்,

**“தென்சொல் கடந்தான் வடசொல்**
**கடற்கு எல்லை தேர்ந்தான்”**

என இராமன் கம்பரால் சுட்டப்பட்டிருப்பதும் ஈண்டு நினைவுகூரத் தக்கது.

**வந்தனன் மருத்துவன்**

தேவர், தவத்தோர், அந்தணர் முதலியோரின் துன்ப நோயாக உள்ள அரக்கர்களை வேரோடு அழிக்க வல்ல மருத்துவன் வந்து விட்டான் என அகத்தியன் இராமனது வருகைக்கு மகிழ்ந்தான்:

**“உய்ந்தனர் இமைப்பிலர் உயிர்த்தனர் தவத்தோர்**
**அந்தணர் அறத்தின் நெறி நின்றனர்கள் ஆனார்**
**வெந்திறல் அரக்கர் விடவேர் முதல் அறுப்பான்**
**வந்தனன் மருத்துவன் எனத்தனி வலிப்பான்”** (44)

இமைப்பிலர் = இமைக்காத தேவர்கள். பேச்சு—மூச்சு காட்டாதே எனச் சிலர் யாரையாவது கடிவது உண்டு - தவசிகள் இப்போதுதான் மூச்சு காட்டத் தொடங்கினராம். அந்தணர்கள் அரக்கரால் அறுப்புண்ட பூணூலை மீண்டும் அணிந்து உண்மையான அந்தணரானார்களாம். அரக்கரின் விடவேர் முதல் அறுக்கப்படுமாம். விடவேர் = நச்சுவேர்... வேர் முதல்=வேரின் கடைசி அடிவேர். (பூண்டோடு அறுத்தல் — வேரோடு அழித்தல் என இரு சொற்களால் குறிக்க படுவதை, ஆங்கிலத்தில் Extirpate என்னும் ஒரே சொல் குறிக்கிறது) அறுப்பான் = அறுக்க; இது 'பான்' விகுதி ஏற்ற வினையெச்சம், வலிப்பான் = உறுதியாக நம்பினான் அகத்தியன்.

அடிவேரை - ஆணிவேரை - சல்லிவேரை அறுக்கும் மருந்து உண்டா என்றால் உண்டு. என் மாமனார் வீட்டுத். தோட்டத்தில் இரண்டு எலுமிச்சைச் செடிகள் பல ஆண்டுகளாக நன்றாய்க் காய்த்துக் கொண்டிருந்தன. மரம் செடிகளை மருந்து போட்டு நன்றாக-மிகுதியாகக் காய்க்கச் செய்வேன் என்று சொல்லிக் கொண்டு ஒருவன் வந்து நிரம்பக் காசு பெற்றுக் கொண்டு செடிகளின் அடியில் மருந்து போட்டான். இரண்டே திங்களில் இரு செடிகளும் முற்றும் பட்டுப் போயின. இவன் வேர் அறுக்கும் மருத்துவன்.

**காவிரி கொணர்ந்தான்**

காவிரியைக் கொண்டு வந்தவனாகிய அகத்தியன், இராமனைக் கண்டதும், தாமரை மலர் போன்ற கண்களி லிருந்து நீர் பொழிய நின்றான்.

**"கண்டனன் இராமன் வரக் கருணை கூரப்**
**புண்டரிக வாள் நயனம் நீர் பொழிய நின்றான்**
**எண்திசையும் ஏழுலகும் எவ்வுயிரும் உய்யக்**
**குண்டிகையினிற் பொருவில் காவிரி கொணர்ந்தான்"(46)**

புண்டரிகம் = தாமரை. வாள் = ஒளி. நயனம் = கண், குண்டிகை = சிறு குடம்—கமண்டலம்.

இராமனைக் கண்டதும் அகத்தியனின் கண்கள் நீர் பொழிந்தனவாம். அகத்தியன் கண்ணீர் விடவில்லையாம் அவன் கண்கள் நீர் பொழிந்தனவாம். இது ஒரு சுவைக் கருத்து.

'பொழிய, (பொழிதல்) என்பது கண் என்னும் சினையின் (உறுப்பின்) வினை. அது, 'நின்றான்' என்னும் வினை முதலின் (அகத்தியனின்) வினையைக் கொண்டு முடிந்தது.

> **''அவற்றுள்,**
> **அம் முக் கிளவியும் சினைவினை தோன்றின்**
> **சினையொடு முடியா முதலொடு முடியினும்**
> **வினை ஓரனைய என்மனார் புலவர்''** (2:6:32)

என்னும் தொல்காப்பிய நூற்பாவின்படியும்,

> **''முதலில் நான்கும் ஈற்றில் மூன்றும்**
> **வினைமுதல் கொள்ளும் பிறவும் ஏற்கும்பிற''** (2:2:25)

> **''சினைவினை சினையொடு முதலொடும் செறியும்''** (2:2:26)

என்னும் நன்னூல் நூற்பாக்களின் படியும். கண்கள் அழுததாகச் சொல்லினும் அகத்தியன் அழுதான் என்பதே கருத்து.

மகிழ்ச்சிக் கண்ணீரைப் பற்றி முன்பே ஓரிடத்தில் சொல்லப்பட்டுள்ளது. இஃதும் அஃதே மகிழ்ச்சி என்னும் மன எழுச்சி தோன்றக் அழுதான். இராமன் அரசை இழந்து வந்துள்ளானே என்ற இழப்பு காரணமாக வந்த அழுகை இது என்று கூறல் பொருந்தாது.

அகத்தியன் காவிரி கொணர்ந்தவன் எனச் சிறப்பிக்கப் பெற்றுள்ளான். இந்தியாவில் கர்நாடக மாநிலத்திற்கு மட்டும் காவிரி உரியதாகச் சொல்லப்படவில்லை. என்

திசையும் ஏழ் உலகும் எவ்வுயிரும் உய்யக் காவிரி கொண்டு வரப்பட்டதாகப் பாடலில் கூறப்பட்டுள்ளது.

காவிரி தமிழ் நாட்டிற்காகக் கொண்டு வரப்பட்டதாக ஒரு புராண வரலாறு கூறுகிறது:-

இந்திரன் அரக்கர்கட்கு அஞ்சித் தமிழ்நாட்டில் உள்ள சீர்காழிக்கு வந்து இறை வழிபாடு செய்து கொண்டிருந்தானாம். வழிபாட்டுக்கு மலர் வேண்டி ஒரு பூந்தோட்டம் அமைத்தானாம். அதற்கு நீர் வசதி வேண்டுமெனப் பிள்ளையாரை வேண்டினானாம். விநாயகர் ஒரு காகமாக உருவெடுத்து, குடகுமலைப் பகுதியில் தவம் செய்து கொண்டிருந்த அகத்தியரின் நீர்க் குண்டிகையைக் கவிழ்த்தாராம். அதில் இருந்த நீர் காவிரியாகப் பெருகிச் சீர்காழிக்கு வந்ததாம்.

காவிரி வந்த வரலாறு பல நூல்களில் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் சிலவற்றைக் கம்பனின் கூற்றுக்கு அரணாகக் காண்பாம்:-

**"சுர குலாதிபன் தூய்மலர் நந்தனம்**
**பெருக வார்கடல் பெய்த வயிற்றினோன்**
**கரக நீரைக் கவிழ்த்த மதகரி**
**சரணம் நாளும் தலைக்கு அணி ஆக்குவாம்"**

இது, சிவப்பிரகாச அடிகளாரின் பிரபுலிங்க லீலைக் காப்புச் செய்யுள்.

**"ஆதி மாதவமுனி அகத்தியன்தரு**
**பூத நீர்க் கமண்டலம் பொழிந்த காவிரி"** (2)

இது பெரிய புராணம்-நாட்டுச் சிறப்புப் பாடல் பகுதி.

காந்தமன் என்னும் மன்னன் வேண்ட, அகத்தியனது கரகம் கவிழ்க்கப்பட்டதாக மணிமேகலை கூறுகிறது:

**"கஞ்ச வேட்கையின் காந்தமன் வேண்ட**
**அமர முனிவன் அகத்தியன் தனாஅது**
**கரகம் கவிழ்த்த காவிரிப் பாவை"** (பதிகம்-10, 11,12)

இது மணிமேகலைக் காப்பியம்.

**"கன குடகில் நின்ற குன்றம் தருசங்கரன் குறுமுனி**
**கமண்டலம் கொண்டு முன் கண்டிடும் கதி செய் நதி"**
(926)

அருணகிரி நாதரின் திருப்புகழ்ப் பாடல் இது.

காவிரியை ஒரு சோழன் கொண்டு வந்ததாக அபிதான சிந்தாமணி நூலிலும் கலிங்கத்துப் பரணியிலும் கூறப் பட்டுள்ளது.

**"காலனுக்கு இது வழக்கென உரைத்த அவனும்**
**காவிரிப் புனல் கொணர்ந்த அவனும்..."** (192)

இது கலிங்கத்துப் பரணி

காவிரிக்கு உரிமை கொண்டாடுபவர்கள், 'எண் திசையும் ஏழுலகும் எவ்வுயிரும் உய்யக் காவிரி கொணர்ந்தான்' என்னும் கம்பரின் பாடல் பகுதியை மீண்டும் ஒருமுறை எண்ணிப் பார்க்க வேண்டும்.

**என்றும் உளதென் தமிழ்**

நீர் பொழிய நின்ற அகத்தியனது திருவடிகளை வந்த இராமன் பணிந்தான். அகத்தியன் அன்போடும் அழுத கண்ணோடும் இராமனைத் தழுவி, வரவு நல்வரவாகுக என்று தொடங்கிப் பல நல்ல வாழ்த்துரைகள் கூறினான்.

**"நின்றவனை வந்த நெடியோன் அடி பணிந்தான்**
**அன்று அவனும் அன்பொடு தழீஇ அழுத கண்ணான்**
**நன்றுவரவு என்று பல நல்லுரை பகர்ந்தான்**
**என்றும் உளதென்தமிழ் இயம்பி இசை கொண்டான்"**
(47)

நின்றவன், அமுத கண்ணான், இசை கொண்டான் ஆகியவை அகத்தியனைக் குறிக்கின்றன.

இந்தப் பாடலிலும் மகிழ்ச்சிக் கண்ணீரின் தொடர்ச்சி குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் காலத்தில் பல இடங்களில், ஆங்கிலத்தில் 'Welcome' என்ற தொடரையும், தமிழில் 'நல்வரவாகுக' என்ற தொடரையும், காண்கிறோம். பல நூற்றாண்டுகட்கு முன்பே, 'நன்று வரவு' என்னும் வரவேற்பு உரையைக் கம்பர் நமக்குக் கற்றுக் கொடுத்துச் சென்றுள்ளார்.

அகத்தியன் இசை (புகழ்) கொண்டவனாம். எப்படி? தமிழ் இயம்பி இசை கொண்டவனாம். தமிழ் எத்தகையது? என்றும் உள தென் தமிழாம்.

கிரேக்கம், இலத்தீன், சமசுகிருதம், தமிழ் முதலிய மொழிகள் சில மிகவும் பழமை வாய்ந்தவை. இலத்தீன், சமசுகிருதம் முதலிய மொழிகள் பேச்சு வழக்கு இழந்து ஏட்டளவில் உள்ளன. ஆனால், தமிழ், எழுத்து வழக்கிலும் பேச்சு வழக்கிலும் அழியாமல் உள்ளது. இதை, 'மனோன்மணீயம்' என்னும் நாடகக் காப்பியத்தின் தமிழ்த் தாய் வாழ்த்தில் பெரும்புலவர் சுந்தரம் பிள்ளை,

> **''ஆரியம்போல் உலகவழக்கு அழிந்தொழிந்து சிதையாஉன்**
> **சீரிளமைத் திறன்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே''**

என்று பாடியுள்ளார். இது முன்பும் கூறப்பட்டுள்ளது.

இந்தக் காலத்தில் தமிழின் தொன்மை நிலையையும் தூய்மை நிலையையும் கெடுக்கும் முயற்சி தொடர்ந்து கொண்டுள்ளது. தமிழ் தென் தமிழ் எனப்பட்டது. சமசுகிருதம் வடமொழி எனப்பட்டதால் மட்டும் தமிழ் தென்தமிழ் என்று சொல்லப்பட்டதாகக் கருதலாகாது. அரப்பா-மொகஞ்சதரா-சிந்து வெளி நாகரிகம் இந்தியாவின்

வட பகுதியில் தொன்மைக் காலத்தில் இருந்த திராவிடர்கள் பின் தெற்கே விரட்டப்பட்டார்கள் என நேரு முதலியோர் கூறியுள்ளமை - ஆகிய சான்றுகளைக் கொண்டு, ஒரு காலத்தில் தமிழ் வட தமிழாகவும் இருந்தது; இப்போது தென் தமிழ் ஆகிவிட்டது எனக் கொள்ளல் வேண்டும்.

அகத்தியர் தமிழ் இயம்பி இசை கொண்டாராம். இது அந்தக் காலம். இருபதாம் நூற்றாண்டில் தமிழ் ஆசிரியர்கள் பிற மொழி ஆசிரியர்களின் செருப்புக் கால்களின் கீழ் மிதிபட்டு நசுங்கினர். உயர்நிலைப் பள்ளிகளில் கிடக்கட்டும். நடுநிலைப் பள்ளிகளில் கூடத் தமிழாசிரியர்கள் தலைமை ஆசிரியராக இருக்க முடியாத மானக்கேடான நிலை இருந்தது. மற்ற மொழி ஆசிரியர்களின் கையெழுத்துகளின் கீழே தமிழாசிரியர்கள் கையெழுத்து இட வேண்டும். (இதை என் சொந்தப் பட்டறிவிலிருந்தே சொல்லு கின்றேன்).

அகத்தியப் படலத்தைத் தமிழ்ப் படலமாகவே செய்துள்ள கம்பரின் மொழிப் பற்று - மொழி உணர்வு - ஏன், மொழி வெறி - மிகவும் பாராட்டத் தக்கன. ஆனால், கம்பரின் நூல் முழுவதையும் நோக்கினால், இந்தக் காலம் போலவே அந்தக் காலத்திலும் அஞ்சிக் கொண்டே தமிழ்ப் பற்றை வெளிப்படுத்தியுள்ளார் என எண்ணத் தோன்று கிறது. அதற்குக் காரணமும் உண்டு.

அடுத்த பாடலில், வேதியர்கள் வேதமொழி பல கூற அகத்தியன் இராமன் முதலிய மூவரையும் குளிர்ந்த சோலைக்குள் அழைத்துச் சென்றானாம்.

**"வேதியர்கள் வேதமொழி வேறுபல கூற......**
**போதுமணம் நாறுகுளிர் சோலைகொடு புக்கான்"** (48)

அகத்தியனது விருந்தோம்பலால் உள்ளம் குளிர்ந்த இராமனை அங்கேயே இருக்கும்படி அகத்தியன்

வேண்டினான். ஆனால் இராமன் இன்னும் தென்திசை நோக்கிச் செல்ல விரும்புகிறேன் என்றான்.

பின்னர் அகத்தியன், அம்பறாத் தூணியோடு ஓர் உயர்ந்த வில்லும், வாளும், சிவன் முப்புரம் எரிக்கக் கொண்டு போன அம்பும் ஆகியவற்றை இராமனுக்கு அளித்தான்; பின், சிறிதுதொலைவு செல்லின் பஞ்சவடி என்னும் இடம் உள்ளது - அங்குச் சென்று தங்கலாம் என அந்த இடத்தின் வளத்தைக் கூறலானான்:

**உள - உள - உள - உள**

அங்கே உண்ண வாழைக் கனியும் செந் நெல்லும் உண்டு; சூடிக் கொள்ள மலர் வளம் உண்டு; நீராடக் காவிரி போன்ற ஆறு உண்டு; சீதை அன்போடு விளையாடப் பெரு நாரைகளும் அன்னங்களும் உண்டு என்று விளக்கினான்:

> **''கன்னி இள வாழை கனி ஈவக்கதிர் வாலின்**
> **செங்கெல் உள தேன் ஒழுகு போதும் உள தெய்வப்**
> **பொன்னி எனல் ஆய புனல் ஆறும்உள போதா**
> **அன்னம் உள இவளொடு அன்பின் விளையாட** (58)

கன்னி, இள - இரண்டும் ஒரே பொருளன - இந்த அமைப்பு ஒரு பொருள் பன் மொழி எனப்படும். வாலின் செந்நெல் = நெல்லுக்கு ஒரு சிறிது நீண்ட வால் போன்ற பகுதி உண்டு. பொன்னி = காவிரி. போதா = பெரு நாரை.

போதாவும் அன்னமும் துன்பம் தராத இனிய பறவைகள் ஆதலின் 'அன்பின் விளையாட' எனப்பட்டது.

காவிரி தெய்வப் பொன்னி எனப்பட்டது. காவிரியையும் காவிரி நாட்டையும் கம்பரால் மறக்க முடியவில்லை. முன்பு, கோசலை நாட்டைக் 'காவிரி நாடு அன்ன கழனி நாடு'

என்றார். இங்கே, பஞ்சவடி ஆற்றைப் பொன்னி எனல் ஆய ஆறு என்றுள்ளார்.

காவிரி நீர் வளத்தால் நாட்டில் பொன் கொழிக்கச் செய்கிறது - அதாவது செல்வம் பெருகச் செய்கிறது:

**''புனல் பரந்து பொன் கொழிக்கும்**
**விளைவு அறா வியன்கழனி''** (7, 8)

என்பது பட்டினப் பாலை. வண்டலுடன் குழம்பாகச் செல்லும் நீரில் பொன் துகள் போன்ற பொடி மின்னும். இதை நேரில் காணலாம். இந்தக் காட்சியைப் பாரதிதாசனார்,

**''பொன் விளைந்தாற் போலும் நறுப்பொடி**
**விரிந்த... காவிரி''**

என்று குறிப்பிட்டுள்ளார். எண்ணற்ற நூல்களில் காவிரி பொன்னி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**தெய்வப் பொன்னி**

காவிரியைத் 'தெய்வப் பொன்னி' என்று போற்றி யுள்ளார், கம்பர். இந்தக் கம்பரின் கூற்றுக்கு அரண் செய்யும் வகையில் அகச் சான்றுகள் சில காண்பாம்:-

**''தண்ணறுங் காவிரித் தாதுமலி பெருந்துறைப்**
**புண்ணிய நன்னீர்''**

இது சிலப்பதிகாரம். (5 : 165, 166)

**''தெய்வக் காவிரித் தீது சீர் சிறப்பு''**

சிலம்பு - 10 கட்டுரை - 8. இனிச் சம்பந்தரின் பாடல் பகுதிகள் வருக:-

**''பாவம் தீர் புனல் பாற்றுறை''** (1-56-4)
**''ஆடுவோர் பாவம் தீர்த்து.... திகழு மாகாவிரி''** (7-7-46)
**''தீர்த்த நீர் வந்திழிதரு பொன்னியின் பனிமலர்**
**வார்த்த நீர் குடைவார் இடர் தீர்க்கும் வலஞ்சுழி''**
(2-2-9-6)

**"நதிப் படிய நின்று பழி தீர நல்கும் கோகரணம்"**
(3-79-5-7)

**"கங்கையின் புனித மாய காவிரி நடுவு"**

இது - தொண்டரடிப் பொடியாழ்வார் – திருமாலை – 894

**"பொன்னி நல்நதி மிக்க நீர் பாய்ந்து**
**புணரி தன்னையும் புனித மாக்குவது"**

இது - பெரிய புராணம் - 404

**"காவிரி நீர்ப் பெருந் தீர்த்தம்"** (பெ. பு. 3577)
**"பொய்யாத பொன்னிப் புது மஞ்சனம் ஆடி"**

இது - விக்கிரம சோழன் உலா – 81

தன்பால் நீராடிய அர்ச்சுனன், அரிச்சந்திரன், சுசீலை ஆகியோர்க்கும், ஒரு பன்றி - மண்டூகம் (தவளை), முதலை ஆகியவற்றிற்கும் காவிரி தீது நீக்கி நற்பேறு கிடைக்கச் செய்ததாகப் புராண வரலாறு கூறுகிறது.

**சிந்தை தொடர்தல்**

இறுதியாக, இராமன் அகத்தியனிடம் விடைபெற்றுச் சீதையோடும் தம்பி இலக்குமணனோடும் அகத்தியனது தொடரும் மனத்தோடும் சென்றான்:

**"பாகு அனைய சொல்லியொடு தம்பி பரிவின்பின்**
**போக, முனி சிந்தை தொடரக் கடிது போனான்"** (59)

பாகு அனைய சொல்லி - வெல்லப் பாகு போலும் இனிய சொல் பேசும் சீதை. முனிவனின் சிந்தை தொடர்ந்தது என்பது, அகத்தியன் நீண்ட நேரம் - நீண்ட காலம் இராமனை எண்ணிக் கொண்டிருந்தான் - என்பதை அறிவிக்கும். இது ஒரு சுவையான கருத்து வெளிப்பாடாகும்.

ஒருவர் நெஞ்சு மற்றொருவரின் பின் செல்வதாக இலக்கியங்களில் கூறுவது உண்டு: இக் கருத்து,

**"பரிந்தவர் நல்கார் என் றேங்கிப் பிரிந்தவர்**
**பின்செல்வாய் பேதையென் நெஞ்சு"** (1248)

**"கெட்டார்க்கு நட்டார்இல் என்பதோ நெஞ்சேநீ**
**பெட்டாங்கு அவர்பின் செலல்"** (1293)

*என்னும் குறள்களில் இழையோடியிருப்பதைக் காணலாம்.*

# 4. சடாயுகாண் படலம்

*சடாயுவும் இராமன் முதலிய மூவரும் கண்டுகொள்ளும் படலமாதலின் இதற்கு இப்பெயர் நல்கப் பட்டது. சில சுவடிகளில் 'சடாயுப் படலம்' என்று பெயர் உள்ளது. சடாயு கழுகு இனவேந்தன்; தயரதனின் நண்பன். எனவே, அவனுக்கும் இராமனுக்கும் ஏற்பட்ட பிணைப்பு இப் படலத்தில் இடம் பெற்றுள்ளது.*

**நட்பு மலைகள்**

இராமன் முதலிய மூவரும் காடு மலைகளையெல்லாம் கடந்து பஞ்சவடியை நோக்கிச் சென்றனர். மலைகள் ஒன்றோடொன்று தொடர்ந்து அமைந்துள்ளன. இம்மலைத் தொடர்ச்சி — நண்பர்களின் தொடர்புபோல் உள்ளதாம்.

**"கிரிகள் கேண்மையின் தொடர்ந்தன"** (1)

என்பது பாடல் பகுதி. கிரி=மலை; கேண்மை=நட்பு. கெடாமல் - பிரிக்க முடியாமல் - மேன் மேலும் தொடர்ந்து கொண்டிருப்பதுதான் நட்பு எனப்படும். இதனை,

**"நிறைநீர நீரவர் கேண்மை"** (782)

**"நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்**
**பண்புடை யாளர் தொடர்பு"** (783)

என்னும் குறள்களாலும், வெற்றி வேற்கையில் உள்ள

**"ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை**
**இருநிலம் பிளக்க வேர்வீழ்க்கும்மே"**

என்னும்பாடல் பகுதியாலும் தெளியலாம். தொடர்மலைகள் அழியாதவை - நிலையானவை - மேன்மேலும் தொடர்ந்து

கொண்டிருப்பவை. எனவே, மலைத் தொடர்ச்சிக்கு நட்பை உவமையாக்கிய கம்பரின் புலமை புகழத் தக்கது.

இராமர் முதலியோர் ஒரு மலை உச்சியிலே, சடாயு அமர்ந்திருப்பதைக் கண்டனர். அந்தச் சடாயு, அரசவை அமைச்சர் போல் தொலை நோக்கு உடைய சிறிய கண்களை உடையவனாம்.

**"ஆய்மையின் மந்திரத்து அறிஞனாம் எனச்**
**சேய்மையின் நோக்குறு சிறுகணான்"** (5)

ஆய்மை = ஆய்தல் - ஆராய்ச்சி. மை விகுதி ஏற்ற தொழில் பெயர். மை விகுதி ஏற்ற பண்புப்பெயர் ஏராளம் - ஏராளம். ஆனால், மை விகுதி ஏற்ற தொழில் பெயர் அருகியே இருக்கும்.

மந்திரம் = அமைச்சரவை. மந்திரத்து அறிஞன் = மந்திரி; தமிழில் அமைச்சன். அமைச்சர்கள் தொலை நோக்கு உடையவர்கள்; எதிர்காலத்தில் என்னென்ன நடக்கக் கூடும் - நம் அரசு என்ன செய்யவேண்டும் - எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் - என ஆழ்ந்தும் கூர்ந்தும் எண்ணிப் பார்ப்பவர்கள். வடமொழியில் 'தூர திருட்டி' என்பதும், ஆங்கிலத்தில் Foresight என்று சொல்வதும் இந்தத் தொலை நோக்குதான்.

அறிஞர்களைப் பொறுத்தமட்டில் தொலை நோக்கு இரு பொருள் உடையதாகும். எதிர்காலத்தைப் பற்றி எண்ணுவது ஒரு பொருள். கண் பார்வையைத் தொலைவில் செலுத்துவது என்பது மற்றொரு பொருள். அறிஞர்கள் ஒன்றைப் பற்றி ஆழ்ந்து எண்ணுங்கால், நெற்றியை விரல் களால் தாங்கியபடிக் குனிந்து கொண்டிருப்பது ஒரு வகை - அல்லது, அண்ணாந்து விண்ணை நோக்கிக் கொண்டிருப்பது இன்னொரு வகை - அல்லது, முகவாய்க்கட்டையில் கையை வைத்துக் கொண்டும் கண்களைச் சிறிது சுருக்கிக் கொண்டும்

தொலைதூரத்தில் பார்வையைச் செலுத்துவது மற்றொரு வகை.

மேற்கூறியவற்றுள் மூன்றாம் வகையான தொலை நோக்கு கழுகின் தொலை நோக்குக்கு ஒப்புமையாக்கப் பட்டுள்ளது. கழுகும் தொலைவிலுள்ள இரையையோ வேறு எதையோ நாடி நோக்கும். அதன் கண்களும் சிறியனவா யிருக்கும். ஏதோ ஒரு வகையில் திறமை காட்டுபவனை, அவனா - அவன் கழுகுக் கண்ணனாயிற்றே - என்று கூறுவது உலகியலில் உண்டு. சடாயுவும் இவ்வாறு நோக்கினான்.

**சொற்களின் குறைபாடு**

மேலும், சடாயு மிக்க புகழ் உடையவனாம். அவனுடைய புகழை அறிவிக்கச் சொற்கள் போதாவாம்:

**"சொல்பங்கம் உறநிமிர் இசையின் சும்மை"**(8)

பங்கம் = குறைவு. இசை = புகழ். சும்மை = தொகுதி - மிகுதி.

சொல் பங்கம் உறுதல் என்றால், அவனுடைய புகழ் முழுவதையும் சொல்லப் போதிய சொற்கள் இல்லை என்பதாம். உலக வழக்கில்கூட, அதைப்பற்றி - அவரைப் பற்றி வர்ணிக்கச் சொல் இல்லை - சொல் போதாது என்று கூறுவது உண்டு. ஆயிரம் நாக்குகள் படைத்த ஆதிசேட னாலும் முற்றும் சொல்லி முடியாது எனப் புலவர்கள் இலக்கியங்களில் எழுதியிருப்பது ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது.

**ஐய நோக்கு**

இத்தகைய சடாயுவைக் கண்ட இராம இலக்குமணர், இவன் யாராக இருக்கலாம்? அரக்கன் எவனாவது இவ்

வடிவோடு வந்திருக்கக் கூடுமா? அல்லது கருடன்தானா? என்ற ஐயத்தோடு பார்வையைச் செலுத்தினர்.

இராம இலக்குமணரைக் கண்ட சடாயு, இவர்கள் வில் ஏந்தி வில் மறவராகக் காணப்படுகின்றனர் - அதோடு தவக்கோலத்தினராகவும் தோற்றம் அளிக்கின்றனர் - இவர்கள் யாராக இருக்கலாம் என ஐயுற்று மேலும் எண்ணுகிறான்:

இந்திரன் முதலிய தேவர்களை யான் எப்போதும் காண்பேன். திருமாலும், பிரமனும், சிவனும் மறைவிலாது எனக்குக் காட்சி தருவர்; அவர்களுள் யாராகவும் இவர்கள் தெரிய வில்லையே.

**''புரந்தரன் முதலிய புலவர் யாரையும்**
**நிரந்தரம் நோக்குவன் நேமியானும்அவ்**
**வரந்தரும் இறைவனும் மழுவலாளனும்**
**கரந்திலர் என்னையான் என்றும் காண்பெனால்''** (12)

புரந்தான் = இந்திரன். நேமியான் = திருமால். மழுவலாளன் = சிவன். வைத்தீசுவரன் கோயில் என்னும் புள்ளிருக்கு வேளூர்ச் சிவனைச் சடாயு வழிபட்டதாக ஞான சம்பந்தர், தம் புள்ளிருக்கு வேளூர்த் தேவாரப் பதிகத்தின் பெரும்பாலான பாடல்களில் குறிப்பிட்டுள்ளார். அவற்றுள் ஒன்றாவது காண்போமே:

**''மறங்கொண்டு அங்கு இராவணன்தன் வலிகருதி வந்தானைப்**
**புறங்கண்ட சடாய் என்பான் புள்ளிருக்கு வேளூரே''** (6)

புள் = பறவை. கழுகாகிய பறவையின் அரசன் சடாயு. இவன் வழிபட்டதால் புள் இருக்குவேளூர் என்னும் பெயர் உண்டாயிற்று. இந்தப் பாடலில், 'சடாய்' என்றே பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. 'உ' சாரியை சேரின் சடாயு என்றாகும்.

திருப் புள் குழி என்னும் வைணவப் பதியிலும் சடாயு வழிபட்டதாகத் திருமங்கையாழ்வார் கூறியுள்ளார். புள் என்பது சடாயுவைக் குறிப்பது.

'யான் என்றும் காண்பென்' எனச் சடாயு கூறியதாகக் கம்பர் பாடியிருப்பது இதனால் தானோ!

**கால் தூசு**

மேலும் சடாயு எண்ணுகிறான்: யான் அழகில் சிறந்த காமன் எனப்படும் மன்மதனைக் கண்ணால் பார்த்துள்ளேன். அந்த மன்மதன் இவர்களின் கால் தூசுக்கும் ஒப்பாக மாட்டான்:

**"காமன் என்பவனையும் கண்ணின் நோக்கினேன்**
**தாமரைச் செங்கண்இத் தடக்கை வீரர்கள்**
**பூமரு பொலங் கழல் பொடியினோடும் ஒப்பு**
**ஆம்என அறிகிலேன் ஆர்கொலாம் இவர்?"** (13)

காமன் = மன்மதன். கழல்பொடி = கால் தூசு. கம்பர் தமது பாடலில் உலகியல் வழக்காறு ஒன்றை அப்படியே பிழிந்து வைத்துள்ளார். "இவர்கள் அவர்களின் கால் தூசுக்கும் ஒப்பாக மாட்டார்கள்" என்பது போன்றது அது.

பின்னர், சடாயு இராமஇலக்குமணரை நோக்கி, நீங்கள் யார் என வினவினான். நாங்கள் தயரதன் மைந்தர் என அவர்கள் விடையிறுத்தனர்.

**தோள்கள் வலியவோ?**

வேந்தர் வேந்தனாகிய உங்கள் தந்தை தயரதன் தோள் வலிமையுடன் உள்ளானா எனச் சடாயு நலம் வினவினான்:

**"விரைத்தடம் தாரினீர் வேந்தர்வேந்தன் தன்**
**வரைத்தடம் தோள்இணை வலியவோ என்றான்"** (18)

உலகியலில் நலம் வினவுபவர்கள், 'எல்லாரும் நலமா' என்பர். சிலர், யாருக்கும் உடம்புக்கு ஒன்றும் இல்லையே, எல்லாரும் நலம்தானே என்பர். இந்த இரண்டாவது வகையைச் சேர்ந்தது, தயரதனின் தோள்கள் வலியவா?- என்று கேட்டது. இப்போது ஆளே இல்லை - இறந்து விட்டான். எனவே அவ்வாறு கேட்க வைத்துள்ளார் கம்பர். கேகய நாட்டில் இருந்த பரதனுக்கு மடல் கொண்டு போன தூதரிடம் பரதன் 'தீது இலன் கொல் திருமுடியோன்' என வினவினான். ஆனால் திருமுடியோன் இறந்து விட்டான். பின், இராமன் அழியாத செல்வத் தோடு உள்ளானா? என வினவினான். ஆனால் இராமனோ செல்வம் இழந்து காட்டிற்குப் புறப்பட்டு விட்டான். படிப்பவர்க்குச் சுவையூட்டக் கம்பரின் எழுதுகோல் இடத் திற்கு ஏற்ப வளைந்து கொடுக்கும்.

**கழுவிய கண்ணீர்**

தயரதன் இறந்து விட்டான் எனமைந்தர்கள் கூறியதும் நண்பனாகிய சடாயு மயக்கமாய் விழுந்து விட்டான். அவனது மயக்கத்தை இராம இலக்குமணர் முகத்தில் நீர் கொட்டிக் கழுவித் தெளிய வைத்தனர்-நீர் என்றால் கண்ணீராகும்.

> **"தழுவினர் எடுத்தனர் தடக்கையால், முகம்**
> **கழுவினர் இருவரும் கண்ணின் நீரினால்"** (20)

மயக்கம் உற்றவரது முகத்தில் தண்ணீர் தெளிப்பது வழக்கம். இங்கே இருவரும் சடாயுவைக் கைகளால் தூக்கி அணைத்து, சடாயுவின் முகத்திற்கு மேலே தங்கள் முகங்களை வைத்துக் கொண்டு கண்ணீர் விட்டு அழுதனர். கண்ணீர் சடாயுவின் முகத்தில் பட்டதும் அவன் எழுந்தான். கம்பன் கற்றுத் தந்த 'கண்ணீரால் கழுவுதல்' என்பதை இப்போது சிலர் எதுஎதற்கோ பயன்படுத்துகின்றனர்.

கழுவும் அளவுக்குக் கண்ணீர் விட்டனர் என்பது அவர்களின் துயர மிகுதியைக் காட்டுகின்றது. தந்தையின் நண்பன் ஆயிற்றே!

## மூன்றுக்கு மூன்று

தயரதனை எண்ணிச் சடாயு புலம்புகின்றான். முப்பொருள்கள் மகிழவும் முப்பொருள்கள் வருந்தவும் இறந்துவிட்டாயே என்கிறான்.

எதைக் கேட்கினும் தருகின்ற கற்பக மரத்தைவிட, தயரதன் மிகுதியாக வழங்குவானாம்; அதனால் தயரதனது கொடைக்குக் கற்பகம் தோற்று வருந்தியிருந்தது. தேய்வதும் நடுவில் களங்கம் உடையதுமாகிய திங்கள், அவ்வாறு குறையின்றி வெண்மையாய் விளங்கிய தயரதனின் குடைக்குத் தோற்று வருந்தியிருந்ததாம்.

தோண்டினாலும் பொறுக்கும் நிலம் (பூமி), தயரதனின் பொறுமைப் பண்புக்குத் தோற்று வருந்தியதாம். இப்போது தயரதன் இறந்து விட்டதால், அவனுடைய கொடை மீதும் குடை மீதும் பொறுமை மீதும் பொறாமை கொண்டிருந்த கற்பக மரமும், திங்களும், நிலமும் மகிழ்கின்றனவாம்.

அதே நேரத்தில், இரவலர்களும் நல்லறமும் சடாயுவும் வருந்தும்படி நேரிட்டதாம்.

"பரவலரும் கொடைக்கும் நின்றன் பனிக்குடைக்கும்
பொறைக்கும் நெடும்பண்பு தோற்ற
கரவலரும் கற்பகமும் உடுபதிரும் கடலிடமும்
களித்து வாழப்
புரவலர்தம் புரவலனே பொய்ப் பகையே
மெய்க்கு அணியே புகழின் வாழ்வே
இரவலரும் நல்லறமும் யானும் இனி
என்பட நீத்து ஏகினாயே" (21)

பரவல் அரும் = புகழ்தற்கு அரிய. கரவல் அரும் = மறைத்தல் இல்லாத. உடுபதி = திங்கள். உடு = விண்மீன். விண்மீன்களின் தலைவன் திங்கள் என்ற விளக்கம் வேறு காண்டங்களிலும் இடம் பெற்றுள்ளது. கடல் இடம் = கடல் சூழ்ந்த நிலம் (பூமி). பொறைக்குச் சிறந்தது நிலம் என்பதை,

**"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை"** (151)

என்னும் குறளாலும் அறியலாம். அத்தகைய நிலமே தயரதனின் பொறைக்குத் (பொறுமைக்குத்) தோற்றதாம்.

தயரதனின் பொறுமைக்கு ஒரு சான்று வேண்டுமே. இராமனது பட்டத்தைப் பறித்துக் காடேகச் செய்த ஒன்றைப் பொறுத்துக் கொண்ட பொறுமையே போதாதா? வேறு ஒருவராயிருந்தால், கைகேயி கூறுவதை ஏற்றுக் கொள்ளாமல், அவளை நையப் புடைத்துத் தூக்கி எறிந்திருப்பர் - தயரதனோ பொறுத்துக் கொண்டான்.

பொய்க்குப் பகைவன்-மெய்க்கு அணியானவன் அதாவது பொய்யாமை உடையவன்; அதனால் புகழ் பெற்றான்.

**"பொய்யாமை அன்ன புகழில்லை"**

என்னும் குறள் ஈண்டு எண்ணத் தக்கது.

புரவலன் போய் விட்டதால் இரவலர் வருந்துகின்றனர். அறநெறி மன்னன் இறந்து விட்டதால் இனி அறநெறிக்கு நெருக்கடி நேரும். நண்பன் இறந்தது சடாயுவுக்கு வருத்தமாம்.

கம்பர் இந்தப் பாடலிலே ஒரு புதுமையைக் கையாண்டு உள்ளார். சிறந்த அழகிய பெண் ஒருத்தியின் நடைக்கு அன்னமும், கைக்குச் காந்தளும், இடைக்குக் கொடியும், கொங்கைக்குக் கோங்கரும்பும், உதட்டுக்குக் கொவ்வைக்கனி

அல்லது பவளமும், கழுத்திற்குச் சங்கும், காதுக்கு வள்ளையும், கண்ணுக்குக் குவளையும், முகத்திற்குத் தாமரையும், கூந்தலுக்கு முகிலும், இப்படி இன்னும் பலவும் தோற்றுவிட்டதாகவும் - அஞ்சுவதாகவும் - ஓடி மறைவதாகவும் - நாணுவதாகவும் எழுதுவது புலவர்களின் வாடிக்கை. கம்பனும் இதற்கு விதி விலக்கு அல்லன். சீதையின் உறுப்புகட்கு எது எதுவோ தோற்றுவிட்டதாகப் படாத பாடு படுத்தியுள்ளான். இந்தக் கற்பனைக்குச் சீதையும் விலக்கு அல்லள்.

ஆனால் இந்தப் பாடலில், ஆடவனாகிய தயரதனின் பண்புகட்கும் குடையாகிய உடைமைக்கும் சில தோற்று விட்டதாகவும், அவன் இறந்ததால் இவை மகிழ்ச்சி அடைந்ததாகவும் கூறியிருப்பது கம்பன் கையாண்டுள்ள ஒரு புதுமையாகும்.

**அமிழ்தக் குடை**

சடாயு மேலும் புலம்புகிறான். உலகை வாழ வைக்கும் குடை உடையவனே! எனது நட்பை ஆய்ந்தறிய நீ இறந்தாயோ? நான் விலங்கு ஆதலால், நட்புக்கடமையைச் செய்யவில்லை-இன்னும் உயிர் விட்டிலேன்:

**"அலங்காரம் என் உலகுக்கு அமுதளிக்கும்**
**தனிக்குடையாய் ஆழி சூழ்ந்த**
**நிலம்காவல் அதுகிடக்க நிலையாத நிலையுடையேன்**
**நேய நெஞ்சின்**
**நலம்காண நடந்தனையோ நாயகனே தீவினையேன்**
**நண்பி னின்றும்**
**விலங்கானேன் ஆதலினால் விலங்கினேன்**
**இன்னும் உயிர் விட்டிலேனால்"** (22)

இது மிகவும் சுவை ததும்பும் பாடல். தயரதனது குடை வெயிலை மறைத்து நிழல் தருவதற்காக உள்ளதன்றாம்; குடி

மக்கட்கு அமிழ்தமாகியவளவாகிய நிழலைத் தருவதாம். மன்னர்கள் குடை வைத்திருப்பது, வெயிலால் வருந்துபவரைக் காக்கும் குடைபோல, வறுமையாலும் மற்ற துன்பங்களாலும் வருந்தும் மக்களைக் காப்போம் என்று உறுதி கூறுவதின் அடையாளமாகும். ஈண்டு, கிள்ளி வளவனை வெள்ளைக்குடி நாகனார் பாடிய புறநானூற்றுப் பாடலில் உள்ள

**''கண்பொர விளங்குநின் விண்பொரு வியன்குடை**
**வெயில் மறைக் கொண்டன்றோ அன்றே வருந்திய**
**குடி மறைப் பதுவே''** (35 : 19,20,21)

என்னும் பகுதியும், சிலப்பதிகாரத்தில் உள்ள

**''திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்**
**கொங்கலர் தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்**
**அங்கண் உலகு அளித்தலான்''** (1 : 1, 2, 3)

என்னும் பகுதியும், அகநானூற்றில் உள்ள

**''உலகுடன் நிழற்றிய தொலையா வெண்குடைக்**
**கடல்போல் தானைக் கலிமா வழுதி''** (204 : 1, 2)

என்னும் பகுதியும், பெருங்கதையில் உள்ள

''.........ஏம **வெண்குடை''** (1.36 : 104)
**''வெயில்அழல் கலியாது வியலக வரைப்பின்**
**உயிர்அழல் கவிக்கும் உயர்ச்சித் தாகிப்**
**பூந்தார் அணிந்த ஏந்தல் வெண்குடை''** (42 : 44-46)

என்னும் பகுதிகளும் ஒப்புநோக்கிச் சுவைக்கத் தக்கன. தமக்கு முன் பாடிய புலவர்களின் கருத்தாட்சியைக் கம்பரும் கையாண்டுள்ளார்.

### உயிர் கொடுப்பான் தோழன்

தயரதன் இறந்ததற்குச் சடாயு புதிதாக ஒரு காரணம் கற்பித்துக் கூறியதாகக் கம்பர் பாடியுள்ளார். அதாவது:

அரசாட்சி கிடக்கட்டும் என்று அதைப் பொருட்படுத்தாது விட்டுவிட்டு, என்னுடைய உண்மையான அன்பை-நட்பை ஆய்ந்தறியவே (சோதிக்கவே) இவ்வாறு இறந்தனை போலும் என்றுள்ளான் சடாயு.

அதாவது: உண்மையான நண்பர் தம் உண்மையான நண்பர் இறந்துவிடின் தாமும் இறந்துவிடுவர் - அவ்வாறு நாம் (தயாதன்) இறந்ததும் சடாயுவும் இறந்து விண்ணுலகிற்கு வந்து நம்மோடு சேர்கிறனா என்பதை அறியவே இறந்தனையோ என்றுள்ளான்.

நண்பர் இறந்துவிடின், உண்மையான நண்பர்களும் இறந்து விடுவர் என்பதற்கு, கோப்பெருஞ்சோழன் இறந்ததும், அது பொறாது, பிசிராந்தையார் என்ற புலவரும் பொத்தியார் என்ற புலவரும் உடன் இறந்ததைப் புறநானூற்று வரலாறு சான்று பகரும்.

செஞ்சி தேசிங்கு மன்னனோடு ஆர்க்காடு நவாப் போர் தொடுத்தான். அப்போது தேசிங்கின் நண்பனும் படைத் தலைவனுமாகிய மகமத்கான் என்பவன் வழுதாவூரில் திருமண மேடையில் மணமகனாக அமர்ந்திருந்தான். செஞ்சிப் போரைக் கேள்விப்பட்டு உடனே எழுந்தோடித் தேசிங்கிற்கு வெற்றி தேடித் தந்தான். மகமத்கானை எதிரி ஒருவன் பின்னால் இருந்து படைக்கலம் ஏவிக் கொன்று விட்டான். தனக்காக உயிர் கொடுத்த நண்பன் மகமத்கான் இறந்ததைப் பொறாத மன்னன் தேசிங்கு தானும் தற்கொலை செய்து கொண்டு இறந்து விட்டான்.

இத்தகைய நண்பர்களின் வரலாறுகள் உலகில் வழங்கும் வரையும் 'நட்பு' என்னும் சொல் அகராதியில் இருக்கும். இங்கே,

**"கேட்டினும் உண்டுஓர் உறுதி கிளைஞரை**
**நீட்டி அளப்பதோர் கோல்"** (796)

**"அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்**
**அல்லல் உழப்பதாம் நட்பு"** (787)

என்னும் குறள்கள் ஆய்வு செய்யத் தக்கன.

இந்தக் கருத்துகளை உட்கொண்டே 'நிலம் காவல் அது கிடக்க நிலையாத நிலையுடையேன் நேய நெஞ்சின் நலம் காண நடந்தனையோ' என்றான் சடாயு.

அடுத்து, கம்பர் இந்தப் பாடலில் ஒரு சொல் விளையாட்டு விளையாடியுள்ளார். அதாவது:

மிருகத்திற்கு விலங்கு என்ற பெயர், மக்களினின்றும் விலகியிருப்பதால் வந்ததாகக் கூறுவர். சடாயு கூறுகிறான்; யான் விலங்கு ஆதலால், உயிர்விட வேண்டிய கட்டாயத்தி லிருந்து விலகிவிட்டேன் போலும் எனக் கூறுகிறான். பறவையும் விலங்கு எனப்படும்.

இவ்வாறாக, இந்தப் பாடலைச் சுவைக் கேணியாக ஆக்கியுள்ளார் கம்பர். தோண்டத் தோண்டச் சுவை நீர் ஊறுகிறது.

இங்கே, பிரபுலிங்க லீலையில் உள்ள ஒரு பாடல் ஒப்பு நோக்கி மகிழ்தற்கு உரியது. அதாவது:- நல்லவரைக் காணலாகாது - கண்டு விடின் அவருடன் நட்பு கொள்ளலாகாது - நட்பு கொண்டுவிடின் பிறகு பிரியலாகாது - பிரியநேரின் உயிரை விட்டுவிடவேண்டும் - என்று அல்லமர் என்னும் அருளாளரைப் பிரிந்த அன்பர்கள் கூறுவதாக அப்பாடல் அமைந்துள்ளது.

**"காணுதல் ஒழிக நல்லார்க் காணின் அங்கு அவர்பால் நட்புப்**
**பேணுதல் ஒழிக பேணில் பிரிவுறல் ஒழிக உற்றால்**
**மாணுயிர் உடம்பில் வாழும் வாழ்க்கை போய் ஒழிக"**
(19 : 4)

என்பது பாடல் "உயிர் கொடுப்பான் தோழன்" என்னும் முதியோர் மொழியும் ஈண்டு எண்ணத்தக்கது.

இந்தக் கருத்துகளையெல்லாம் கம்பரின் பாடலோடு ஒத்திட்டு நோக்கின், தோண்டத் தோண்டக் கம்பரின் பாடலில் சுவைநீர் ஊறுவதை அறிந்து மகிழலாம்.

**உயிரும் உடலும்**

மேலும் உருகுகிறான் சடாயு. சம்பராசுரனோடு செய்த போரில் உனக்குத் துணையாக இருந்த என்னை நோக்கி, நீ (சடாயு) உயிர் - நான் (தயரதன்) உடல் என உலகறியக் கூறினாய்; ஆனால் நல்லுணர்வு இல்லாத எமன், உயிரை (சடாயுவை) மண்ணுலகில் விட்டு, உடலை (தயரதனை) விண்ணுலகிற்கு ஏற்றிவிட்டான்.

**"தயிர் உடைக்கும் மத்துஎன்ன உலகைநலி**
**சம்பரனைத் தடிந்த அந்நாள்**
**அயிர்கிடக்கும் கடல் வலயத்தவர் அறிய**
**நீ உடல் நான் ஆவிஎன்று**
**செயிர் கிடத்தல் செய்யாத திருமனத்தாய்**
**செப்பினாய் திறம்பா நின்சொல்**
**உயிர்கிடக்க உடலை விசும்பு ஏற்றினார்**
**உணர்வு இழந்த கூற்றினாரே"** (23)

தயிரைக் கடைந்து கலக்கும் மத்தைப் போல் சம்பராசுரன் உலகைக் கலக்கி வருந்தினானாம். கத்தியால் வெட்டும் கட்டித் தயிரா யிருந்தால்தான் இந்த உவமை பொருந்தும். மத்து தயிரை உடைக்கிறதாம்.

கடல் வலயத்தவர் = கடல் சூழ்ந்த உலக மக்கள். அயிர் = மணல். செயிர் = குற்றம். தயரதன் குற்றமற்ற உள்ளத்தனாம்.

இந்தப் பாடலில் வியப்புச் சுவை உள்ளது. எமன் உடலைக் கீழே விட்டு உயிரை மேலே எடுத்துச் செல்வது வழக்கம். இங்கே, உயிரைக் கீழே விட்டு உடலை மேலே எடுத்துச் சென்றானாம். அதாவது: தயரதனால் உயிர் என்று சொல்லப்பட்ட சடாயுவைக் கீழே விட்டான். தயரதனால் உடல் என்று சொல்லப்பட்ட அவனை மேலே கொண்டு சென்றான். இது ஒரு வகை வியப்பன்றோ!

**எண்ண இயைபு**

எப்போதோ நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி தொடர்பான எண்ணத்தை, இப்போது உள்ள நிலைமைக்கு ஏற்ற எண்ணத்துடன் இணைத்து இயைபு படுத்துவது 'எண்ண இயைபு' – Association of Thoughts எனப்படும் – என்பது ஒருவகை உளவியல் கருத்தாகும்.

எப்போதோ சம்பராசுரனுடன் போர் செய்த தயரதனுக்குச் சடாயு உதவி செய்த போது, சடாயுவை உயிராகவும் தன்னை உடலாகவும் தயரதன் கூறியதைச் சடாயு இப்போது எண்ணி, இயைபு படுத்திப் பார்த்து, உயிர் கீழே கிடக்க உடலை எமன் மேலே கொண்டு சென்றது முரணான வியப்பு என்கிறான். இது ஒரு வகை எண்ண இயைபாகும்.

நீ காட்டிற்கு வராதே என்று சீதையை இராமன் தடுத்ததை, பின்னர்க் காட்டிற்கு வந்து தொல்லைப்பட்ட போது எண்ணி வருந்தியதும் எண்ண இயைபாகும்.

கணவனாகிய வாலியை இழந்த தாரையின் கைம்மைக் கோலத்தைக் கண்ட இலக்குவன், தன் தந்தை தயரதனைப் பிரிந்த தாய்மார்கள் மூவரும் கொண்டிருந்த கைம்மைக் கோலத்தை இணைத்து எண்ணிப் பார்த்ததும் எண்ண இயைபாகும். இது அடுத்த கிட்கிந்தா காண்டத்தில் சொல்லப்பட்டுள்ளது.

'இலக்கிய ஒப்புமை காண்டல்' என்னும் முறையில், புறநானூற்றில் உள்ள ஓர் எண்ண இயைபைக் காணலாம்: தந்தை பாரியையும் பறம்பு மலையையும் இழந்தபின், அடுத்து வந்த முழுநிலாப் பருவ நாளில் பாரி மகளிர் பின்வருமாறு கூறினர்.

சென்ற திங்களின் (மாதத்தின்) முழுநிலா நாளில் எம் தந்தையும் இருந்தார்; எம் குன்றும் இருந்தது; இன்றைய முழுநிலா நாளில் எம் தந்தையும் இல்லை; எம் மலையையும் வேற்றரசர் பறித்துக் கொண்டனர்:

**"அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்**
**எந்தையும் உடையேம் எம் குன்றும் பிறர் கொளார்**
**இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்**
**வென்றெறி முரசின் வேந்தர்எம்**
**குன்றும் கொண்டார் யாம் எந்தையும் இலமே"** (112)

என்பது பாடல். இவ்வாறு, முன் நடந்ததைப் பின் உள்ளதோடு தொடர்பு படுத்திப் பார்த்தார் சடாயு. இனி அடுத்த செய்திக்குச் செல்லலாம்:

எமனைக் கூற்றினார் என 'ஆர்' சிறப்பு விகுதி கொடுத்துள்ளது. எமனை உயர்த்துவது போல் கிண்டலாகப் பழித்தலாம். 'உணர்வு இழந்த' என்பது கவனிக்கத் தக்கது. எமன் உணர்ச்சி அற்றவனாம்.

'உரலுக்கு ஒரு பக்கம் இடி - மத்தளத்திற்கு இரு பக்கமும் இடியாம்.' எமனது நிலைமையும் இதேதான். அவனை நீதிதேவன், எம தருமன் என்றெல்லாம் அவனது பாகுபாடற்ற நேர்மைக்காகப் புகழ்வது ஒரு பக்கம். அதே நேரத்தில் அவனைத் தூற்றுவது மற்றொரு பக்கமாகும்.

**"கொடுந் தொழிலாளன் கொன்றனன் குவிப்ப"**

என்று மணிமேகலை தூற்றுகிறது.

'நமனை அஞ்சோம்' என நாவுக்கரசர் அவனைப் பொருட்படுத்தாது கூறுகிறார். 'அந்தகா வந்துபார் சற்று என் கைக்கு எட்டவே' என அருணகிரிநாதர் அறைகூவல் விடுகிறார். எமனது திறமையற்ற ஒரு செயலுக்காகப் புறநானூற்றுப் புலவர் ஒருவர் இரக்கப்பட்டுக் கேலி செய்கிறார். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய ஆடுதுறை மாசாத்தனார் பாடிய பாடல் அது.

என்ன சொல்கிறார்: எமனை எண்ணி, இரக்கம் அற்ற எமனே! நீ மிகவும் அறிவிலி. விதையைச் சமைத்து உண்டு விட்டாயே. விதை இருந்தால் அல்லவா-அதன் வாயிலாக மேலும் பல உணவுப் பொருள்கள் விளையும்? நீ விதையையே உண்டு விட்டாயே. கிள்ளி வளவன் இருந்தால் அவன் பல போர்கள் செய்து பல உயிர்களைக் கொன்று உன் பசி தீர்ப்பானே - நீ அவனையே கொன்று விட்டாய். இனி உன் பசியைத் தீர்ப்பவர் யார்? நீ சூழ்ச்சிதெரியாத அப்பாவி எமன்—

**"நனி பேதையே நயன்இ கூற்றம்**
**விரகு இன்மையின் வித்து அட்டு உண்டனை** ......
**இனியார் மற்றுநின் பசிதீர்ப் போரே"** (227 : 1, 2 & 11)

இதுதான் இப்படியெனில், தனக்கு உள்ள உரிமையின் படி-விதிப்படி மார்க்கண்டேயன் உயிரைப் பிடிக்க வந்த எமனை, வேலியே பயிரை மேய்ந்தது போல் சிவன் காலால் உதைத்துத் தள்ளிக் 'கால காலன்' என்னும் பெயரைத் தட்டிக் கொண்டார்.

இவற்றையெல்லாம் உள்ளடக்கித்தான், 'உணர்வு இழந்த கூற்று' எனக் கம்பர் பாடினார். அந்தோ எமன் அளியன்!

இவ்வாறு புலம்பிய சடாயுவின் நிலையை எண்ணி இராம இலக்குமணர் கண்ணீர் சொரிந்து வருந்தினர்.

பின்னர் ஒருவர்க்கு ஒருவர் தத்தம் வரலாறு கூறிக் கொண்டனர்.

மருகி சீதையையும் மைந்தர்கள் இராம இலக்குமணரையும், கூட்டில் குருவி குஞ்சுகளைப் பார்த்துக் கொண்டிருப்பது போல் கண்ணுக்கு மறையும் வரையும் சடாயு பார்த்துக் கொண்டே இருந்தான்.

இங்கேயே தங்குக என்று அவர்களை வேண்டிக் கொண்டான். நாங்கள் மேற்கொண்டு செல்லவேண்டும் என விடை பெற்றுக் கொண்டு பயணம் தொடங்கினர் மூவரும்.

**"வார்ப்பொன் கொங்கை மருகியை மக்களை**
**ஏர்ப்பச் சிந்தனையிட்டு அவ்வரக்கர்தம்**
**சீர்ப்பைச் சிக்கறத் தேறினன் சேர்க்கையில்**
**பார்ப்பைப் பார்க்கும் பறவையின் பார்க்கின்றான்"** (48)

மருகி=சீதை. மக்கள்=இராம இலக்குமணர். இராம இலக்குமணர் சடாயுவைத் தந்தையாகக் கொண்டதால், சீதை சடாயுவுக்கு மருகி (மருமகள்) எனப் பட்டாள். ஆணினும் பெண்ணையே முதன்மையாய்க் காக்க வேண்டு மாதலின் மருகியை முன் கூறினார்.

அரக்கர்களின் இயல்பை நன்கு சடாயு அறிந்து தேறி யிருப்பதால், அரக்கரால் சீதைக்குத் துன்பம் வந்தாலும் வரலாம் என விழிப்புடன் நோக்கினான். ஏர்ப்பச் சிந்தனை யிடல்=விழிப்புடன் நோக்கிக் காத்தல்.

கம்பர் நான்காம் அடியில் சொல் விளையாட்டு செய்துள்ளார். பார்ப்பு=பறவைக் குஞ்சு. பார்ப்பைப் பார்க்கிறதாம் சடாயுப் பறவை. பார்ப்பு-பார்க்கும்-என்னும் இரண்டின் அடிச் சொல்லும் 'பார்' என்பதே. பறவைக் குஞ்சைப் பார்ப்பது பறவைதானே - ஆம் கழுகரசனாகிய சடாயுவும் ஒரு பறவைதானே.

இங்கே, அதிசயக் கோவையில் 'உள்ள ஒரு சொல் விளையாட்டு நினைவிற்கு வருகிறது. அது,

**"ஐந்தாம் குலத்தவர் பார்ப்பாரைச் சேரல் அதிசயமே"**

என்பதாகும்.

ஐந்தாம் குலத்தவர் = ஆதிதிராவிடர். பார்ப்பார் = பிராமணர். ஆதிதிராவிடப் பெண் பார்ப்பன ஆணையோ அல்லது ஆதிதிராவிட ஆண் பார்ப்பனப் பெண்ணையோ சேர்ந்து மணந்து கொள்ளுதல் அதிசயமாகும் - என்பது கருத்து. இது இந்தக் காலத்தில் எளிதாக நடந்தாலும் பண்டைக் காலத்தில் அதிசயமேயாகும்.

இந்த அடியில் மற்றொரு பொருள் மறைந்துள்ளது. காதலன் காதலியை நெருங்கினான். காதலி நாணத்தால் தன் ஒரு கையால் கண்களை மூடிக்கொண்டாளாம். இதற்குப் பொருளாவது: - ஐந்தாம் குலத்தவர் = ஐந்து விரல்களை உடைய உள்ளங்கைப்பகுதி. பார்ப்பார் = பார்க்கும் கண், அதாவது, நாணங்கொண்டு தன் கையால் கண்களை மூடிக் கொண்டாளாம். இது, அகப் பொருளில், 'நாணிக்கண் புதைத்தல்' என்னும் துறையைச் சேர்ந்ததாகும்.

# 5. சூர்ப்பணகைப் படலம்

இராவணன் தங்கையாகிய சூர்ப்பணகை என்னும் அரக்கி தொடர்பான படலம் இது. சூர்ப்பம் என்றால் முறம். முறம் போன்ற நகம் உடையவளாதலின் இவளுக்கு இப்பெயர் ஏற்பட்டது.

**கோதாவரி காணல்**

பஞ்சவடி நோக்கிச் சீதையோடு சென்ற இராம இலக்குமணர் கோதாவரி ஆற்றைக் கண்டனராம். கோதாவரி ஆற்றை இரு பொருள் (சிலேடை) நயம் பெறக் கம்பர் புனைந்துள்ளார்:

**"புவியினுக்கு அணியாய் ஆன்ற**
**பொருள் தந்து புலத்திற் றாகி**
**அவிஅகத் துறைகள் தாங்கி**
**ஐந்திணை நெறி அளாவிச்**
**சவிஉறத் தெளிந்து தண்என்று**
**ஒழுக்கமும் தழுவிச் சான்றோர்**
**கவி எனக் கிடந்த கோதா**
**வரியினை வீரர் கண்டார்"** (1)

இந்தப் பாடலில் ஆறு கவியோடு ஒப்பிட்டுக் கூறப் பட்டுள்ளது. ஆற்றுக்கும் கவிக்கும் உள்ள ஒற்றுமையைக் காண்பாம்;

1. புவியினுக்கு அணி = உலகுக்கு – ஊருக்கு அணியாய் – அழகாய் – அலங்காரமாய் ஆறு உள்ளது. "ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" என்பது ஔவையின்

மொழி. சான்றோர் கவியிலும் (செய்யுளிலும்) உவமை, உருவகம் முதலிய அணிகள் உள்ளன.

2. ஆன்ற பொருள் தருதல் = ஆற்றில் ஆரம், அகில், முத்து, மணிகள் முதலிய உயர்ந்த பொருள்கள் அடித்துக்கொண்டு வரப்படுகின்றன. சான்றோர் கவியிலும் உயரிய கருத்துகள் (பொருள்கள்) அமைந்துள்ளன.

3. புலத்திற்றாதல் = புலம் என்பதற்கு நிலம், புலமை அறிவு என்னும் பொருள்கள் உண்டு. ஆறு பாய்ச்சல் நிலங்களை இருபக்கங்களிலும் கொண்டுள்ளது. கவியிலும் புலவர்களின் புலமை நயம் பொருந்தியிருக்கும்.

4. அவி அகத்துறைகள் தாங்கல் = அவிப் பொருளை நெருப்பில் இட்டுச் செய்யும் வேள்விக் குண்டங்களைக் கரையின் பக்கங்களில் ஆறு உடைத்தா யிருத்தல். கவி அகப்பொருள் (இலக்கணத்) துறைகள் பலவற்றை உடைத்தா யிருத்தல்.

5. ஐந்திணை நெறி அளாவல் = குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்து வகை நிலப் பகுதிகள் வழியாகவும் ஆறு செல்லுதல். இந்த ஐந்து திணைகளைப் பற்றிய செய்திகள் (அகன் ஐந்திணை) கவியில் இடம் பெற்றிருத்தல்.

6. சவி உறத் தெளிதல் = ஆற்று நீர் பளபளப்பான ஒளியுடன் தெளிந்திருத்தல். சான்றோரின் கவி தெளிந்த தெளிவான பொருள் உடையதாயிருத்தல். அத்யாத்ம இராமாயணத்தில், சான்றோரின் நல்ல உள்ளம் போல் ஆற்றின் நீர் தெளிவாக உள்ளது. என்று கூறப்பட்டிருப்பது. ஈண்டு ஒப்புநோக்கத்தக்கதாகும். கம்பர் முதன்மையாக இதைக் கூறியுள்ளார்.

7. தண் என்ற ஒழுக்கம் தழுவல் = குளிர்ச்சியுடன் நீர் நேராகச் செல்லுதல். ஒழுக்கம் என்பதற்குச் செல்லுதல், நற்பண்பு என்னும் பொருள்கள் உண்டு. ஆற்று நீர் நீர்நிலைகள் போல் ஒரே இடத்தில் நிலையாய் நிற்காமல் தடையின்றி ஓடிக்கொண்டே இருக்கும் இதுதான் ஆறு ஒழுக்கம் தழுவுதல் என்பது. கவியிலும் பல நல்லொழுக்க நெறிகள் அறிவிக்கப்பட்டிருக்கும். சொற்களை முன் பின்னாக மாற்றிச்சுட்டிப் பொருள் கொள்ளும்படி இல்லாமல், உரை நடைபோல் நேரே தொடர்ந்து செல்லுமாறு சொற்களை எழுதும் அமைப்புக்கு 'ஆற்று ஒழுக்கு' என்ற பெயர் இலக்கணத்தில் தரப்பட்டிருப்பது ஈண்டு எண்ணத்தக்கது. (நன்னூல்-19),

ஆறு இடையறாது தடைபடாது ஒழுகிக்கொண்டு இருக்கும் என்பதைக் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, ஆறு சொல்வதுபோல் மிகவும் சுவையாகப் பாடியுள்ளார்.

**"அல்லும் பகலும் அலைந்து வந்தேன் — எங்கள்**
**ஆழி இறைவனைக் காண வந்தேன்**
**நில்லும் எனக்கு இனி நேரமில்லை — இன்னும்**
**நீண்ட வழிபோக வேண்டும் அம்மா"**

(மலரும் மாலையும் — 43 : 8)

என்பது பாடல். மற்றும், டென்னிசன் (Lord Tennyson) என்னும் ஆங்கிலக் கவிஞரும் இவ்வாறு ஆறு சொல்வது போல் அறிவித்துள்ளார்.

"Men may come and men may go;
But I go on for ever"

என்பது அவரது பாடல். இதைத்தான் கம்பர் 'தண் என்ற ஒழுக்கம் தழுவுதல்' என்றார். சிலப்பதிகாரத்திலும்,

**"உலகு புரந்தூட்டும் உயர்பேர் ஒழுக்கத்துப்**
**புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி**
**வையை என்ற பொய்யாக் குலக்கொடி"** (13 : 168-170)

என ஆற்றின் ஒழுக்கம் கூறப்பட்டுள்ளது.

அடுத்து, 'சான்றோர் கவி எனக் கிடந்த கோதாவரி' என்பதில் உள்ள 'கிடந்த' என்னும் சொல், கருதத்தக்கது. ஆறு நீளமயாய்த் தெரிவது படுத்துக் கிடப்பது போல் தோன்றுகிறது போலும். இங்கே,

**"ஆறு கிடந்தென்ன அகல் நெடுந் தெரு"** (359)

என்னும் மதுரைக்காஞ்சி அடியும், மலைபடுகடாம் என்னும் நூலில் உள்ள

**"யாறெனக் கிடந்த தெரு"**

என்னும் அடியும் ஒப்புநோக்கத்தன.

இவ்வாறு, கம்பர் ஆற்றுக்கும் கவிக்கும் ஒப்புமை தெரியும்படி இருபொருள் அமையப்பாடியிருப்பது சுவைக்கத் தக்கதாகும். இவ்வகையான பாடல் அமைப்பு இரு பொருள் (சிலேடை) அணி எனப்படும்.

**அடிபணிவது**

கோதாவரி ஆறு, இராமஇலக்குமணர் சீதை ஆகியோரின் திருவடிகளை ஒருபெண் பணிவது போல் தோன்றிற்றாம். கோதாவரிப் பெண்ணின் முகம் நீரில் உள்ள தாமரைமலர்; கண் குவளை மலர்; கை அலை, தாமரையாகிய முகம் மலர்ந்து, குவளையாகிய கண்ணால் நோக்கி, அலையாகிய கையால், நீரில் அடித்து வரும் மலர் களைக் கரையில் இவர்களின் திருவடிகளில் பட ஒதுக்கித் தூவி வழிபடுவது போல் தோற்றம் அளிக்கிறதாம்.

**"வண்டுறை கமலச் செல்வி வாள்முகம் பொலிய வாசம்**
**உண்டுறை குவளை ஒண்கண் ஒருங்குற நோக்கிஊழின்**

**தெண்திரைக் கரத்தின் வாரித் திருமலர் தூவிச்**
**செல்வர்க்**
**கண்டு அடி பணிவ தென்னப் பொலிந்தது**
**கடவுள்யாறு''** (2)

*செல்வர்=இராம இலக்குமணர். ஐம் பூதங்களுள் காற்று, நெருப்பு ஆகியவற்றை முறையே வாயுபகவான், அக்கினி தேவன் என ஆணாகவும், விண்-நீர்-மண் ஆகிய வற்றை முறையே விண்மகள் (ஆகாய வாணி), நீர்மகள் (கங்காதேவி), நில மகள் (பூமாதேவி) எனப் பெண்ணாகவும் கூறுதல் மரபு. எனவே, கோதாவரியைப் பெண்ணாகக் கூறியதில் வியப்பில்லை.*

*கம்பர் அயோத்தியா காண்டம்—கங்கைப் படலத்திலும் கங்கையை இவ்வாறு கூறியுள்ளார். கங்கை என்னும் நங்கை அலை என்னும் கையால் ஏந்தி இம் மூவரையும் கரை ஏற்றினாள் எனக் கூறியுள்ளார்.*

**''சாந்தணி புளினத்தின் தடமுலை உயர் கங்கை**
**காந்திள மணி மின்னக் கூடிகமழ் கமலத்தின்**
**சேந்தொளி விரியும் தெண்திரை எனும் நிமிர்கையால்**
**ஏந்தினள் ஒரு தானே ஏற்றினள் இனிது அப்பால்''** (34)

*என்பது பாடல்.*

*கம்பர், கோதாவரி குவளையாகிய கண்ணால் பார்ப் பதற்காகக் கூறியுள்ளார். இளங்கோ அடிகள், காவிரி கயலாகிய கண்ணால் நோக்குவதாகக் கற்பனை செய் துள்ளார்.*

**''மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ ஆடை அது**
**போர்த்துக்**
**கருங்கயல்கண்விழித்து ஒல்கி நடந்தாய் வாழி காவேரி''**

பெண்ணாகிய தண்ணீரில் மிகுதியாக வரும் பூக்களாகிய ஆடையைப் போர்த்துக் கொண்டு கயலாகிய கண்ணால் நோக்கிக் கொண்டு காவிரியாள் நடக்கிறாளாம்.

இளங்கோ கயல் கண் சொன்னார். ஆழ்வார் பாடலில் திரையாகிய கை கூறப்பட்டுள்ளது. காவிரி திரை (அலை) யாகிய கையால் திருமாலின் திருவடிகளை வருடுகிறதாம்:

**"தெண்ணீர்ப் பொன்னி திரைக்கையால் அடிவருடப்**
**பள்ளி கொள்ளும் கருமணி"**

என்பதில், கம்பர் கூறியிருப்பது போலவே திரைக்கை கூறப்பட்டுள்ளமை காணலாம்.

கங்கையைப்போல் – காவிரியைப்போல், கோதாவரியும் தெய்வ (புண்ணிய) ஆறுகளுள் ஒன்றாக நூல்களில் கூறப் பட்டும் மக்களால் போற்றப்பட்டும் திகழ்கிறது: அதனால் தான் கம்பர் 'கடவுள் யாறு' என்றார்.

## அழுவதும் ஒத்தது

இராம இலக்குமணர் காட்டில் வதிய வேண்டி வந்ததற்காகக் கோதாவரி வருந்தி, ஐயோ என இரைச்சல் இட்டு ஏங்கிக் குவளையாகிய கண்ணில் பனி சோர அழுவதுபோல் தோன்றிற்றாம்:

**"எழுவுறு காதலால் இங்கு இரைத்து**
**இரைத்து ஏங்கி ஏங்கிப்**
**பழுவ நாள் குவளைச் செவ்விக்**
**கண் பனி பரந்து சோர**
**வழு இலா வாய்மை மைந்தர்**
**வனத்து உறை வருத்தம் நோக்கி**
**அழுவதும் ஒத்ததால் அவ் அலங்கு**
**நீர் ஆறு மன்னோ"** (3)

பழுவம் = தொகுதி. கண்பனி = கண்ணீர் – தேன் கசிவு. ஆறு இயற்கையாக இரைச்சலிட்டு ஓடுவதற்குப் புலவன் தானாக ஒரு காரணம் குறித்து ஏற்றிச் சொல்லியிருக்கும் இந்த அமைப்பு தற்குறிப்பேற்ற அணியாகும்.

இப்படி ஒரு கற்பனையை இளங்கோவும் சிலம்பில் செய்துள்ளார். வையை என்னும் பெண், கண்ணகிக்கு வரப்போகும் துன்பத்தை முன்னேயே அறிந்தவள்போல், பலராடையால் தன்னைப் போர்த்துக் கொண்டு கண்ணிறை நீரை மறைத்து அடக்கிக் கொண்டாளாம்.

> **"வையை என்னும் பொய்யாக் குலக்கொடி**
> **தையற்கு உறுவது தான் அறிந்தனள்போல்**
> **புண்ணிய நறுமல ராடைப் போர்த்துக்**
> **கண்ணிறை நெடுநீர் கரந்தனள் அடக்கி"** (13:170-73)

என்பது பாடல் பகுதி. ஆற்றுநீர் மேலே அளவற்ற மலர்கள் அடித்துக் கொண்டு வருவதால் நீர் இருப்பதே தெரிய வில்லை யாதலின் மலராடை போர்த்துக் கொண்டது போல் தெரிகிறதாம். (பல மலர்களின் வடிவம்போல் அச்சு குத்தியிருக்கும் நம் போர்வையை நினைவு செய்து கொள்ளல் வேண்டும்). கண்நிறை நெடுநீர் = தன்னிடத்தில் நிறைந் துள்ள மிக்க நீர். கண் என்பதற்கு இடம் என்னும் பொருள் உண்டு; கண் நிறை நெடுநீர் = கண்ணிலே நிறைந்த நீர் — இவ்வாறு இருபொருள் அமைய உள்ளது.

வையை ஆறுதான் இப்படி என்றால், அகழிப் பகுதியில் உள்ள குவளையும் ஆம்பலும் தாமரையும், கண்ணகியும் கோவலனும் துன்பம் உறப் போகிறார்கள் என்பதை ஐயம் இன்றி முன்கூட்டி அறிந்தனபோல், வண்டுகளின் இசையாகிய இரங்கல் பண் இசைத்துக் கண்ணீர் கொண்டு காலுற நடுங்கினவாம்:

''அருமிளை உடுத்த அகழிசூழ் போகிக்
கருநெடுங் குவளையும் ஆம்பலும் கமலமும்
தையலும் கணவனும் தனித்துறு துயரம்
ஐயம் இன்றி அறிந்தன போலப்
பண்ணீர் வண்டு பரிந்து இனைந்து ஏங்கிக்
கண்ணீர் கொண்டு காலுற நடுங்க'' (13:183–188)

*வண்டு பண் இசைத்தல் = இரங்கல் ஒலி. கண்ணீர் = கண்நீர் = அழுகை நீர். கள்நீர் = தேனாகிய நீர்ப் பொருள் — மலர்களின் தேனைக் குறிக்கிறது. கால் உற நடுங்க = கால் = ஓர் உறுப்பு, காற்று, கால் நடுங்கினவாம் = காற்றால் மலர்கள் அசைந்து ஆடினவாம்.*

*இந்தப் பகுதிகளில் கண்ணகிக்காகவும் கோவலனுக்காகவும் வையை நீரிலும் அகழி நீரிலும் இரங்கல் குறிப்பு அமைக்கப் பட்டிருப்பதைப் போலவே, கோதாவரி ஆற்று நீரிலும் இராமர் முதலியோர்க்காக இரங்கல் குறிப்பு ஏற்பட்டதாகக் கம்பரால் புனையப்பட்டுள்ளது. இலக்கிய ஒப்பு நோக்கிற்காக இங்கே சிலம்பு இடம்பெற்றுக் கம்பரின் கற்பனைக்கு அரண் செய்கிறது.*

**கொங்கையும் தோளும்**

*கோதாவரிச் சூழலில் தாமரையில் படுத்திருந்த இரண்டு சக்கர வாளப் பறவைகளைப் பார்த்த இராமன் உடனே சீதையின் கொங்கைகளைப் பார்த்தான். இராமனின் தோள்களை நோக்கிய சீதை மணல் மேடுகளை நோக்கினாள்.*

''நாளங்கொள் நளினப் பள்ளி
நயனங்கள் அமைய நேமி
வாளங்கள் உறைவ கண்டு
மங்கைதன் கொங்கை நோக்கும்

**'நீளம்கொள் சிலையோன் மற்றை**
**நேரிழை நெடிய நம்பி**
**தோளின்கண் மனம்வைத்து அன்ன**
**சுடர்மணித் தடங்கள் கண்டாள்''** (4)

*நேமி வாளங்கள் = சக்கர வாளப் பறவைகள். சிலை யோன் = இராமன். நேரிழை = சீதை.*

*பெண்ணின் மார்பகத்திற்குச் சக்கரவாளப் பறவை ஒப்புமை. இரு பறவைகளைக் கண்ட இராமன், அவை போல் உள்ள சீதையின் மார்பகங்களைப் பார்த்தான். இராமனின் தோள்கட்கு உருண்டு திரண்ட தோற்றத்தில் உள்ள மணல்மேடு உவமை. இராமனின் தோள்களைப் பார்த்த சீதை உடனே மணல்மேடுகளை நோக்கினாள்.*

*இருவர் பார்த்த முறையிலும் வேறுபாடு உண்டு. உவமையை முதலில் பார்த்துப் பின் கொங்கையை இராமன் பார்த்தான். தோள்களைப் பார்த்தபின் சீதை உவமைப் பொருளைப் பார்த்துள்ளாள்.*

*நீண்ட நூல் எழுதுபவர்கள் முதலில் எழுதிய ஒரு கருத்தை மறந்துவிட்டுப் பின்னாலும் ஓரிடத்தில் அதைக் கூறுவர். இது கூறியது கூறல் என்னும் குற்றத்தின்பாற் படும். அயோத்தியா காண்டம் — மிதிலைக் காட்சிப் படலத்திலும் இதே மாதிரியில் கம்பர் பாடியுள்ளார். முதல் முதல் இராமனும் சீதையும் ஒருவரை ஒருவர் நோக்கிக் கொண்டபோது, சீதையின் நோக்கு என்னும் வேல்கள் தோள்களில் ஆழ்ந்தனவாம்; இராமனின் கண்கள் சீதையின் மார்பகத்தில் தைத்துக் கொண்டனவாம்.*

**''நோக்கிய நோக்கெனும் நுதிகொல் வேல்இணை**
**ஆக்கிய மதுகையான் தோளின் ஆழ்ந்தன**

**வீக்கிய கனைகழல் வீரன் செங்கணும்**
**தாக்கு அணங்கு அனையவள் தனத்தில் தைத்தவே''** (36)

என்பது பாடல்.

**''கூறியதும் கூறினும் குற்றம் இல்லை**
**வேறொரு பொருளை விளைக்கு மாயின்''**

என்ற முறையில், பழைய செய்தியே இங்கே உவமைகளோடு விளக்கப்பட்டுள்ளன. மற்றும், இருவர்க்கும் இது எப்போதும் உள்ள பழக்கம் என்று கூறலாமோ!

பெண்ணின் மார்பைப் பொறுத்துத்தான் பெண்ணின் அழகுக்குச் சிறப்பு. அந்தப் பெண்ணுக்கு மார்பு இல்லை (அதாவது) எடுப்பாக இல்லை) என்று மக்கள் உலகியலில் பேசிக்கொள்வதை யான் கேட்டுள்ளேன். மக்கள் என்ன! திருவள்ளுவரே தெரிவித்துள்ளாரே-

**''கல்லாதான் சொல்கா முறுதல் முலையிரண்டும்**
**இல்லாதாள் பெண்காமுற் றற்று.** (402)

இதனால்தான், இதழ்களிலும் திரையோவியங்களிலும் (சினிமாவிலும்) பெண்களின் மார்பை எடுப்பாக அமைத்துக் காண்பிக்கின்றனர். சிற்பங்களிலும் ஓவியங்களிலும் உள்ளதைப் பார்ப்பதுபோல், பெண்களிடத்தும் தவறான நோக்கம் இன்றி இதைக் காணல் வேண்டும். பெண்களே தங்கள் மார்பகத்தைச் செயற்கை முறையில் எடுப்பாக்கி அணி செய்து கொள்வதும் ஈண்டு எண்ணத் தக்கது. குழந்தைகட்குப் பால் கொடுத்து உயிர் காக்கும் உறுப்பைப் பிற பெண்களிடத்தில் தாய்மை உணர்வோடு காணல் வேண்டும். அதற்காகவே அது படைக்கப்பட்டுள்ளது.

ஆடவரின் உருண்டு திரண்ட திண்ணிய தோளுக்கு மதிப்பு மிகுதி. தோள்வலிமையால் வாள்போர் செய்து வெற்றி பெறும் ஆடவர்க்கும் முரட்டுக் காளைகளை

அடக்கும் மறவர்க்கும் பெண்களிடையே மதிப்பு உண்டு. தோள் கண்டார் தோளே கண்டார், என்பதும் கம்பரின் பாடல் பகுதியே.

கதைகளிலும் நாடகங்களிலும் இந்தச் சுவைக்கும் குறிப்பிட்ட விழுக்காடு இடம் உண்டு. எனவே, படிப்பவரின் உள்ளங்களைக் கவர்ந்து மகிழ்விப்பதற்காகவும் புலவர்கள் இவ்வாறு எழுதி விடுவது உண்டு.

## சிறிய முறுவலும் புதிய முறுவலும்

இவர்களின் வரவைக் கண்ட அன்னம் ஒதுங்கிச் சென்றதாம். உடனே இராமன் சீதையின் நடையை நோக்கிச் சிறிய முறுவல் செய்தானாம்.

ஆங்கு வந்து நீர் பருகிச் செல்லும் களிற்று யானையின் நடையைக் கண்டு சீதை புதிய முறுவல் பூத்தாளாம்.!

**"ஓதிமம் ஒதுங்கக் கண்ட உத்தமன் உழைய ளாகும்**
**சீதையின் நடையை நோக்கிச் சிறியதோர் முறுவல் செய்தான்**
**மாதவள் தானும் ஆண்டு வந்துநீர் உண்டு மீளும்**
**போதகம் நடப்ப நோக்கிப் புதியதோர் முறுவல் பூத்தாள்"** (5)

தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில்

**"எள்ளல் இளமை பேதைமை மடன் என்று**
**உள்ளப் பட்ட நகைநான்கு, என்ப"** (4)

என நான்கு காரணங்களால் சிரிப்பு தோன்றும் என்று கூறியுள்ளார். சீதையின் நடையழகு அளவு அன்னத்தின் நடை இல்லையே என்று இராமனும், இராமனின் நடை அழகு அளவு களிற்றின் நடை இல்லையே என்று சீதையும் அவற்றை எள்ளும் (இகழும்) முறையில் சிரித்தார்களாம். எள்ளல் காரணமாக வந்த நடை இது.

முறுவல் என்பதே வாய்விட்டுச் சிரிக்காமல் உதட்டளவில் சிரிப்பது. அதிலும் சிறிய அளவே இராமன் செய்தானாம். அன்றினை அன்னம் இதற்குமேல் எப்படி நடக்க முடியும் என்ற எண்ணத்தால் இவ்வாறு செய்தான்.

யானையின் நடையையும் இராமனது நடையையும் அடிக்கடிச் சீதை ஒத்திட்டுப் பார்த்திருக்க மாட்டாள் போலும்! அதனால் அவள் சிரித்தது புதுமையாய்த் தோன்றி யிருக்கலாம்.

இவ்வாறு நடந்து சென்று, கோதாவரிச் சூழலில் பஞ்சவடி என்னும் இடத்தில் இலக்குவன் அமைத்த பூந்தழைக் குடிலில் போய் இன்பமுடன் தங்கினர்.

**சூர்ப்பணகையின் வருகை**

மூவரும் தங்கியிருக்கும் இடம் நோக்கி இராவணனின் தங்கையாகிய சூர்ப்பணகை வரலானாள்.

**உடன் பிறந்தே கொல்லும்**

உயிரோடு உடல் தோன்றும்போதே கூடவே தோன்றும் நோயைப் போன்றவளாகி, உடன் பிறந்த அண்ணன் இராவணன் வேரோடு அழிவதற்குக் காரணமாயிருந்த வளாம் சூர்ப்பணகை:

**"நீலமா மணி நிருதர் வேந்தனை**
**மூல நாசம்பெற முடிக்கும் மொய்ம்பினாள்**
**மேலைநாள் உயிரொடும் பிறந்து தான்விளை**
**காலம் ஓர்ந்து உடனுறை கூடிய நோயனாள்"** (8)

நிருதர் வேந்தன்=இராவணன், 'நீல மாமணி நிறத்து அரக்கன்' என்னும் ஞான சம்பந்தரின் தேவாரத்தொடர் (3:91:8), 'நீல மாமணி நிருதர் வேந்தன்' எனக் கம்பரின் பாடலில் அறியக் கிடைக்கிறது.

சூர்ப்பணகை இராவணனிடம் போய்க் கோள் மூட்டிச் சீதையை விரும்பும் எண்ணத்தைத் தூண்டியதாலேயே இராவணன் தன் குடும்பத்தோடு அழிந்தான். அதனால்தான் மூல நாசம் பெற முடிக்கும் மொய்ம்பினாள் எனப் பட்டாள். மூல நாசம் = வேரோடு அழிதல். மொய்ம்பு = வலிமை.

வீடணனும் அவனைச் சேர்ந்தவர்களும் அழியவில்லை எனினும், இராவணனின் வழி மரபு அழிந்து விட்டது.

> **''உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்கவேண்டா**
> **உடன்பிறந்தே கொல்லும் வியாதி''** (20)

என்னும் ஔவையின் மூதுரைப் பாடலின்படி, சூர்ப்பணகை உடன் பிறந்தே அண்ணன் மடியக் காரணமானாள்.

உயிர் எப்பொழுது தோன்றியதோ - அப்பொழுதே இறப்பும் அதற்குக் காரணமான பிணியும் தோன்றி விடுகின்றன. ஈண்டு,

> **''நாளென ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்**
> **வாளது உணர்வார்ப் பெறின்''** (334)

என்னும் திருக்குறளும், ''வாழாது வாழ்கின்றேன்'', 'சாமாறே விரைகின்றேன்' என்னும் திருவாசகப் பகுதிகளும் ஆய்வுக்கு உரியன.

உடன் தோன்றிய நோய், சாகடிப்பதற்கு உரிய காலத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கும் போலும்!

சூர்ப்பணகை இராமனைக் கண்டதும் அவன் அழகில் மயங்குகிறாள். இராமனது பேரழகைச் சூர்ப்பணகை வியந்ததை அறிவிக்கக் கம்பர் பல பாடல்கள் செலவிட்டுள்ளார்.

**யாரென வியத்தல்**

சூர்ப்பணகை எண்ணுகிறாள்: இவன் யாராக இருக்கலாம்! இவனுக்கு உருவம் இருப்பதால், உருவம் இல்லாத மன்மதன் என்று சொல்ல முடியாது; ஆயிரம் கண்கள் இல்லாமையால் இந்திரனும் அல்லன்; மூன்று கண்கள் இன்மையின் சிவனும் அல்லன்; நான்கு தோள்கள் இன்மையின் திருமாலும் ஆகான்

> **"சிந்தையின் உறைபவற்கு உருவம் தீர்ந்ததால்,**
> **இந்திரற்கு ஆயிரம் நயனம், ஈசற்கு**
> **முந்திய மலர்க்கண் ஓர்மூன்று, நான்குதோள்**
> **உந்தியின் உலகளித்தாற்கு என்று உன்னுவான்"** (12)

சிந்தையின் உறைபவன் = உருவம் இன்றி உள்ளத்தால் உணரக்கூடிய மன்மதன். உலகு அளித்தான் = காத்தல் கடவுளாகிய திருமால்.

இவ்வாறு எண்ணுவது மேலும் சில இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளது. முத்தொள்ளாயிரத்தில் பெண் ஒருத்தி சேரமன்னனை நோக்கி இவ்வாறு எண்ணுவதாக ஒரு பாடல் உள்ளது.

இவனுக்கு இரண்டே கண்கள் இருப்பதால் ஆயிரம் கண்களுடைய இந்திரன் அல்லன் இவன். முடியிலே பிறை இன்மையால் சிவனும் அல்லன்; கோழிக் கொடியும் ஆறுமுகங்களும் இன்மையால் முருகனும் ஆகான்; எனவே, இவன் அரசாழி உருட்டும் சேரமன்னனே யாவான்:

> **"இந்திரன் என்னின் இரண்டே கண் ஏறூர்ந்த**
> **அந்தரத்தான் என்னின் பிறைஇல்லை—அந்தரத்துக்**
> **கோழியான் என்னின் முகன் ஒன்றே கோதையை**
> **ஆழியான் என்றுணரற் பாற்று"** (130)

ஏறு = காளை; அந்தரத்தான் = சிவன். கோதை = சேரன். ஆழியான் = அரசாழி செலுத்தும் சேரன்.

அழகிய புதிய ஆடவனை நோக்கின் பெண்டிர் சிலர் வியப்படைவதுண்டு என்பதைப் பெரியபுராணத்தில் சேக்கிழார் பாடியிருப்பதாலும் அறியலாம். திருவாரூர்க் கோயிலில் சுந்தரரைப் பார்த்த பரவை நாச்சியார் பின்வருமாறு எண்ணி வியந்தாராம்:

**"முன்னே வந்து எதிர்தோன்றும்**
**முருகனோ பெருகொளியால்**
**தன்னேரில் மாரனோ**
**தார் மார்பின் விஞ்சையனோ**
**மின்னேர் செஞ்சடை**
**அண்ணல் மெய்யறிவு பெற்றுடையவனோ**
**என்னே என்மனம் திரித்த**
**இவன் யாரோ என நினைந்தார்"** (290)

சூர்ப்பணகையும் பரவை நாச்சியாரும் அழகிய புதிய ஆடவனைக் கண்டு வியந்தது பொதுத்தன்மை; ஆனால் இருவர் வியப்பிற்கும் வேறுபாடு உண்டன்றோ?

**தவப் பயனோ!**

சூர்ப்பணகையின் பெயரால், கம்பர் சுவையான கற்பனை நயங்களைக் கொட்டியுள்ளார்.

மன்மதனுக்கு உருவம் இல்லை—இராமனுக்கு உருவம் உண்டு-அதனால் இவன் மன்மதனாய் இருக்க முடியாது என்று முன்பு எண்ணினாள் அல்லவா? பின்னர் அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டாள் அவள்.

சிவனால் உருவம் இழந்த மன்மதன், அன்று தொட்டு இன்றுவரை அருந்தவம் இயற்றி மீண்டும் இந்த வடிவம் கொண்டு வந்து விட்டானோ—என எண்ணிப் பார்க்கிறாள்;

**"கற்றையஞ் சடையவன் கண்ணின் காய்தலால்**
**இற்றவன் அன்று தொட்டு இன்று காறுந்தான்**
**நற்றவம் இயற்றி அவ் அநங்கன் நல்லுருப்**
**பெற்றனனாம் எனப் பெயர்த்தும் எண்ணுவாள்"** (13)

சடையவன் = சிவன். இற்றவன் = உடம்புஇற்றுப்போன மன்மதன். அநங்கன் = உடம்பு இல்லாதவன் (மன்மதன்). ந + அங்கன் = உடம்பு இல்லாதவன் இவன். சமசுகிருதப் புணர்ச்சி முறை. இந்தோ ஐரோப்பிய இன மொழிகளுள் சில அல்லது பலவற்றில் 'ந' என்பதற்கு இல்லை என்பது பொருள். இலத்தீனிலும் பிரஞ்சிலும் NON (நொ(ன்) என்பர். ஆங்கிலத்தில் No (நோ-ந) என்பர். வடமொழியிலும் இந்தியிலும் 'ந' என்பர், ந என்பதன் பக்கத்தில் (அநங்கன்) ந + அங்கன் என உயிர் முதல் வரு மொழிவரின், ந என்பது (ந் + அ) 'அந்' என்றாகும். பின் அந் + அங்கன் = அநங்கன் என்றாகிறது. எனவே, அனங்கன் என்று சிலர் எழுதுவது பொருந்தாது. அநங்கன் என்று கம்பரைப் போல் எழுதுவதே திருத்தமானது.

மேலும் எண்ணுகிறான்: இவனுடைய இரண்டு தோள் களையும் ஒரே நேரத்தில் பார்க்க முடியவில்லை. அது போலவே, இவனது மார்பின் பரப்பையும் ஒரே நேரத்தில் காண முடியவில்லை. அவ்வாறு காண்பதற்குக் கண்கள் போதவில்லை. அந்த அளவுக்கு இரண்டு தோள்களின் இடைவெளியும் மார்பின் பரப்பும் விரிந்துள்ளனவாம்:

**"தோளொடு தோள் செலத் தொடர்ந்து நோக்குறின்**
**நீளிய அல்ல கண், நெடிய மார்பு என்பாள்"** (16)

காவல் துறைக்கும் போர்த் துறைக்கும் ஆள் எடுக்குங்கால் மார்பு இவ்வளவு பரப்பு இருக்க வேண்டும் என ஒரு விதி வைத்துள்ளமை ஈண்டு எண்ணத் தக்கது. உயர்ந்த உடல் இலக்கணம் உடைய ஆடவர்க்குச் சிங்கம் போல் பரந்த மார்பும் ஒடுங்கிய வயிறும் இருக்கும். இதற்கு

எதிர்மாறாகச் சிலர்க்கு மார்பை விட வயிறுதான் மிக்க பரப்பளவு சுற்றதளவு உடையதாக உள்ளது. இவர்கள் சாப்பாட்டு ராமன்கள். தயரத ராமனுக்கோ மார்பு மிகவும் பரந்தது.

### தவம் செய்த தவம்

இவ்வளவு பேரழகு உடைய இளைய ஆண் மகன் தவக் கோலத்தில் இருப்பது எற்றுக்கோ! இவன் தவம் செய்வதற்கு அந்தத் தவம் என்பது எவ்வளவோ தவம் செய்திருக்க வேண்டும் - என்கிறாள்:

**"நவம் செயத் தகைய இந் நளின நாட்டத்தான்**
**தவம் செயத் தவம் செய்த தவம் என் என்கின்றாள்"**
(18)

### வற்கலையின் நோன்பு

இவனது இடுப்பில் உடுக்கப்பட மரவுரி செய்துள்ள தவத்தைப் பொன்னாடை செய்யவில்லை போலும் என்றாள்.

**"வற்கலை நோற்றன மாசிலா மணிப்**
**பொற்கலை நோற்றில போலுமால் என்பாள்"** (22)

இங்கே கவுதமப் புத்தரின் வரலாற்றுச் செய்தி ஒன்று நினைவைத் தூண்டுகிறது. புத்தர் தம் மனைவியையும் இராகுலன் என்னும் சிறு குழந்தையையும் விட்டு நீங்கித் துறவு பூண்டார். ஒரு நாள், பிம்பி சார மன்னன் வேள்வியில் போட்டு அவித்து உண்பதற்காக ஏராளமான ஆடுகள் ஓட்டிச் செல்லப்பட்டனவாம். ஆட்டு மந்தையின் கடைசியிலே ஒரு நொண்டிக் குட்டி ஆடு காலை நொண்டி நொண்டி வருந்தியபடியே சென்றதாம். அதன் தாய் ஆடு அதைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே போயிற்றாம்.

ஆடுகள் வேள்வியில் கொல்லப்படக் கொண்டு போகப் படுகின்றன என்பதைக் கேட்டறிந்த புத்தர், அந்த நொண்டிக் குட்டியாட்டை எடுத்துத் தோளில் சுமந்தபடி வேள்வியை நிறுத்தும் நோக்குடன் மந்தையின் பின்னே சென்று கொண்டிருந்தாராம்.

இதைக் கண்ட மக்கள், புத்தரின் தோளில் அமர்வதற்கு அவர் பெற்ற குழந்தைச் சிறுவன் பெறாத பேற்றை இந்த நொண்டிக் குட்டியாடு பெற்றுள்ளது என்று வியந்தனராம். கவுதமப் புத்தர் காப்பியம் என்னும் நூலில்,

> **"சித்தார்த்தன் பெற்றிட்ட சீரி யோனாம்**
> **செல்வமகன் இராகுலனைச் சேராப் பேறு**
> **செத்தாலும் கேள்வியிலாச் சிறிய ஆட்டின்**
> **செல்வநொண்டிக் குட்டியினைச் சேர்ந்ததம்மா!"**
> (18 : 11)

இவ்வாறு, பொன்னாடை பெறாத பேற்றை மரவுரி பெற்று இராமன் இடுப்பை அணி செய்தது.

## அணிக்கு அணி

மேலும் சூர்ப்பணகை எண்ணுகிறாள்: இந்த அழகானது உடம்பில் சிறந்த அணிகலன்களைப் பூட்டினால், இவனது இயற்கை அழகைக் காட்டிலும் மேலும் அழகு தரா. அந்த அணிகலன்கள் இவனால் அழகு பெறும்.

> **"நாறிய நகை அணி நல்ல புல்லினால்**
> **ஏறிய செவ்வியின் இயற்றுமோ"** (24)

இது போலவே, சீதைக்கு அணிந்த கலன்களும் அவளது அழகால் அழகு பெற்றனவாம். எத்தனையோ மங்கையர் அணிந்தும் அழகு பெறாத அணிகள், சீதை தோன்றியதால் இவ்வாறு அழகு பெற்றதாக மிதிலைக் காட்சிப் படலத்தில் கூறப்பட்டிருப்பது ஒப்பு நோக்கத் தக்கது.

**"இழைகளும் குழைகளும் இன்ன முன்னமே**
**மழை பொரு கண்ணிணை மடந்தை மாரொடும்**
**பழகிய எனினும் இப்பாவை தோன்றலால்**
**அழகு எனும் அணியும் ஓர் அழகு பெற்றதே"** (34)

**ஈகலான் புகழ்**

கம்பர், வாய்ப்பு நேரும்போதெல்லாம், மக்களுக்கு அறிவுறுத்தித் திருத்தும் கருத்துகளை மெல்லப் புகுத்துவதில் வல்லவர். சூர்ப்பணகை வர வரத் தனது கற்பு நிலையி னின்றும் தாழ்ந்து கொண்டிருந்தாளாம். இந்த நிலைக்கு உவமையாகக் கருமியின் புகழைக் குறிப்பிட்டுள்ளார்.

**"ஏத்தவும் பரிவின் ஒன்று ஈகலான் பொருள்**
**காத்தவன் புகழ்எனத் தேயும் கற்பினாள்"** (26)

எவ்வளவோ புகழ்ந்து கேட்பினும் அன்போடு ஒன்றும் உதவாமல் பொருளைக் காத்துக் கொண்டிருப்பவனது புகழ்போல் அவளது கற்பு தேய்ந்ததாம்.

பொருள் காத்தவன் புகழ் என்பது இகழ்தான். தொடக்கத்தில் அவனிடம் பொருள் சேரத் தொடங்கிய போது இவன் பயன்படுவான் என எண்ணி மக்கள் புகழத் தொடங்கியிருக்கக் கூடும். செல்வம் இருப்பதனால், எல்லாரும் வருக வருக என வரவேற்றிருக்கக் கூடும். பின்னர் அவன் ஈயாமுட்டிக் கருமி எனத் தெரியத் தொடங்கியதும், அவனது செல்வப் புகழ் சிறிது சிறிதாகத் தேய்ந்து இகழ் என்னும் பெயருக்கு உரியதாகி விடும்.

**"உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கு ஒன்று**
**ஈவார்மேல் நிற்கும் புகழ்"** (232)

என்றார் வள்ளுவர். ஈவார்மேல் புகழ் நிற்கும் என்றால், ஈயாதார் மேல் இகழ் நிற்கும் என்பது தானே போதரும்.

"பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக் கேடு கெட்டவர்கள்' என்று இவர்களைச் சாடுகிறார் ஔவையார்.

தானும் துய்க்காமல் பிறர்க்கும் கொடாமல் பொருளைக் காத்து வைத்தவனை நோக்கி அப்பொருளே எள்ளி நகையாடுமாம்; அருள் என்னும் பண்பும் அங்ஙனமே செய்யுமாம் - என்று நாலடியார் நவில்கிறது.

**"துய்த்துக் கழியான் துறவோர்க்கு ஒன்றுஈகான்**
**வைத்துக் கழியும் மடவோனை — வைத்த**
**பொருளும் அவனை நகுமே உலகத்து**
**அருளும் அவனை நகும்"** (273)

என்பது பாடல். இப்படியான ஒரு கருத்தைக் கம்பர் வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல் தம் பாடலில் புகுத்தியுள்ளார்.

**தோள் கண்டாள்**

சூர்ப்பணகை இராமனுடைய தோள்களில் தன் கண்களைப் பதித்தாளாம்; பிற்பாடு அந்தக் கண்களை அவனுடைய தோள்களிலிருந்து பெயர்த்து எடுக்க முடியவில்லையாம்.

**"தோன்றல் தன் சுடர்மணித் தோளில் நாட்டங்கள்**
**ஊன்றினள் பறிக்க ஊர் ஊற்றம் பெற்றிலள்"** (27)

நாட்டங்கள் = கண்கள். பறித்தல் = பெயர்த்து மீட்டல். ஊற்றம் = வலிமை. பார்த்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டே இருந்தார்கள் என்று உலகியலில் சொல்கிறார்களே — அது இதுதான்.

'தோள் கண்டார் தோளே கண்டார்' எனும்படி, மிதிலையில் இராமனைக் கண்ட மடந்தையரின் நிலை இங்கே ஒத்து எண்ணத் தக்கது.

இராமனும் சீதையும் முதல் முதலாகக் கண்டுகொண்ட போது, சீதை இராமனின் தோள்களில் கண் பார்வையைச் செலுத்தியதாகக் கூறப்பட்டுள்ளமையும் ஈண்டு எண்ணத் தக்கது.

**வஞ்ச மகள்:**

ஒருதலைக் காமமாகச் சூர்ப்பணகை இராமன்மேல் காதல் கொண்டாள்; அரக்கி உருவுடன் சென்றால் இராமன் ஏற்க மாட்டான் என எண்ணி அழகிய கன்னிப் பெண் உரு கொண்டு இராமனை நோக்கி வந்தாள்:

தாமரை மலர்போன்ற சிறிய அடிகளைக் கொண்டு, மொழி பேசும் மயில் போலவும், அன்னம் போலவும், கொடி போலவும், நஞ்சு போலவும், வஞ்சனையுடையவளாகி வந்தாள் என அவளது இயல்பு கூறப்பட்டுள்ளது:

**''பஞ்சிஒளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்**
**செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி**
**அஞ்சொல் இளமஞ்ஞையென அன்னமென மின்னும்**
**வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்''** (31)

பல்லவம் = தளிர். கஞ்சம் = தாமரை. மஞ்ஞை = மயில். தாமரை அனைய சிறிய அடிகளைக் கண்டு, செம்பஞ்சும் குளிர்ந்த தளிரும் தாம் ஒப்பாக முடியாமைக்கு வருந்தினவாம்.

மொழி பேசும் மயில் போன்ற சாயலும் அன்னம் போன்ற அழகிய நடையும் உடையவளாய் வந்தாளாம். சூர்ப்பனகை மொழி பேசக் கூடியவள் ஆதலின், இல்லாத பொருளாகிய மொழி பேசும் மயில் ஒப்புமையாக்கப் பட்டிருப்பது ‘இல் பொருள் உவமை அணி’ எனப்படும்.

உருவத் தோற்றத்தில் கொடி போன்று இருந்தாளாம். அதாவது, பருத்த அரக்கியர் வடிவை நீக்கிப் பூங்கொடி போன்ற தோற்றத்துடன் அசைந்து அசைந்து வந்தாளாம்.

வெளித் தோற்றம்தான் இப்படி. ஆனால் உள்ளம் நஞ்சாக இருந்ததாம். வஞ்சகர்கள் வெளித் தோற்றத்திற்கு மாறுகோலம் கொள்ளலாம்; ஆனால் உள்ளத்தின் வஞ்சத்தை மாற்ற முடியா தாதலின் 'வஞ்ச மகள்' எனப்பட்டாள்.

இந்தப் பாடலின் மெல்லோசை நயத்தைத் திரும்பத் திரும்பப் படித்துப் பார்த்தும் பாடிப் பார்த்தும் சுவைக்க வேண்டும்.

வன்மை இயல்புடைய அரக்கி, இராமனை மயக்கக் கொண்டுள்ள மென்மைத் தோற்றத்திற்கு ஏற்ற மெல்லோசை வண்ணத்தில் இந்தப் பாடல் அமைந்துள்ளது. உயர்ந்த பாவாணர்களின் பாடல்கள், அவரை அறியாமலேயே கருத்துக்கு ஏற்ற நடையில் அமைந்து விடும். இந்தப் பொருத்தமான அமைப்பைக் கம்பன் பாடல்களில் பல இடங்களில் காணலாம். எனவே, இந்தப் பாடலை இன்னொரு முறை உரக்கப் பாடிப் பார்ப்போம்.

**"பஞ்சிஒளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்**
**செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி**
**அஞ்சொல்இள மஞ்ஞையென அன்னமென மின்னும்**
**வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்"**

இந்தப் பாடலைப் பாடும்போதே, கட்புலனால் அறிய முடியாத அவளது மென்மையான வஞ்சகத் தோற்றத்தை செவிப் புலனால் அறிய முடிகிறது. எங்கே - இன்னொரு முறையும் பாடிப் பார்ப்போம்:

**"பஞ்சிஒளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்**
**செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி**
**அஞ்சொல்இள மஞ்ஞையென அன்னமென மின்னும்**
**வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்"**

### இராமனது வியப்பு

பேரழகு பொருந்திய பெண்ணாக வான்வழியாக வந்த சூர்ப்பணகையைக் கண்ட இராமன் வியப்புற்றான். இந்தப் பெண் நாகர் உலகிலிருந்தா அல்லது விண்ணுலகத்திலிருந்தா அல்லது இம்மண்ணுலகத்திலிருந்தா - வேறு எவ்வுலகத்திலிருந்து வந்திருப்பாள்! பேரழகிற்கு ஓர் எல்லையில்லையா! பேரழகின் உயர் எல்லைக் கோட்டில் உள்ள இந்த அழகி யாரோ! இவளுக்கு ஒப்பில்லை.

**"பேர்உழைய நாகர் உலகின், பிறிது வானின்,**
**பார் உழையின் இல்லது ஒரு மெல்லுருவு பாரா**
**ஆர்உழை அடங்கும் அழகிற்கு அவதி உண்டோ**
**நேரிழையர் யாவர் இவர்நேர் என நினைந்தான்"** (36)

அவதி = எல்லை. நேரிழையர் = மடந்தையர். சூர்ப்பணகையின் மாறுகோலத் தோற்றப் பொலிவு இராமனையே கூட மயக்கி விட்டது.

மணிமேகலை தெரு வழியே செல்லின், அவளை ஏறிட்டுப் பார்க்காத ஆடவர் பேடியராகத்தான் இருக்க வேண்டும் என்னும் பொருளில்,

**"பேடியர் அன்றோ பெற்றியின் நின்றிடின்"**

என்று தோழி சுதமதி கூறியதாக மணிமேகலைக் காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது. ஓர் ஆண் மற்றோர் ஆணையும், ஒரு பெண் மற்றொரு பெண்ணையும் தீய எண்ணம் இன்றிப் பார்ப்பது போல, ஓர் ஆண் ஒரு பெண்ணைத் தீய எண்ணம் இன்றி ஏறெடுத்துப் பார்க்கலாம் அல்லவா? தீய எண்ணத்துடன் நோக்கலாம் எனச் சுதமதி கூறியதாகக் கொள்ளலாம் எனினும், இங்கே இராமனது பார்வை காமப் பார்வை யன்று - வியப்புப் பார்வையாம்.

புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் என்னும் நான்கு பற்றி வியப்புத் தோன்றலாம் எனத் தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில் கூறியுள்ளார்:

**''புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு**
**மதிமை சாலா மருட்கை நான்கே''** (7)

என்பது தொல்காப்பிய நூற்பா. மருட்கை = வியப்பு. ஆக்கம் = ஒன்று மற்றொன்றாய் ஆகுதல். இங்கே, சூர்ப்பனகையின் உருவம், நம்ப முடியாத பேரழகுடன் புதுமையாய் இருந்ததாலும், அரக்க உரு மாறி மக்கள் உருவான ஆக்கத்தாலும் இராமனுக்கு வியப்பு தோன்றிற்று. இவளுக்கு ஒப்பானவர் யார் எனச் சீதையை மறந்துவிட்ட நிலையில் இராமன் கூறியுள்ளான். இத்தனைக் கருத்தும், சூர்ப்பணகையின் கோல அழகின் உயரிய எல்லைக் கொடி முடியைப் புனைந்துரைப்ப தாகும்.

**சூர்ப்பணகையின் நாடகம்**

வந்த சூர்ப்பணகை இராமனது முகம் நல்ல சூழ்நிலையில் இருப்பதை நோக்கி, அவன் அடியைத் தன் கையால் வணங்கி, அவன் மேல் ஒரு வேலை வீசி — வேல் என்றால் — கண்ணாகிய — கண்பார்வையாகிய வேலை ஒருமுறை வீசி, பின் பட்டுக்கொள்ளாதவள் போல் வேறு பக்கம் பார்த்துக் கொண்டு, மருண்ட மான் போல் சிறிது நாணி ஒதுங்கி நின்று நல்லவள் போல் நடித்தாள்.

**''அவ்வயின் அவ்வாசை தன்அகத்து உடைய அன்னாள்**
**செவ்விய முகம்முன்னி அடி செங்கையின் இறைஞ்சா**
**வெவ்விய நெடுங்கண் அயில் வீசி அயல்பாரா**
**நவ்வியின் ஒதுங்கி யிறைநாணி அயல் நின்றாள்''** (37)

அயில் = வேல். நவ்வி = மான். நெடுங்கண் அயில் வீசினாள் என்பதில்தான் காமப்பார்வை அடங்கியுள்ளது.

'வீசி' என்பது பார்வையின் விரைவையும் ஆழத்தையும் தீமையையும் அறிவிக்கிறது.

**இராமனது வரவேற்பு**

வந்தவளை இராமன் நோக்கி, உன் வரவு தீமையில்லாத வரவு ஆகுக. செம்மைப் பண்பு உடைய திருவே! நீ இங்கே வந்தது எங்களது நல்வினையின் பயனே யாகும். உன் ஊர் எது? பேர் எது? உன் உறவினர் யாவர் என வினவினான்".

**''தீதில் வரவாக திரு நின்வரவு சேயோய்**
**போத உளது எம்முழையோர் புண்ணியமது அன்றோ**
**ஏதுபதி ஏதுபெயர் யாவர் உறவு என்றான்**
**வேதமுதல் பேதை அவள் தன்நிலை விரிப்பாள்''** (38)

வேத முதல் = இராமன். பேதை = சூர்ப்பணகை. உலகில் வரவேற்கும் போது 'நல்வரவாகுக' என்று கூறுவது வழக்கம். இங்கே, அதற்கு எதிர்மாறாக, தீமை இல்லாத வரவு ஆகுக' என்றான். ஏனெனில், இவள் தீய நோக்குடன் வந்திருப்பதை முன்கூட்டி அறிந்துள்ளமையால் — என்க.

பின்னால் உள்ளதற்கு ஏற்ப முன்னால் செய்திகளை இவ்வாறு அமைப்பது கம்பருக்குக் கைவந்த கலை. கேகய நாட்டில் உள்ள பரதனை அழைத்து வரும்படி ஏவப்பட்ட தூதுவன் பரதனை அடைந்தபோது, இங்கே அயோத்தியில் தயரதன் இறந்து விட்டான். இது தூதுவனுக்கும் தெரியாது — பரதனுக்கும் தெரியாது. ஆயினும், வந்த தூதுவனை நோக்கிப் பரதன் தன் தந்தை தயரதனின் நலனை உசாவுகிறான்.

அப்பா நலமா இருக்கிறாரா என்று வினவுவது உலகியல். அப்பா எந்தத் தீமையும் இல்லாமல் இருக்கிறாரா என்று கேட்பது வழக்கம் இல்லை. ஆனால், தந்தை தீது இல்லாமல்

உள்ளாரா என்று பரதன் வினவியதாகக் கம்பர் பாடலை அமைத்துள்ளார்.

**"தீது இலன்கொல் திருமுடியோன் என்றான்"**

என்பது பாடல் பகுதி. திருமுடியோன் என்றது தயரதனை. தந்தை தீமை அடைந்துள்ளான் — அதிலும் பெரிய இறுதிச் சாவுத் தீமை அடைந்துள்ளான் — இதைப் பின்னால் பரதன் தெரிந்து கொள்ளப் போகிறான். ஆனால் கேட்டதோ 'தீதிலன் கொல்' என்பது.

'கொல்' என்பது ஐயப் பொருளிலும் பொருளற்ற வெற்று அசைநிலையாகவும் வரும்.

**"கொல்லே ஐயம் அசை நிலைக் கூற்றே"** (16)

என்பது நன்னூல் இடையியல் நூற்பா இங்கே, "தீதிலன் கொல்" என்பதிலுள்ள 'கொல்' என்பதை மேலோடு பார்க்கின் அசைநிலையாய்த் தோன்றும்; ஆழ்ந்து பார்க்கின் ஐயப் பொருள் அதில் மறைந்திருப்பது தெரியும். இப்போது தயரதன் இன்மையால் ஐயத்திற்கு இடம் வைத்துக் கம்பர் பாடியுள்ளார்.

தந்தை என்று குறிப்பிடாமல் 'திருமுடியோன்' என்றான். இப்போது தயரதன் முடியிழந்த தல்லாமல் இறந்தே விட்டான். இத்தகைய சொல் நயம் — பொருள் நயங்களைச் சுவைக்கக் கம்பனிடம் வரவேண்டும்.

இது மிகவும் சுவையான பகுதியாகும். சுவைக்கு மேல் சுவையாக அடுத்து மற்றொன்று உள்ளது. அதாவது: நீங்கள் வருவதற்கு யாங்கள் என்ன புண்ணியம் செய்தோமோ — யாங்கள் செய்த புண்ணியப் பயனே உங்கள் வருகை என்று இராமன் கூறியது, குத்தலும் கிண்டலும் உடையது. இது புகழ்வது போலப் பழிக்கும் வஞ்சகப் புகழ்ச்சி அணியாகும்.

மற்றும், புதிதாய் வந்தவர்களை நோக்கி, நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? உங்கள் பெயர் என்ன? நீங்கள் யார்? – உங்களைச் சேர்ந்தவர்கள் யார்? -- என்றெல்லாம் வினவுகிற உலகியலின்படி இராமன் வினவியிருப்பது இயற்கையாய் அமைந்து நயம் பயக்கிறது.

**திறமையான அறிமுகம்**

அரக்கி மிகவும் திறமையுடன், தான் பெரிய இடத்துப் பெண் என அறிவிக்கும் முறையில் தன்னை அறிமுகம் செய்து கொண்டாள்.

நான் படைப்புக் கடவுளாகிய பிரமனின் கொள்ளுப் பேர்த்தி. ஒரு வகையில் சிவனுக்கு நண்பனான குபேரனின் தங்கை நான். இன்னொரு வகையில், எட்டுத் திக்கு யானைகளையும் வென்றவனும் வெள்ளி மலையைத் தூக்கியவனும் மூவுலகங்களையும் ஆள்பவனும் ஆகிய இராவணனுக்கும் தங்கை நான். என் பெயர் காமவல்லி. நான் ஒரு கன்னி — என்றாள்.

**“பூவிலோன் புதல்வன் மைந்தன்**
**புதல்வி முப்புரங்கள் செற்ற**
**சேவலோன் துணைவ னான**
**செங்கையோன் தங்கை திக்கின்**
**மாவெலாம் தொலைத்து வெள்ளிமலை**
**எடுத்து உலகம் மூன்றும்**
**காவலோன் பின்னை காம**
**வல்லியாம் கன்னி என்றாள்”** (39)

பூவிலோன் = பிரமன். சேவலோன் = விடையூர்தி உடைய சிவன். செங்கையோன். குபேரன். காவலோன் = இராவணன். சே = விடை.

திருமண ஏற்பாட்டின்போது, பெண் வீட்டுக்காரரும் பிள்ளை வீட்டுக்காரரும் ஒருவர்க்கு ஒருவர் தத்தம் பெருமைகளை அள்ளி வீசுவார்கள். அந்த முறையில், அரக்கி தங்கள் குலப்பெருமையை வாரிக் கொட்டுகிறாள்.

பூவிலோன் புதல்வன் = புலத்தியன் — புலத்தியன் மைந்தன் விச்சிரவசு, விச்சிரவசுவின் புதல்வி சூர்ப்பணகை. எனவே, பிரமனுக்கு அவள் கொள்ளுப் பேர்த்தியாம். மற்றும் அவள் செல்வத்தில் செழித்த குபேரனது தங்கையாம். குபேரனோ சிவனுக்கு நண்பனாம் - சிவனோ முப்புரங்களை எரித்தவனாம்.

விச்சுரவசு பாரத்துவாசனின் மகளை மணந்து குபேரனைப் பெற்றானாம். அதே விச்சிரவசு கேகசி என்னும் அரக்கியையும் மணந்து இராவணன், கும்பகர்ணன், சூர்ப்பணகை, விபீடணன் ஆகியோரைப் பெற்றானாம். குபேரனுக்கும் சூர்ப்பணகைக்கும் தாய் வேறு வேறு எனினும், தந்தை விச்சிரவசு என்னும் ஒருவனே யாதலின், அவள் குபேரனுக்குத் தங்கை முறையாகிறாள்.

மேலும் அவள் இராவணனுக்குத் தங்கையாவாள் அந்த இராவணனோ எட்டுத்திக்கு யானைகளையும்வென்றவனாம்; அம்மட்டுமா! சிவனது கைலை மலையையே தூக்கியவனாம். அம்மட்டுமா! மூன்று உலகங்களையும் ஆள்பவனாம்.

இவ்வாறாக, தன் மரபினர் தெய்வத் தன்மையும் செல்வமும் பெரிய துணையும் பெரிய மறமும் பெரிய அரசுரிமையும் உடையவர்கள் எனப் புகழ்கிறாள்.

சூர்ப்பணகை என்னும் தன் பெயரைச் சொன்னால் அரக்கி என்று தெரிந்துவிடும் எனக் காமவல்லி என்னும் பெயரைக் கூறியுள்ளாள். உண்மையில் காமவல்லியே.

மற்றும், அவள் கணவனை இழந்த விதவையாதலின், அதை மறைக்கத் தன்னைக் 'கன்னி' எனக் கூறிக் கொள்கிறாள்.

இராமன் கேட்டவற்றுள் பேரையும் உறவினரையும் கூறி விட்டாள். ஊரைக் குறிப்பிடவில்லை. அவள் இப்போது இந்த வனத்துக்கு அரசியாயிருப்பதால் எந்த ஊரைச் சொல்வது? இராவணன் தங்கை என்றாலே போதுமே - இடம் தானே தெரிய வரும்.

**வினா விடை**

இராமன் அரக்கியை நோக்கி நீ இராவணன் தங்கை என்கிறாய். உனக்கு இந்த உருவம் வந்தது எவ்வாறு என்று வினவினான். எனக்கு அரக்கர்களைப் பிடிக்காமையால் இங்கு வந்து தவசியரோடு சேர்ந்து தவம் செய்து இந்த உருவம் பெற்றேன் என்றாள்.

நீ வந்த நோக்கம் என்ன என்று இராமன் வினவ, தங்கள் காம நோயை ஆடவரிடம் தாங்களே உரைப்பது நற்குல மங்கையர்க்கு அழகு அன்று; இருப்பினும் தூது அனுப்ப எனக்கு வேறு துணையின்மையால் யானே கூறு கின்றேன். காமன் செய்யும் துன்பத்தைத் தீர்க்க வேண்டு கிறேன் என்றாள் அவள்.

> **"தாமுறு காமத் தன்மை தாங்களே உரைப்பதென்பது**
> **ஆமெனல் ஆவதன்றால் அருங்குல மகளிர்க்கு அம்மா!**
> **ஏமுறு உயிர்க்கு நோவேன் என் செய்கேன் யாரும் இல்லேன்**
> **காமன் என்று ஒருவன் செய்யும் வன்மையைக் காத்தி என்றாள்"** (45)

ஆடவரிடம் தாமாகச் சென்று மோதமாட்டார்கள்-யார்? குலமகளிர் - எத்தகைய குல மகளிர்? அருங்குல

மகளிர் - என்னும் கருத்து வெளிப்பாடு உலகியல்பை நன்கு எடுத்துக் காட்டுகிறது.

யானும் அருங்குல மகளே! ஆனால், நானே சொல்லாமல் தூது அனுப்ப 'யாரும் இல்லேன்' என்று திறமையுடன் பேசிப் பார்க்கிறாள்.

பலரும் சில சூழ்நிலைகளில் தங்கள்மேல் குறை சொல்லாமல், வேறொன்றின்மேல் குறையை ஏற்றிச் சொல்வார்கள். அதாவது, இரயில் தவறி விட்டது-தரை வழுக்கி விட்டது என்பது போலவாகும். இவர் காலம் கடந்து போனார் - இவர் விழிப்புடன் நடக்க வில்லை. ஆனால், இரயில் மேலும் தரைமேலும், குற்றம் சுமத்தப் படுகிறது. அது போல் உள்ளது அரக்கியின் பேச்சு. அதாவது, - இவளாகக் காம விருப்பம் கொள்ள வில்லையாம், காமன் (மன்மதன்) வன் முறையில் இவளுக்குக் காம உணர்வு உண்டாகச் செய்கின்றானாம். அவனது வன் செயலிலிருந்து தன்னைக்காக்க வேண்டுகிறாள். அந்தப் பேர்வழி இப்படிச் செய்கிறான் என மட்டமாய்க் குறுப்பிடுவது போல், 'காமன் என்று ஒருவன்' எனக் குறிப்பிட்டுள்ளாள். இது கம்பரது கைச் சரக்கு.

**வாளா கழிந்தன**

மேலும் அரக்கி மொழிகிறாள்: ஐயனே, நீ இங்கு இருப்ப தறியேன். முனிவர்கட்குப் பணிவிடை செய்து கொண்டு உள்ளேன். பழுதற்ற என் பெண்மையும் இளமையும் பயனிலாதுள்ளன. வாணாள் வீணானாய்க் கழிகிறது - என்றாள்.

**"எழுதரு மேனியாய் ஈண்டு**
**எய்தியது அறிந்திலாதேன்**
**முழுதுணர் முனிவர் ஏவல்**
**செய்தொழில் முறையின் முற்றிப்**

**பழுதறு பெண்மையோடும்**
**இளமையும் பழுதின்றேகப்**
**பொழுதொடு நாளும் வாளா**
**கழிந்தன போலும் என்றாள்"** (48)

இராமனது மேனி அழகை யாராலும் எழுத முடியாது என ஓவியர்கட்கு அறை கூவல் விட்டுள்ளாள். தான் முறையாகச் செயல்படும் இயல்பினள் என்பதை, 'செய். தொழில் முறையின் முற்றி' என்பதனால் அறியச் செய்கிறாள். திருமணம் ஆகாமையால் தன் பெண்மையும் இளமையும் வீணாகின்றன என்கிறாள். ஒவ்வொரு நாள் பொழுதும் வீணாய்க் கழிகின்றதாம். காலம் பொன் போன்றதாயிற்றே-வீணாய்க் கழியலாமா? ஈண்டு,

**"அற்றார்க்கு ஒன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்**
**பெற்றாள் தமியள் மூத் தற்று"** (1007)

என்னும் குறள் ஒப்புநோக்கத் தக்கது. பின்னால், அயோமுகிப் படலத்தில், இலக்குவனிடம் அயோமுகி இவ்வாறு சொல்வதைக் காணலாம். ஆணாயினும் - பெண்ணாயினும், காலத்தோடு திருமணம் செய்து கொள்வது நல்லது என்னும் பொது விதி ஈண்டு எண்ணத்தக்கது. இந்த அடிப்படையில்தான் அரக்கி கூறி ஏமாற்ற முயல்கிறாள்.

அரக்கியின் பொய்ம்மை நிலை ஒரு புறம் கிடப்பதாகுக. இந்தக் காலத்தில் மாப்பிள்ளைக் கழுகுகட்குப் பணத் தீனி போட முடியாமையால், எத்தனையோ அழகிய குல மகளிர், முப்பது - முப்பத்தைந்து அகவை வரையிலுங் கூட தாலி வராமல் குடுபத்துடன் மக்கி மடிந்து கிடப்பது எவ்வளவு கொடுமை! இதற்கு மாற்றுத் தீர்வு என்ன?

**உரையாடல்**

*இராமன்: நீ அந்தணர் குலம்; யான் அரசர் குலம்; அதனால் யான் உன்னை மணத்தல் தகாது.*

*அரக்கி: யான் அந்தணனுக்கு அரக்கி வயிற்றில் பிறந்ததால் யான் அந்தணர் குலத்தவள் அல்லள்.*

*இராமன்: அங்ஙனம் எனில், யான் மக்கள் குலத்தவன்; நீ அரக்கர் குலத்தவள்; மக்களும் அரக்கரும் மணக்க இயலாது.*

*அரக்கி: யான் தவம் செய்து அரக்க உருவை மாற்றி மக்கள் குலத்தவளாகி விட்டேன்.*

*இராமன்: சரி, உன் அண்ணன்மார்களாகிய குபேரனும் இரவணனும் வந்து உன்னை எனக்கு மணம் முடித்து வைக்க வேண்டும்.*

*அரக்கி = களவு மணம் (காந்தருவ விவாகம்) என ஒன்று உள்ளதே. அதன்படி எவரும் அறியாமல் நாம் உறவு கொள்ளலாம். இவ்வாறு நாம் உறவு கொண்டபின் என்னைச் சேர்ந்தவர்கள், மண்ணுலகோடு விண்ணுலகிற்கும் உன்னை அரசனாக்கி உனக்கு ஏவல் செய்வர்.*

*இராமன்: இவ்வாறு நடக்கப்பெறின், அரக்கர் அருளையும் நின் அழகையும் பெரிய அரசச் செல்வத்தையும் பெற்றவனாவேன். நான் அயோத்தியை விட்டு வந்து காட்டில் பத்து ஆண்டுகள் செய்த தவம் நன்கு பயன் தந்து விட்டது என்று கூறி, வெளியில் பற்கள் விளங்கும்படி உரக்கச் சிரித்தான்.*

**"நிருதர்தம் அருளும் பெற்றேன்**
**நின்னலம் பெற்றேன் நின்னோடு**
**செல்வத்து யாண்டும் உறையவும்**
**ஒருவரும் பெற்றேன் ஒன்றோ**

**திருநகர் தீர்ந்த பின்னர்ச்**
**செய்தவம் பயந்தது என்னா**
**வரிசிலை வடித்த தோளான் வாள்**
**எயிறு இலங்க நக்கான்"** (56)

நிருதர் அருளும் அரக்கியோடு இன்பமும் பெற்ற தல்லாமல், எல்லா உலக அரசும் கிடைக்கும் என்பதால், 'யாண்டும் உறையவும் பெற்றேன்' என்றான்.

அடேயப்பா! நான் ஒன்று மட்டுமா பெற்றேன்? பல பெற்றேன் என்னும் பொருளில் 'ஒன்றோ' என்றான்.

அயோத்தியை விட்டு காட்டுக்கு வந்தது நல்லதாயிற்று. காட்டுக்கு வந்ததனால்தானே பத்து ஆண்டுகள் தவம் இயற்ற முடிந்தது. அவ்வாறு தவம் இயற்றியதினால்தானே நீ சொல்லும் பேறுகளையெல்லாம் பெற முடிந்தது.

இவ்வாறு இராமன் கூறி மகிழ்ச்சியால் சிரிப்பவன் போல் கடகட என்று உரக்க ஏளனச்சிரிப்பு சிரித்தான். இது எள்ளல், பேதைமை ஆகியவை காரணமாகத் தோன்றிய சிரிப்பாகும். எள்ளல் = அவளை இகழ்தல்: பேதைமை = (அரக்கியின்) மடத்தனம்.

**சீதையின் வருகை**

இராமன் அரக்கியை இகழ்ந்து சிரித்துக் கொண்டிருந்த நேரத்தில், சீதை தவக்குடிலை விட்டு வெளியே வந்தாள். அவளைக் கண்டு அவளது அழகில் மயங்கிய அரக்கி பின் வருமாறு எண்ணுகிறாள்.

இவ்வளவு அழகுடையவள் இவன் மனைவியாய் இருக்க முடியாது. இவ்வளவு அழகினராய் இங்கு வேறு எவரும் இல்லை. தாமரை மலரில் வதியும் திருமகள் தரையில் அடி படிய இப்பெண் உரு எடுத்து வரமாட்டாள். எனவே இவள் யாரோ எனத் திகைத்தாள்!

**"மரு ஒன்று கூந்தலாளை வனத்து**
**இவன் கொண்டு வாரான்**
**உரு இங்கு இது உடைய ராக**
**மற்றையோர் யாரும் இல்லை**
**அரவிந்த மலருள் நீங்கி அடியிணை**
**படியில் தோயத்**
**திரு இங்கு வருவாள் கொல்லோ**
**என்று அகம் திகைத்து நின்றாள்"** (59)

கூந்தலாள் = சீதை. இவன் = இராமன். அரவிந்தம் = தாமரை. இவள் இராமனின் மனைவி இல்லை என்பதற்கு இரண்டு காரணங்கள் கற்பித்துள்ளாள் அரக்கி.

ஒன்று: மனைவியா யிருப்பின், இவ்வளவு அழகிய இளம் பெண்ணைத் தவசியர் இருக்கும் தவ வனத்திற்குள் அழைத்து வர மாட்டான். மற்றொன்று: இவ்வளவு அழகுடைய இளம் பெண்கள் இன்னும் இங்கே பலர் இருப்பின், துணையிருக்கிற தென்று இவன் அழைத்து வந்திருக்கலாம் - அப்படி வேறு யாரும் இங்கில்லை.

எனவே, இவள் இவனுடைய மனைவி இல்லை; என்னைப்போல் இடையில் வந்து சேர்ந்து கொண்ட எவளோ ஒருத்தியாகத்தான் இருக்கவேண்டும் என எண்ணு கிறாள்.

**"என்னைப் போல் இடையே வந்தாள்**
**இகழ்விப் பெண்"** (62)

என்று பின்பும் சொல்கிறாள்.

'தான் பத்தினியா யிருந்தால் தேவடியாள் தெருவிலும் குடியிருக்கலாம், என்பது ஒரு பழமொழி.

**"சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்**
**நிறை காக்கும் காப்பே தலை"** (57)

என்பது குறள். எனவே, கற்பு மிக்க அழகிய சீதை எங்கிருப்பினும் தவறாக எண்ண முடியாது. இதை அரக்கி அறியாமல் ஐயப்படுகிறாள்.

பசு மந்தையின் நடுவே இருந்து கொண்டு பனங் கள்ளைக் குடிப்பினும், பார்ப்பவர்கள் பால் குடிப்பதாகவே எண்ணுவார்களாம். பனந் தோப்பின் நடுவிலே இருந்து கொண்டு பாலைப் பருகினும் பனங் கள் குடிப்பதாகவே பார்ப்பவர்கள் மதிப்பிடுவராம். இதைப் போல் சீதையைத் தவறாக எண்ணி விட்டாள் சூர்ப்பணகை.

**என் படுவர் பிறர்**

மேலும் எண்ணுகிறாள் அரக்கி: இவளைப் (சீதையைப்) பார்த்ததிலிருந்து இவளது அழகில் மயங்கிய என் கண்கள் வேறு எதையும் நோக்கமாட்டா; என் கருத்தும் வேறு எதிலும் செல்லவில்லை. பெண்ணாகிய எனக்கே இந்த நிலை எனில், ஆடவர்கள் இவளைக் கண்டு என்னபாடு படுவரோ?

> **"கண் பிறபொருளில் செல்லா**
> **கருத்து எனின் அஃதே கண்ட**
> **பெண்பிறந் தேனுக்கு என்றால்,**
> **என்படும் பிறருக்கு என்றாள்"** (60)

இவ்வாறு புனைந்துரைப்பது கம்பரிடத்தில் உண்டு. சீதைக்கு ஒப்பனை (அலங்காரம்) செய்த மகளிரே சீதையின் அழகுக்கு மயங்கி விட்டதாகக் கம்பர் கூறி

> **"மஞ்சர்க்கும் மாதரார்க்கும் மனம்**
> **என்பது ஒன்றே யன்றோ"**

எனப் பால காண்டத்தில் கூறியுள்ளார். மற்றும், இராமன் 'ஆடவர் பெண்மையை அவாவும் தோளினன்' எனக் கூறவும் தவறில்லை.

இந்தக் காலத்தில் எந்தெந்த நாடுகளிலோ, ஆடவரோடு ஆடவரும், பெண்டிரோடு பெண்டிரும் காதலித்து மணந்து கொள்வதாகச் செய்தி அடிபடுகிறது. நம்மனோர்க்குக் காட்டுமிராண்டித் தனமாகத் தோன்றுகின்ற இந்த இழி செயல் போன்றதன்று கம்பன் கூறியிருப்பது. அழகின் மிகுதியை உயர்வு நவிற்சியாகப் புனைந்துரைத்துள்ள கற்பனையே இது.

**ஒண்ட வந்த பிடாரி**

சீதையைக் குறிப்பிட்டு இராமனிடம் அரக்கி கூறுகின்றாள். இவள் வஞ்சக அரக்கி; மாறு கோலத்தில் வந்துள்ளாள். ஊன் உண்ணும் வாழ்க்கையவள்; இவளைக் கண்டு யான் அஞ்சுகிறேன்; இவளை விலக்கி விடு என்றாள். இராமன் வேடிக்கையாகச் சிரித்தான். பின் அரக்கி சீதையை நோக்கி, அரக்கியே! எங்களுக்கு இடையே நீ ஏன் வந்தாய்? போய் விடு என்று மிரட்டினாள்:

> **"நீ யிடை வந்தது என்னை நிருதர்தம்பாவை என்னாக்**
> **காயெரி யனைய கள்ள உள்ளத்தால் கதித்தலோடும்"**
> (65)

என்பது பாடல் பகுதி. 'ஓண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியைத் துரத்திற்றாம்' என்னும் பழமொழிக்கு எடுத்துக்காட்டு கிடைக்காதவர்கள் இதை எடுத்துக் கொள்ளலாம்.

அப்போது சீதை அரக்கியின் கூற்றுக்கு அஞ்சி இராமனின் தோள்களைத் தழுவிக் கொண்டாள். மீண்டும் அரக்கி தன் பெருமை கூற முயன்றாள். இராமன் அவளை நோக்கி, நீ இவ்விடம் விட்டுப் போய் விடுக; வெளியில் சென்றிருக்கும் என் தம்பி இலக்குவன் வரின் நடப்பதே வேறு என்று கூறிச் சீதையுடன் தவக்குடிலுக்குள் சென்று விட்டான்.

**அன்றிலால் நடுக்கம்**

*அரக்கி காம நோயின் எல்லைக்குச் சென்று விட்டாள். திங்கள், தென்றல் முதலியவை காமத்தை மிகுவிப்பதால் அவற்றை நொந்து வெறுக்கிறாள்.*

*சேவல் அன்றிலொடு பெடை அன்றில் நாவினால் ஒலி எழுப்பித் தொடர்பு கொள்வதைக் கேட்டுச் சோர்ந்து போனாள்:*

**''சேவலோடு உறை செந்தலை அன்றிலின்**
**நாவினால் வலி எஞ்ச நடுங்குவாள்** (76)

*ஆண் அன்றில் சிறிது நேரம் பிரிந்திருந்தாலும், பெண் அதனைக் கூவிக் கூவி அழைத்துக் கொண்டே யிருக்குமாம். பிரிந்திருக்கும் காதலர்கள், என்றும் ஒன்றியிருக்கும் அன்றில் இணையின் இன்ப ஒலி கேட்டுப் பொறாமை கொள்வராம். இந்தச் செய்திகளை,*

**'நெருப்பின் அன்ன செந்தலை அன்றில்**
**இறவின் அன்ன கொடுவாய்ப் பெடையொடு**
**பிரிந்தோர் கையற நரலும் நள்ளென் யாமம்''** (160)

**''அன்றிலும் பையென நரலும் இன்றவர்**
**வருவர் சொல் வாழி தோழி''** (177)

*என்னும் குறுந்தொகைப் பாடல்களாலும், மணிமேகலையில் உள்ள*

**''அன்றில் பேடை அரிக்குரல் அழைஇச்**
**சென்று வீழ் பொழுது சேவற்கு இசைப்ப''**

(5 : 127, 128)

*என்னும் பகுதியாலும், மனோன்மணீயத்திலுள்ள*

**''எங்கிருந்தன இவ் அன்றில் பேய்கள்**
**நஞ்சோ நாவிடை நெஞ்சம் துளைக்கும்''**

என்னும் பகுதியாலும் அறியலாம். இதைத்தான் கம்பர் சுருங்கக் கூறியுள்ளார். அன்றிலின் நா ஒலியால் அரக்கி தன் வலிமை சோர்ந்து நடுங்குகிறாளாம்.

**ஆசை மருந்து**

அரக்கிக்குக் குளிர்ந்த பொருளெல்லாம் காமத்தீயாய்ச் சுடு நெருப்பாய்ச் சுட்டெரிக்கின்றனவாம். இக் கொடிய வெப்ப நோயால் இறந்து விட வேண்டியவள் ஒரு மருந்தால் உயிர் பிழைத்திருக்கிறாள். இராமனை எப்படியும் அடைய முடியும் என்னும் ஆசைதான் அது:

**"ஊழி வெங்கனல் உற்றனள் ஒத்தும் அவ்**
**ஏழை ஆவி இறந்திலள் என்பரால்**
**ஆழியானை அடைந்தனள் பின்னையும்**
**வாழலாம் என்னும் ஆசை மருந்தினே"** (85)

ஊழித் தீயை ஒத்து வெப்புற்றிருந்தாளாம். ஆழியான் = இராமன். அடைந்தனள் என்னும் வினைமுற்றுச் சொல்லுக்கு 'அடைந்து' என வினையெச்சப் பொருள் கொள்ளல் வேண்டும். இதனை இலக்கணத்தில் 'முற்றெச்சம்' என்பர். ஆசையால் பல பிணிகள் வருவதுண்டு. ஆனால், இங்கே, உயிர் போக்கக் கூடிய நிலையில் உள்ள காம நோய்க்கு இந்த ஆசை மருந்தாக உள்ளதாம். 'ஆசை வெட்கம் அறியாது' என்பது ஒரு பழமொழி, அது எதுவும் செய்யும்.

சூர்ப்பணகையின் செயலைக் கொண்டு ஒரு கருத்துக்குத் தாவலாமா? மக்கள் ஆசையினால்தான் பற்பல செயல்கள் செய்கின்றனர். ஆனால், ஆசை நற்செயல்கட்குத் தூண்டுகோலாய் இருக்க வேண்டும்; தீய செயல்கட்குத் துணை போகக் கூடாது. ஆசை சிலரை ஆட்டிப் படைப்பதனால்தான்,

**"ஆசை அறுமின் ஆசை அறுமின்**
**ஈசனோ டாயினும் ஆசை அறுமின்"** (2615)

**"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு"** (350)

என முறையே திருமந்திரமும் திருக்குறளும் கூறுகின்றன. Necessity is the mother of invention (தேவையே கண்டு பிடிப்பின் தாய்) என்பதற்கு ஏற்ப ஆசை ஊக்க மருந்தாய்ப் பயன்பட வேண்டும். இராம காதையை 'ஆசை பற்றி அறையலுற்றேன்' எனக் கம்பர் கூறியது போல, ஆசை தூண்டுகோலாய் - ஊக்க மருந்தாய் இருக்க வேண்டும். ஆசை மருந்தாக உருவகிக்கப்பட்டதால் இவ்வளவு கருத்துக்கும் இடம் உண்டாயிற்று.

**ஓயாத ஆசை**

அரக்கி காம வேதனையில் தாக்கப்பட்டு உயிர் செயல்பட முடியாதது போன்ற நிலை உண்டாகியும் ஆசையை விடவில்லையாம்.

**"ஆவி ஒயினும் ஆசையின் ஓய்விலாள்"** (87)

நடந்த நிகழ்ச்சி ஒன்று: செல்வத்தில் மிக்க பற்று கொண்ட பெரிய செல்வர் ஒருவர் அகவை முதிர்ந்து சாவோடு போராடிக் கொண்டிருந்தார். பல நாளாய் உணர்வு அற்றுப் படுக்கையில் கிடந்தார். காசு ஆசையால் அவருக்கு உயிர் போகவில்லை என உறவினர் பேசிக் கொண்டு, காசைக் கல்லில் இழைத்து அந்தச் சாந்தை எடுத்து அவரது நாக்கில் தடவினார்கள். ஆவி ஒய்வினும் ஆசை ஓயாததற்கு எடுத்துக்காட்டாய் இந்த நிகழ்ச்சி அறிவிக்கப்பட்டது இங்கே.

அன்றிரவு கழிந்தது. அரக்கராம் இருளைப் போக்க இராமன் தோன்றியதுபோல் உலகின் புற இருளைப் போக்க ஞாயிறு தோன்றினான்.

இராமன் இலக்குவனைக் காவலுக்கு விட்டுத் தான் காலைக் கடன்களை முடிக்க நீர்க்கரைக்குச் சென்றான்.

அப்போது அரக்கி, சீதையை மறைத்து விட்டுத் தான் சீதையின் உருக்கொள்ள எண்ணிச் சீதையைப் பற்றப் போனாள். இதை இலக்குவன் பார்த்து விட்டான்.

**உறுப்பு அறுப்பு**

இலக்குவன் பாய்ந்து அரக்கியின் கூந்தலை இடக் கையால் பற்றிக் கொண்டு, வாளை எடுத்து அவளுடைய மூக்கு, காதுகள், முலைக்கண்கள் ஆகியவற்றை அறுத்து எறிந்து பின் தலைமயிரைப் பிடியினின்றும் விட்டான்.

**''நில்லடீஇ எனக் கடுகினன் பெண்ணென நினைந்தான்**
**வில் எடாது அவள் வயங்கு எரியாம் என விரிந்த**
**சில்வல் ஓதியைச் செங்கையில் திருகுறப் பற்றி**
**ஒல்லை ஈர்த்து உதைத்து ஒளிகிளர் சுற்றுவாள்**
**உருவி''** (93)

**''ஊக்கித் தாங்கி விண்படர்வென்**
**என்று உருத்து எழுவாளை**
**நூக்கி நொய்தினின் வெய்து**
**இழையேல் என நுவலா**
**மூக்கும் காதும்வெம் முரண்**
**முலைக் கண்களும் முறையால்**
**போக்கிப் போக்கிய சினத்தொடும்**
**புரிகுழல் விட்டான்''** (94)

நில்லடீஇ=இது அளபெடை இதை நீட்டிப் படிக்க வேண்டும். சீதையைப் பற்றப் போனதால் நில்லடீஇ என்றான். அதற்குள் ஏதாவது நடந்துவிடப் போகிறது என்றெண்ணிக் கடுகினன்-விரைந்து ஓடிவந்தான்.

வில் எடுத்து அம்பு எய்தால் இறந்து விடுவாள்-பெண் அவள்-அதனால், சுற்றுவாள் (சுழல்கத்தி) எடுத்தான்.

எரி போன்ற அவள் செம்பட்டைக் கூந்தலை இடக் கையால் முறுக்கிப் பிடித்துக்கொண்டான். இந்த நேரத்தில் அவனைத் தூக்கிக் கொண்டு மேலே எழ முயன்றாள் அரக்கி. அதற்கு இடம் கொடாமல் இலக்குவன் அவளைக் கீழே தள்ளி உதையும் கொடுத்தான்; இனிக் கொடுஞ் செயல்கள் செய்யாதே என அறிவுரை கூறிக் கொண்டே எளிதில் அவளுடைய மூக்கு, காது, முலைக்கண்கள் ஆகியவற்றை அறுத்தான்; பின்னர் ஓரளவு கோபம் தணிந்து கூந்தலையும் விட்டான்.

மூக்கும் காதும் என வாளா கூறி, வெம் முரண் முலை என முலையை மட்டும் அதன் இயல்புக்கு ஏற்ற அடை மொழிகள் தந்துள்ளார். எனவே, முலையைச் செயற்கை முறையில் பெரிதாகக் காட்டக்கூடாது என்பது அறியவரும்.

**மூக்கறுப்பு**

பகை உள்ள இடத்தில் மூக்குக்கு மிக்க 'மரியாதை' உண்டு. என்னாடா! மூக்கைக் கடித்து விடுவாயா? ஏண்டா! மூக்கை அரிந்துவிடுவானா அவன்? டேய்! மூக்கு வெற்றிலை பாக்கு போட்டுக் கொள்ளும் சாக்கிரதை. வெற்றிலை பாக்குச் சுண்ணாம்பு போட்டால் சிவப்பாய் இருக்கு மல்லவா? அது போல் மூக்கில்-குத்துகிற குத்தில் சிவந்த குருதி கொட்டுமாம்.

முன்பெல்லாம் போரிலே, எதிர் வீரர்களின் மூக்கு களையும் பெண்களின் மூக்குகளையும் அரிவது உண்டு. எதிர்த் தலைவனுக்கு அரிந்த மூக்குகளை (பார்சல்) அனுப்புவதும் உண்டு என வரலாற்றில் படித்திருக்கலாம்.

சிறு பிள்ளைகள் குறும்பு செய்தால், பெரியவர் தம் மூக்கின்மேல் தம் கையை வைத்து அரிவது போல் காட்டி, இப்படி மூக்கை அரிந்து விடுவேன் என்று மிரட்டுவதுண்டு.

ஒருவர் ஓரிடத்தில் மானக்கேடு அடைந்துவரின், அவர் அங்கே 'மூக்கு அறுபட்டு வந்தார்' என்று சொல்லும் வழக்கம் உண்டு. இதை ஆங்கிலத்தில் Nose cut என்பர்.

உறுப்புகளுள் மூக்கு அழகு அளிக்கும் ஒரு சிறந்த உறுப்பாகும். தீயகாற்றை வெளியே விட்டு, நல்ல காற்றை (உயிரகத்தை) உள்ளே இழுத்து உயிர் காப்பதல்லாமல் அழகும் தரும் உறுப்பு அது. பெண்ணோ அல்லது பிள்ளையோ' மூக்கும் முழியுமாய் (விழியுமாய்) நன்றாக இருப்பதாகக்கூறும் வழக்கமும் உண்டு. மூக்கு எடுப்பாய் இல்லாதவரைச் சப்பைமூக்கு—சப்பான்மூக்கு—மூக்கரையன் என்றெல்லாம் கேலியாய்ப் பேசுவது உண்டு.

இத்தகைய மூக்கு அறுபட்டு மானக்கேடு அடைந்தாள் அரக்கி.

**காது அறுப்பு**

மூக்கை அறுத்து விடுவார்களா என்று சொல்வது போலவே காதை அறுத்து விடுவார்களா என்று சொல்வதும் உண்டு. நீ இதைச் செய்து விடுவாயேயாயின் நான் என் காதை அறுத்துக் கொள்கிறேன், என் மீசையைச் சிரைத்துக் கொள்கிறேன் என்று சிலர் சூள் உரைப்பதைக் கொண்டு காது அறுப்பு பற்றியும் அறியலாம்,

**முலை அறுப்பு**

முலை அறுப்பு கிடையாது. ஆனால், இலக்குவன் வன் முறையில் அவளுடைய முலைக் காம்புகளை அறுத்து மானக்கேடு செய்துள்ளான். இது நிகழ்ந்திருக்கக் கூடாது.

'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு' என்னும் மொழிக்கு ஏற்பச் சினம் மிக்கதால் இலக்குவன் இவ்வாறு செய்து விட்டான்.

இதன் பின்பே இலக்குவனுக்குச் சினம் தணிந்ததாம். இதைத்தான் 'போக்கிய சினத்தொடும்' என்று கூறியுள்ளார். கம்பர். திருமுருகாற்றுப்படையில் உள்ள 'கழிந்த உண்டியர்' என்பதற்கு உண்டி கழிந்தவர் எனப் பொருள் கொள்ளல் போல், இங்கேயும் சினம் போக்கினான் (சினத்தை விட்டான்'') எனக் கொள்ளல் வேண்டும்.

**நாள் கொள்ளுதல்**

வாளால் கொடிய அரக்கியின் மூக்கையும் முலையையும் அறுத்தது, இராவணனின் தலைகளை அறுக்கப் போவதற்கு நாள் கொண்டது போன்று இருந்ததாம்.

> **"கொலை துமித்து உயர் கொடுங்கதிர் வாளின் அக்கொடியாள்**
> **முலை துமித்து உயர்மூக்கினை நீக்கிய முறைமை**
> **மலை துமித்தென இராவணன் மணியுடை மகுடத்**
> **தலை துமித்தற்கு நாட்கொண்டது ஒத்ததோர் தன்மை"** (96)

துமித்தல் = அறுத்தல். மலையை வெட்டுவது போல் இராவணனின் தலைகளை வெட்டுவதற்கு நாள் கொண்டது போன்றதாம்.

மன்னர்கள் மாற்றார் நாட்டின்மேல் படை யெடுப்பதற்காக நல்ல நாள் குறிப்பர். அந்த நாளில் போக முடியாவிட்டால், தங்கள் குடை, வாள், முரசு முதலிய வற்றை அந்த நல்ல நாளில், இருக்கும் இடத்தை விட்டுப்

பெயர்த்து வேறோர் இடத்தில் கொண்டுபோய் வைப்பர். இதற்குத்தான் நாள்கொள்ளுதல் என்பது பெயர். வாள் நாட்கோள்' குடை நாட்கோள், முரசு நாட்கோள் என்றெல்லாம் இதனைக் குறிப்பிடுவதுண்டு. தொல்காப்பியம்-புறத்திணை இயலில்,

**''குடையும் வாளும் நாள்கோள் அன்றி**
**மடையமை ஏணி மிசை மயக்கமும் ...''** (11)

என்றும், சிலப்பதிகாரத்தில்

**''வாளும் குடையும் மயிர்க்கண் முரசும்**
**நாளொடு பெயர்த்து ...** (5: 91 92)

என்றும், புறப்பொருள் வெண்பாமாலையில்

**''செற்றார்மேல் செலவமர்ந்து**
**கொற்ற வாள் நாள் கொண்டன்று''** (93)

**''செற்றடையார் மதில் கருதிக்**
**கொற்ற வேந்தன் குடைநாள் கொண்டன்று''** (39)

என்றும் உள்ள பாடல் பகுதிகளால் நாள் கொள்ளல் பற்றி அறியலாம்.

மக்களும் நல்ல நேரத்தில் தொடங்கி வைப்பதும், நல்ல நேரத்தில் பொருள்களை அப்புறம் பெயர்த்தலும் ஆகிய நாள் கொள்ளலை நடத்துகின்றனர்.

சிற்றூர்களில் ஊர்க்கட்டுப்பாடு உண்டு. நெசவு நடக்கும் ஓர் ஊரை எடுத்துக் கொள்வோமே. அங்கே பொங்கல் கழிந்ததும், ஒரு நல்ல நாள் குறிப்பிட்டு, கோயிலில் பூசனை நடத்திப் பின்னரே கட்டுப்பாடாக அனைவரும் பணி தொடங்குவர். இதற்கும் நாள் கொள்ளல் என்பது பெயர்.

இந்த முறையில், இராவணனின் தலைகள் அறுப்பதற்கு, அரக்கியின் உறுப்புகளை அறுத்தது நாள் கொண்டது போன்று இருந்ததாம்.

உறுப்பு அறுபட்ட அரக்கி தன் வேதனையைப் பலவாறு வெளிப்படுத்தி அழுதாள். பின்னர் தன் உறவினர்களை யெல்லாம் விளித்து இங்கிருந்தபடியே முறையிட்டாள். அண்ணன் இராவணனை எண்ணிப் பின் வருமாறு புலம்பினாள்:

## புலிக்குட்டி

"புலி புறம் போனாலும் குட்டிக்குக் கேடில்லை" என உலகினர் கூறுவரே. அண்ணாவே! நீ தொலைவில் இருப்பினும் உன் தங்கையாகிய எனக்குக் கேடு வரலாமா? உலகினரின் கூற்று பொய்யோ? மூவர், தேவர், அரக்கர் முதலிய அனைவரினும் வலிமையுடைவனே! யான் பட்டுள்ள துன்பினைக் காண வரமாட்டாயா?

**"புலிதானே புறத்தாகக் குட்டி கோட்படா தென்ன**
**ஒலியாழி உலகுரைக்கும் உரை பொய்யோ ஊழியினும்**
**சலியாத மூவர்க்கும் வானவர்க்கும் தானவர்க்கும்**
**வலியானே யான்பட்ட வலிகாண வாராயோ"** (102)

புலி இரை தேட வெளியே போயிருப்பினும், புலிக் குட்டியை யாரும் அச்சத்தால் ஒன்றும் செய்யார். அது போல, இராவணன் எட்டியிருப்பினும் அவன் தங்கையை ஒன்றும் செய்யக் கூடாது என்ற கருத்தில் அரக்கி கூறியுள்ளாள்.

**"குட்டியைத் தின்னலாமோ கோள்புலி புறத்த தாக"**
(1134)

என்னும் சீவக சிந்தாமணிப் பகுதியும், கிள்ளி வளவனைக் கோவூர் கிழார் பாடிய

**"புலி புறங்காக்கும் குருளை போல**
**மெலிவில் செங்கோல் நீ புறங்காப்ப"** (42 : 10, 11)

என்னும் புறநானூற்றுப் பாடல் பகுதியும், சிந்தாமணியில் உள்ள

**"உறங்கு மாயினும் மன்னவன் தன்ஒளி**
**கறங்கு தெண்திரை வையகம் காக்கும்"** (248)

என்னும் பாடல் பகுதியும் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கன. உலகினர் கூறும் பழமொழியையும் முன்னோர் பாடல்களையும் அடியொற்றிக் கம்பர் இக்கருத்தை எழுதியுள்ளார்.

காற்று, புனல், கனல், கூற்று, விண், கோள்கள் முதலிய யாவற்றையும் ஏவல் கொள்ளும் தன் அண்ணன் உள்ளபோதே, மானிடரால் இப்படி நேர்ந்ததே என வருந்தினாள்.

**செருப்பு அடிப் பொடி**

மேலும் இராவணனை விளித்து, உன் கால் செருப்பு அடியில் உள்ள தூசுக்கு ஒப்பாகாத மனிதர்களை அடக்க மாட்டாயா? நீயோ எட்டுத் திக்கு யானைகளை மருப்பு ஒடித்து அடக்கியவன். அந்த யானைகளோ காலால் மிதித்த மண் நெருப்பாகும்படி நடக்கக் கூடியவை. மற்றும், சிவனது கைலை மலையையே தூக்கிய தோளை உடையவனாயிற்றே நீ - இப்போது வாராயோ என்று புலம்பினாள்:

**"உருப்படிவ மன்மதனை ஒத்துளரே யாயினும் உன்**
**செருப்படியிற் பொடி ஒவ்வா மானிடரைச் சீறுதியோ**
**நெருப்படியில் பொடிசிதற நிறைந்தமதத் திசையானை**
**மருப்பொடியப் பொருப்பு இடியத்தோள் நிமிர்த்த**
**வலியோனே"** (105)

மருப்பு = தந்தம். பொருப்பு = சிவனது கைலை மலை. அந்த மானிடர்கள் அழகில் மன்மதனை ஒத்திருப்பினும், வலிமையில், உன் செருப்பு அடியில் உள்ள தூசுக்கு

ஒப்பாகார் என்று அண்ணனை எண்ணி அரக்கி புலம்பினாள்.

உலகியலில் கூட, என் கால் தூசுக்குச் சமமாக மாட்டான் - என் செருப்பு அடித் தூசுக்கு ஒப்பாக மாட்டான் என்று கூறும் வழக்காறு உண்டு. அதை ஒட்டிக் கம்பர் இந்தப் பாடலை வடித்துள்ளார்.

இந்த நேரத்தில் இராமன் வந்து, என்ன செய்தி என வினவ, அரக்கி நடந்ததைக் கூறினாள். இராமன் இலக்குவனை வினவ, அவன் இவ்வாறு செய்ததற்கு உரிய காரணத்தைக் கூறினான். அரக்கி இடைமறித்து, தான் சீதையைப் பற்றப் போனதற்கு உரிய காரணம் கூறித் தன் மேல் பிழை இல்லை என வலியுறுத்த லானாள்:

**ஒத்தாள் ஓர்படியாள்**

பெண் சங்கின் பக்கத்திலே தன் (பெண் தவளையின்) கணவனாகிய ஆண் தவளை இருப்பதைக் கண்டு, தன் கணவன் பெண் சங்கைக் காதலிப்பதாக எண்ணி, சூல் கொண்ட பெண் தவளை ஊடல் கொண்டு ஒலி எழுப்பிக் கலக்கும் நீர்வளம் நிறைந்த நாட்டை உடையவனே (இராமனே)! எந்தப் பெண்ணுக்கும், தன் மாற்றாளைக் கண்டால் உள்ளம் கொதிக்காதா - என்றாள்.

**“ஏற்ற வளை வரிசிலையோன்**
**இயம்பா முன் இகலரக்கி**
**சேற்ற வளை தன்கணவன்**
**அருகிருப்பச் சினம் திருகிச்**
**சூல் தவளை நீர் உழக்கும்**
**துறை கெழுநீர் வளநாடா**
**மாற்றவளைக் கண்டக்கால்**
**அழலாதோ மனம் என்றாள்”** (122)

வரிசிலையோன்=இலக்குவன். இயம்பாமுன் = அவன் சொல்லி முடிப்பதற்குள். சேற்ற வளை = சேற்றில் உள்ள பெண் சங்கு. நாம் பயன்படுத்தும் வெண்சங்கு ஓர் உயிர்ப் பொருளின் தசை நீங்கிய உடலாகும்; சங்கு என்பது ஊர்ந்து செல்லும் ஒருவகை உயிரி.

மாற்றவள் = சககளத்தி. ஒரு பெண்ணுக்கு அவள் கணவனின் மற்றொரு மனைவிக்குச் சககளத்தி என்பது பெயர்; இது வடமொழிச் சொல்லாகும். இதற்கு நேரான தமிழ்ச் சொற்கள் ஒத்தாள், ஓர் படியாள் என்பன. ஒத்தாள் — ஓர்படியாள் என்று உலக வழக்கில் கூறுவது உண்டு. 'சக' என்பது ஒத்தநிலையைக் குறிக்கிறது. ஓர்படி என்றால் ஒத்த நிலை. எனவே ஒத்த நிலையில் உள்ளவள். இவர்கட்குள் அடிக்கடி கருத்து வேறுபாடு நிகழ்வது உண்டு - ஆதலால் மாற்றாள் - மற்றவள் எனப்படுவர். மாற்றாள் என்பதற்கு வேறு உணர்வு உடையவள் எனப் பொருள் கொள்ளாமல், மற்றொருத்தி, அதாவது, ஒருத்திக்கு மாற்றாக - பதிலாக உள்ளவள் எனவும் பொருள் கொள்ளலாமே.

ஒத்து - ஒற்றுமையாய் இருக்க வேண்டியவர்கள் ஒருத்தியை ஒருத்தி கொன்றுவிட முயலும் அளவுக்கு வேறு படுவதும் உண்டு. உலகியலில் ஒருத்தி உறவு ஒன்றும் இல்லாத மற்றொருத்தியோடு வாதிடும்போது, அடி என் மாமியாரே என்றோ - அடி என் நாத்தனாரே என்றோ - அடி என் ஓரகத்தியே என்றோ திட்டுவது இல்லை; மாறாக, 'அடி என் சக்களத்தி' (சககளத்தி) என்று திட்டுவதைக் காணலாம். இதிலிருந்து, சககளத்திப் போராட்டம் எத்தகையது என்பது புரியும். கோசலையின் சககளத்தியாய்க் கைகேயி இருந்து செய்த சூழ்ச்சிதான் தெரியுமே!

இங்கே அரக்கி என்ன சொல்கிறாள்: சீதை நடுவில் மாற்றுருவில் வந்த அரக்கியாம்; இராமன் தனக்கு (அரக்கிக்கு) உரியவனாம். எனவே, சீதை அரக்கிக்குச் சககளத்தியாம். அதனால் மற்றவளைக் கண்டால் மனம் கொதிக்காதா எனக் கேட்கிறாள். எவ்வளவு வியப்பான செய்தி இது!

கணவன் மற்றொருத்தியை விரும்பியதாக நம்பி மனைவி கணவன்மீது ஊடல் கொள்வது மக்கள் இனத்தில் உண்டு. இது அஃறிணை உயிரிகளிடத்திலும் இருப்பதாகப் புலவர்கள் புனைந்துரைப்பது ஒருவகை இலக்கிய மரபு.

இங்கே ஆண் தவளை பெண் சங்கைக் காதலிப்பதாக எண்ணிப் பெண் தவளை ஆணின்மேல் ஊடல் கொள்வதாகச் சொல்லப்பட்டிருப்பது ஒருவகைச் சுவை.

ஓர் ஆண்கிளி ஓவியத்தில் உள்ள கனியை உண்மையான கனி என்று உண்ணப்போக, அக்கனி ஓவியத்தின் பக்கத்தில் ஒரு பெண் கிளி ஓவியம் இருக்க, அதை உண்மையான பெண் கிளி என எண்ணி, அதனை ஆண்கிளி காதலிப்பதாக நம்பிப் பெண்கிளி ஆண்கிளிமேல் ஊடல் கொண்டதாகச் சொல்லப்பட்ட கற்பனையும் உண்டு.

பிரபு லிங்க லீலையில் இத்தகைய சுவைமிக்க கற்பனை ஒன்றைச் சிவப்பிரகாசர் ஒரு பாடலில் செய்துள்ளார்:

ஒரு களிறு இலைத்தளிர்களை ஒடித்துத் தேனில் தோய்த்துப் பிடியின் வாயில் கொடுத்துக் கொண்டிருந்த தாம். பக்கத்தில் ஒரு பளிங்கு அறை இருந்ததாம். இந்தக் காட்சி அந்தப் பளிங்கில் தெரிந்ததாம். அதைக் கண்ட பெண் யானை (பிடி) தன் கணவனாகிய களிறு வேறு ஒரு பிடிக்கு உணவு ஊட்டுவதாக மாறி எண்ணிக் களிற்றின் மீது ஊடல் கொண்டு கூக்குரல் இட்டதாம்:

**"தளிர்க் குளகினைத்தேன் தோய்த்துத்**
**தனது வாய் கொடுக்கும் செய்கை**
**பளிக்கறை அதனுள் கண்டு பரிந்து**
**வேறொன்றினுக்கு இங்கு**
**அளித்த தென்று உளம் மயங்கி**
**அரும்பிடி ஒரு கூர்ங்கோட்டுக்**
**களிற்றினை முனிந்து செல்லும்**
**கம்பலை உடைத்து அக்குன்றம்"** (19:23)

மேற் கூறிய இரண்டு செய்திகளில், வேறொரு பெண் கிளியோடு ஆண் கிளியும், வேறொரு பெண் யானையோடு ஆண் யானையும் உறவு கொண்டதற்காக - அதாவது ஒரே இனத்திற்குள் உறவு கொண்டதற்காக ஊடல் நிகழ்ந்ததாகச் சொல்லப்பட்டுள்ளது.

ஆனால், கம்பர் பாடலில், வேறு இனமாகிய பெண் சங்கோடு ஆண் தவளை உறவு கொண்டதற்காக ஊடல் நிகழ்ந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வேறு இனத்தோடு உறவு கொள்ளும் செய்தி ஒன்று புற நானூற்றில் புனைந்துரைக்கப்பட்டுள்ளது. அதாவது, நத்தையும் சங்கும் உறவு கொண்டதாம். பாடல் இதோ;

**"கதிர்க் கோட்டு நந்தின் சுரிமுக ஏற்றை**
**நாகிளவளையொடு பகல் மணம் புகூஉம்**
**நீர்திகழ கழனி"** (266: 4,5,6)

இங்கே நாட்டைப் பற்றிச் சொல்லியிருப்பதில் ஒரு கருத்து உண்டு. பெண் சங்கை ஆண் தவளை விரும்பிய தாகப் பெண் தவளை ஊடல் கொள்ளுவது என்பது ஓர் உவமையாகும். அதாவது, அரக்கியின் பார்வையில், சீதை பெண் சங்கு - இராமன் ஆண் தவளை - அரக்கி பெண் தவளையாம். பெண் தவளை தன் மாற்றானாகிய பெண் சங்கை வெறுப்பதைப் போல் தான் (அரக்கி) மாற்றாளைக் (சீதையைக்) கண்டு உள்ளம் கொதிக்கிறாளாம்.

இவ்வாறு, உள்ளே ஓர் உவமம் உறைந்துள்ள அமைப்புக்கு 'உள்ளுறை உவம்' என அணியியலார் பெயர் கூறுவர். சங்க இலக்கியங்களில் இந்த அமைப்பை நிரம்பக் காணலாம். கம்பரும் இதைக் கையாண்டுள்ளார்.

இவ்வாறு கூறிய அரக்கியை நோக்கி இவ்விடத்தை விட்டு ஓடிப்போ என இராமன் விரட்டினான். ஆனால் அரக்கி நகராமல் மேலும் மேலும் வற்புறுத்திக் கொண்டேயிருந்தாள். (சங்கும் தவளையும் போல் இராமனும் அரக்கியும் வெவ்வேறு இனம்).

**மூக்கு மிகை**

சூர்ப்பணகை கூறுகிறாள்: என் மூக்கை அறுத்ததனால் என்ன கெட்டுப் போயிற்று. உங்களுக்கு இந்தத் தோற்றம் பிடிக்கவில்லை எனில் அழகான வேறு தோற்றம் எடுக்க என்னால் இயலும். என்பால் நீங்கள் அருள் செலுத்துவீர்களாயின், என் பெண்மைக்குப் பழுதொன்றும் இல்லை. முகத்தில் முன்னால் நீட்டிக் கொண்டிருக்கும் மூக்கு பெண்களுக்குத் தேவையற்றது — மிகையானது:

**''போக்கினீர் என்நாசி; போய்த்து**
**என், நீர் பொறுக்கிலீரேல்**
**ஆக்குவென் ஒருநொடி வரையின்**
**அழகு அமைவென் அருள்கூரும்**
**பாக்கியம் உண்டெனின் அதனால்**
**பெண்மைக்கு ஓர்பழுது உண்டோ**
**மேக்கு உயரும் நெடுமூக்கு**
**மடந்தையர்க்கு மிகை அன்றோ''** (130)

நாசி = மூக்கு. மேக்கு உயர்தல் = மேலே உயர்ந்து தோன்றுதல். தன் மூக்கு போய் விட்டதால், மூக்கு மிகையானது — தேவையற்றது எனச் சமாளிக்கிறாள்.

ஒரு காலத்தில் மூக்கோடு மூக்கு ஒத்தி முத்தம் கொடுப்பது நடந்ததாம். பின்னர், உதட்டோடு உதடு உறிஞ்சி முத்தம் கொடுக்கும் வழக்கம் ஏற்பட்டதாம். எனவே, மூக்கு முத்தம் குறைந்து பின் மறைந்ததாம். பின்னர் உதட்டு முத்தம் இன்றியமையாமை பெற்றதால், மூக்கு தேவையற்ற மிகை (Superfluity) என்று சூர்ப்பணகை கூறினாள். மற்றும், உதட்டு முத்தம் பரிமாறிக் கொள்வதற்கு மூக்கு இடையூறு எனக் கருதப்படுகிறது. இதுதான் அவளது சமாளிப்பு.

முகத்தில் மூக்கு முன்னால் நீட்டிக் கொண்டிருப்பது தேவையற்ற மிகை என்று திறமையாகச் (சாமர்த்தியமாகச்) சூர்ப்பணகை சொல்லியிருப்பினும், மூக்கு இவ்வாறு இருப்பது தான் வசதியானதாகும்.

கண்களும் வாயும் உள்ளடங்கியுள்ளன. அவற்றை இயற்கையாகத் தாமே மூடிக்கொள்ளும்படிச் செய்ய வேண்டும். ஆனால், மூக்கு கண்கள் போல் உள்ளடங்கி யிருப்பின், மூக்கைப் போதுமான அளவு பாதுகாக்க முடியாது. இயற்கையாகவும் மூட வைக்க முடியாது.

மூச்சை உள்ளே இழுக்கவும் வெளியே விடவும் இப்படி யிருப்பதுதான் வசதியான அமைப்பாகும். சளி சிந்த வேண்டு மென்றால், இப்போது உள்ள அமைப்புதான் எளிதாக இருக்கும்.

தெனாலி இராமன் ஆயிரம் தலைகளை உடைய காளியைக் கேட்டதாகக் கதை சொல்லுவார்கள். என் ஒரு மூக்கு சளி பிடித்துக் கொண்டாலேயே என்னால் சிந்தி முடியவில்லையே — உனக்கு ஆயிரம் மூக்குகளிலும் சளி பிடித்துக் கொண்டால் நீ எவ்வாறு சமாளிப்பாய்? — என்று கேட்டானாம்.

கண்களை உள்ளடக்கி மூக்கை வெளியே தூக்கி நீட்டச் செய்திருப்பது 'இயற்கையின் தேர்வு' (Selection of Nature) எனப்படும். யானைக்கு அவ்வளவு நீளத் துதிக்கை அமைந் திருப்பது போன்றதுதான் இது.

மற்றும் கூறுகிறாள்: நீங்கள் அரிந்ததின் காரணமும் தெரிகிறது. மூக்கு இல்லை யெனில் வேறு யாரும் இவளை விரும்பார்; இவள் நம் பக்கத்திலேயே இருப்பாள் என்று எண்ணியே இவ்வாறு செய்ததாகக் கருதியே மகிழ்கிறேன் — நீங்கள் பிழை செய்யவில்லை — நல்லதே செய்துள்ளீர்:

> **"பொன்னுருவப் பொருகழலீர் புழை காண**
> **மூக்கு அரிவான் பொருள்வே றுண்டோ**
> **இன்னுருவம் இதுகொண்டு இங்கு இருந்தொழியும்**
> **நம்மருங்கே, ஏகாள் அப்பால்,**
> **பின்னிவளை அயல் ஒருவர் பாரார் என்றே**
> **அரிந்தீர், பிழை செய்தீரோ?**
> **அன்னதனை அறிந்தன்றோ அன்பு இரட்டி**
> **பூண்டதுநான் அறிவி லேனோ!"** (133)

புழை = துளை. நம் மருங்கு = நம் பக்கத்தில். பிழை செய்தீரோ என்பதன் இறுதியில் உள்ள 'ஓ' எதிர்மறை - அதாவது, பிழை செய்யவில்லை என்பது கருத்து. என் மூக்கை அரிந்ததால் உங்கள்மேல் எனக்கு இரட்டிப்பு அன்பு ஏற்பட்டுள்ளது.

**பாம்பின் கால்**

அரக்கர் உம்மோடு போர் புரியின், யான் உங்கட்குத் துணையாய் நின்று அவர்களின் வஞ்சக மாயங்களை யெல்லாம் உங்களுக்குக் காட்டிக்கொடுத்து உதவி புரிவேன்.

அரக்கரின் வஞ்சகத்தை யானே அறிவேன். 'பாம்பு அறியும் பாம்பின் கால்' என்று உலகம் சொல்வதை நீங்கள் அறியீரோ.

**"பாம்பறியும் பாம்பின் கால் என மொழியும்**
**பழமொழியைப் பார்க்கி லீரோ"** (139)

என்பது பாடல் பகுதி. இந்தப் பகுதி முன்றுறை அரையனார் இயற்றிய 'பழமொழி நானூறு' என்னும் நூலிலுள்ள -

**"புலமிக்க வரைப் புலமை தெரிதல்**
**புலமிக் கவர்க்கே புலனாம் - நலமிக்க**
**பூம்புனல் ஊர பொதுமக்கட் காகாதே**
**பாம்பறியும் பாம்பின் கால்"**

என்னும் பாடலிலிருந்து கம்பர் கடன் வாங்கியதாகும். பாம்பின் காலைப் பாம்பே அறிய முடியும்; அதுபோல் புலவரின் புலமையைப் புலவரே அறியமுடியும் என்பது கருத்து.

பாம்புக்குக் கால் இல்லை எனப் பொதுமக்கள் எண்ணிக் கொண்டுள்ளனர். பாம்புக்கும் கால்கள் உண்டு. அதன் அடிப்பகுதியில் பல செதில்கள் இருப்பதைக்காணலாம். அந்தச் செதில்களே கால்கள். அந்தச் செதில்களால் தரையிலுள்ள மண் - தூசு துரும்பு போன்றவற்றைப் பற்றிக்கொண்டு நகர்கிறது. வழவழப்பான பளிங்குத் தள வரிசையில் விட்டால் பாம்பால் நகர முடியாது.

எனவே, பாம்பின் கால்களைப் பாம்பே அறிய முடிவது போல், அரக்கரின் சூழ்ச்சியை அவர்களைச் சேர்ந்த என்னால்தான் அறிய முடியும் என்றாள். அவள்.

மேலும் கூறினாள்: பெரியராகிய நீ என்னை மணந்து கொள்ளாவிடின், உன் தம்பி இளையவர்க்காவது என்னை

மணம் முடித்து வைக்கின் உங்கள் வெற்றிக்குப் பெரிதும் உதவுவேன்.

மூக்கு இல்லாதவளோடு நான் வாழமாட்டேன் என்று உன் தம்பி தெரிவித்தால், இடையே (இடுப்பே) இல்லாதவளோடு (சீதையோடு) நீ எப்படி வாழ்கிறாய்? அதைக்கூறி இளையவரோடு என்னைச் சேர்ந்துவிடு என்றாள்.

"பெருங்குலா உறுநகர்க்கே ஏகுநாள்
வேண்டும் உருப் பிடிப்பேன் அன்றேல்
அருங்கலாம் உற்றறிந்தான் என்னினும் ஈங்கு
இளையவன் தான் அரிந்த நாசி
ஒருங்கிலா இவளோடும் உறைவேனோ
என்பானேல் இறைவ ஒன்றும்
மருங்கு இலாதவளோடும் அன்றே நீ
நெடுங்காலம் வாழ்ந்தது என்பாய்" (141)

நாசி = மூக்கு. மருங்கு = இடுப்பு.

பெண்களின் இடை சிறுத்து இருப்பதால் இடையே இல்லை என்பதாகப் புலவர்கள் பாடுவது ஒருவகை மரபு. இந்தக் கருத்தை வைத்து அரக்கி திறமையாகவும் சூழ்ச்சியுடனும் பேசிப் பார்க்கிறாள். சிறியவன் மூக்கில்லை என மறுக்கின், இடையில்லாத சீதையுடன் நீ வாழ்வதைச் சுட்டிக் காட்டு என்று சொல்லித் தருகிறாள். அயோத்திக்குச் செல்லும் போது அழகிய உருவம் எடுத்துக் கொள்வேன் எனக்கூறி ஏமாற்றிப் பார்க்கின்றாள்.

**அரக்கியை மிரட்டல்**

காலைச் சுற்றிய பாம்பு கடிக்காமல் விடாது என்பதற்கேற்ப எவ்வளவு மறுத்தும் அரக்கி போவதாகத் தெரியவில்லை. உடனே இலக்குவன் வேல் படையைக்

கடைக் கண்ணால் பார்த்தபடி, இராமனிடம், இவளைக் கொன்றால் தவிரப் போக மாட்டாள்-எனவே கொன்று விடலாம் என ஆணை கேட்டான். அது நல்லதே - போகாமல் இருந்து கொண்டே இருப்பாளேயானால் அது செய்யலாம் என்றான்.

**''என்றவள்மேல் இளையவன் தான் இலங்கு இலைவேல்**
**கடைக்கணியா இவளை ஈண்டுக்**
**கொன்று களையேம் என்றால் நெடி தலைக்கும்**
**அருள் என்கொல் கோவே என்ன**
**நன்று அதுவே ஆம் அன்றோ போகாளேல்**
**ஆக என நாதன் கூற**
**ஒன்றும் இவர் எனக்கு இரங்கார் உயிர் இழப்பென்**
**நிற்கின் என அரக்கி உன்னா''** (143)

இலக்குவன் இராமனிடம் பணிவுடன், ஆணையிட வேண்டுகிறான். இங்கும் இராமன் உயர் பண்பை இழக்க வில்லை. நீ சொல்வது சரிதான்-அவள் போகவில்லை எனில் செய்யலாம் என நயமாகப் பதில் இறுத்தான்.

பின்னர் அரக்கி, இவர்கள் இரக்கப்பட மாட்டார்கள்-நம்மைக் கொன்று விடுவர்-இங்கே நிற்கக் கூடாது என்ற முடிவுக்கு வந்தாள்.

**அரக்கியின் சூள்**

மூக்கு, காது, முலை ஆகியவற்றை இழந்து யான் மானத்தோடு எப்படி வாழ்வேன்?ஏ மானிடரே! இவ்வளவு நேரம் உங்கள் உள்ளத்தை அறிய வஞ்சகமாகப் பேசி நடித்தேன். இன்னும் சிறிது நேரத்தில், காற்றினும் கனலினும் கடியவனும் கொடியவனும் உங்கட்கு எமனும் ஆகிய கரனைக் கொண்டு வருவேன் எனச் சூள் உரைத்து அவ்விடத்தினின்றும் பெயர்ந்தாள்.

"ஏற்ற நெடுங் கொடி மூக்கும் இருகாதும்
முலை இரண்டும் இழந்தும் வாழ
ஆற்றுவனே வஞ்சனையால் உமை உள்ளப்
பரிசறிவான் அமைந்த தன்றோ
காற்றினிலும் கனலினிலும் கடியானைக்
கொடியானைக் கரனை உங்கள்
கூற்றுவனை இப்பொழுதே கொணர்கின்றேன்
என்று சலம் கொண்டு போனாள்" (143)

*'மிஞ்சினால் கெஞ்சுவது - கெஞ்சினகல் மிஞ்சுவது' என்ற முறையிலும், 'இச்சி! இந்தப் பழம் புளிக்கும்' என்ற முறையிலும், தன் எண்ணம் கை கூடாமல் வஞ்சினம் கொண்டு சூர்ப்பணகை சென்றாள்.*

# 6. கரன்வதைப் படலம்

கரனை இராமன் கொன்றதைப் பற்றிய படலம் இது. இதற்குக் 'கரதூடணாதியர் வதைப் படலம் எனவும், கர தூடணாதி வதைப் படலம் எனவும், கரன் தூடணன் திரிசரன் வதைப் படலம் எனவும் சில சுவடிகளில் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

இராவணனின் தந்தை விச்சிரவசுக்குக் கேகசி, கும்பீனசி என மனைவியர் இருவர் இருந்தனர். இராவணன், கும்பகருணன், வீடணன், சூர்ப்பணகை ஆகியோர் கேகசி வயிற்றில் பிறந்தவர்கள்; கரன் தூடணன் ஆகியோர் கும்பீனசி வயிற்றில் பிறந்தவர்கள். இந்த முறையில் கரனும் தூடணனும் இராவணனுக்குத் தம்பியராவர். திரிசரன் என்பவன் கரன் படையின் தலைமைத் தளபதியாவான்.

கணவனை இழந்த சூர்ப்பணகையை, இராவணன், தண்டகவனப் பகுதியில் தங்கி ஆட்சி புரியும்படி ஏவி, அவளுக்குத் துணையாகக் கரன் முதலியோரைக் கொண்ட பெரும்படையையும் அமைத்துத் தந்திருந்தான். இப்போது சூர்ப்பணகை மூக்கறுபட்டு முறையிட்டதால் கரன் முதலியோர் படையெடுத்து வந்து இராமனால் கொல்லப் பட்டனர்.

இப்படலத்தில் கதைச் செய்தி மிகுதியாக இல்லை. போர்ப்படை பற்றியும் போர் பற்றியும் கற்பனையாகப் புனைந்துரைக்கப்பட்ட செய்திகளே இதில் மிகுதி. கதையை வளர்த்தி எழுதுவது எளிது. ஆனால், வெற்றுக் கற்பனைப் புனைவு எழுதுவது கடினம். இந்த அரிய முயற்சியில் கம்பர் வெற்றி பெற்றுள்ளார். இனிப் பாடல்களைப் பார்க்கலாம்.

சூர்ப்பணகை கரன் முன்பு சென்று அழுது புரண்டு அங்கலாய்த்தாள். நடந்ததைக் கூறுமாறு கரன் வினவ, பின்வருமாறு அரக்கி கூறலானாள்:

## தெளிவான அறிமுகம்

இரண்டே மானிடர்; தவக் கோலத்தினர்; வில் வாள் ஏந்திய கையர்; மன்மதன் போன்ற அழகினர்; அறநெறியினர் போல் காணப்படுகின்றனர். தயரதனின் மைந்தர்களாம். போர் புரிய எவரேனும் அரக்கர்கள் வரமாட்டார்களா என எதிர்பார்த்துத் தேடிக் கொண்டுள்ளனர்:

**"இருவர் மானிடர், தாபதர், ஏந்திய**
**வரிவில் வாள்கையர், மன்மதன் மேனியர்,**
**தரும நீரர், தயரதன் காதலர்,**
**செருவில் நேரும் நிருதரைத் தேடுவார்"** (4)

சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்னும் அழகு பொருந்த அரக்கி கூறியதாகக் கம்பர் அழகாக இப்பாடலை அமைத்துள்ளார். சிறு சிறு தொடர்களுடன் பாடல் படிக்கச் சுவை பயக்கிறது.

இத்தகையோர் என் உறுப்புகளைக் குறைத்து நம் குலத்தையே குறைவு படுத்தினர் எனக் கூறினாள். உடனே சினம் மேலிட்டுக் கரன் கூறலானான்:

## அரும்பழி

மானிடர் இவ்வாறு செய்தார்களா? அவர்களை நாம் கொன்று விடினும், இந்தப் பழிப்புக்கு உரிய மானக்கேடு உலகை விட்டு நீங்காதே.

**"எழுந்து நின்று உலகேழும் எரிந்துகப்**
**பொழிந்த கோபக் கனலுகப் பொங்குவான்**
**கழிந்து போயினர் மானுடர் என்னுங்கால்**
**அழிந்ததோ இவ் அரும்பழி என்னுமால்"** (9)

அரக்கி சொன்னதைக் கேட்டதும் கரன் எழுந்து நின்று சினம் என்னும் நெருப்பைப் பொழிந்தானாம்.

1962ஆம் ஆண்டு மூளைக்கட்டிப் பிணியால் யான் மருத்துவமனையில் சாவுப் படுக்கையில் கிடந்த போழ்து ஒருநாள், மருத்துவச் செவிலியர் இருவர் உரையாடிக் கொண்டிருந்தனர். ஒருவர் மற்றொருவரிடம், "நான் நேத்து சினிமாவுக்குப் பொறப்பட்டேன் - மழை கொளுத்து கொளுத்து என்று கொளுத்திச்சி - அதனால் நின்னிட்டேன்" என்று கூறினார்.

கேட்டுக் கொண்டிருந்த வாயாடித் தமிழ்ப் புலவனாகிய யான், வாளா இராமல், அந்த அம்மையாரை நோக்கி, வெயிலைத்தான் கொளுத்து கொளுத்து என்று கொளுத் திற்று என்று சொல்லவேண்டும்; மழையை, பொழி பொழி என்று பொழிந்தது என்று சொல்லவேண்டும் என்றேன்.

உடனே அந்த அம்மையார், 'எல்லாம் எனிக்கி தெரியும் - நீ ஒண்ணும் சொல்ல வாண்டாம்' - என்று கூறினார். இங்கே கம்பரும் அந்த அம்மையாரைப் போலவே கூறியுள்ளார்; மழைக்குப் பதிலாகக் கனலைக் கூறுகிறார். எரித்த கோபக் கனல் அல்லது கொளுத்திய கோபக்கனல் என்பதற்குப் பதிலாக, பொழிந்த கோபக்கனல் என்று எழுதியுள்ளார்.

மருத்துவச் செவிலியர் கூறவில்லையே – கவிச் சக்கர வர்த்தி கம்பர் கூறி விட்டாரே – எனவே, 'பொழிந்த' என்பதற்கு மிகுதிப் பொருள் கொள்ளல் வேண்டும் - அதாவது, மிகவும் எரிக்கும் - கொளுத்தும் - கொதிக்கும் கோபக் கனல் எனப் பொருள் கொள்ளல் வேண்டும்.

கரன் வெகுண்டு போருக்குப் புறப்பட்டதைக் கண்ட படைத்தலைவர் பதினால்வரும் தாங்கள் போருக்குப் போவதாகக் கூறினர்.

கரனின் சினத்தைத் தணித்து, நம்பியே! நீ போருக்குப் போக நாங்கள் செய்யும் அடிமைக் கடன் நன்றாயுள்ளது! நீ தேவர் மேலா போர் புரியப் புறப்படுகிறாய் - இல்லையே-மனிதருடன்தானே? நாங்கள் இதைச் செய்யாமல் எதற்கு உள்ளோம்?

**''வெம்பு கோபக் கனலை விலக்கினார்**
**நம்பி! எம் அடிமைத் தொழில் நன்று எனா**
**உம்பர்மேல் இன்று உருத்தனை போதியோ**
**இம்பர்மேல் இனியாம் உளேமோ என்றார்''** (12)

யாங்கள் இதைச் செய்யாவிடின் உள்ளேம் அல்லேம் - இறந்து விட்டவராவோம் என்று கூறியதாகக் கருத்து கொள்ளல் வேண்டும்.

கரன் திறமையான சூழ்ச்சிக்காரன். ஒரு செயலைத் தலைவனே செய்யத் தொடங்கினால், அதைப் பார்க்கும் மற்றவர்கள் தாங்கள் செய்யத் தொடங்கிவிடுவர். இது ஒருவகை உலகியல்.

**தேவர் சிரிப்பர்**

தாங்கள் போருக்குச் செல்வதாகக் கூறிய படைத் தலைவர்களைக் கரன் நோக்கி, நீங்கள் நல்லதே சொன்னீர்கள். அந்த மனிதச் சிறுவர்களோடு நான் போர் புரிவது எனக்கு இகழ்ச்சி தரும்; இவ்வளவு பெரிய கரன் அச்சிறுவர்களோடு போர் செய்கின்றானே எனத் தேவர்கள் சிரிப்பார்கள். நீங்கள் போய் அவர்களைக் கொன்று குருதி குடித்து அவர்களின் பெண்ணோடு (சீதையோடு) திரும்பி வருவீராக - என்றான்:

**''நன்று சொல்லினிர் நான் இச்சிறார்கள் மேல்**
**சென்று போர் செயின் தேவர் சிரிப்பரால்**
**கொன்று சோரி குடித்து அவர் கொள்கையை**
**வென்று மீளுதிர் மெல்லியலோடு என்றான்''** (13)

அந்த அற்பச் சிறு பையனோடு நாம் சரிக்குச்சரி வைத்துக்கொள்ளக் கூடாது என்று ஒதுங்கி விட்டேன் - அவனோடு நீ சரிக்குச்சரி வைத்துக்கொள்ளலாமா - என்றெல்லாம் உலகியலில் கூறுவது உண்டு. அதைத்தான் இங்கே கரன் கூறியுள்ளான்.

தேவரின் சிரிப்பு எள்ளல் (இகழ்தல்) காரணமாக ஏற் பட்டது. இஃதும் உலக இயற்கையே.

'அவர் கொள்கையை வென்று' என்றான்; அவர் கொள்கை யாது? அரக்கர் குலத்தை அழிக்க வந்துள்ளோம் என்று முன்பு அவர்கள் தெரிவித்துள்ளனர் அல்லவா? அந்த அவர்களின் எண்ணத்தை முறியடித்து அவர்களைக் கொல்லுதல்தான் 'அவர் கொள்கையை வெல்லுதல்' ஆகும்.

இராவணன் சீதையைக் கொண்டு செல்வதற்கு முன்பே, முன்னோடியாகச் சீதையைக் கொண்டு வரவேண்டும் எனக் கரன் கூறியுள்ளான்.

படைத் தலைவர்கள் பதினால்வரும் அவர்களைச் சேர்ந்த பலரும் போரில் இராமனால் கொல்லப்பட்டார்கள். இச்செய்தியைச் சூர்ப்பணகையால் அறிந்த கரன் தானே போருக்குப் புறப்பட்டான். கரனின் காலாள் படைஞர், தோள்களாகிய அலைகளுடன், ஊழிக் காலத்தில் உலகை அழிக்கப் பொங்கி எழும் கடல் போல் ஆர்ப்பரித்துப் போருக்குப் புறப்பட்டனர்:

**"போர்ப் பெரும்படை பொம்மென் முழக்கமா**
**நீர்த் தரங்கம் நெடுந்தடந் தோள்களா**
**ஆர்த்து எழுந்தது இறுதியில் ஆர்கலிக்**
**கார்க் கருங்கடல் கால்கிளர்ந் தென்னவே"** (25)

தரங்கம் = அலை. இறுதி = உலகம் அழியும் ஊழிக் காலம். ஆர்கலி = பேரொலி. படை மறவர்களின் தொகுதி கடலாகவும், அவர்களின் நீண்ட பெரிய தோள்கள் அலைகளாகவும் கூறப்பட்டுள்ளன.

படையின் முழக்கம் 'பொம்-பொம்' என்று இருந்ததாம். 'பொம்' என்பது ஓர் ஒலிக் குறிப்பு. திருவதிகையில் கெடிலம் ஆற்றில் புதுவெள்ளம் வந்தபோது உழவர்கள் 'திமிதிம்' எனப் பறையறைந்தார்களாம்.

> **"திமிதி மெனப் பறையறையப் பெருகுபுனல் கெடிலநதி**
> **திருவதிகைப் பதிமுருகப் பெருமாளே"**

இது போல் ஒலிக்குறிப்பு அமைப்பதில் அருணகிரி நாதர் மிகவும் வல்லவர்; குக்குக் குகுகுகு குக்குக் குகுகுகு என்று கூகையும், 'டிமிட டிமிடிமு டிட்டிம்' எனத் தவிலும் ஒலி எழும்புவதாகக் கூறியுள்ளார்.

**ஓடும் பசி**

போர்க் கொடிகள் காட்டையும் விண்ணையும்மறைத்துக் கொண்டு, எங்கள் பசி தீரும் என்று ஆடுகின்ற பேய்கள் போல் அசைந்தாடினவாம்.

> **"காடு துன்றி விசும்பு கரந்தென**
> **நீடி எங்கும் நிரந்த நெடுங்கொடி**
> **ஓடும் எங்கள் பசி என்று உவந்தெழுந்து**
> **ஆடுகின்ற அலகையின் ஆடவே"** (26)

ஆடும் கொடிகட்கு உவமையாகக் கூறப்பட்டுள்ள ஆடும் பேயினம், போரில் இறந்துபடும் பிணங்களை உண்டு பசி தீரும் என்றது போரின் கொடுமையைக் காட்டுகிறது.

**மலைக்கு மலை தாவல்**

தரையில் படைகள் மிகுதியா யிருப்பதால், நெருக்கம் உண்டாக, விரைந்து செல்ல முடியாமல், சில வீரர்கள் ஒரு

மலையிலிருந்து இன்னொரு மலைக்கும் அதிலிருந்து மற்றொரு மலைக்குமாகத் தாவிச் சென்றனராம்.

**"மலைத்தலைமிசைத் தலைமிசைத் தாவிச் சென்றனர்"** (55)

## அரக்கி நோய்

அரக்கி சூர்ப்பணகை வழி காட்டிக்கொண்டு படைக்கு முன் சென்றாளாம். அவளுக்குக் கூறப்பட்டுள்ள உவமை நோயாம். நோய் எத்தகையது? கூடவே இருந்து கொண்டு உயிர்களை வருத்தி எமனுக்கு அளிக்கக் கூடியதாம். யாருடைய உயிரை? மாயையின் மயக்கட்டு நீங்கிப் பற்று அற்று ஒழுகும் உயரியோரின் உயிர்களையும் போக்கக் கூடியதாம் அந்த நோய்:

**"வந்தது சேனை வெள்ளம் வள்ளியோன் மருங்கு மாயா**
**பந்தமா வினையம் மாளப் பற்றறு பெற்றியோர்க்கும்**
**உந்தரு நிலையதாகி உடன் உறைந்து உயிர்கள் தம்மை**
**அந்தகற்கு அளிக்கும் நோய்போல் அரக்கிமுன் ஆக**
**அம்மா"** (56)

வள்ளியோன் மருங்கு = இராமன் பக்கம். மாயையின் கட்டு நீங்கிப் பற்றற்ற பெரியோராலும் நோய் நீக்க முடியாதாம். அருளாளர் பலர் நோயுற்று இறந்த வரலாறுகள் உண்டு. நோய் உடலுடனேயே இருக்குமாம். உடன் பிறந்தே கொல்லும் வியாதி' என்பது ஔவையின் கூற்று. இதுபோல், அரக்கியும் இந்த அரக்கர்களுடனேயே இருப்பவளாம். நோய் உயிரை எமனுக்கு அளிப்பது போல் அதாவது இறக்கச் செய்வது போல், இந்த அரக்கியால் அரக்கர்கள் மடியப் போகின்றனர். அருமையான உவமை விளக்கம்.

## தோளின் சோம்பல்

கரன் படை வருதலைக் கண்ட இலக்குவன் இராமனை நோக்கி, இந்தப் படையோடு போர்புரியும் வாய்ப்பைத் தனக்கு அளிக்குமாறு வேண்டினான். இராமன் மறுத்து. இலக்குவ! நீ இங்கேயே சீதைக்குக் காவலாய் இருப்பாயாக. போரில் என்மேல் யார் வந்து மோதினும் அவர் அழிவது உறுதி. எனவே, இந்தப் போரிடும் வாய்ப்பை நீ எனக்கே கொடுத்து என் தோளை வருத்தும் சோம்பலைத் தீர்ப்பாயாக - என்றான்:

**''மீளருஞ் செருவில் விண்ணும்**
**மண்ணும் என்மேல் வந்தாலும்**
**நாள் உலந்து அழியு மன்றே**
**நான் உனக்கு உரைப்பது என்னே**
**ஆளியின் துப்பினாய் இவ்அமர்**
**எனக்கு அருளி நின்று என்**
**தோளினைத் தின்னுகின்ற**
**சோம்பினைத் துடைத்தி என்றான்''** (63)

மீளரும் செரு = மீள அரும் செரு = சென்றவர் திரும்பி வருவதற்கு அரிய — வருவாரா மாட்டாரா என்ற ஐயத்திற்கு இடமான போர். 'அரசன் பெண்டாட்டியும் திருடன் பெண்டாட்டியும் கைம் பெண்டாட்டி' என்பது ஒரு முது மொழி. அந்தக் காலத்தில் அரசனே நேரில் போருக்குப் போனான். இறந்து விடுவான் என்ற அச்சத்தால், அவன் மனைவி என்றைக்காயினும் கைம்பெண்டாட்டி (கைம்பெண்) யாகி விடுவாள் என்ற ஐயம் உண்டு. அந்தக் காலத்தில் திருடனுக்கு இறப்பு ஒறுப்பு தந்தனர். திருடன் இறப்பின் அவன் மனைவியும் கைம்பெண் ஆவாள். இதனால் இம் முதுமொழி எழுந்தது. இதைத்தான் 'மீளரும் செரு' என்றார் கம்பர்.

விண்ணுலகத்தாரோ — மண்ணுலகத்தாரோ — எவர் என் மீது போருக்கு வரினும், வாழ்நாள் முடிந்து அழிவர். இதுபற்றி உனக்குச் (இலக்குவனுக்குச்) சொல்ல வேண்டிய தில்லையே.

ஆளியின் துப்பினாய் = சிங்கம் போன்ற வலிமையுடைய இலக்குமணா! என் தோள்கள் போர் கிடைக்காமல் சோம்பலாயுள்ளன. அதைப் போக்க இந்தப் போரை என்னிடமே விடு. தோளின் தினவைத் தீர்ப்பதாகச் சொல்வது உலகியல்.

'சோம்பித் திரியேல்' என்றார் ஔவையார். சோம்பலால் உடல் கெடும்; உழைத்தாலே உடல் நலமாயிருக்கும். எனவே, சோம்பல் தோளைத் தின்னும் — அரிக்கும் என்றான். அவரை ஒரு துடை துடைத்துவிடு என்று உலகியலில் சொல்வதுபோல் துடைத்தி என்றான்.

**மூங்கில் தீ**

அரக்கி, இவன்தான் இராமன் எனக் கரனுக்குச் சுட்டிக் காட்டினாள். இங்கே அரக்கியின் செயலுக்குச் சுவையான ஓர் உவமை தந்துள்ளார் கம்பர்.

மூங்கில் காட்டிலே மூங்கிலோடு மூங்கில் இழைவதால் ஏற்படும் நெருப்பு, அந்த மூங்கில் காட்டையே முற்றும் அழித்து விடுவது போல, அரக்கியாகிய சூர்ப்பணகையின் செயலால் அரக்கர் குலமே அழிந்துவிடுமாம்:

**"தோன்றிய தோன்றல் தன்னைச்**
**சுட்டினள் காட்டிச் சொன்னாள்**
**வான்தொடர் மூங்கில் தந்த**
**வயங்கு வெந்தீ இது என்னத்**
**தான்தொடர் குலத்தை யெல்லாம்**
**தொலைக்குமா சமைந்து நின்றாள்**
**என்று வந்து எதிர்ந்த வீரன்**
**இவன் இகல் இராமன் என்றே"** (66)

முற்றிக் காய்ந்த மூங்கில்கள் கோடைக் காலத்தில் ஒன்றோ டொன்று இழைந்து தீப்பற்றிக் கொள்வதுண்டு. இந்த இயற்கை அமைப்பைப் பார்த்தே, தொடக்கத்தில் மக்கள் தீக்கடைக்கோலைக் கண்டுபிடித்துப் பயன்படுத்தி வந்திருக்க வேண்டும்.

**மானிடன் ஒருவன்**

கரன் தன் படையினரை நோக்கிக் கூறுகின்றான்: வந்திருப்பவன் ஒரு மனிதன்; நம் படைக்கோ இந்தக் காட்டிலே இடம் போதவில்லை. இந்த நிலையில், தோற்றால் எனது தகுதி என்னாவது? எனவே, யானே சென்று இவனது உயிரை உண்ணுவேன். பார்ப்பீராக!

**''மானிடன், ஒருவன், வந்த**
**வலிகெழு சேனைக்கு அம்மா**
**கான் இடமில்லை என்னும்**
**கட்டுரை கலந்த காலை**
**யான்உடை வென்றி என்னாம்**
**யாவரும் கண்டு நிற்றீர்**
**ஊன்உடை இவனை யானே**
**உண்குவன் உயிரை என்றான்''** (68)

வந்திருப்பவன் அரக்கனோ அல்லது தேவனோ அல்லன் - மனிதன் அவன். மனித இனம் எனினும் பலர் வந்திலர் - ஒருவன் மட்டுமே வந்துளான். நமது சேனையோ சாலப் பெரிது. நாம் வெற்றி காண வேண்டும். யான் ஒருவனே சென்று அவனது உயிரை உண்ணுவேன் - என்றான்.

உயிர் போன ஊனை உண்ணலாம்; ஆனால் உயிரை உண்பதாகக் கூறுவதும் ஒரு மரபே. திருவள்ளுவர் மூன்று இடங்களில் (326, 1084, 1221) 'உயிர் உண்ணும்' என்னும் தொடரைப் பயன்படுத்தியுள்ளார்.

உயிரை உண்ணுதல் என்றால் உயிரைப் போக்குவது தான். ஏதாவது ஒரு பொருளைக் கெடுத்துவிடின், 'அதை அழித்து வாயில் போட்டுக் கொண்டான்' என்று கூறும் உலக வழக்கு ஈண்டு ஒப்புநோக்கத் தக்கது.

**தீய நிமித்தங்கள்**

அப்போது அகம்பன் என்னும் நிமித்திகன் தீய நிமித்தங்கள் தோன்றுவதைக் கண்டு போருக்குச் செல்ல வேண்டா எனத் தடுக்கிறான்.

குருதி மழை பொழிகிறது. முகில் ஞாயிறைப் பரிவேடம் சுற்றியுள்ளது. கொடியின் மீது காகங்கள் பொருது வீழ்ந்து பின்தரையில் கிடந்து புரள்கின்றன.

**''குருதி மாமழை சொரிந்தன மேகங்கள் குமுறிப்**
**பருதி வானவன் ஊர்வளைப் புண்டது பாராய்**
**கருது வீரநின் கொடிமிசைக் காக்கையின்கணங்கள்**
**பொருது வீழ்வன புலம்பும் நிலம்படப் புரள்வ''** (70)

மற்றும் வாளின் வாயில் ஈக்கள் மொய்க்கின்றன. மறவர்களின் இடத்தோள்களும் இடக் கண்களும் துடிக்கின்றன. குதிரைகள் தூங்கி விழுகின்றன. நாய்களோடு சேர்ந்து நரிக் கூட்டங்கள் ஊளையிடுகின்றன:

**''வாளின் வாய்களை ஈ வளைக்கின்றன, வயவர்**
**தோளும் நாட்டமும் இடம் துடிக்கின்றன, தூங்கி**
**மீளி மொய்ம்புடை இவுளி வீழ்கின்றன, விரவி**
**ஞாளியோடு நின்று உளைக்கின்ற நரிக்குலம்**
**பலவால்''** (71)

இவுளி = குதிரை. ஞாளி = நாய். மற்றும், பிடிகள் மதம் வழிய விடுகின்றன. களிறுகளின் கொம்புகள் ஒடிபடு கின்றன. உலகம் நடுங்கும். திக்குகள் எல்லாம் இடி

விழுந்து எரிகின்றன. மறவரின் மாலைகள் புலால் நாறுகின்றன. பாடல்: (பிடிக்கு மதநீர் இல்லை).

**"பிடியெலாம் மதம்பெய்திடப் பெருங்கவுள் வேழம்**
**ஒடியுமால் மருப்பு, உலகமும் கம்பிக்கும், உயர்வான்**
**இடியும் வீழ்ந்திடும் எரிந்திடும் பெருந்திசை, எவர்க்கும்**
**முடியின் மாலைகள் புலாலொடு முழுமுடை நாறும்"**
(72)

இவ்வாறு தீய நிமித்தங்கள் தோன்றுவது பற்றிய செய்திகள் பல நூல்களில் கூறப்பட்டுள்ளன. மாதிரிக்காகச் சிலம்பிலிருந்து சில காண்பாம்;

**"கட்சியுள் காரிகடிய குரலிசைத்துக் காட்டும் போலும்"**

கரிக்குருவி கடவுவது தீய நிமித்தமாம், மற்றொன்று:-

**கண்ணகி கருங்கணும் மாதவி செங்கணும்**
**உண்ணிறை கரந்தகத்து ஒளித்துநீர் உகுத்தன**
**எண்ணுமுறை இடத்தினும் வலத்தினும் துடித்தன"**
(5 : 237 - 239)

ஆய்ச்சியர் குரவை — உரைப்பாட்டு மடையிலிருந்து ஒரு பகுதி வருமாறு:

**"குடப்பால் உறையா குவிஇமில் ஏற்றின்**
**மடக்கண் நீர்சோரும் வருவதொன் றுண்டு** (1)
**உறிநறு வெண்ணெய் உருகா உருகும்**
**மறிதெறித்து ஆடா வருவதொன் றுண்டு** (2)
**நான்முலை ஆயம் நடுங்குபி நின்றிரங்கும்**
**மான்மணி வீழும் வருவதொன் றுண்டு"** (3)

சிலம்பில் சொல்லப்பட்டுள்ள இந்த நிமித்தங்கட்கு ஏற்பப் பின்னால் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கம்பரால் கூறப்பட்டுள்ள தீய நிமித்தங்கட்கு ஏற்பப் பின்னால் கரன் படைகளோடு மடிகிறான். இலக்கிய ஒப்புமை காண்டல் என்னும் முறையில் இது தரப்பட்டுள்ளது.

இப்போது அகம்பன் தீ நிமித்தங்களைக் கூறிப் போருக்குப் போக வேண்டா எனத் தடுத்ததும், கரன் வெடிச் சிரிப்பு சிரித்து, பகைவரை அரைத்த அம்மியாகிய என் தோள்கள் போர் கிடைக்காமையால் வீங்கிப் புடைத்துள்ளன. அவை மானிடர்க்கு எளியன ஆகுமோ? - என்றான்:

**தோள் அம்மி**

**"உரைத்த வாசகம் கேட்டலும் உலகெலாம் உலையச்**
**சிரித்து நன்று நம் சேவகம் தெவ்வரைத் தேய**
**அரைத்த அம்மியாம் அலங்கு எழில்தோள்**
**அமர்வேண்டி**
**விரைத்து வீங்குவ மானிடற்கு எளியவோ**
**என்றான்"** (74)

தேய அரைப்பது அம்மி. இங்கே பகைவரைத் தேய்த்து அரைத்தவை தோள்கள். இந்த உவமை ஒரு புதிய சுவை பயக்கிறது.

தடுக்கப்படுகிறார்கள் என்றாலேயே, திரும்பி வர மாட்டார்கள் என்னும் கருத்து தொக்கி நிற்கிறது. பெரும்பாலானவை இத்தகையனவே. சூலியஸ் சீசரை மனைவி தடுத்தாள் - மீறி அரசவை சென்றான் - திரும்ப வில்லை.

கரன் கூறியதும் படைவீரர் இராமனை வளைத்துக் கொண்டனர். இராமனின் அம்பால் எதிரிகளின் தலைகள் அறுப்புண்ண உடல்கள் மட்டும் ஆடுகின்றன. உயிரையும் தொடர்வதுபோல் இராமன் அம்பு மேல் நோக்கிச் சென்றதாம்.

**"அயில் அம்பு விண்மேல் ஓடுகின்றன**
**உயிரையும் தொடர்வன ஒத்த"** (81)

**காட்டாறு**

இராமனின் அம்புகளால் இறந்த அரக்கர்களின் உடல்கள் நான்கு பக்கமும் கிடக்க, நடுவில் குருதி தேங்கி நிற்பதால் அந்தப் பகுதி ஏரி போல் தெரிந்ததாம். இருபக்கமும் கரைகள் போல் பல உடல்கள் கிடப்ப, நடுவில் குருதி ஓடுவது காடு ஆறு ஆனதுபோல் காணப்பட்டதாம்.

**''மாரி ஆக்கின வடிக்கணை வரை புரை நிருதர்**
**பேர் யாக்கையின் பெருங்கரை வயின்தொறும் பிறங்க**
**ஏரி ஆக்கின, ஆறுகள் இயற்றின நிறையச்**
**சோரி ஆக்கின போக்கின வனம்எனும் தொன்மை** (83)

அம்புகள் குருதி மழை பெய்யச் செய்ததால், வனம் (காடு) என்னும் தொன்மைப் (பழைய) பெயர் மாறி, ஏரி எனவும் ஆறு எனவும் சொல்லும்படியான நிலைமை ஏற்பட்டது. செயற்கை ஏரி–செயற்கை ஆறு.

**உயிர்ச் சுமை**

இராமனின் அம்புகளால் படைஞர்கள் ஏராளமானவர்கள் இறந்ததால், அவர்களின் உயிர்களைச் சுமக்க முடியாமல் விண்ணுலகம் முதுகை நெளித்ததாம்.

**''உயிர் சுமந்து உளுக்கியது உம்பர்''** (87)

என்பது பாடல் பகுதி. உயிர் என்பது என்ன எனத்திட்ட வட்டமாகச் சொல்ல முடியாமல் அறிவியலார் திகைத்துக் கொண்டிருக்கின்றனர் இன்று; ஆனால் அன்று உயிர் மேலேயோ கீழேயோ செல்வதாகக் கூறியது இன்றும் நம்பப்படுகின்றது. கம்பரோ உயிர்கட்கு வடிவம் தந்து விண்ணுலகால் உயிர்களின் சுமையைத் தாங்க முடியவில்லை எனக் கற்பனை செய்துள்ளார். உம்பர் = விண்ணுலகு.

**அறத்தின் வலிமை**

கரிய அரக்கர்கள் இழைத்த கொடுமைகளின் பயனே இந்த அழிவு. அருள் நிறைந்த அறச் செயல்களினும் வலியதாய் வெல்லக் கூடியது உண்டே? (இல்லை)

> **''இருள்தரும் புரத்து இழுதையர்**
> **பழுது உரைக்கு எளிதோ**
> **அருள்தரும் திறத்து அறனன்றி**
> **வலிய துண்டாமோ?** (88)

இழுதையர் = அரக்கர். அவர்களின் பழுதுகள் (குற்றங்கள்) உரைக்க முடியாதவை: முன்னால் சொன்ன நிகழ்ச்சியிலிருந்து அறன் வலியது என்னும் வேறொரு கருத்தைப் பெற வைத்த இந்த அமைப்பு வேற்றுப்பொருள் வைப்பு அணி எனப்படும்.

**தேவராதல்**

இராமனால் இறந்து உடலினின்று உயிர் பிரிந்தவர்கள் பின் அழியா உடல் பெற்றுத் தேவராகி, மேலுலகம் சென்று கீழே நடப்பதை வேடிக்கை பார்த்து அரக்கர் அழிகின்றார் எனத் தேவரோடு சேர்ந்து கொண்டு ஆர்ப்பரித்தனராம்.

> **''உலந்தார் உடல் கடலோடு உற**
> **உலவாஉடல் உற்றார்**
> **அலந்தார் நிசிசரர் ஆமென**
> **இமையோ ரொடும் ஆர்த்தார்** (93)

உலவா உடல் = அழியாத தேவ உடல். நிசிசரர் = இரவில் திரியும் அரக்கர். இறந்தவர்கள் வீரசொர்க்கம் சேர்ந்து தேவராகி விட்டதால், கீழே அரக்கர் அழிவதைக் கண்டு ஆர்ப்பரித்தனர் என்பது சுவையான கற்பனை.

**ஈரல் தாமரை**

இறந்த அரக்கரின் ஈரல், குடல் முதலியன குருதிக் கடலில் மிதக்கின்றனவாம். இங்கே, 'ஈரல் செறி கமலத்தன'

(94) என ஈரல் தாமரையாக உருவகிக்கப் பட்டுள்ளது. இதில் ஒரு பொருத்தம் உள்ளது. அதாவது

உடலில், மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என ஆறு ஆதாரங்கள் உள்ளனவாகத் தத்துவ வாதிகள் கூறுவர்.

நீர் கழி உறுப்புக்கும் மலம் கழி உறுப்புக்கும் இடைப் பட்ட இடம்மூலாதாரம். இந்தஇடத்திற்கும் கொப்பூழுக்கும் இடைப்பட்ட இடம் சுவாதிட்டானம். இந்த இடத்திற்கும் மார்பின் தொடக்கத்திற்கும் இடைப்பட்ட இடம் மணிபூரகம். இதோடு நிறுத்துவோம். இந்தப் பகுதியில் உள்ளதே ஈரல். இந்த ஆதாரங்களுக்குள் உள்ள உறுப்புகளைத் தாமரை வடிவினவாகத் தத்துவ நூல்கள் கூறுகின்றன.

மூலாதாரம் நான்கு இதழ்த் தாமரை வடிவினதாம். சுவாதிட்டானம் ஆறு இதழ்த் தாமரை வடிவினதாம். மணிபூரகம் பத்து இதழ்த்தாமரை வடிவினதாம். பிரபுலிங்க லீலை-விமலை கதியில் இது கூறப்பட்டுள்ளது.

**"இரண்டோடு இரண்டு; மூவிரண்டு; ஐ இரண்டு...**
**இதழ்ப் பங்கயங்கள்..."** (23)

இரண்டோடு இரண்டு = நான்கு. மூ இரண்டு = ஆறு. ஐ இரண்டு = பத்து. பங்கயங்கள் = தாமரைகள்.

எனவே, கம்பர் ஈரலைக் கமலம் என உருவகித்ததில் ஏதோ பொருத்தம் உள்ளதாகத் தெரிகிறது.

1945 ஆம் ஆண்டு நான் மார்பு வலியால் பல திங்கள் காலம் பேச முடியாமல் படுக்கையில் கிடந்தேன். அப்போது ஒரு நாள் எழுத்தறிவே இல்லாத ஒருவர் மற்றொருவரிடம் 'இவருக்குக் (எனக்குக்) கமலம் மலர்ந்து போயிற்றாம்' என்று கூறினார். எதைக்கொண்டு அவர் இவ்வாறு கூறினார் என்பது எனக்குப் புரியவில்லை.

**தம் உடல் காணல்**

கரன் படைத்தலைவர்கள் பதினால்வரும் இறந்தனர். பின்னர்த் திரிசிரன் படையுடன் வந்தான். இராமனால் படை மறவர்கள் பலரும் இறந்தனர். சிலர் தலை வெட்டுண்ண – உயிர் மேலே போகத் தேவராக மாறினர். இவர்கள் கீழே தலை வெட்டுண்ட தம் உடல்கள் நடனமாடிக் கொண்டிருப்பதைத் தம் மனைவிமாரொடு கண்டனராம்:

**"சண்ட வெம் கடுங்கணை தடியத் தாம் சில**
**திண் திறல் வளை எயிற்று அரக்கர் தேவராய்**
**வண்டுழல் புரிகுழல் மடந்தை மாரொடும்**
**கண்டனர் தம் உடல் கவந்த நாடகம்"** (121)

சண்ட = வலிய. தடிய = குறைக்க. கவந்தம் = தலை அற்ற உடல் (முண்டம்).

மனைவிமாரொடும் கண்டனர் என்பதால், மறவர்கள் இறந்ததும் மனைவிமார்களும் உடனே தீக்குளித்தோ வேறு எப்படியோ இறந்து விண்ணில்போய்த் தம் கணவருடன் சேர்ந்து கொண்டனர் எனக் கற்பனை செய்து கொள்ளல் வேண்டும்.

தம் உடல் நடனம் ஆடுவதைத் தாமே கண்டனர் என்பது, திரைப்படமும் தொலைக் காட்சியும் வந்துவிட்ட இந்தக் காலத்தில் எளிதில் இயலக் கூடியதே. ஆனால், அந்தக் காலத்தில், அரக்கர் தேவராக மாறிக் கண்டதாகக் கூறியுள்ள கற்பனை நயம் மிகவும் சுவைத்தற்கு உரியது.

**பேயும் நாயும்**

இறந்தவர் தேவராகி மனைவிமாரொடு சேர்ந்து, இறந்து போன தம் உடலின் ஒரு தோளை பேய் ஒரு பக்க முனையையும், நாய் மற்றொரு பக்க முனையையும் பற்றிக்கொண்டு இழுப்பதைக் கண்டு நகைத்தனராம்:

**"ஆய்வளை மகளிரொடு அமரர் ஈட்டத்தார்**
**தூயவெங் கடுங்கணை துணித்த தங்கள்தோள்**
**பேய் ஒருதலை கொளப் பிணங்கி வாய்விடா**
**நாய் ஒருதலை கொள நகை உற்றார் சிலர்"** (122)

கயிறு இழுப்புப் (Tug of war) போட்டி போல, ஒரு தோளைப் பேய் ஒரு பக்கமும் நாய் ஒரு பக்கமும் இழுப்பது, நமது ஏழை நாட்டில், எச்சில் இலையை ஏழை ஒரு பக்கமும் நாய் ஒரு பக்கமும் இழுப்பது போன்றுள்ளது. அந்தோ!

**பொய்ச்சான்று**

பொய்ச்சான்று கூறிய கொடியவன் குலத்தோடு அழிவதுபோல, வஞ்சக அரக்கர் இராமன் அம்பால் வேரோடு அழியலாயினர்:

**"கைக்கரி அன்னவன் பகழி கண்டகர்**
**மெய்க்குலம் வேரொடும் துணித்து வீழ்த்தின**
**மைக்கரு மனத்தொரு வஞ்சகன் மாண்பிலன்**
**பொய்க்கரி கூறிய கொடுஞ்சொல் போலவே"** (124)

கைக்கரி = யானை; அன்னவன் = இராமன். பகழி = அம்பு. கண்டகர் = கொடியவர். மெய்க்குலம் = உடல் தொகுதிகள். பொய்க்கரி = பொய் சாட்சி.

வாய்ப்பு நேரும்போ தெல்லாம் வரலாற்றின் நடுவிலே நல்ல கருத்துகளைப் புகுத்துவதில் வல்லவர் கம்பர். பொய்ச் சான்றின் கொடுமையைக் கண்டிக்க இந்த இடத்தைப் பயன்படுத்திக் கொண்டார்.

துன்பப் படுபவர் சிலர், நான் பொய்ச்சான்று சொன்னேனோ என வருந்துவதாக இலக்கியங்களில் படித்திருக்கலாம். மற்றும் சிலர், நான் இந்தத் தீமையைச் செய்தேனாயின் அல்லது நான் இந்த நல்லதைச் செய்யே னாயின், பொய்ச் சான்று சொன்னவர் படும் பாட்டைப்

படுவேனாக எனச் சூள் உரைப்பதாகவும் இலக்கியங்களில் படித்திருக்கலாம்.

கம்ப இராமாயணத்திலேயே பள்ளிபடைப் படலத்தில்,

**"வழக்கில் பொய்த்துளோன்"**

**"மன்றிடைப் பிறர் பொருள் மறைத்து வவ்வினோன்**
**என்றிவர் உறு நரகு என்னது ஆகவே"** (101, 102)

என்று பரதன் கூறியிருப்பது ஈண்டு ஒப்புநோக்கத் தக்கது.

**"வேதாளம் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே**
**பாதாள மூலிவந்து படருமே — மூதேவி**
**சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே**
**மன்றோரம் சொன்னார் மனை"** (23)

என்னும் ஔவையின் நல்வழிப் பாடலும் ஒப்புநோக்கத் தக்கது. வேதாளம் = பேய். சேடன் = பாம்பு. மன்று ஓரம் சொல்லல் = நீதிமன்றத்தில் நடுநிலை தவறிப் பொய்ச் சான்று புகலுதல்.

பொய்ச் சான்று கூறுபவரைப் பூதம் புடைத்து உண்ணும் எனச் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது:

**"பொய்க் கரியாளர் புறங்கூற் றாளர்என்**
**கைக்கொள் பாசத்துக் கையகப் படுவோர் எனக்**
**காதம் நான்கும் கடுங்குரல் எழுப்பிய**
**பூதம் புடைத்துணும் பூதசதுக்கமும்"** (5: 131-134)

என்பது பாடல் பகுதி. மற்றும், கலித்தொகையில் உள்ள பகுதி கடுமையாய்த் தோன்றுகிறது. அதாவது, பொய்க்கரி கூறியவன் நிழலுக்காகத் தங்கும் மரம் வாடி விடுமாம்.

**"கரிபொய்த்தான் கீழிருந்த மரம்போலக் கவின்வாடி**
**எரிபொத்தி என்னெஞ்சம் சுடுமாயின் எவன்செய்கோ"**
(34:10, 11)

இன்னும் இராமலிங்க வள்ளலார் முதலியோரின் பாடல்களிலும் இந்தக் கருத்து இடம் பெற்றுள்ளது.

கெட்டது செய்தவர் குலத்தோடு - குடும்பத்தோடு அழிவர் என்னும் கருத்துடைய —

**"கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்**
**உண்பதூஉம் இன்றிக் கெடும்"** (166)

**"சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்**
**ஏமப் புணையைச் சுடும்"** (306)

என்னும் குறள்களும் ஈண்டு எண்ணத்தக்கன.

**குளவியும் இராமனும்**

ஆறு கால்களையும் சிறகுகளையும் உடைய குளவிகள் புழுக்களைக் கொட்டிக் கொட்டித் தம்மைப்போல் ஆக்குவது போல, இராமன் வஞ்சக அரக்கரைத் தன் அம்புகளால் கொன்று கொன்று தேவர்களாக மாற்றுகிறான்:

**"அஞ்சிறை அறுபதம் அடைந்த கீடத்தைத்**
**தஞ்செனத் தன்மய மாக்கும் தன்மைபோல்**
**வஞ்சகத்து அரக்கரை வளைத்து வள்ளல்தான்**
**செஞ்சரத் தூய்மையால் தேவராக்கினான்"** (125)

சிறை = இறக்கை. அறுபதம் = ஆறுகால். இங்கே இது சினையாகு பெயராக ஆறு கால்களையுடைய ஒரு வகைக் குளவியைக் குறிக்கிறது. கீடம் = புழு. அரக்கரைத் தேவராக மாற்றுவதால் அம்புக்குத் தூய்மை ஏற்றப்பட்டது. தாழ்ந்த அரக்கரை உயர்ந்த தேவராக மாற்றுவதால் இராமன் வள்ளல் என உயர்த்தப்பெற்றான்.

ஒருவர் மற்றொருவரையும் தன்னைப் போல் செயல் படும்படி மாற்றுவதற்கு, 'குளவி புழு பூச்சிகளைக் கொட்டிக் கொட்டித் தன்னைப்போல் ஆக்குவது போல' என உவமை சொல்வது உலகியல். ஆனால் உண்மை வேறு. அதாவது:- ஒரு வகை 'மண் கூட்டுக்குளவி' (Mudpot wast) மண்ணால்

(Mud) குடம்போல் (Pot) சிறிய கூடு உண்டாக்கி, புழு பூச்சிகளை அக்கூட்டிற்குள் வைத்துப் பக்கத்தில் முட்டைகள் இட்டுச்சென்று விடுமாம், முட்டையிலிருந்து வெளிவரும் குளவிப் புழுக்கள், தாய் வைத்துவிட்டுப் போயிருக்கும் புழுக்களைத் தின்று வளர்ந்து வெளிவருமாம். இதுதான் உண்மை. ஆனால், மக்கள் குளவி புழுக்களைக் கொட்டிக் கொட்டித் தன்னைப்போல் ஆக்குவதாகத் திரித்துச் சொல்கின்றனர். கம்பர் இதனை உவமையாக்கிக் கூறியுள்ளார். (இது அந்தக்கால நிலைமை).

**திரிசரன் படை**

இறுதியாக, முத்தலை உடைய திரிசரன் இராமனோடு பொருது ஒவ்வொரு தலையாக இழந்து மடிந்து விட்டான்; அவன் படைஞர் அஞ்சி ஓடலாயினர்.

சிலர் அம்பால் புண்பட்டுத் துளைபோடப்பட்டுள்ள யானைகளின் வயிற்றினுள் புகுந்து மறைந்து கொண்டனராம். புகும்போது, நின்று ஆடும் தலையற்ற முண்டங்களை நோக்கி, நண்பர்களே! யாங்கள் மறையும் இடத்தைக் காட்டிக் கொடுக்காதீர்கள் என்று வேண்டிப் புகுந்தனராம்:

> **"மண்டி ஓடினர் சிலர் நெடுங் கடகரி வயிற்றில்**
> **புண்திறந்த மா முழையிடை வாளொடும் புகுவார்;**
> **தொண்டை நீங்கிய கவந்தத்தைத் துணைவா நீ எம்மைக்**
> **கண்டிரேலன் எனப் புகல் என்க் கை தலைக் கொள்வர்** (148)

என்பது பாடல். முழை = குகை, பொந்து. கவந்தம் = தலையற்ற முண்டம், கைகளைத் தலைமேல் வைத்துக் கொண்டு கவந்தத்தை வேண்டினராம். மேலும் பல வகையில் தப்பினராம்.

இந்த மாதிரியில் தோற்றவர்கள் தப்பித்துக் கொள்வது பற்றிய செய்தி, கம்பராமாயணம் - சுந்தரகாண்டம் - அக்ககுமாரன் வதைப்படத்தில் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

மற்றும் இளங்கோவின் சிலப்பதிகாரத்திலும், சயங் கொண்டாரின் கலிங்கத்துப் பரணியிலும் உள்ளனவற்றை இலக்கிய ஒப்புமை காண்டல் என்னும் முறையில் காண்பாம்:

சிலம்பில்:- செங்குட்டுவனின் வடநாட்டுப் போரில் தோற்ற பகைவர்கள் பலவித மாறுகோலம் கொண்டு தப்பி ஓடினராம். அதாவது; சடைமுடி தாங்கியும், காவி உடுத்தும், திருநீறு பூசியும், சமணத் துறவியர்போல் மணையும் மயில் தோகையும் ஏந்தியும், பாடும் பாணர் போலவும், பல இயங்களைக் கூத்தர்போல் தோளில் சுமந்தும் மாறுகோலம் பூண்டு பல்வே றிடங்கட்கு ஓடி மறைந்து விட்டனராம்.

> **"சடையினர் உடையினர் சாம்பல் பூசினர்**
> **பீடிகைப் பீலிப் பெருநோன் பாளர்**
> **பாடு பாணியர் பல்லியத் தோளினர்**
> **ஆடு கூத்த ராகி எங்கணும்**
> **ஏந்து வாள் ஒழியத் தாம் துறைபோகிய**
> **விச்சைக்கோலத்து வேண்டுவயின் படர்தர"**
> (26:-225-230)

என்பது சிலப்பதிகாரப் பாடல் பகுதி, கலிங்கத்துப் பரணி வருமாறு:-

சோழன் படைக்கு அஞ்சிக் கலிங்க மறவர்கள் புதர் வழியாக ஓடினர். புதரில் இருந்த முட்கள் அவர்களின் உடைகளையும் தலைமயிரையும் பிய்த்து இழுத்துக் கொண்டன. இதனால் அவர்கள், சமணத் துறவியர்போல் முடியும் உடையும் உடைமையால், நாங்கள் பஞைஞர்

அல்லர் - சமணத் துறவிகள் என்று தப்பி ஓடினராம்.

சிலர், வில்லின் நாண் கயிற்றைப் பூணூலாகச் செய்து பூண்டு, நாங்கள் கங்கையாடச் செல்லும் பார்ப்பனர்கள் எனக் கூறித் தப்பினராம்.

சிலர் யானையின் மணிகளைத் தாளமாகத் தட்டிக் கொண்டு, யாங்கள் கலிங்கர் அல்லேம் - தெலுங்குப் பாணர்கள் என்று கூறித் தப்பித்து ஓடினராம்! பாடல்கள். (போர்பாடியது)

"வரைக்கலிங்கர் தமைச்சேர மாசை ஏற்றி
வன்தூறு பறித்த மயிர்க்குறையும் வாங்கி
அரைக்கலிங்கம் உரிப்புண்ட கலிங்க ரெல்லாம்
அமணரெனப் பிழைத்தாரும் அநேகர் ஆங்கே"
(63)

"வேடத்தால் குறையாது முந்நூலாக
வெஞ்சிலை நாண் மடித்திட்டு விதியால் கங்கை
ஆடப்போந் தகப்பட்டேம் கரந்தோம் என்றே
அரிதனைவிட் டுயிர்பிழைத்தார் அநேகர்
ஆங்கே" (64)

"குறியாகக் குருதிகொடி ஆடை யாகக்
கொண்டுடுத்துப் போர்த்துத்தம் குஞ்சி
முண்டித்து
அறியீரோ சாக்கியரை உடைகண்டால் என்
அப்புறம்என் றியம்பிடுவர் அநேகர் ஆங்கே" (65)

"சேனைமடி களங்கண்டேம் திகைத்து நின்றேம்
தெலுங்கரேம் என்று சில கலிங்கர் தங்கள்
ஆனைமணியினைத் தாளம் பிடித்துக் கும்பிட்டு
அடிப்பாணர் எனப் பிழைத்தார் அநேகர்
ஆங்கே" (66)

என்பன பாடல்கள். இவ்வாறே தோற்ற அரக்கர்கள், பல மாயங்கள் செய்து தப்பி மறைந்தனர்.

**தூடணனும் கரனும்**

அஞ்சி ஓடுபவர்களை நோக்கித் தூடணன் கூறலானான்: பச்சைப் பிள்ளைபோல் அஞ்சியோடும் கொச்சைப் பேர்வழிகளைப் பெண்களும் விரும்பார். அச்சம் உயிர்க்குத்துணை யாகாது. உறுதியான துணிவே கவசம். (142)

இதுவரையும் இந்திரனோடும் தேவரோடும் மூவரோடும் புரிந்த போரில் அரக்கர் எவரும் புறமுதுகிட்டு ஓடியதில்லை. அஞ்சி ஓடிய தேவர்களிடம் நீங்களும் அஞ்சி ஓடக் கற்றுக் கொண்டீர்களோ? (143)

நீங்கள் செறிந்த காட்டு வழியிலே ஓடும்போது, மரக் கிளைகள் கிழித்த முதுகுப் புண்களை உங்கள் மனைவியரிடம் காட்டுவீரோ? அல்லது, அம்பு கிழித்த மார்புப் புண்ணைக் காட்டுவீரோ? (145) என்று இழித்துரைத்தான்.

பின்னர்த் தூடணன் தேர்மேல் ஏறிப் போர் புரிந்து இராமன் விட்ட அம்புகளால் தேர் முதலிய படைகளை எல்லாம் இழந்து தானும் மாண்டான்.

அடுத்து மூத்தவனாகிய கரன்போருக்கு வந்தான். நீதி மன்றத்தில் வலியவர் மெலியவரை வருத்திக் கவர்ந்த பொருள் அழிவது போல் கரனுடைய படைமறவர்கள் இராமனால் அழியலாயினர்:

**"மன்றிடை நலிந்து வலியோர்கள் எளியோரைக்**
**கொன்றனர் நுகர்ந்த பொருளின் கடிது**
**கொன்றான்** (168)

நீதி மன்றத்தில் சிலர் பொய் சொல்லி வழக்கின் வென்று ஏழையரின் பொருளைத் தமதாக்கிக் கொள்வர்;

ஆனால் அப்பொருள் விரைவில் அழிந்தொழியுமாம். அது போல் கரன் வீரர்கள் அழிந்தார்களாம்.

கரன் பின்னர் நேருக்கு நேர்நின்று பொருதான்; தான் கற்ற மாயப் போர் முறைகளையெல்லாம் கையாண்டான். இராமன் எல்லாவற்றையும் முறியடித்துக் கரனது தேரைத் துகள் படச் செய்தான்.

கரன் மேலெழுந்து பொருதான். இராமன் அம்பெய்திக் கரனது வலக்கையை முதலிலும் இடக்கையைப் பின்னும் வெட்டி வீழ்த்தினான். இறுதியாகக் கரனும் இறந்து பட்டான்.

**உயிரும் உடலும்**

பின்னர் இராமன், உயிராகிய தான் போர் புரிந்து கொண்டிருந்தபோது, உயிர் இல்லாத உடலாக இருந்த சீதைபால் சென்றான்:

> **''முனிவர் வந்துமுறைமுறை மொய்ப்புற**
> **இனிய சிந்தை இராமனும் ஏகினான்**
> **அனிக வெஞ்சமத்து ஆருயிர் போகத்தான்**
> **தனியிருந்த உடலன்ன தையல்பால்''** (187)

**கண்ணீரால் கழுவுதல்**

போரில் குருதிக் கறையும் தூசும் படிந்திருந்த இராமனது அடிகளை இலக்குவனும் சீதையும் தம் கண்ணீரால் கழுவினார்கள்:

> **''விண்ணின் நீங்கிய வெய்யவர் மேனியில்**
> **புண்ணின் நீரும் பொடிகளும் போய் உக**
> **அண்ணல் வீரனைத் தம்பியும் அன்னமும்**
> **கண்ணின் நீரினால் பாதம் கழுவினார்''** (188)

அன்னம் = சீதை. இந்தக் கண்ணீர் மகிழ்ச்சிக் கண்ணீராகும்.

**ஆசையின் விளைவு**

*போர்க்களத்தில் வீழ்ந்து கிடந்த கரனது உடல்மேல் சூர்ப்பணகை விழுந்து தழுவி அழுதாள்: என் ஆசையால் மூக்கு போனதல்லாமல், யான் உங்களிடம் முறையிட்ட வாக்கினால் உங்கள் வாழ்வையும் வாழ்நாளையும் போக்கினேன் கொடியவளாகிய யான்:*

**"ஆக்கினேன் மனத்து ஆசை அவ்வாசை என்**
**மூக்கி னோடு முடிய முடிந்திலேன்**
**வாக்கினால் உங்கள் வாழ்வையும் நாளையும்**
**போக்கினேன் கொடியேன் என்று போயினாள்"**

*அரக்கர்கள் அனைவரும் அழியப் போவதற்குக் காரணமான சூர்ப்பணகை, சூறைக்காற்று போல் மிகவும் விரைவாக ஓடிச் செய்தியைக் கூற இலங்கையை அடைந்தாள்.*

# 7. மாரீசன் வதைப் படலம்

*மாய மானாக வந்த மாரீசனை இராமன் கொன்றதைப்பற்றிக் கூறும் படலம் இது. மாரீசன் இராவணனுக்கு மாமன் முறையினன்.*

**இராவணனின் திருவோலக்கம்**

*சூர்ப்பணகை நடந்ததை அண்ணன் இராவணனிடம் கூறவரும்போது இராவணன் அரண்மனையில் அரியணை மீது கொலு வீற்றிருந்த ஆடம்பரமான திருவோலக்கப் பொலிவு பல பாடல்களில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.*

*மூன்று உலகங்களையும் தவ வலிமையால் உடைமையாக்கிக் கொண்ட இராவணன், மங்கையரின் கண்களாகிய வெள்ளத்தின் நடுவே வீற்றிருந்தான்.*

**"இருந்தனன் உலகங்கள் இரண்டும் ஒன்றும் தன்**
**அருந்தவம் உடைமையின் அளவில் ஆற்றலில்**
**பொருந்திய இராவணன் புருவக் கார்முகக்**
**கருந்தடங் கண்ணியர் கண்ணின் வெள்ளத்தே"** (23)

*புருவக் கார்முகம்=புருவ மாகிய வில். கருந் தடங் கண்ணியர்=கரிய பெரிய கண்களை உடைய பெண்கள். பெண்களின் கண்களாகிய வெள்ளத்தின் நடுவே இருந்தான் என்றால், எண்ணற்ற மடந்தையர் அவனைச் சுற்றி நின்று அவனது பொலிவை நோக்கிக் கொண்டிருந்தனர்—என்பதாம்.*

*காம வெறியால் இறந்த இராவணன், பெண்களின் நாட்டத்தின் நடுவே இருந்தான் என்பதில் வியப்பில்லை.*

**வடதிசை வாயில்**

செவ்வானம் போல் சிவந்த கூந்தலையுடைய சூர்ப்பணகை, முடை நாற்றம் உடைய வாயால், ஊழிக்காலக் கடல் ஒலிபோல் கத்திக்கொண்டு இலங்கையின் வடதிசை வாயிலாக நகருக்குள் நுழைந்தாள்:

**"முடையுடை வாயினால் முறையிட்டு ஆர்த்தெழு**
**கடையுகக் கடலொலி காட்டக் காந்துவாள்**
**குடதிசைச் செக்கரின் சேந்த கூந்தலாள்**
**வடதிசை வாயிலின் வந்து தோன்றினாள்"** (25)

கடையுகம் = உலகம் அழியும் ஊழிக்காலம். குடதிசைச் செக்கர் = மேற்குத் திக்கில் காணப்படும் செவ்வானம். அரக்கி இலங்கையின் வடக்கு வாயில் வழியாக நுழைந்தாள் என்பதில் பொருத்தம் உள்ளது. இந்தியாவிலிருந்து இலங்கையின் வடக்குப் பக்கமாகச் செல்வது எளிய வழியாகும்.

**எவர் மேலது?**

சூர்ப்பணகை அறுபட்ட உறுப்புகளுடன் அரற்றி அங்கலாய்த்துக் கொண்டு வருவதைக் கண்ட பெண்கள் மிகவும் வருந்தினர். சூர்ப்பணகையை இவ்வாறு செய்தவர் இந்திரனோ- நான்முகனோ - திருமாலோ - சிவனோ? எவர் இந்தத் தீமையைச் செய்திருக்க முடியும்? என்று கொதித்தனர் சிலர்.

**"இந்திரன் மேலதோ உலகம் ஈன்றபேர்**
**அந்தணன் மேலதோ ஆழி யானதோ**
**சந்திர மவுலிபால் தங்குமே கொலோ**
**அந்தாரம் என்று நின்று அழல்கின்றார் சிலர்"**

அந்தரம் = தீமை. அந்தணன் = நான்முகன். ஆழியான் = திருமால். சந்திர மவுலி = பிறை சூடிய சிவன். இங்கே,

சொல்லப்பட வேண்டிய பேரிறைவர்கள் எல்லாரும் குறிப்பிடப்பட்டுள்ளனர். இந்த முறை வைப்பில் சிவனுக்குத் தலைமை தந்திருப்பது போல் தோன்றுகிறதோ!

புகழான சொல்லுக்கு ஏற்ற கற்புடைய குலமகளிர்க்கு யாரும் இத்தீமை செய்ய எண்ணார். இவள், நற்குடி மகளிர்க்கு ஏற்ற செயல் செய்திருக்க மாட்டாள் கற்பும் கெட்டிருப்பாள் - அதனால் கரனே இவளை வெறுத்து இவ்வாறு செய்திருக்கலாம் என்றனர் சிலர்.

> **"சொல் பிறந்தார்க்கு இது துணிய ஒண்ணுமோ**
> **இற்பிறந்தார் தமக்கு இயைவ செய்திலள்**
> **கற்பு இறந்தாளெனக் கரன் கொலாம் இவள்**
> **பொற்பு இறந்துற ஆக்கினன் புகன்று என்றார்சிலர்"**
>
> (32)

> **"தகை சான்ற சொல்காத்துச் சோர்விலாள் பெண்"**
>
> (56)

என்னும் குறள் பகுதி ஈண்டு எண்ணத்தக்கது.

இவ்வாறு அங்கிருந்த பெண்டிர் பல விதமாக எண்ணி வருந்தினர். சூர்ப்பணகை அழுததல்லாமல் அவளுக்கு இப்படி ஆய்விட்டதே எனப் பெண்கள் பலரும் அழுதனர்.

**அழுகுரல்**

இலங்கையில் இதுவரையும், முழவு, வீணை, யாழ், குழல், சங்கு, தாரை ஆகியவை எழுப்பும் மகிழ்ச்சியான ஒலியைத் தவிர அழுகுரல் கேட்டதே இல்லை. இப்போது தான் சூர்ப்பணகையால் இலங்யைிகல் அழுகுரல் தோன்றலாயிற்று:

**"முழவினில் வீணையில் முரல்நல் யாழினில்**
**தழுவிய குழலினில் சங்கில் தாரையில்**
**எழுகுரல் இன்றியே என்றும் இல்லதோர்**
**அழுகுரல் பிறந்தது அவ்விலங்கைக்கு அன்றரோ"** (36)

*இசை இயங்களில் இன்றியமையாத தோல் கருவி, நரம்புக் கருவி, துளைக்கருவி ஆகியவை குறிப்பிடப் பட்டுள்ளன. மிடற்றுக் கருவியான இனிய இசைப்பாடலுக்குப் பதில் அழுகுரல் எழுந்ததாம்.*

**அண்ணன் அடியில்**

*இவ்வாறாக இலங்கைச் சூழ்நிலை துயரத்தில் தோய, இராவணனது அவையில் இருந்தோர் எல்லாம் அஞ்சி ஓட, மலையடியில் முகில் படிந்தது போல் இராவணன் அடிகளில் சூர்ப்பணகை வந்து விழுந்தாள்:*

**"என்றினைய வன்துயர் இலங்கை நகர் எய்த**
**நின்றவர் இருந்தவரொடு ஓடும் நெறி தேடக்**
**குன்றினடி வந்துபடி கொண்ட லென மன்னன்**
**பொன்திணி கருங்கழல் விழுந்தனள் புரண்டாள்"** (45)

*கொண்டல் = மேகம். மன்னன் = இராவணன். கருங் கழல் = கழலணிந்த கால். இது இடப்பொருள் (தானி) ஆகுபெயர்.*

*சூர்ப்பணகை இராவணன் கால்களில் விழுந்ததும் சினங்கொண்ட சூழ்நிலை ஏற்பட்டதால், இராவணன் என்ன செய்வானோ என அஞ்சி, அங்கே நின்றவர்களும் இருந்தவர்களும் அவ்விடத்தை விட்டு ஓடும் வழியைத் தேடி ஓடினர்ர்களாம். அலுவலகத்திலோ, வீடுகளிலோ, தலைவன் பதற்றமாய் இருக்கும் போது மற்றவர்கள் அஞ்சி அடக்கமாயிருப்பது ஈண்டு எண்ணத் தக்கது.*

*இராவணன் உலகமே நடுங்கும்படி மிகவும் கடுமையாகவும் கொடுமையாகவும் சினம்கொண்டு,*

உன்னை இவ்வாறு செய்தவர் யார் எனத் தங்கையை வினவினான்.

**மானிடர் தடிந்தனர்**

காட்டில் தங்கி உலகம் காப்பவர்; மன்மதன்போல் அழகு மிக்கவர்; மேல்-கீழ் உலகங்களில் உடம்பழகில் ஓர் ஒப்பும் இல்லாதவர்கள் ஆகிய மானிடர்கள் வாளால் என் உறுப்புகளைக் குறைத்தனர் என்றாள் அரக்கி.

> **"கானிடை அடைந்து புவி காவல் புரிகின்றார்**
> **மீனுடை நெடுங் கொடியினோன் அனையர் மேல்கீழ்**
> **ஊனுடை உடம்புடைமை ஓர் உவமை இல்லார்**
> **மானிடர் தடிந்தனர்கள் வாள் உருவி என்றாள்"** (50)

மீனுடைக் கொடியினோன் = மீன்கொடி உடைய மன்மதன். நமக்குரிய காட்டில் அவர்கள் வந்து காவல் செய்கின்றனர் - அவர்கள் மனிதர்கள் - எனக் கூறிச் சினத்தைத் தூண்டினாள்.

**அச்சம் தவிர்**

இதைக் கேட்ட இராவணன் எங்கும் கேட்கும்படி பெருநகை புரிந்தான். கண்கள் கனல்கக்கின. நீ சொல்வது உண்மையா? பொய் சொல்லாதே. அச்சம் தவிர்த்து நடந்ததைச் சரியாகச் சொல் என்று திரும்பவும் வினவினான்.

**சொல் கலை**

அரக்கி கூறுகிறாள்:

அவர்கள் மரவுரி உடையினர்; பூணூல் பூண்டவர்; வில் கல்வி பயின்றவர்; வேதம் ஓதுபவர்; மென்மையான உடலினர்; உன்னை ஒரு தூசு அளவும் மதியாதவர். சொல் கலைபோல் கொள்ளக் கொள்ளக் குறையாமல் வளர்கின்ற அம்பறாத் தூணி உடையவர்:

**"வற்கலையர் வார்கழலர் மார்பின் அணி நூலர்**
**விற்கலையர் வேத முறை நாவர் தளிர்மெய்யர்**
**உற்கு அலையர் உன்னை ஓர் துகள்தனையும் உன்னார்**
**சொல் கலை எனத் தொலைவு இல் தூணிகள் சுமந்தார்**
(54)

*சொல் கலை = சொற்களால் யாக்கப்பட்ட நூல்கள். நூல்கள்போல் மேன்மேலும் வளரும் தூணியர் என்றால் என்ன? படிக்கப் படிக்க நூல் நயம் மிகுந்த சுவை அளித்துக் கொண்டேயிருக்கும், அது போன்ற தூணி. இங்கே,*

"**நவில் தொறும் நூல்நயம் போலும்**" (783)

"**மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு**" (396)

*என்னும் குறள் பகுதிகளும்,*

"**தேருந் தொறும் இனிதாம் செந்தமிழ்**" (59)

*என்னும் தஞ்சை வாணன் கோவைப் பாடல் பகுதியும் எண்ணத்தக்கன.*

**இராவணனின் நோக்காடு**

*தங்கையின் மூக்கை அரிந்தவர்கள் மானிடர்கள் அவர்கள் இன்னும் உயிருடன் உள்ளனர். சிறிதும் நாணம் இன்றி இராவணன் (நான்) இன்னும் உயிருடன் உள்ளான்.*

**"இருந்தனன் இராவணனும் இன்னுயிர் கொண்டின்னும்"**
(58)

*உலகிலுள்ள மறவர்களின் தலைகளை எல்லாம் வெட்டி வென்றாலும், என் தங்கையின் அறுந்த மூக்கு மீண்டும் பொருந்தி முழுமை பெறுமா?*

**"முற்ற உலகத்து முதல் வீரர் முடியெல்லாம்**
**அற்ற பொழுதத்தும் இது பொருந்தும் எனலாமோ?"**
(59)

எனக்குப் பழி உண்டாக்கியவரின் ஆளுமையும் அவர் உயிரும் இன்னும் உண்டு. என்னிடம் சிவன் வழங்கிய வாளும் வாழ்நாளும் இருபது தோள்களும் உள்ளன. நானும் இன்னும் உள்ளேன் அல்லவா?

**''மூளும் உளதாய பழி என்வயின் முடித்தோர்**
**ஆளும் உளவாம் அவரது ஆருயிரும் உண்டாம்**
**வாளும் உளது ஓதவிடம் உண்டவன் வழங்கும்**
**நாளும் உளதோளும் உளநானும் உளன் அன்றோ?''**
(60)

இவ்வாறு நொந்த இராவணன் தங்கையை நோக்கி, கரன் முதலானவர் ஒன்றும் செய்யவில்லையா என வினவ, அவர்கள் அனைவரும் இராமனால் இறந்து பட்டனர் என்றாள். (ஓத விடம் உண்டவன் = சிவன்)

**நீரொடு நெருப்பு**

கரன் முதலியோர் மாண்ட செய்தி கேட்ட இராவணனின் கண்களிலிருந்து, முகிலிலிருந்து மழை நீரோடு மின்னலாகிய கனலும் தோன்றுவது போல், நீரும் நெருப்பும் ஒரு சேரத் தோன்றின.

**''காரிடை உருமின் மாரி**
**கனலொடு பிறக்குமாபோல்**
**நீரொடு நெருப்புக் கான்ற**
**நிறைநெடுங் கண்களெல்லாம்''** (65)

பின்னர் அண்ணன் தங்கையை நோக்கி, நின்னை அவர்கள் இவ்வாறு செய்வதற்கு நீ என்ன தவறு செய்தாய் என வினவினான். இராமனுடன் வந்திருக்கும் பேரழகுடைய பெண் ஒருத்தி தொடர்பாக நான் ஒரு வகையில் செயல் பட்டதனால் இது நேர்ந்தது என்று கூறி, இராவணனுக்குக் காமநோய் மிகுமாறு சீதையின் பேரழகை விரிவாக விளக்கலானாள்.

**பாரின் பேறு**

அண்ணா! அந்த மாப்பேர் அழகியின் பெயர் சீதை. அவளுடைய கால்கள் பட நிலம் (மண்) பெரும்பேறு பெற்றுள்ளது.

**"பார் அவள் பாதம் தீண்டப் பாக்கியம் அடைந்ததம்மா"** (68)

அவள் பேசும் சொற்கள் அமிழ்தத்திலிருந்து அள்ளிக் கொண்டவை:

**"அஞ் சொற்கள் அமிழ்தின் அள்ளிக் கொண்டவள்"** (70)

மன்மதன் சிவனின் கண் நெருப்பால் உருவம் இழந்தான் என்று சொல்வது பொருந்தாது. மன்மதன் சீதையின் அழகை எண்ணி எண்ணி அவளை அடையவேண்டும் என்னும் அவாவால் சிறிது சிறிதாக மெலிந்து இளைத்து உருவம் இழந்தான்.

**"ஆசையால் அழிந்து தேய்ந்தான்**
**அநங்கன் அவ்வுருவம் அம்மா"** (71)

**நெல்லும் புல்லும்**

அவளுடைய நெற்றி வில்லையும், விழி வேலையும், பல் முத்தையும் இதழ் பவளத்தையும் ஒக்கும் என்றால் இவை சொல்லளவே தவிர, பொருள் அளவில் உண்மையாக ஒப்பாக மாட்டா. நெல்லுக்குப் புல்லை உவமித்தால் அது நேரான ஒப்புமையாகாது:

**"நெல்ஒக்கும் புல் என்றாலும்**
**நேர் உரைத்தாக வற்றோ"** (74)

**"இந்திரன் சசியைப் பெற்றான்**
**இருமூன்று வதனத் தோன்றல்**
**தந்தையும் உமயைப் பெற்றான்**
**தாமரைச் செங் கணானும்**

**செந்திரு மகளைப் பெற்றான்**
**சீதையைப் பெற்றாய் நீயும்''** (76)

**''பாகத்தில் ஒருவன் வைத்தான்,**
**பங்கயத் திருந்த பொன்னை**
**ஆகத்தில் ஒருவன் வைத்தான்;**
**அந்தணன் நாவில் வைத்தான்;**
**மேகத்தில் பிறந்தமின்னை வென்ற**
**நுண் இடையை நீயும்**
**மாகத் தோள்வீர! பெற்றால்**
**எங்ஙனம் வைத்து வாழ்தி''** (76)

*பொன் = திருமகள், ஆகம் = மார்பு. அந்தணன் = பிரமன். மின்னை வென்ற நுண் இடையுடையாள் = சீதை.*

*வீரனே! சிவன் உமையை இடப் பாகத்தில்வைத்தான்; திருமால் திருமகளை மார்பில் வைத்தான்; பிரமன் கலை மகளை நாக்கில் வைத்தான்; அழகிய சீதையை நீ எங்கே வைக்கப் போகிறாய்?*

*வள்ளலாகிய அண்ணா! நீ சீதையைப் பெற்று விடின் எல்லாப் பேறுகளையும் அவளுக்கே கொடுத்து விடுவாய். அதனால் நான் உனக்கு நல்லவளாக இருக்கலாம். ஆனால் உன் அந்தப்புரத்தில் உள்ள உன் மற்ற மனைவிமார்கட் கெல்லாம் யான் கேடு செய்தவள் ஆவேன் அல்லவா?*

**''பிள்ளைபோல் பேச்சி னாளைப்**
**பெற்றபின் பிழைக்க லாற்றாய்**
**கொள்ளை போகின்ற செல்வம்**
**அவளுக்கே கொடுத்தி ஐயா!**
**வள்ளலே உனக்கு நல்லேன்**
**மற்றுநின் மனையில் வாழும்**
**கிள்ளைபோல் மொழியார்க் கெல்லாம்**
**கேடுசூழ் கின்றே னன்றோ''** (77)

பிள்ளைபோல் பேச்சினாள் = சீதை. பெண்டிர் பலரும் கொள்ளை கொண்டு செல்வம் நுகர்கின்றார்களாம். பல பெண்டிருக்கும் நுகரும் உரிமையும் உடைமையும் கொடுத்திருப்பதால் 'வள்ளலே' என்றாள்.

உன் மனையில் மனைவியரா யுள்ள கிளிபோன்ற மொழியார்க்கு எல்லாம் தான் கேடு சூழ்வதாகக் கூறுவதன் வாயிலாக, கிடைத்தற்கு அரியவள் சீதை எனச் சீதையின் மீது அவனுக்குக் காம வெறி ஏறும்படித் தூண்டுகிறாள்.

அண்ணா! பத்து முகங்களும் இருபது கண்களும் இருபது தோள்களும் உயர்ந்த உருவமும் பரந்த மார்பும் பெருத்த செல்வமும் உடைமை காரணமாக நீ இதற்கு முன்பே சீதையைப் பெற்றிருக்கவேண்டும். சீதையை இன்னும் நீ பெறாததால், நீ வேறு இவ்வளவு பெற்றும் என்ன பயன்? என்ன தான் - எவ்வளவு தான் தவம் இயற்றினும், விதி என ஒன்று இருப்பதால், எதுவும் கிடைக்க வேண்டிய காலத்தில்தான் கிடைக்கும்.

**''தருவது விதியே என்றால்**
**தவம் பெரிது உடையரேனும்**
**வருவது வரும்நாள் அன்றி**
**வந்து கைகூட வற்றோ**
**ஒருபது முகமும் கண்ணும்**
**உருவமும் மார்பும் தோள்கள்**
**இருபதும் படைத்த செல்வம்**
**எய்துவது இனி நீ எந்தாய்''** (80)

அண்ணா உனக்கு இப்போதுதான் நல்ல காலம் வந்துள்ளது - இதை நழுவ விடாதே என்னும் பொருளில் இதைக் கூறியுள்ளாள். ஈண்டு,

**"அடுத்து முயன்றாலுந் ஆகுநாள் அன்றி**
**எடுத்த கருமங்கள் ஆகா"** (5)

என்னும் ஔவையின் மூதுரைப்பாடலும், திருக்குறளில் உள்ள -

**"பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்**
**சொரியினும் போகா தம"** (376)

**"வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி**
**தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது"** (377)

என்னும் பாக்களும் எண்ணத் தக்கன. இராவணனுக்கு இப்போதுதான் 'ஆகூழ்' தோன்றியுள்ளது என்பதாகக் கூறியுள்ளாள்.

**கலந்த**

இவ்வளவு நேரம் தங்கையின் மூக்கை எவனோ அறுத்து விட்டானே என்பதனால் ஏற்பட்ட சினம், மறம், மானம், எல்லாம், தீவினை உள்ள இடத்தில் நோன்பு நிலைக்காதது போல், காம நோய் ஏற்பட்டதும் பறந்து போயின. ஒரு விளக்கிலிருந்து இன்னொரு விளக்கு பொருத்தப்படுவது போல், காமநோயிலிருந்து வெப்பம் தோன்ற, அவை இராவணனது உயிரோடு கலந்து விட்டன:

**"கோபமும் மறனும் மானக்**
**கொதிப்பும் என்று இனைய எல்லாம்**
**பாபம் நின்றிடத்து நில்லாப்**
**பெற்றிபோல் பற்று விட்ட;**
**தீபம் ஒன்று ஒன்றை உற்றால்**
**என்னலாம் செயலில் புக்க**
**தாபமும் காம நோயும்**
**ஆருயிர் கலந்த அன்றே"** (82)

**இரண்டு மனம்**

சீதை என்னும் பெயர் - இராவணனின் மனம் என்னும் இரண்டும் ஒன்றை விட்டு ஒன்றைப் பிரிக்க முடியாதபடி கலந்து விட்டனவாம். எனவே, அரக்கன் வேறு ஒன்றை நினைக்க வேண்டுமெனில், இந்த மனத்தால் முடியாது -, இதுவரையும் இல்லாத - வேறொரு மனம் - அதாவது இரண்டாவது மனம் வேண்டும். இந்த மனத்தால் சீதையை மறக்க வழி இல்லை. என்ன செய்வது! மெத்தக் கற்றவராயினும் மெய்யுணர்வு (ஞானம்) இல்லையேல் காமத்தை வெல்ல முடியாது. எனவே, இந்த இராவணன் எம்மாத்திரம்!

**"சிற்றிடைச் சீதை என்னும்**
**நாமமும் சிந்தை தானும்**
**உற்று இரண்டு ஒன்றாய் நின்றால்,**
**ஒன்றொழித்து ஒன்றை உன்ன**
**மற்றொரு மனமும் உண்டோ**
**மறக்கலாம்வழி மற்று யாதோ?**
**கற்றனர் ஞானம் இன்றேல்**
**காமத்தைக் கடக்க லாமோ?"** (84)

சீதையின் வடிவமும் அரக்கனின் மனமும் கலந்தன என்று சொல்லாமல், சீதை என்னும் பெயரும் அவனது மனமும் கலந்ததாகக் கூறியது ஏன்? அவன் இன்னமும் சீதையைப் பார்க்கவில்லை யாதலின் பெயர் கூறப்பட்டது. பெயருக்கே இப்படி எனில், உருவத்தைப் பார்த்துவிடின் எப்படி இருக்குமோ?

மனம் ஒன்றி விட்டதால் சீதையை மறக்க முடியாது அதாவது வேறு எதையும் நினைக்க வியலாது; அப்படி வேறு எதையாவது நினைக்க வேண்டுமாயின், வேறொரு மனம் வேண்டுமாம்.

என் நெஞ்சே! காதலர் உன்னகத்தே உள்ள போது நீ வேறு யாரை (எதை) நினைக்க முடியும் - என்னும் கருத்துடைய -

**"உள்ளத்தார் காத லவராக உள்ளிநீ**
**யாருழைச் சேறிஎன் நெஞ்சு"** (1249)

என்னும் குறள் ஈண்டு எண்ணத் தக்கது. அதாவது, ஒன்று உள்ளபோது மற்றொன்றை நினைக்க முடியாது என்பது கருத்து.

நினைக்க வேண்டியதை விட்டு அந்த நேரத்தில் வேறு ஒன்றை நினைப்பதற்குத் தான் 'மறதி' என்பது பெயர் என உளவியலார் கூறுகின்றனர்.

காதலரை மறக்காமல் நினைத்துக் கொண்டே யிருப்பதால் நாணத்தை மறந்து விட்டேன் என்னும் கருத்துடைய -

**"நாணும் மறந்தேன் அவர்மறக் கல்லாஎன்**
**மாணா மடநெஞ்சிற் பட்டு"** (1297)

என்னும் குறள் ஈண்டு நினைக்கத் தக்கது. அவரை மறக்காமல் நினைத்துக் கொண்டிருப்பதால் நாணத்தை மறந்து விட்டேன் என்கிறாள் காதலி. ஒன்றை விட்டு ஒன்றை நினைப்பதுதான் மறதி என்பது இதனால் பெறப் படலாம். நினைவு மாற்றமே மறதியாகும்.

எனவேதான், இராவணன் மனம் சீதை என்னும் பெயரோடு ஒன்றிவிட்டதால், வேறு நினைக்க வேண்டு மாயின் வேறொரு மனம் வேண்டும் என்றார். ஈண்டு,

**"இரண்டு மனம் வேண்டும் - நினைந்து வாழ ஒன்று -**
**மறந்து வாழ ஒன்று"**

என்னும் ஒரு திரையோவியப் பாடல் பகுதி ஒப்புநோக்கத் தக்கது. ஒருவேளை, இந்தத் திரையோவியப் பாடல்

கம்பன் கொடுத்த கொடையாக இருக்குமோ? ஏன் - இயற்கையாகவும் எழுந்திருக்கலாம்.

இராவணன் எவ்வளவோ கற்றவன்; ஆனால் மெய்யறிவு (ஞானம்) இல்லாமையால் காமத்தை வெல்ல முடியவில்லை. அவனது நிலையைக் கூறுவதன் வாயிலாக, ஞானம் இலார் கற்றிருப்பினும் காமம் விடார் என்ற வேறொரு கருத்தை இங்கே அமைத்திருப்பது 'வேற்றுப் பொருள் வைப்பு அணி' எனப்படும்.

**சிறை**

இராவணன் சீதையைச் சிறைப் படுத்தினான். எங்கே? தன் இதயம் என்னும் சிறைக்குள் —

> **''இதயமாம் சிறையில் வைத்தான்''** (85)

அவனது உள்ளம் வெயிலில் உருகும் வெண்ணெய் போல் நெகிழ்ந்தது:

> **''வெயிலுடை நாளில் உற்ற வெண்ணெய்போல்**
> **வெதும்பிற் றன்றே''** (85)

**மறைவு வெளிப்பாடு**

இராவணனது காமநோய், கல்வியில் கருத்து செலுத்தாத அறிவிலி மறைவாகச் செய்த தீமைபோல் வளரலாயிற்று:

> **''காமநோய், கல்வி நோக்கா**
> **மதியிலி மறையச் செய்த தீமைபோல் வளர்ந்தது''** (86)

ஈண்டு கலித்தொகையில் உள்ள —

> **''கண்டவர் இல்லென உலகத்துள் உணராதார்**
> **தங்காது தகைவின்றித் தாம்செய்யும் வினைகளுள்**
> **நெஞ்சறிந்த கொடியவை மறைப்பினும்''** (125 - 1,2,3)

என்னும் பாடலில் உள்ள 'கண்டவர் இல்லென' என்னும் பகுதி ஒப்புநோக்கத்தக்கது.

**காமத்தின் ஆற்றல்**

இவ்வளவு நாள் இராவணனது வலிமைக்கு அஞ்சிக் கொண்டிருந்த மன்மதன், இப்போது மெல்லிய அம்புகளை இராவணன் மீது எய்து காமத்தை மிகுத்து அவனை வலி யற்றவனாகச் செய்து விட்டான். வலிமையைப் போக்கும் ஆற்றல் காமத்திற்கு உண்டு என்பது இதனால் போதரும்,

**''மன்மதன் வாளி தூவி**
**நலிவதோர் வலத்தன் ஆனான்**
**வன்மையை மாற்றும் ஆற்றல்**
**காமத்தே வதிந்தது அன்றே''** (87)

வாளி = மலர் அம்பு. மன்மதன் இப்போது இராவணனை வருத்தும் அளவுக்கு வலிமை உடையவனாகி விட்டான். 'வன்மையை மாற்றும் ஆற்றல் காமத்தே வதிந்தது' என் பதில் வேற்றுப் பொருள் வைப்பு அணி உள்ளது.

போர்க்களத்தில் பகைவரும் அஞ்சக் கூடிய என் மற வலிமை, இப்பெண்ணின் நெற்றியழகைக் கண்டதும், ஐயோ, உடைந்து போயிற்றே — என்னும் கருத்துடைய —

**''ஒண்ணுதற்கு ஓஒ உடைந்ததே ஞாட்பினுள்**
**நண்ணாரும் உட்கும்என் பீடு''** (1088)

என்னும் குறள் ஈண்டு எண்ணத் தக்கது.

காம வயப்பட்ட இராவணன் அரியணையிலிருந்து எழுந்து தன் படுக்கையறைப் பகுதிக்குச் சென்று காம நோயால் வருந்தினான். பின் ஒரு சோலைக்குச் சென்று அங்கிருந்த ஒரு படுக்கையில் படுத்துத் துயருற்றான்.

**எரிக்கும் பனி**

இராவணனைப் பனிப்பருவமே வெப்பமாக எரித்த தென்றால், வேனில் பருவம் எரிப்பதற்குச் சொல்லவா வேண்டும்! இன்பமோ - துன்பமோ மனத்தைப் பொறுத்தே அமையும். மனம் காம வெப்பத்தைத் தாங்க இயலாமை யால் மிகவும் துன்பப்படுகிறான் இவன்:

> **"மென்பனி எரிந்த தென்றால்**
> **வேனிலை விளம்ப லாமோ?....**
> **இன்பமும் துன்பம் தானும்**
> **உள்ளத்தோடு இயைந்த அன்றே"** (100)

ஊருக்குள் தீப்பற்றி எரிந்தால், தண்ணீருக்குள் முழுகி வெப்பத்தினின்றும் தப்பித்துக் கொள்ளலாம். ஆனால், காமத் தீயானது நீருக்குள் மூழ்கினும் சுடும்; மலைமேல் ஏறி மறையினும் சுடும் என்னும் கருத்துடைய,

> **"ஊருள் எழுந்த உருகெழு செந்தீக்கு**
> **நீருள் குளித்தும் உயலாகும் — நீருள்**
> **குளிப்பினும் காமம் சுடுமே குன்றேறி**
> **ஒளிப்பினும் காமம் சுடும்"** (20)

என்னும் நாலடியார்ப் பாடல் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

இந்தப் பாடலில் ஓர் உயரிய கருத்தைக் கம்பர் அறிவித்துப் போந்துளார். அதாவது:- இன்பம் என ஒன்றோ துன்பம் என ஒன்றோ இல்லை; இன்பமோ-துன்பமோ, அவரவரது மன நிலையைப் பொறுத்தோ நேரத்தைப் பொறுத்தோ இருக்கும்.

ஒரு துன்பம் நேரிட்டால் ஒருவர் பொறுக்க முடியாமல் வருந்தலாம் - மற்றவர் பொருட்படுத்தாது போகலாம்- இதற்குத்தான் வள்ளுவர் 'இடுக்கண் வருங்கால் நகுக' என்றார்,

இங்கே வருவோம்: பேராற்றல் பெற்ற இராவணன் ஒரு பெண்ணை நினைந்து இவ்வளவு வேதனைப்படுவது தேவையில்லாத ஒன்று. இது மனம் திருந்தாமையால் நேர்ந்தது.

கம்பர் இலக்கிய மரபுகளை ஒட்டி, இராவணன் காம வெறியால் பட்ட பாடுகளைப் பல பாடல்களால் - பல கோணங்களில் நின்று கற்பனை செய்துள்ளார். இவ்வளவு கூற வேண்டியது தேவையா என்ற எண்ணம் வருமாயின், 'இலக்கிய மரபு' என்னும் 'துருப்பு' கொண்டு வெட்டி நிலைமையைச் சமாளிக்க வேண்டும் கதைக்குக் கட்டாய மாகத் தேவைப்படாத கற்பனைகள் எனினும், பாடல்கள் மிகவும் சுவைக்கத் தக்கவை.

நிலை தடுமாறிய இராவணன், தம் மாமன் மாரீசனின் உதவியால் சீதையைக் கவரலாம் என்றெண்ணி மாரீசன்பால் சென்றான். மாரீசன் வரவேற்று வந்த காரியம் யாதென வினவ இராவணன் கூறலானான்.

நம் பெருமையும் புகழும் போயின. இன்னும் உயிர் வாழ்கிறேன். உனக்கு எங்ஙனம் உரைப்பேன். நாம் நாணும் நிலை நேர்ந்து விட்டது. (173)

மானிடர் தம் வாளால் உன் மருகி சூர்ப்பணகையின் மூக்கை அறுத்து விட்டனர். என் மரபுக்கும் நின்மரபிற்கும் இதற்குமேல் மானக்கேடு வேறு யாதுளது?

**''வன்மை தரித்தோர் மானிடர் மற்றங் கவர் வாளால்**
**நின்மருகிக்கு நாசி இழக்கும் நிலை நேர்ந்தார்**
**என்மரபுக்கும் நின்மரபுக்கும் இதன்மேல் ஓர்**
**புன்மை தெரிப்பின் வேறினி மற்றென் புகழ்வேலோய்''**

(174)

மாமன் மாரீசனுக்கு இராவணன் மருகன் முறையாதலால் சூர்ப்பணகை மருகி எனப்பட்டாள். இராவணன் தன் மரபுக்கு இழுக்கு என்று மட்டும் சொல்லாமல், நின் மரபுக்கும் இழுக்கு என்று கூறி மாரீசனுக்கு வெறியேற்றி யுள்ளான்.

மற்றும், இராவணன் மாரீசனைப் 'புகழ் வேலோய்' என விளித்துள்ளான். இதனால், புகழோடு வீரமும் உடைய வனாகிய நீயும் என்னுடன் சேர்ந்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டு மெனத் தூண்டுகிறான்.

மேலும் கூறுகிறான். அந்த எளிய மானிடரோடு போர் புரிதல் நம் தகுதிக்கு இழுக்கு என்றெண்ணி, இராமன் மனைவி சீதையை உன்னைக் கொண்டு எடுத்து வந்து, பழிக்குப் பழி தீர்த்துக் கொள்ளலாம் என எண்ணி வந்தேன்.

**''துப்புஅழி செவ்வாய் வஞ்சியை**
**வெளவத் துணை கொண்டிட்டு**
**இப்பழி நின்னால் தீரிய**
**வந்தேன் இவண் என்றான்''** (176)

துப்பு = பவளம். பவளம் தோற்கும் செவ்வாயை உடையவளாம் சீதை. தீரிய = தீர்க்க— 'செய்யிய' என்னும் வாய்பாட்டு வினையெச்சம் இது.

**சிச்சி**

இராவணன் கூறியதைக் கேட்டதும், மாரீசன், ச்சீ- ச்சீ என்று கூறித் தன் காதுகளைக் கைகளால் பொத்திக் கொண்டு அச்ச மின்றிச் சினமிக்க உள்ளத்தோடு கண்டிக்கலானான்.

**''சிச்சி யெனத்தன் மெய்ச்செவி பொத்தித் தெருமந்தான்**
**அச்சம் அகற்றிச் செற்ற மனத்தோடு அறைகின்றான்''**
(177)

சிச்சி (ச்சீ - ச்சீ) என்பது வெறுப்புடன் கூடிய இகழ்ச்சிக் குறிப்பு. சிலர் 'ச்சே - ச்சே என்பர். பல ஆண்டு கட்கு முன் யாழ்ப்பாணத்தார் ஒருவர், ஏதாவது மறுப்பு சொல்ல வேண்டுமெனில், ச்சீ - ச்சீ என்று அடிக்கடிச் சொல்வதைக் கேட்ட யான், இது அங்குள்ள பேச்சு வழக்கு போலும் என எண்ணினேன்.

கொடிய செய்தியைக் கேட்கும்போது காதுகளைச் சிலர் பொத்திக் கொள்வது உலக இயல்பு. கொடிய செய்தியைக் கேட்காதே என்று அறிவுறுத்தும் முறையில் ஒரு குரங்கு இருகாதுகளையும் இரு கைகளால் பொத்திக் கொண்டிருக்கும் ஓவியத்தைப் பார்த்திருக்கலாம்.

தெரிவித்தல் என்பதை அறிவிக்க, சொல்லுதல், கூறுதல், மொழிதல், பகர்தல், இயம்பல் உரைத்தல், பறைதல், தெரிவித்தல், அறிவித்தல் முதலிய பல சொற்கள் இருக்க, இங்கே கம்பர், அறைதல் - அறை என்னும் வேர்ச்சொல்லைப் பயன்படுத்தியிருப்பதைக் கூர்ந்து நோக்க வேண்டும். அறைதல், என்பதற்கு, பறை யறைதல் - கன்னத்தில் அறைதல் என்றாற் போல, அடித்தல் என்னும் பொருளும் உண்டு. இங்கே மாரீசன் 'அறைகின்றான்' என்பதற்கு, கன்னத்தில் அறைவது போல் கடுமையாய்க் கண்டித்துச் சொல்கிறான் எனப் பொருள் கொள்ளலாம் அல்லவா?

தெருமரல் என்றால் அஞ்சுதல் - கலங்குதல். இங்கே தெருமந்த மாரீசன், இராவணன்போல் முன்பிருந்த அச்சத்தை விட்டு விட்டான் - இராவணனின் மீது எப்போதுமே சினங்கொள்ள முடியாதவன் இப்போது சினம் கொண்டான் என்னும் கருத்துகள் எண்ணத் தக்கன.

மாரீசன் கூறுகிறான். இராவணா! நீ உன்னை அழித்துக் கொள்ள முயல்கிறாய். உனக்குப் பிடிக்கவில்லை

யெனினும், நல்லது சொல்ல வேண்டியது என் கடமை. நீ அரும்பாடு பட்டுச் செய்த தவத்தால் பெற்ற பயனை இப்போது இழக்கப் பார்க்கிறாய் (178, 179)

**அறம் ஒறுக்கும்**

நட்பரசரின் நாட்டை வஞ்சகமாகக் கவர்ந்தவர், அளவு மீறிக் குடிமக்களை வருத்தி வரி வாங்குபவர், மாற்றார் மனைவியைப் பெண்டாள்பவர் ஆகியோரை அறக்கடவுள் ஒறுக்கும். கொடியவர் எவரும் தப்பித்துக் கொண்டதில்லை.

**"நாரங் கொண்டார் நாடு கவர்ந்தார் நடையல்லா**
**வாரங் கொண்டார் மற்றொருவற்காய் மனைவாழும்**
**தாரங் கொண்டார் என்றிவர் தம்மைத் தருமம்தான்**
**ஈரும் கண்டாய் கண்டகர் உய்ந்தார் எவர் ஐயா?"**

(181)

நண்பர் போல் நடித்து அவர் பதவியைத் தாம் பறித்துக் கொண்டவர்களை வரலாறு அறியும்.

முடியரசு என்றென்ன - குடியரசாட்சியிலும் அளவு மீறி வரி போடுபவரை, அடுத்த தேர்தலில் பொது மக்கள் கவனித்துக் கொள்வார்கள் என்பது நினைவுகூரத்தக்கது.

பிறர் பெண்டாள்பவர் மீது மக்களுக்கு இருந்த பெருமை, புகழ், நம்பிக்கை அற்றுப்போகும்; காசு பணமும் அழியும்; பிணியும் வரவேற்க எதிர்பார்த்துக் காத்திருக்கும்.

இவர்களை அறம் ஒறுக்கும் என்றால், இவர்கள் தம்மைத் தாமே அழித்துக் கொள்வார் என்பதாகும்.

மேலும் கூறுவான் மாரீசன்:

அகலிகைபால் கொண்ட காமத்தால் அழிந்த இந்திரன் போன்றாரை அறியாயா? உன் அந்தப்புரத்தில் அழகிகள் பலர் உனக்கு இன்பம் தருவது போதாதா?

**“இந்திரன் ஒப்பார் எத்தனை யோர்தாம் இழிபு உற்றார்**
**செந்திரு ஒப்பார் எத்தனையோர்நின் திரு உண்பார்”**
(182)

‘இந்திரன் கெட்டதும் பெண்ணாலே - சந்திரன் கெட்டதும் பெண்ணாலே’ என மக்கள் பாடுவதும், ‘தின்னு ருசி கண்டவரும் பெண்ணு ருசி கண்டவரும் சும்மா இருக்கமாட்டார்கள்’ என்னும் பழமொழியும் ஈண்டு எண்ணத்தக்கன. பெண்ணாசையால் கெட்டவர்களின் பட்டியல் மிகவும் நீளமானது.

அந்தப் புரத்தை ஆரணங்குகள் பலர் அணி செய்து கொண்டிருந்தும் இராவணனுக்கு வயிறு நிரம்பவில்லை- தீராத காமப்பசி.

இவ்வாறு கரடு முரடாக — காரசாரமாக அறிவுரை கூறிய மாரீசனை இராவணன் கடிந்து சினந்து பேச, மீண்டும் கூறுகிறான் மாரீசன்:

**என்னை இல்லை**

தன்மேல் சினங்கொண்ட இராவணன் மீண்டும் சினங் கொள்வான் என்பதற்கு அஞ்சாமல் இராவணா! நீ என்னை முனிந்து பேசவில்லை - உன்னையே முனிந்து கொண்டாய்- உன் குலத்தையும் முனிந்து கொண்டாய்:

**“தன்னை முனிவுற்ற தறுகண் தகவிலோனைப்**
**பின்னை முனிவுற்றிடு மெனத் தவிர்தல் பேணாது**
**உன்னை முனிவுற்று உன குலத்்தை முனிவுற்றாய்**
**என்னை முனிவுற்றிலை இது என்னென இசைத்தான்”**
(191)

முனிவுறல் = சினத்தல். பின்னால் இராவணன் குலத்தோடு அழியப் போகிறான் ஆதலால், மாரீசன்

வாயிலாகக் கம்பர் இதனைக் கூறியுள்ளார். இது ஒரு புதுமைச் சுவையாகும். இங்கே,

**"தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்**
**தன்னையே கொல்லும் சினம்"** (305)

**"சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்**
**ஏமப் புணையைச் சுடும்"** (306)

என்னும் குறள்கள் எண்ணத்தக்கன.

மேலும் கூறுவான்: சீதை என்பது ஒரு பெண் உரு அன்று; அரக்கர் குலத்தை அழிக்க வந்த தீவினையின் உரு அது:

**"சீதை உருவோ நிருதர் தீவினை அது அன்றோ"** (193)

நீ குலத்துடன் அழியப் போகிறாய் என என் நெஞ்சு பறை என அடித்துக் கொள்கிறது. நீ அறியாது செய்கிறதை நான் தடுக்கிறேன். நஞ்சு பருக முயல்வோரை இது நல்லதே என்று கூறுவதுண்டோ? அவர்களைத் தடுக்குமாறு போலவே உன்னையும் தடுக்கிறேன்.

**"நஞ்சு நுகர்வாரை இது நன்று எனலும் நன்றோ"** (194)

**ஏவலும் காவலும்**

மீண்டும் இராவணன் வெகுண்டு மாரீசன் மேல் சீறுகிறான்: மாமா! நீ என் கட்டளைப்படி ஏவல் செய்ய வேண்டும்; எனக்கு அறிவுரை கூறிக் காவல் புரியும் அமைச்சர் வேலை உன்னுடைய தன்று:

**"ஏவல் செய்கிற்றி எனது ஆணை வழி எண்ணிக்**
**காவல் செய் அமைச்சர் கடன் நீகடவது உண்டோ?"**
(200)

என் ஏவல்படி நடவாயாயின் உன்னைக் கொல்வேன் என்றான் இராவணன்.

**உருக்கிய செம்பு நீர்**

தன்னைக் கொல்வேன் என்று இராவணன் சொன்னதைக் கேட்டதும், மாரீசன், கொடியவர் அழிவர் என்பது உண்மை. இவர்களைத் திருத்தமுடியாது என எண்ணி, உருக்கிய செம்பில் உற்ற தண்ணீரைப்போல் அடங்கிக் கூறுவான்:

> **"உருக்கிய செம்பின் உற்ற நீரென உரைக்க லுற்றான்"**
> (202)

உருக்கிய உலோகத்தில் பட்ட நீர் வெளித்தெரியாது அடங்கிவிடும் என்னும் ஒப்புமையை, பிரபுலிங்க லீலையில் வெம்மையின் நிலையைக் கூறுகிற—

> **"தழல்பட்ட வல் இரும்பின்மேல்**
> **நகம்தெறி திவலைபோல் சுவறுறும்"** (7:49)

என்னும் பாடல் பகுதியிலும் காணலாம்.

இராவணா! உன் நன்மை கருதிச் சொல்லும் நல்லனவும் அழிவு வருங்காலத்துத் தீமையாய்த் தோன்றும். சரி, யான் செய்ய வேண்டியதைச் சொல் என்றான்:

> **"நன்மையும் தீமை அன்றே நாசம் வந்துற்ற போது**
> **புன்மையின் நின்ற நீராய் செய்வது புகல்தி என்றான்"**
> (203)

**சீதையைத் தருதி**

யான் செய்ய வேண்டியதைத் தெரிவி என்று மாரீசன் சொன்னதும், இராவணன் எழுந்து அவனைத் தழுவிக் கொண்டு, சினம் நீங்கி, மலைபோன்ற தோளையுடைய மாமா! மன்மதனின் மலர் அம்பால் மாள்வதனினும், இராமனைப் பகைத்துக் கொண்டு அவனது அம்பால் அழிவது மேலானது; எனவே, தென்றலைப் பகைக்கச் செய்த சீதை எனக்குக் கிடைக்க உதவுவாயாக என்றான்:

**"என்றலும் எழுந்து புல்லி**
**ஏறிய வெகுளி நீங்கிக்**
**குன்றெனக் குவிந்த தோளாய்**
**மாரவேள் கொதிக்கும் அம்பால்**
**பொன்றலின், இராமன் அம்பால்**
**பொன்றலே புகழ் உண்டன்றோ**
**தென்றலைப் பகைக்கச் செய்த**
**சீதையைத் தருதி என்றான்"** (204)

இந்தப் பாடல் மிக்க சுவை உடையது. தன் ஏவலைச் செய்ய மாரீசன் ஒப்புக் கொண்டதும், அமர்ந்திருந்த இராவணன் எழுந்து நின்றானாம் - மாமாவைத் தழுவிக் கொண்டானாம் - சினத்தை விட்டானாம் - மிக்க வலிமை உடைய நீ முயன்றால் முடியாதது என்ன என்று (பாட்டரிக்குச் சார்ஜ் பண்ணுவது போல) வெறியேற்றும் பொருளில் 'குன்றெனக் குவிந்த தோளாய்' என்று விளித்தானாம்.

மன்மதன் மலர் அம்புகளை எய்து காமத்தை மிகுப்பானாம். தாமரை, அசோகு, மாம்பூ, முல்லை, நீலம் ஆகிய ஐந்தும் அவனுடைய மலர் அம்புகள். ஒவ்வொன்றாய்ப் போடப் போடக் காமம் நஞ்சுபோல் ஏறிக் கொண்டே யிருக்கும். கடைசியான ஐந்தாவது அம்பு எய்தால் இறப்பும் நேருமாம்.

எனவேதான், மன்மதனது மலர் அம்பால் சாவதனினும், இராமனைப் பகைத்துக் கொண்டு அவன் அம்பால் சாகிறேன்; நீ எப்படியாவது அவன் மனைவி சீதையை யான் அடையும்படிச் செய்க என்றான்.

பாடலின் இறுதியில் உள்ள 'தென்றலைப் பகைக்கச் செய்த சீதை' என்பது நயமான பகுதி. சீதையைப் பற்றிய நினைவால் காமத் தீ கொழுந்து விட்டு எரிகிறது. குளிர்ந்த

பொருள் எது மேலே படினும் காமத் தீ பெருகுவதாகக் கூறுவது மரபு. இராவணன் மீது வீல்கின்ற தென்றல் அனல் குழம்பை வீசுவதுபோல இருந்ததால் தென்றல் மேல் சினம் கொண்டானாம்.

**"தென்றல் வந்து எதிர்ந்தபோது சீறுவானும் ஆயினான்"**
(94)

என முன்னரே இது கூறப்பட்டுள்ளது. எனவேதான், 'தென்றலைப் பகைக்கச் செய்த சீதை' என்றான் இப்போது.

காமவெப்பத்தால் கருகுவோர் தென்றலை வெறுப்பதான செய்தி இலக்கியங்கள் பலவற்றில் இடம் பெற்றுள்ளது. இலக்கிய ஒப்புகை காண்டல் என்னும் முறையிலும் கம்பர் பாடலுக்கு அரண் செய்யும் வகையிலும் பிரபு லிங்க லீலை என்னும் நூலில் உள்ள ஒரு பாடலை இங்கே காணலாம்.

அல்லமர் என்பவர் மேல் கொண்ட காதலால் ஏற்பட்ட காமநோய் வயப்பட்ட மாயை என்பவள் தென்றலை வெறுத்துக் கூறுகிறாள்.

கொல்லா நோன்பு கொண்ட முனிவர் உள்ள பொதிகை மலையில் தோன்றிய பொல்லாத தென்றலே! நீ என்னைக் கொல்கின்றாயே ! இரக்கம் இல்லையா! உன்னிடம் நஞ்சின் கொடுமையைத் தவிர அமிழ்தின் சுவையை எதிர்பார்க்க முடியுமா? நின்னை வெறுப்பது அறியாமையே – என்னும் கருத்துடைய பாடல் வருமாறு:-

**"கொல்லா நோன்பு முனிமலையில்**
**தோன்றி என்னைக் கொல்கின்றாய்**
**பொல்லா மந்த மாருதமே**
**என்னோ கருணை பூண்டிலாய்**
**சொல்லாய் திருப்பாற் கடலினிடைத்**
**தோன்றும் கடுவின் தன்குணமே**
**அல்லால் அமுத குணமுண்டோ**
**நின்னை வெறுப்பது அறிவு அனறே"** (5:62)

## செய்யும் வினை

மாரீசன், தன் தாய் தாடகையைக் கொன்ற இராமனோடு போர் செய்யத் தம்பி சுபாகு என்பவனுடன் சென்றான். அப்போரில் சுபாகு இறந்தான்- மாரீசன் செத்தோம் - பிழைத்தோம் என்று தப்பி வந்தான். பின்னொரு நாள், துணைவர் இருவருடன் மான் உரு கொண்டு இராமனை முட்டிக் கொல்ல முயன்றான்; அப்போதும், துணைவர் இருவரும் மாள மாரீசன் படாத பாடு பட்டு உயிருடன் திரும்பினான்.

இத்தகைய மாமல்லனாகிய இராமன் இருக்கும் இடம் சென்று யான் செய்யத்தக்கது யாதென வினவினான்.

**"ஆண்டையான் அனைய கூற;**
**அரக்கர் ஓர் இருவரோடும்**
**பூண்டஎன் மானம் தீரத்**
**தண்டகம் புக்க காலைத்**
**தூண்டிய சரங்கள் பாயத்**
**துணைவர் பட்டுருள அஞ்சி**
**மீண்டயான் சென்று செய்யும்வினை**
**என்கொல் விளம்புக என்றான்"** (205)

பின்னர், எவ்வளவு அறிவுரை கூறியும் கேளாத இராவணனது கட்டளைப்படி மாரீசன் ஒரு பொன்மான் உருவங்கொண்டு சீதை காணும்படி அங்குச் சென்றான்.

## விழுதல்

பொன்மானைக் கண்டதும் அங்கிருந்த மான்கள் சில-பல, நிலையான வஞ்சகமே கொண்டு அன்பு என்பது சிறிதும் இல்லாத விலைமகளிர்பால் சென்று விழுபவவர் களைப்போல், காம எண்ணத்துடன் பொன் மானைச் சூழலாயின.

**"கலைமான் முதலாயின கண்ட எலாம்**
**அலைமானுறும் ஆசையின் வந்தனவால்**
**நிலைமாமன் வஞ்சனை நேயம் இலா**
**விலை மாதர்கண் யாரும் விழுந்தெனவே"** (215)

அலைமானுறும் ஆசை = அலை மோதும் மிக்க காமம். மனத்தின் வஞ்சனை நிலையாயுள்ளது; ஆனால், விலை மாதரிடம் உண்மையின் அன்பு இல்லை. இவர்களை அன்பின் விழையார் (911) என்றுள்ளார் வள்ளுவர்.

பாடலின் இறுதியில் உள்ள 'விழுந்து' என்னும் சொல் மிகவும் நயமானது. 'எல்லாரும் அதிலே போய் விழுகிறார்கள் — எல்லாரும் அங்கே போய் விழுகிறார்கள்' என உலக வழக்கில், சில செய்திகள் தொடர்பாகச் சிலரைப் பற்றிக் கூறுவதுண்டு.

ஆசை காரணமாகப் போய் 'விழறானுவ' என்பதும் உண்டு. இழப்பு (நஷ்டம்) எய்துதல் என்னும் பொருளிலும் இது பயன்படுத்தப்படுவதுண்டு. மணமகளைப் பற்றியும் குடும்பத்தாரைப் பற்றியும் சரியாகத் தெரியாமல் - விசாரிக்காமல் - திடுதிப்பென்று போய் ஒரு கிணற்றில் விழுந்து விட்டோம் - என்னும் வழக்கு ஈண்டு எண்ணத் தக்கது.

இவை எல்லாவற்றையும் விட, விலைமாதராகிய படுகுழியில் விழுந்து விட்டதாகக் கூறுவது பொருத்தமான வழக்காறாகும். இதைத்தான்,

**"வரைவிலா மாணிழையார் மென்தோள் புரையிலாய்**
**பூரியர்கள் ஆழும் அளறு"** (919)

என்றார் வள்ளுவர். ஆழும் அளறு என்பது எண்ணத் தக்கது. விழுவதைவிட, உள்ளே ஆழ்ந்து போதல் கடுமையான தன்றோ?

பொன் மானைக் கண்டு அதன் அழகில் மயங்கிய சீதை இராமனிடம் 'சொக்குப் பொடி' போட்டு அதைப் பிடித்துத் தரும்படி வேண்டினாள். இராமனும் ஏறக்குறைய ஒத்துக் கொண்டவனானான். அப்போது இலக்குவன், இது மாய மான் - பொய் மான் - இதை நம்பக் கூடாது என்று தடுத்தான். பயனில்லை. 'தையல் சொல் கேளேல்' என்னும் ஔவையின் அறிவுரை ஈண்டு எண்ணத்தக்கது.

இராமன் இலக்குவனை நோக்கி, இது பொய் மான் எனல் தகாது. உலகில் நாம் அறியாத பல்லாயிரங்கோடி வகை உயிரினங்கள் உண்டு. அவற்றுள் இதுவும் ஒன்றா யிருக்கலாம். (224)

**சிலை மறை**

மேலும் கூறுகிறான்: வில்வேதம் வல்ல இலக்குவ! இந்த மானின் அழகைக்கண்டு விரும்பாதவர் யார்? ஊர்வன - பறப்பனவாகிய அஃறிணை உயிரிகள் எல்லாம், விளக்கைச் சூழ்ந்த விட்டிலைப் போல, இந்த மானைச் சூழ்வதைக் காண்க:

> **''வரிசிலை மறைவலோனே மான் இதன் வடிவை உற்ற**
> **அரிவையர் மைந்தர் யாரே ஆதரம் கூர்கிலாதார்**
> **உருகிய மனத்த வாகி ஊர்வன பறப்ப யாவும்**
> **விரிசுடர் விளக்கம் கண்ட விட்டிலின் வீழ்வ**
> **காணாய்''** (230)

ஆதரம் = விருப்பம். விட்டில் = ஒருவகைப் பூச்சி. 'விளக்கம் கண்ட விட்டிலின்' என்னும் உவமையில் ஒரு கருத்து தொக்கியுள்ளது. விளக்கில் பட்ட விட்டில் துன்புறுவதுபோல், இந்த மானை விரும்பியவரும் துன்புறுவர் என்பது அது.

அரிவையாகிய சீதை விரும்பியதோடு, மைந்தன் (ஆடவன்) ஆன தானும் (இராமனும்) விரும்பியதால், 'அரிவையர் மைந்தர்யாரே ஆதாரம் கூர்கிலாதார்' என்றான் இராமன்.

வரி சிலை மறை வலோன் = வில் வேதம் வல்ல இலக்குவன். சிலை மறை என்பதில் ஒரு பெரிய பொருள் பொதிந்து கிடக்கிறது. மறை வல்லவர் - மறை ஓதியவர் என்றால், இருக்கு யசுர் சாமம் அதர்வம் என்னும் நான்கு சமசுகிருத வேதத்தில் வல்லவர் என்றே பலரும் பொருள் கொள்கின்றனர். கம்பர் அதனை உடைத்தெறிந் துள்ளார்.

மறை, வேதம் என்பவற்றிற்கு நல்ல நூல் என்று பொருள் கொள்ளல் வேண்டும். பைபிள் (Bible) என்பது கிறித்துவ வேதநூலைக் குறிக்கும். இதற்கு நூல் என்பதே நேர்ப்பொருள். கிறித்துவர்கட்கு அது சிறந்த நூலாகத் தெரிவதால் இதனைப் 'பைபிள்' என்றே கூறிவிட்டனர்.

இந்த Bible என்னும் சொல் இலத்தீனிலிருந்து வந்தது. Bibliographia என்னும் இலத்தீன் சொல்லுக்கு நூல் - புத்தகம் என்பது பொருள். Bibliographic என்னும் பிரெஞ்சுச் சொல்லுக்கும் நூல் என்பது பொருள். Bibliotheca என்னும் இலத்தீன் சொல்லுக்கு நூல் நிலையம் என்பது பொருள்.

எனவே, நூல் என்னும் பொருள் உடைய வேர்ச் சொல்லாகிய Bible என்பது கிறித்துவ வேதத்தைக் குறிப்பது போலவே, மறை என்பது சமசுகிருத வேதத்தையே குறிப்பதாகக் கொண்டு விட்டனர். திருக்குறளை மறை எனக் கூறுவதைச் சிலர் ஒத்துக் கொள்வதில்லை. திருக்குறள் நல்ல நூல் - தமிழில் உள்ள ஒரு Bible அது.

எனவே, சிலை மறை என்பதற்கு, வில் கலை தொடர்பான நூல் எனப் பொருள் கொள்ளல் வேண்டும்.

மறை என்றதும் உடனே சமசுகிருத நால் வேதம் நினைவுக்கு வந்துவிடக் கூடாது.

இந்த மாயமான் வேண்டா என்று இலக்குவன் என்ன சொல்லியும் கேளாமல் இராமன் அதனைப் பிடிக்கவே விரும்பினான். அங்ஙனமெனில் நான் பிடித்துத் தருவேன் என இலக்குவன் கூறினான்.

**சீதையின் சீறல்**

அப்போது சீதை, இராமனை நோக்கி, நாயகனே! நீயே பிடித்துத் தரவேண்டும்மெனக் குவளையிலிருந்து முத்தைச் சிந்தினாள்:

**''ஆயிடை அன்னம் அன்னாள்**
**அமுது உகுத்தனைய செய்ய**
**வாயிடை மழலை இன்சொல்**
**கிளியினின் குழறி மாழ்கி**
**நாயக நீயே பற்றி**
**நல்கலை போலும் என்னாச்**
**சேயரிக் குவளை முத்தம்**
**சிந்துபு சீறிப் போனாள்''** (238)

இராமனது உள்ளத்தைக் கவரும் வகையில் சீதையின் போக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அன்னம் போன்றவளாம் - செய்ய வாயிலிருந்து அமிழ்தம் சொரிவதுபோல் சொல் பேசினாளாம் - மழலைச் சொல்லாம் - இன் சொல்லாம் - கிளிபோல் குழறிக் குழறிப் பேசினாளாம் - மாழ்கினாளாம் (வருந்தினாளாம்)

குவளையிலிருந்து முத்தம் சிந்தினாள் - கொஞ்சிக் கொஞ்சிப் பேசியதன்றி, குவளை போன்ற கண்களிலிருந்து முத்து போன்ற நீர்த் துளிகளைச் சிந்தினாளாம்.

கண்ணீர்த்துளிகளை முத்தாக உருவகிப்பது ஓர் இலக்கிய மரபு. கவுதமப் புத்தர் காப்பியம் என்னும் நூலில் இது போன்ற உருவகம் இடம்பெற்றுள்ளது. சித்தார்த்தனுக்கு யசோதரையை மண முடிக்கப் பெண்ணைப் பெற்றவர்கள் பிரியமனமின்றி, கண்களிலிருந்து முத்தைச் சிந்திக்கொண்டு அரண்மனையில் கொணர்ந்து சேர்த்தனராம்.

> **"தத்தைநேர் பெண்ணைப் பெற்றோர்**
> **தணந்திட உளமே இன்றி**
> **முத்தினைக் கண்கள் சிந்த**
> **முதரண் மனையில் சேர்த்தார்"** (9:5)

கம்பரின் பாடலிலுள்ள 'முத்தம் சிந்துபு' என்னும் தொடரும் இந்த நூலிலுள்ள 'முத்தினைச் சிந்த' என்ற தொடரும் ஒப்பு நோக்கத்தக்கன.

சீதை எப்படியெல்லாம் செயல்பட்டு இராமனைத் தூண்டியுள்ளாள் என்பதை எண்ணுங்கால், "தையல் சொல் கேளேல்' என்னும் ஔவையின் அறிவுரை நினைவுக்கு வருகிறது. (பெண்ணினம் பொறுத்தருள்க).

**ஓட்டப் பயிற்சி**

முடிவாக, சீதைக்குக் காவலாய் இலக்குவனைத் தங்க வைத்து இராமன் மானைத் தொடரலானான்.

மாயமான் தொடக்கத்தில் மெல்ல மெல்ல அடிவைத்தும் வெறித்துப் பார்த்தும், அஞ்சுவதுபோல் நடித்தும், மேலெழும்பிக் குதித்தும், காதுகளை நீட்டியும், என்னென்னவோ செய்து, பின்னர், குளம்புள்ள கால்கள் மார்பிலே படும்படி மடித்து மிக விரைவாக ஓடியதாம்.

விரைந்து செல்வதில் மனமும் காற்றும் வல்லவை; 'மனோ வேகம் - வாயுவேகம்' என்பது உலக வழக்கு. அந்த மனத்திற்கும் காற்றுக்கும் இன்னும் விரைவாக ஓடுவதற்குப்

பயிற்சிசெய்துகாட்டி - மாதிரிப்பாடம் (Model class) கற்றுக் கொடுப்பது போல் இருந்ததாம் இதன் விரைவான ஓட்டம்.

"மிதித்தது மெல்ல மெல்ல, வெறித்தது வெருவி மீதில்
குதித்தது செவியை நீட்டிக் குரபதம் உரத்தைக் கூட்டி,
உதித்தெழும் ஊதை உள்ளம் என்றிவை உருவச் செல்லும்
கதிக்குஒரு கல்வி வேறே காட்டுவது ஒத்தது அன்றே"
(242)

குரம் = குளம்பு, பதம் = கால், உரம் = மார்பு, ஊதை = காற்று, தென்றல் காற்று மெல்லச் செல்லுமாதலின், விரைந்து வீசும் ஊதைக் காற்று சொல்லப் பட்டது. கதி = விரைந்த செலவு. ஒரு கல்வி வேறு = புதிதாக ஒரு கல்விப் பயிற்சி. காட்டுவது = செய்து காட்டல் = மாதிரிப் பயிற்சி தருதல்.

கம்பர் இவ்வாறு கூறியிருப்பதைக் கொண்டு, இயற்கைப் பொருள்களை அவரது உற்று நோக்கும் திறன் (observation) தெரியவரும்.

### மானின் மாயவேலைகள்

மாயமான், மலை மீது தாவும், முகில் குழாத்தினிடையே குதிக்கும். நெருங்கிச் செல்லும்போதுஅகன்றுஓடும். இராமன் மெதுவாகச் செல்லின், தொடக் கூடிய அளவில் தானும் மெதுவாகச் சென்று ஏய்க்கும்; நிற்பதுபோல் காட்டி இராமன் நெருங்கியதும் ஓடும்; இவ்வாறாக, கொடுக்கும் பொருளுக்கு ஏற்ற அளவு அன்பு காட்டும் விலைமகளிர் போல் செயல்பட்டது.

"குன்றிடை இவரும்; மேகக்
குழுவிடைக் குதிக்கும்; கூடச்
சென்றிடின் அகலும்; தாழின்
தீண்டலாம் தகைமைத் தாகும்;

**நின்றதே போல நீங்கும்;**
**நிதிவழி நேயம் காட்டும்**
**மன்றலம் கோதை மாதர்**
**மனமெனப் போயிற் றம்மா''** (244)

இப்படி யெல்லாம் மாயம் செய்யும் என்பதை எண்ணிப் பார்த்து, அப்படியே உள்ளது உள்ளபடியே (தத்ரூபமாகப்) படம் பிடித்துக் காட்டியிருக்கும் கம்பர் கவிச்சக்கரவர்த்தியே.

நிதி = செல்வம். நேயம் = அன்பு. மன்றல் = மணம். கோதை = மலர்மாலை. மாதர் = இங்கே விலைமகளிர்.

விலைமகளிர் மனம் எல்லாரிடமும் ஒரே மாதிரியாய்ச் செயல்படாது. அவரவர் தரும் பணத்திற்கு ஏற்ப அவரவரிடம் அன்பு காட்டுதல் ஏறும் - குறையும். இந்த நிலைமை, மாயமானின் மாறி மாறிச் செய்யப்படும் செயல் பாட்டிற்கு ஒப்புமையாக்கப்பட்டுள்ளது.

பொறுத்தருள வேண்டும் - விலைமாதர் நிலைமை மட்டும் இத்தகைய தன்று. பணக்கார விருந்தினரை ஒரு மாதிரியாகவும், ஏழை விருந்தினரை வேறு மாதிரியாகவும் நடத்தும் கீழ்மக்களும் விலைமாதர் போன்றவரே. இதை மேலும் விரிக்கின், ஒரு தனி நூலாக எழுத வேண்டிய அளவுக்கு விரியும்; எனவே விடுப்பாம்.

**விட்டழைத்தது**

இறுதியாக, இராமன் இது மாயமான் என்று தெரிந்து கொண்டு அதன்மேல் அம்பெய்தான். மான்வாயைப் பிளந்து கொண்டு, எட்டுத்திக்குகட்கு அப்பாலும் கேட்கும் படிக் கூவி அழைத்துக் குன்றுபோல் இறந்து வீழ்ந்தது: அதாவது மாரீசன் வீழ்ந்தான்.

**"நெட்டிலைச் சரம் வஞ்சனை நெஞ்சுறப்**
**பட்டது அப்பொழுதே பகு வாயினால்**
**அட்ட திக்கினும் அப்புறமும் புக**
**விட்டழைத்து ஒரு குன்றென வீழ்ந்தனன்"** (248)

*சரம் = அம்பு, பகு வாய் = பிளந்த வாய். விட்டு அழைத்தல் = இலக்குமணா - சீதா, இலக்குமணா - சீதா என விட்டு விட்டு - மாறி மாறி அழைத்தல். இவ்வாறு பெயர்களைக் கூறி அழைத்ததாகக் கதை சொல்லப்படினும், கம்பர் பாடலில் இவ்வாறு எழுதப்படவில்லை. ஆனால், பின்னால் ஒரு குறிப்பு உள்ளது. பெயர் கூறி அழைத்ததாக வால்மீகி கூறியுள்ளார்.*

*பின்னர் இராமன், மாரீசனின் செயல் இது என அறிந்து, இலக்குவன் சொன்னது சரிதான் என இலக்குவனை மெச்சிக்கொண்டான்.*

**என் குரல்**

*அம்பெய்ததும், கயவன் மாரீசன் என் குரலால் கூவி அழைத்தலால், அதைக்கேட்ட சீதை, நான் வருந்தி அழைத்ததாக எண்ணி வருந்துவாள் என்று இராமன் ஒருவித வருத்தம் உற்றான்:*

**"புழைத்த வாளி உரம்புகப் புல்லியோன்**
**இழைத்த மாயையின் என்குரலால் எடுத்து**
**அழைத்த துண்டு அதுகேட்டு அயர்வெய்துவாள்**
**மழைக்கண் ஏழை என்றுள்ளம் வருந்தினான்"** (251)

*புழைத்த = துளைத்த. மாயை கற்றவனாதலின் இராமனது குரல்போல் கூவி அழைத்தான். இலக்குமணா - சீதா என்று பெயர் கூறி அழைத்ததாகக் கூறாவிடினும், இராமனது குரலில் அழைத்ததால், அவ்வாறு பெயர் சொல்லி அழைத்திருப்பான் என்பது உய்த்துணரப்படும்.*

**மீள்வதே நலம்**

*மாரீசன் மாளவரவில்லை. இவன் செயலைக் கொண்டு, பின்னால் ஏதம் நடக்க இருக்கிறது. அது நடைபெறா முன்னம் சீதையை அடைய. மீள்வதே நலம் என இராமன் மீளலானான்:*

**''மாள்வதே பொருளாக வந்தா னலன்**
**சூழ்வதோர் பொருள் உண்டுஇவன் சொல்லினால்**
**மூள்வது ஏதம் அது முடியாமுனம்**
**மீள்வதே நலம்என்று அவன் மீண்டனன்''** (253)

*பின்னால் மூள இருப்பது இராவணன் சீதையை எடுத்துச் செல்லல். இது போல் ஏதாவது நடந்து விடக் கூடாதாதலின் விரைந்து மீள்வது நலம் என்று இராமன் மீண்டான்.*

# 8. சடாயு உயிர் நீத்த படலம்

சீதையை எடுத்துச் சென்ற இராவணனோடு சடாயு போரிட்டு உயிர் விட்டதைப் பற்றிய படலம் இது. சடாயு மோட்சப் படலம், சடாயு வதைப் படலம் எனச் சில ஓலைச் சுவடிகளில் பெயர்கள் கூறப்பட்டுள்ளன.

**சீதையின் மயக்கம்**

மாரீசன் இராமன் அலறுவது போன்ற குரலில் வஞ்சகமாய்க் கூவியதைக் கேட்ட சீதை, இராமனுக்கு ஏதோ இன்னல் நேர்ந்ததாக அஞ்சி, கிளையிலிருந்து குயில் கீழே விழுந்தாற் போன்று தரையில் விழுந்து வயிற்றில் அடித்துக் கொண்டு மயங்கினாள்:

**''எயிறு அலைத்து முழை திறந்து ஏங்கிய**
**செயிர் தலைக் கொண்ட சொல் செவி சேர்தலும்**
**குயில் தலத்திடை உற்றதோர் கொள்கையாள்**
**வயிறு அலைத்து விழுந்து மயங்கினாள்''** (2)

எயிறு = பல். முழை = குகை - குகை போன்ற வாய். செயிர் = வஞ்சகம். துன்பம் வந்த போது வயிற்றில் அடித்துக் கொள்வது உண்டு. இது பெண்கட்கு மிகுதி.

சீதை இலக்குவனை நோக்கி, உன் அண்ணனுக்கு ஏதோ இடுக்கண் நேர்ந்துளது என்பதை அவரது குரலால் அறிந்தும், அங்கே ஓடாமல் என் அருகில் நின்று கொண்டிருக்கிறாயே எனக் கடிந்து கூறினாள். (4)

**பெண்புத்தி**

இலக்குவன் சீதையிடம் கூறுவான்: என் அண்ணனை வெல்பவர் எவரும் இலர். அவருக்கு ஒரு தீங்கும் வராது.

எல்லா உலகமும் எதிர்க்கினும் அவர் வெல்வார். நீங்கள் பெண்புத்தியால் உண்மையுணராது வருந்துகிறீர்.

**"பெண்மையால் உரை செயப் பெறுதிரால்"** (5)

பெறுதி என்றால் ஒருமை; பெறுதிர் என்றால் பன்மை. இங்கே இலக்குவன் அண்ணியைச் சிறப்புப்பன்மை தந்தே குறிப்பிட்டுள்ளமை அவனது உயர் பண்புக்கு எடுத்துக் காட்டாகும். இது கம்பரின் கைவரிசை.

**ஒரு பகல் பழகல்**

இலக்குவனது உரையைக் கேட்ட சீதை, சினங்கொண்டு, உயர்ந்தோர் ஒரு நாள் பழகினும் உயிர் கொடுப்பர். நீயோ அண்ணனுக்காக வருந்த வில்லை. நான் காட்டுத் தீயில் விழுந்து இறக்கப் போகிறேன் என்று அச்சுறுத்தினாள்:

**"ஒருபகல் பழகினார் உயிரை ஈவரால்**
**பெருமகள் உலைவுறு பெற்றி கேட்டும்நீ**
**வெருவலை நின்றனை வேறுஎன் யானினி**
**எரியிடைக் கடிது வீழ்ந்து இறப்பன் ஈண்டெனா"** (13)

பாட்டின் முதல் அடி,

**"ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை**
**இருநிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே"** (34)

என்னும் நறுந்தொகைப் பாடலில் உள்ள 'ஒருநாள் பழகினும்' என்பதை நினைவூட்டுகிறது.

இவர்கள் இருப்பது காட்டுப் பகுதி யாதலின், ஒரு மூலைக்கு ஒரு மூலை எங்கேயாவது மூங்கில்கள் ஒன்றோடொன்று இழைந்து தீ தோன்றிக் கொண்டிருக்கும். அதனால்தான் 'கடிது வீழ்ந்து' என்றாள். புதிதாகத் தீ மூட்ட வேண்டிய தில்லை - முதலிலேயே தீ உள்ளது என்பதைக் 'கடிது' என்பதால் உய்த்துணரலாம்.

ஆ - ஊ - என்றால் நெருப்பில் வீழ்வது பெண்களின் இயல்பு போலும். இன்று, எரி வாயு அடுப்பு வெடித்து இறந்தார் - மண்ணெண்ணெய் ஊற்றிக்கொண்டு எரிந்து இறந்தார் - என்ற செய்திகள் அடிக்கடிச் செய்தித் தாள்களில் வந்து கொண்டுள்ளன.

அன்று, கணவன் இறப்பின் தீப்பாய்ந்து இறப்பது வழக்கமாயிருந்தது. நான்மணிக்கடிகை என்னும் நூல், அன்புடையாரைப் பிரிந்திருப்பதனினும் தீப்பாய்தல் நன்று என்னும் பொருளில்,

**"பசைந்தாரின் தீர்தலின் தீப்புகுதல் நன்று"** (13)

என்று கூறுகிறது. கணவனை இழந்த எனக்குத் தாமரைத் தடாகமும் நெருப்புக் குழியும் ஒன்றே எனப் பூதப் பாண்டியன் இறந்தபோது அவன் தேவி பெருங்கோப் பெண்டு கூறினாள்:

**"பெருந்தோள் கணவன் மாய்ந்தென அரும்பற**
**வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை**
**நள்ளிரும் பொய்கையும் தீயும் ஓரற்றே"**
(246 : 13, 14, 15)

என்பது புறநானூற்றுப் பாடல் பகுதி.

**தாமரைத் தடாகம்**

**"தாமரை வனத்திடைத் தாவும் அன்னம்போல்**
**தூமவெங் காட்டெரி தொடர்கின்றாள் தனை**
**சேமவில் குமரனும் விலக்கிச் சீறடிப்**
**பூமுக நெடுநிலம் புல்லிச் சொல்லுமால்"**

தாமரைத் தடாகத்திற்குத் தாவும் அன்னம் போல் காட்டெரி நோக்கிச் சென்ற சீதையின் காலடி நோக்கித் தரையில் விழுந்து இலக்குவன் தடுத்தான்.

வனம் = தண்ணீர். சேமவில் குமரன் = இலக்குவன். உங்கள் காலில் விழுந்து கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன் என்று உலகியலில் சொல்வதுண்டு. அவ்வாறே இலக்குவன் சீதையின் காலில் விழுந்தான். சிலர் கால்களைப் பிடித்துக் கொள்வர். இவன் தொடாமல், அடியாகிய தாமரையின் முன்னால் விழுந்து தரையைத் தழுவினான். அடிப்பூ = அடியாகிய தாமரை. அடிப்பூமுகம் = அடிக்கு முன் புறம்.

அன்னம் = சீதை. தாமரைத் தடாகம் = எரியும் காட்டு நெருப்பு. பொய்கையில் செந்தாமரை மலர்கள் பூத்திருக்கும் தோற்றம் நெருப்பு எரிவது போல் உள்ளது; அதனால் காட்டு நெருப்புக்குத் தாமரைத் தடாகம் ஒப்பாக்கப்பட்டுள்ளது.

இங்கே முத்தொள்ளாயிரப் பாடல் ஒன்று நினைவிற்கு வருகிறது. பொய்கையில் செவ்வாம்பல் மலர்ந்திருப்பது, பொய்கை தீப்பற்றி எரிவது போல் இருந்ததாம். உடனே பறவைகள் தம் குஞ்சுகளைக் கையாகிய சிறகுகளால் மறைத்துக் கூச்சல் இட்டனவாம்.

**''அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாய் அவிழ**
**வெள்ளம் தீப்பட்ட தெனவெரீஇப் - புள்ளினம்தம்**
**கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ**
**நச்சிலை வேல் கோக்கோதை நாடு''** (110)

என்பது பாடல்.

தளிர்கள் பொன்னிறமாய் - செந்நிறமாய் எரிபோல் இருக்கும். பிரபுலிங்க லீலையில் இது 'எரி புரை தளிர்' (19:7) எனப்பட்டுள்ளது. தளிரே நெருப்பு போன்ற தெனில், தாமரை மலர் நெருப்பு போன்றிருப்பதில் வியப்பு இல்லை.

வனம் என்பதற்குக் காடு எனச் சிலர் பொருள் கூறியுள்ளனர். அதனினும் நீர் என்னும் பொருளே சாலச்

சிறந்தது. இலக்குவன் எவ்வளவு சொல்லியும் சீதை கேளாமையால், இராமனது குரல்வந்த இடம் நோக்கிச் சென்றான்.

**தவத்தவர் வடிவம்**

இலக்குவன் பிரிந்ததும், வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருந்த இராவணன், முக்கோலுடன் தவக்கோலம் பூண்டு ஆங்கு வந்தான்.

உணவே இல்லாதமையால் வற்றியது போன்ற மெலிந்த உடலுடனும், நெடுந்தொலைவு நடந்து வந்ததால் உண்டானது போன்ற சோர்வுடனும் காணப்பட்டான்:

**"ஊண் இலனாமென உலர்ந்த மேனியன்**
**சேண் நெறிவந்ததோர் வருத்தச் செய்கையன்"** (21)

கையும் காலும் நடுங்க, மூப்பு என்னும் பருவமும் வெறுக்கும்படியான முதுமைக் கோலத்துடன் மெல்ல நடந்து வந்தான்.

**"காப்பரும் நடுக்குறும் காலன் கையினன்**
**மூப்புஎனும் பருவமும் முனிய முற்றினான்"** (22)

இவனது அளவுமீறிய முதுமைக் கோலத்தைக் கண்டு, மூப்பு என்னும் பருவமும் வெறுக்கிறதாகக் கூறியிருப்பது ஒரு புதுவகைக் கருத்து வெளிப்பாடாகும்.

மற்றும், தாமரை மணியாலான உரு (செப) மாலையும் ஆமை வடிவான மணையும் பூணூலும் கொண்டு வளைந்த கூன் உடலுடன் அருந்ததி அனைய சீதையிருக்குமிடம் வந்து சேர்ந்தான்.

**"தாமரை மணிதொடர் தவத்தின் மாலையன்**
**ஆமையின் இருக்கையன் வளைந்த ஆக்கையன்**
**நாமநூல் மார்பினன் நணுகி னானரோ**
**தூமனத்து அருந்ததி இருந்த சூழல்வாய்"** (23)

உருவேற்றும் (செபிக்கும்) மாலை உருமாலை. இது தாமரையில் உள்ள மணியால் ஆனது.

தவசியர் ஆமை வடிவில் உள்ள மணைப்பலகையில் அமர்ந்ததே தவமிருப்பர். ஆமை துன்பம் நேரும்போது நான்கு கால்களும் ஒரு தலையும் ஆகிய ஐந்து உறுப்புகளையும் முதுகு ஓட்டின் கீழே அடக்கிக் கொள்ளும்; அது போல் ஐம்பொறி புலன்களின் பிணிப்பையும் அகற்ற வேண்டும். இதனை,

**"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்**
**எழுமையும் ஏமாப் புடைத்து"** (126)

என்னும் குறட்பாவாலும் அறியலாம் ஆமைபோல் ஐந்து பற்றையும் தவசியர் அகற்றவேண்டும் என்பதை நினைவு செய்யும் வகையில் ஆமைபோல் செய்யப்பட்ட மனை வைத்திருப்பர்.

தவசியர் புலித்தோலிலும் அமர்வது உண்டு. அப்புலித் தோலும் ஆமை வடிவினதாகக் கிழித்து அமைக்கப் பெற்றிருக்கும். ஆமைபோன்ற வடிவமைப்புள்ள மணையிலும் புலித் தோலிலும் அமர்ந்தால் போதுமா? உண்மையாகவே ஐம்புலப்பற்றை அகற்றவேண்டுமே. அமர்ந்தால் ஆமைப் பலகை நொறுங்கும் வண்ணம் பருத்துள்ள உடலமைப் புடைய தவசியரும் (?) உளர்.

தவசியர்க்குப் பூணூல், கமண்டலம், முக்கோல், ஆமைப் பலகை ஆகியவை உரியன எனத் தொல்காப்பியம் – மரபியலில் கூறப்பட்டுள்ளது:-

**"நூலே கரகம் முக்கோல் மணையே**
**ஆயுங் காலை அந்தணர்க்கு உரிய"** (70)

என்பது தொல்காய்பிய நூற்பா.

கற்புடைய மங்கையர்க்கு அருந்ததியை ஒப்புமையாகச் சொல்வது மரபு. அருந்ததி விண்ணில் வடபுறம், மீனாய் (நட்சத்திரமாய்) உள்ளாளாம். அதனால் அவளை 'வடமீன்' என இலக்கியங்கள் கூறி, கற்புடைய மகளிர்க்கு ஒப்புமை யாக்கும். சில அகச் சான்றுகள்:-

புறநானூறு - 122 - 8:

**"வடமீன் புரையும் கற்பின் மடமொழி அரிவை"**

பெரும்பாணாற்றுப்படை - 302, 303:

**"பெருநல் வானத்து வடவயின் விளங்கும்**
**சிறுமீன் புரையும் கற்பின் நறுநுதல்"**

கலித்தொகை – 2.

**"வடமீன்போல் தொழுதேத்த வயங்கிய கற்பினாள்"**

சிலப்பதிகாரம்:

**"தீதிலா வடமீனின் திறம் இவள்திறம்"** (1:27)

**"வடமீன் கற்பின் மனையுறை மகளிர்"** (5:129)

ஐங்குறுநூறு.

**"அருந்ததி அனைய கற்பின்**
**குரும்பை மணிப்பூண் புதல்வன் தாயே"** (442:4, 5)

திரிகடுகம் -

**"அருந்ததிக் கற்பினார் தோளும்"** (1)

இவ்வாறு மற்ற கற்புடைய மாதர்க்கு அருந்ததியை உவமையாகக் கூறுவதிருக்க, இங்கே கம்பர், சீதையை 'அருந்ததி' எனவே கூறிவிட்டார். ஆயினும், உவமை ஆகு பெயராய் அருந்ததி போன்ற சீதை எனப் பொருள் கொள்ளல் வேண்டும். இதனால் சீதையின் சிறப்பு விளங்கும்.

**நாகுழறல்**

தேவரும் வியக்கும் தோற்றமுடைய இராவணன், தவக்குடிலின் வாயிலை அடைந்து, நாக்கு அடியோடு குழற, இங்கே யார் உளீர் என்று நடுக்கத்தோடு கேட்டான்:

**"தோம்அறு சாலையின் வாயில் துன்னினான்**
**நாமுதல் குழறிட நடுங்கு சொல்லினான்**
**யாவிர் இவ்விருக்கையுள் இருந்துளீர் என்றான்**
**தேவரும் மருள்கொளத் தெரிந்த மேனியான்"** (24)

இப்படி ஒரு தவ முனிவரைக் கண்டதில்லையே எனத் தேவரும் திகைக்கும்படியான கோலத்துடன் சென்றுளான். அச்சத்தோடும் நடுக்கத்தோடும் பொய்யான வஞ்சகப் பேச்சு பேசும்போது நாக்கு குழறித் (குளறித்) தடுமாறுவது இயல்பு.

கம்பன் விழாக்களில் பட்டி மன்றங்களிலும், வழக்காடு மன்றங்களிலும் நகைச்சுவையை வாரிக்கொட்டிக் கம்ப ராமாயணக் சுவைஞர்களைப் பழக்கி விட்டதால், இங்கேயும் நகைச்சுவை கலந்து எழுதவேண்டியுள்ளது. ஒன்று:

ஒரு பண்ணையார் வீட்டில் பண்ணையார் வெற்றிலை பாக்கு போட்டுக் கொள்வதற்காகப் பணியாளை நோக்கிச் சுண்ணாம்பு எடுத்து வரச் சொன்னார். அவன் கொட்டடிக்குள் சென்றான். சுண்ணாம்புக் கலயத்தின் பக்கத்தில் பிண்ணாக்குப் பானையும் இருந்தது. வாய் வெறிப்பா யிருந்ததால் அவன் சிறிது பிண்ணாக்கை எடுத்து வாயில் போட்டுக் குதப்பிக் கொண்டிருந்தான். அப்போது பண்ணையார், இன்னுமா எடுத்து வருகிறாய் என்று அதட்டினார். அவன், பிண்ணாக்கு வாயுடன், கையில் சுண்ணாம்பை எடுத்துச் சென்றான். நேரம் ஆய்விட்ட தாலும் பிண்ணாக்குத் திருடித் தின்பதாலும் அவனுக்கு அச்சமும் நடுக்கமும் ஏற்பட்டன. வாயில் என்ன என்று பண்ணையார் கேட்டார். அவன் வாயில் 'பிண்ணாம்பு'

என்றான். கையில் என்ன என்று கேட்க, கையில் 'சுண்ணாக்கு' என்றானாம். நாக்கு குழறித் தடுமாறி விட்டது இங்கே,

**"உள்ளத்தில் உண்மைஒளி உண்டாயின் வாக்கினிலே**
**உண்மை ஒளி உண்டாகும்"** (22-தமிழ்-4)

என்னும் பாரதியார் பாடல் எண்ணத்தக்கது. மற்றும் இராவணன் - பிறர் வந்து விடின் என்னாவது என்ற அச்சத்தால் நடுங்கியிருக்கிறான். ஈண்டு.

**"புக்கஇடத்து அச்சம் போதரும்போது அச்சம்**
**துய்க்கும் இடத்தச்சம் தோன்றாமல் காப்பச்சம்**
**எக்காலும் அச்சம் தருமால் எவன்கொலோ**
**உட்கான் பிறனில் புகல்"** (13)

என்னும் நாலடியார்ப் பாடலும் நோக்கத்தக்கது.

**ஏகுமின் ஈண்டு**

சீதை அவனை உண்மையான தவமுனிவர் என்று நம்பி, ஒரு பவளக்கொடி போல் வந்து, வெல்லப்பாகு போன்ற இனிய சொல்லால் இங்கே வருக என்றாள்:

**"பாகுஇயல் கிளவி ஓர் பவளக் கொம்பர் போன்று**
**ஏகுமின் ஈண்டு என எதிர் வந்து எய்தினாள்"** (25)

கிளவி = சொல். கொம்பர் = கொம்பு — அர் — கடைப்போலி. சீதை செந்நிறத்தவளாதலின் சிவந்த பவளக் கொடி உவமையாக்கப்பட்டது.

ஏகுமின் என்றால் செல்லுங்கள் என்பது நேர்ப் பொருள். ஏகுமின் ஈண்டு — இங்கே செல்லுங்கள் என்றதனால், உள்நோக்கி வருக என்று சொன்னதாகப் பொருள் கொள்ளல் வேண்டும்.

இடத்திற்கு இடம் பேச்சு வழக்கில் மாறுதல் இருக்கும். தென்னார்க்காடு மாவட்டத்துப் பக்கம், வருபவர்களைப்

பார்த்து 'இருங்கள்' என்று சொல்லின், வராதீர்கள் — அங்கேயே நில்லுங்கள் என்று சொன்னதாகப் பொருள்படும்.

1969ஆம் ஆண்டு, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள குருந்தம்பட்டு என்னும் ஊருக்கு எனது தலைமையில் திரு. ஞானபூரணம் என்பவருக்குத் திருமணம் செய்து வைக்கச் சென்றேன். மூளைக்கட்டிப் பிணியாளனாகிய யான் துணைக்குப் பதினைந்து வயதுடைய என் மகனையும் அழைத்துச் சென்றேன். நாங்கள் தங்க வசதியான ஒரு வீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவ்வீட்டிற்குள் யானும் என் மகனும் சென்றபோது, அவ்வீட்டார் 'இருங்க - இருங்க' (இருங்கள்) என்றனர்.

'இருங்க(ள்)' என்று சொன்னதை, உள்ளே வராதீர்கள்-அங்கேயே நில்லுங்கள் (இருங்கள்) என்று சொன்னதாக என் மகன் பொருள் செய்து கொண்டு முன்னேறாமல் பின் நோக்கி நகர்ந்தான். பிறகு நான், இருங்கள் என்றால் அமருங்கள் என்று பொருள் - நம்மை அமரச் சொல்கிறார்கள் - என்று என் மகனிடம் கூறி அமரச் செய்து நானும் அமர்ந்தேன்.

இங்கே கம்பர் 'ஏகுமின்' என்று சீதை கூறியதாகக் கூறி நம்மை மிரட்டியுள்ளார். இது எந்தப் பக்கத்து வழக்காறோ? 'ஈண்டு ஏகுமின்' என்று கூறியதால், உள்நோக்கி வருக என்று கூறியதாகக் கொள்ளவேண்டும். 'ஏகுதல்' என்பதற்கு 'நடத்தல்' என்னும் பொருள் பிங்கல நிகண்டில் கூறப்பட்டுள்ளது.

மற்றொரு கருத்து இதிலே மறைந்திருப்பதாகக் கொண்டு கம்பருக்குப் பெருமை சேர்க்கலாமா? அதாவது:- ஏ 'இராவணா' நீ உள்நோக்கி வரத்தக்கவனல்லன் - வெளியே விரைந்து செல்ல வேண்டியவன் - என்ற பொருள் தொக்கி நிற்கும்படிச் செய்துள்ளார் கம்பர் - என்று

கொள்ளலாமா? 'ஈண்டு' என்பதற்கு விரைந்து செல்லுதல் என்னும் பொருளும் உண்டு.

**"இடுக்கண் களைதற்கு ஈண்டெனப் போக்கி"**

சிலம்பு - 13:101)

என்னும் பகுதி காண்க. போகிறேன் என்பதற்கு வருகிறேன் என்று கூறும் எதிர்மறையான வழக்காறும் எண்ணத்தக்கது.

**ஆசை வேலை**

யானைக்கு மதம் வழிவதுபோல் வியர்வை தோன்றிய மேனியுடன், அன்பாகிய அலைபுரளும் ஆசையாகிய கடலானான் அவன்:

**"வெற்பிடை மதம்என வியர்க்கும் மேனியன்**
**அற்பினின் திரைபுரள் ஆசை வேலையன்"** (26)

வெற்பு = மலைபோன்ற யானை, ஆசை = காமம், வேலை = கடல். ஏதாவது ஒரு மன எழுச்சி தோன்றின் வியர்ப்பது உண்டு. கடல் அனைய காமம் உடையவனாம். ஈண்டு,

**"யாதனின் பிரிவாம் மடந்தை**
**காதல் தானும் கடலினும் பெரிதே"** (166:9,10)

என்னும் நற்றிணைப் பாடலும் பெரிய புராணத்தில் உள்ள

**"ஏர்பரவை இடைப்பட்ட என்ஆசை எழுபரவை"** (294)

என்னும் பாடல் பகுதியும் பெண்ணாசையைக் கடல் எனக் குறிப்பிட்டிருப்பது காண்க. பரவை = கடல்.

மேலும் கூறுவான்: இவளது அழகு முழுவதையும் நுகர எனது 'முக்கோடி ஆயுவும் போதுமோ இருபது கண்களும் போதுமோ' என்கிறான்.

**தங்கைக்கு அரசு**

கணவனைப் பிரிந்த கலக்கத்தோடு இருக்கும் போதே இவளது முகப் பொலிவு இவ்வளவு கவர்ச்சியாயிருக்கிறதே- என்னுடன் வந்து எனக்கு மனைவியாகி மகிழ்ச்சியுடன் புன்முறுவல் பூத்தாளே யாயின், ஆகா! அந்த முறுவல் எவ்வளவோ கவர்ச்சியா யிருக்குமே! இவ்வளவு பெரிய வாய்ப்பை அளித்த என் தங்கை சூர்ப்பணகைக்கு என் அரசைக்கூட அளித்து விடுவேன்:

**"உளைவுறு துயர் முகத்து ஒளி இது ஆம் எனின்**
**முளை எயிறு இலங்கிடும் முறுவல் என்படும்!**
**தளை அவிழ் குழல் இவள் கண்டு தந்த என்**
**இளையவட்கு அளிப்பன் என் அரசு**
**என்றெண்ணினான்"** (32)

சீதை இராவணனைக் குடிலுக்குள் வரவேற்றுப் போற்றினாள். சீதையின் வரலாற்றை அவன் வினவ, சீதை அயோத்தி தொடங்கி முழுவதும் சொன்னாள்.

இராவணனது வரலாற்றைச் சீதை கேட்டாள். அவன், தான்தான் இராவணன் என்பதை வெளிப்படையாய்க் காட்டிக்கொள்ளாமல், படர்க்கையாகவே வைத்து தன்னுடைய பரந்துபட்ட பெருமை முழுதும் சொல்லி அவ்விராவணன் இருக்கும் இலங்கையிலிருந்து வந்துள்ளேன் என்றான்.

பின்னர்ச் சீதை, தவசியர்க்கு உடம்பும் மிகை என்பார்களே. நிலைமை இவ்வாறிருக்க, தவசியாகிய நீங்கள் கொடிய அரக்கரின் இருப்பிடத்தில் இருக்கலாமா என்றாள்:

"பாதக அரக்கர்தம் பதியின் வைகுதற்கு
ஏதுஎன்? உடலமும் மிகைஎன்று எண்ணுவீர்" (51)

ஏது என் = காரணம் என்ன? இங்கே,

**"மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல்**
**உற்றார்க்கு உடம்பும் மிகை"** (345)

என்னும் குறட்பா ஒப்பு நோக்கற் பாற்று.

அரக்கர்கள் நல்லவர்கள் என்று இராவணன் கூறினான். சீதை மறுத்து அரக்கர்களை என் கணவன் இராமர் கொல்வார் என்றாள்.

அதற்கு இராவணன் கூறுவான்: அரக்கரை மானிடர் அழிப்பர் எனில், யானைக் கூட்டத்தை முயல் வெல்லும் போலும்! சிங்கக் கூட்டத்தை மான் கொல்லும் போலும்!

**"மானவள் உரைத்த லோடும்**
**மானிடர் அரக்கர் தம்மை**
**மீனென மிளிருங் கண்ணாய்**
**வேர்அற வெல்வர் என்னின்**
**யானையின் இனத்தை எல்லாம்**
**இளமுயல் கொல்லும் பின்னும்**
**கூன்உகிர் மடங்கல் ஏற்றைக்**
**குருளைமான் வெல்லும் என்றான்"** (57)

அரக்கர்கள் யானையும் சிங்கமும் போன்றவர்களாம், மானிடர் முயலும் மானும் போன்றவர்களாம். இவ்வாறு இராவணன் கேலியாகப் பேசிச் சீதையை மறுத்தான்.

உடனே சீதை, விராதன், கரன் முதலிய அரக்கர்கள் இராமனால் மாண்டதைக் கேள்விப்பட்டது கூட இல்லையா? என இராவணனை மடக்கினாள்.

**பூளை வீ**

சீதை இவ்வாறு சரிக்குச் சரி வாதம் புரிந்ததும், சினம் மேலிட்ட இராவணன், நாளைக்கு உன் இராமன்

வாடைக் காற்றில் அகப்பட்ட பூளைப்பூபோல், என் இருபது தோள்களின் வாடையால் அழியப் போவதைக் காண்க என்றான்:

**"தேறுதி நாளையே அவ்விருபது திண்தோள் வாடை**
**வீறிய பொழுது பூளைவீஎன வீவன் அன்றே"** (61)

பூளை என்பது பஞ்சு போன்ற அமைப்புடைய ஒரு மெல்லிய பூ. காற்றடித்தாலே அது பறந்து போய்விடும். பழுத்த பஞ்சுக் காயே வெடித்ததும் பஞ்சு காற்றில் பறந்து ஓடி விடுவதைக் காணலாம். அதனினும் மெல்லியது பூளை. இராவணனின் இருபது தோள்களின் வாடை பட்டாலேயே காற்று முன் பூளைபோல் இராமன் இறந்து படுவானாம்.

இந்த ஒப்புமை பலராலும் சொல்லப்படுவதே: திரு மங்கை ஆழ்வாரின் பெரிய திருமொழியில்,

**"காற்றிடைப் பூளை கரந்தென அரந்தை**
**உறக் கடல் அரக்கர் சேனை**
**கூற்றிடைச் செல்லக் கொடுங்கணை துரந்த**
**கோல வில் இராமன்"** (4:10:6)

எனக் கூறப்பட்டுள்ளது. இராமன் வில்லால் அரக்கர்கள் பூளைப் பூப்போல் அழிந்தார்களாம். இங்கே இராமன் அழிவான் என இராவணன் கூறியுள்ளான்.

மேலும் கூறுகிறான்:

**"மேருவைப் பறிக்க வேண்டின்,**
**விண்ணினை இடிக்க வேண்டின்,**
**நீரினைக் கலக்க வேண்டின்,**
**நெருப்பினை அவிக்க வேண்டின்,**
**பாரினை எடுக்க வேண்டின்,**
**பலவினை சிலசொல் ஏழாய்**
**யார்எனக் கருதிச் சொன்னாய்**
**இராவணற்கு அரிதுஎன்? என்றான்"** (62)

ஏழாய் = ஏழையே = பெண்ணே! இராவணனுக்கு அரியது ஒன்றும் இல்லையாம். இங்கே, பட்டினப் பாலையில் கரிகால் வளவனைப் பற்றிக் கூறப்பட்டுள்ள

**"மலை அகழ்க்குவனே கடல் தூர்க்குவனே**
**வான் வீழ்க்குவனே வளிமாற் றுவன்"** (271-72)

என்னும் பகுதி ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது.

மேலும் சீதை இழித்துரைக்க, இராவணன் சினம் கொண்டு தன் பழைய உருவெடுத்தான். எளிய உருவத்திலிருந்து வலிய உருவம் எடுத்தமை, நீளமாய் இருந்த நாகம் திடீரென எளிய தலையிலிருந்து ஐந்து படங்களை விரித்தாற் போன்று இருந்ததாம்:

**"உருகெழு சீற்றம் பொங்கிப் பணம்**
**விரித்து உயர்ந்தது ஒத்தான்"** (65)

பாம்பு படம் விரித்து உயர்ந்து நின்றது பெரிய மாற்றம் தானே.

அரக்கத் தோற்றத்தைக் கண்டு சீதை அஞ்சினாள். அப்போது, பெண்ணே! நீ இசைந்தால் ஏழுலகமும் ஆளும் பெருஞ் செல்வத்தை உனக்கு அளிப்பேன் என்றானவன்.

உடனே சீதை தன் கைகளால் காதுகளைப் பொத்திக் கொண்டு, அரக்கா! நான் இராமனின் கற்புளைய மனைவி. நீ உலக ஒழுக்க நெறியைப் பேணாய். வேள்வியில் தேவர்க்கு இடும் அவியுணவை நாய் விரும்பியது போல நீ என்னை விரும்புகிறாய் (நாயே).

**"செவிகளைத் தளிர்க் கையாலே சிக்குறச்**
**சேமம் செய்தாள்**
**கவினும் வெஞ் சிலைக்கை வென்றிக்**
**காகுத்தன் கற்பினேனைப்**

**புவியுடை ஒழுக்கம் நோக்காய் பொங்கு**
**எரிப் புனிதர் ஈயும்**
**அவியை நாய்வேட்ட தென்ன என்**
**சொனாய் அரக்க என்னா''** (69)

சிக்குறச் சேமம் செய்தாள் = மிகவும் கெட்டியாய் முடிக் கொண்டாள். காகுத்தன் = இராமன். அவி = வேள்வி நெருப்பில் இடும் ஆடு மாடுகளின் நிணம், நெய், பழங்கள் முதலியன: இதற்கு அவி என்பது பெயர். 'அவி சொரிந்து ஆயிரம் வேட்டல்' என்னும் குறள் பகுதி ஈண்டு நினைக்கத் தக்கது.

தீக் கடவுள் (அக்கினிதேவன்) இந்த அவியை ஏந்திக் கொண்டு விண் நாடடைந்து தேவர்கட்கு அளிப்பானாம். இத்தகைய உயர்ந்தோர்க்கு உரிய உணவை நாய் விரும்புவது போல, இராமனுக்கு உரியவளை இராவணன் விரும்பினான். தேவர்க்கு இராமனும், அவிக்குச் சீதையும், அரக்கர்க்கு நாயும் ஒப்பாம்.

ஒரு சாரார், குறிப்பிட்ட சிறப்பு நாளில் உண்டு எஞ்சிய எச்சில் இலையை நாயும் தீண்டக் கூடாது என்று தரைக்குள் போட்டுப் புதைத்து மறைத்து விடுவார்களாம்.

இராவணனின் கொடுஞ் சொற்களைக் கேட்டதும் சீதை காதைப் பொத்திக் கொண்டாள் என்பதை அறியும் போது, சிலப்பதிகாரச் செய்தி ஒன்று நினைவிற்கு வருகிறது:

கவுந்தியடிகள் என்னும் பெண் துறவி, கோவலனுடனும் கண்ணகியுடனும் ஒரு சோலையில் தங்கியிருந்த போது, தீயோர் இருவர் வந்து, அடிகளிடம், இவர்கள் யார் எனக் கேட்டனராம். என் மக்கள் என அடிகள் கூறினாராம். உன் பிள்ளைகளாகிய அண்ணனும் தங்கையும் கணவன்

மனைவியரா யிருப்பதுண்டோ என்றார்களாம் அவர்கள். இந்த இழி சொல்லைக் கேட்டதும் கண்ணகி காதுகளைப் பொத்திக் கொண்டாளாம். இதைச் சிலப்பதிகாரத்தில் உள்ள —

**"உடன் வயிற்றோர்கள் ஒருங்குடன் வாழ்க்கை**
**கடவதும் உண்டோ கற்றறிந்தீர் எனத்**
**தீமொழி கேட்டுச் செவியகம் புதைத்துக்**
**காதலன் முன்னர்க் கண்ணகி நடுங்க"** (10:227-230)

கண்ணகி போலவே இங்கே சீதை காதுகளைப் பொத்திக் கொண்டாளாம்.

பின்னர் இராவணன் சீதையைத் தீண்டாமல் தவக் குடிலோடு தரையைப் பெயர்த்து எடுத்துத் தேரில் வைத்துக் கொண்டு வான்வழியே சென்றான்.

**நீர் உரையீர்**

சீதை மிகவும் உள்ளம் உளைந்து வழியில் கண்ட — பேசவோ கேட்கவோ முடியாத அஃறிணைப் பொருள்களை யெல்லாம் விளித்து, என் கணவரிடம் இதைச் சொல்லுக - என்று பிதற்றிக் கொண்டே சென்றாள்:

**"மலையே மரனே மயிலே குயிலே**
**கலையே பிணையே களிறே பிடியே**
**நிலையா உயிரேன் நிலைதேறினிர் போய்**
**உலையா வலியர் உழைநீர் உரையீர்"** (77)

கலை = ஆண் மான்; பிணை = பெண் மான். களிறு = ஆண் யானை; பிடி = பெண் யானை. இரட்டையாக இருக்கும் இவற்றைப் பார்க்கும்போது, பிரிந்து செல்லும் சீதைக்கு எப்படி இருக்கும்! உலையா வலியர் = அழியாத வலிமை உடைய இராமர். மரன் = மரம் - கடைப்போலி.

மலை, மரம், மயில், குயில், கலை, பிணை, களிறு, பிடி ஆகியவை நம்மைப்போல் பேசமாட்டா. இவற்றைப் போய்ப் பேசும்படிச் சொல்வது - அதாவது - இவை பேசுவது என்பது இயலாத செயல். பேசாதவை பேசுவது என்பது, அணி இலக்கணத்தில் சமாதி அணி எனவும், சொல் இலக்கணத்தில் விட்ட இலக்கணை எனவும் கூறப் படும்.

கம்பர் பெருமான் பழைய இலக்கண - இலக்கியங்களை யெல்லாம் நன்கு படித்தவர் என்பது இப்பாடலால் புலனாகிறது. இது, தொல்காப்பியம் - செய்யுளியலில் கூறப்பட்டுள்ளது. அதாவது - காதலரைப் பிரிந்தவர்கள் அஃறிணைப் பொருள்களைப் பார்த்து, சொல்லுவன போலவும் கேட்பன போலவும் கற்பனை செய்து கொண்டு கூறுவர்.

**"ஞாயிறு திங்கள் அறிவே நாணே**
**கடலே கானல் விலங்கே மரனே**
**புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே**
**அவையல பிறவும் நுதலிய நெறியால்**
**சொல்லுந போலவும் கேட்குந போலவும்**
**சொல்லியாங்கு அமையும் என்மனார் புலவர்"** (122)

இவற்றிற்கு இலக்கிய அகச் சான்றுகள் சில வருமாறு:
ஞாயிறு - கலித்தொகையில்:

**"பழிதபு ஞாயிறே பாடறியா தார்கண்**
**கழியக் கதழ்வை எனக்கேட்டு நின்னை**
**வழிபட் டிரக்குவன்..."** (143:22, 23, 24)

திங்கள் - திருக்குறளில்:

**"மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்**
**காதலை வாழி மதி"** (1118)

*அறிவு - நற்றிணையில்:*

**"உறுதி தூக்கத் தூங்கி அறிவே**
**சிறிதுநனி விரையல் என்னும் ஆயிடை"** (284)

*கடல் (ஓதம்), கானல் (பொழில்), புள் (அன்னம்) : சிலப்பதிகாரம் - கானல் வரியில்:*

**"நேர்ந்த காதலர் நேமி நெடுங்தேர்**
**ஊர்ந்த வழிசிதைய ஊர்கின்ற ஓதமே**
**பூந்தண் பொழிலே புணர்ந்தாடும் அன்னமே**
**ஈர்ந்தண் துறையே இதுதகாது என்னீரே"**

*மரம் - (மாந்தளிர்) - கலித்தொகையில்:*

**"மன்றப் பணைமேல் மலைமாந்தளிரே நீ**
**தொன்றிவ் வுலகத்துக் கேட்டும் அறிதியோ"**
(142:47, 48)

*பொழுது (மாலை) - கலித்தொகையில்:*

**"மாலை நீ,**
**தையெனக் கோவலர் தனிக்குழல் இசைகேட்டுப்**
**பையென்ற நெஞ்சத்தேம் பக்கம் பாராட்டுவாய்"**
(108:)

*நெஞ்சு - திருக்குறளில் பல - அவற்றில் ஒன்று:*

**"கண்ணும் கொளச்சேறி நெஞ்சே இவைஎன்னைத்**
**தின்னும் அவர்க்காண லுற்று"** (1244)

*விலங்கு (மான்), மயில், குயில், பிடி - நைடதத்தில்:*

**"வாவும் இளமான்காள் மயில்காள் மடப்பிடிகாள்**
**கூவும் கரிய குயில்காள் மென் புள்ளினங்காள்**
**ஆவி எனமேவி அகலேம் என அகன்ற**
**காவலன்தான் போனவழி எனக்குக் காட்டீரோ"**
(*பிரிவுறு படலம்* - 18)

இவற்றை யெல்லாம் அடியொற்றியே கம்பரும் பாடியுள்ளார்.

**வெளிப்பாட்டு மருத்துவம்**

இவ்வாறு ஒருவர் கண்ட கண்ட பொருள்களினிடத் தெல்லாம் தம் துயரத்தைச் சொல்லி யாற்றுவது, 'சுவரிடம் சொல்லியாவது சோகத்தைத் தீர்த்துக் கொள்ளுதல்' என்னும் பட்டறிவு மொழியை நினைவு செய்கிறது. மணிவாசகர் திருவாசகத்தில்,

> **''ஆரோடு நோகேன் ஆர்க்கெடுத்து உரைப்பேன்**
> **ஆண்டநீ அருளிலை யானால்''**

எனக் கூறியுள்ளார். தம் நோக்காட்டைப் பிறரிடம் சொல்லித் தீர்ப்பது உண்டு என்பது இதனால் தெளிவு.

இதற்கு உளவியலில் 'வெளிப்பாட்டு மருத்துவம்' எனப் பெயர் கூறியுள்ளனர். துயரத்தை வெளிப்படுத்துவதே ஒரு மருத்துவமாம் - ஒரு வகை மருந்தாம். இதனை ஆங்கிலத்தில் 'Expressive Theory' என்பர்.

**நால்வர்**

மேலும், தயரதன் பிள்ளைகள் நால்வரையும் விளித்து, என்னை மீட்காமல் பழி கொள்வீரோ என்று புலம்புகிறாள் சீதை:

> **''வரதா இளையோய் மறுஏதும் இலாப்**
> **பரதா இளையோய் பழிபூ ணுதியோ''** (79)

வரதன் = இராமன்; அடுத்த இளையோன் = இலக்குவன். குற்றம் இல்லாதவனாம் பரதன்; அவனுக்கு அடுத்த இளையோன் சத்துருக்கனன். இந்த நால்வரையும் விளித்துளாள்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த அரக்கன், உம்மவரால் அரக்கர்களை வெல்ல முடியுமா எனக் கைகொட்டி ஏளனமாகச் சிரித்தான். அங்ஙனமாயின் போர் புரியாமல் வஞ்சகமாய் என்னை எடுத்து வந்தது ஏன்? அச்சத்தினால் தானே இவ்வாறு செய்தாய் என்றாள்:

**"கேட்டும் இம்மாயம் செய்தது அச்சத்தின்**
**கிளர்ச்சியன்றோ"** (84)

கேட்ட இராவணன், மானிடருடன் போர் புரிவது, சிவனது மலையை எடுத்த என் தோள்வலிமைக்குப் பழி உண்டாகும். அப்பழியை விட, இந்த வஞ்சகம் மேல் என்றான்:

**"விழிதரும் நெற்றியான்தன் வெள்ளி**
**வெற்பெடுத்த தோட்குப்**
**பழிதரும்; அதனின் சாலப் பயன்தரும்**
**வஞ்சம் என்றாள்"** (85)

சீதை மேன்மேலும் இழித்துரைத்தாள்.

**அடா! நில் நில்!**

சீதையும் இராவணனும் இவ்வாறு வாதிட்டுக் கொண்டிருக்கையில், இவர்களை வழியில் பார்த்து விட்ட கழுகு அரசனும் தயரதனின் நண்பனு மாகிய சடாயு, மேலெழுந்து இராவணனை நோக்கி, எங்கே அடா எடுத்துச் செல்கிறாய்! போகாதே - நில் நில் என்று கூறித் தடுக்க முயன்றான்: அவன் கண்கள் நெருப்பை வீசின; மின்னலைப் போல் அலகு பளபளத்தது; மேருமலை மேலெழுந்தது போன்ற தோற்றத்தினனானான்:

**"என்னும் அவ்வேலையின்கண்**
**எங்கடா போவதெங்கே**
**நில்நில் என்றிடித்த சொல்லன்**
**நெருப்பிடைப் பரப்பும் கண்ணன்**

**மின்னென விளங்கும் வீரத்துண்டத்**
**தன் மேரு என்னும்**
**பொன்னெடுங் குன்றம் வானின்**
**வருவதே போலும் மெய்யான்''** (87)

துண்டம் = அலகு (மூக்கு). இந்த அலகு இராவண னோடு போர் புரியப் பெரிய படைக் கருவியாக இருந்தது. மற்றும், பெரிய இறக்கைகள், கால்கள், கால் நகங்கள் ஆகியவற்றையும் படைக் கருவிகள் போல் பயன்படுத்திக் கொண்டு சடாயு போரிட்டான்.

## அறிவுரை

போரிடும் சடாயு இராவணனுக்கு அறிவுரை சொல்லிப் பார்த்தான்: கெட்டவனே! உன் சுற்றத்தோடு அழிவைத் தேடிக் கொள்கிறாய். ஏன் இவ்வாறு செய்யத் தொடங்கி விட்டாய்? பத்தினியாகிய சீதையை விட்டுவிட்டு ஓடிப்போ. அங்ஙனம் செய்யின், நீ இறவாமல் உயிர் வாழலாம்.

**''கெட்டாய் கிளையோடு நின் வாழ்வையெல்லாம்**
**சுட்டாய் இதுஎன்னை தொடங்கினை நீ**
**பட்டா யெனவேகொடு பத்தினியை**
**விட்டு ஏகுதியால், விளிகின்றிலையால்''** (94)

## நிலை காணுதியோ

சடாயு மேலும் கூறுகிறான்: யானையைக் கொல்ல அதன் மேல் மண் உருண்டையை எய்கின்றாய்: நஞ்சு கொல்லும் என்பதை அறிந்தும் சோதித்துப் பார்க்கிறாய் போலும்!

**''கொடுவெங்கரி கொல்லிய வந்து அதன்மேல்**
**விடும் உண்டை கடாவ விரும்பினையே**
**அடும் என்பது உணர்ந்திலை? ஆயினும்வன்**
**கடு உண்டு உயிரின்நிலை காணுதியோ?** (97)

உண்டை = மண் உருண்டை. யானையின் மேல் மண் உருண்டையை வீசி அடித்து வெல்ல முடியுமா? கடு = நஞ்சு. நஞ்சு உண்டால் உயிர் நிலைக்குமா? சோதித்துப் பார்க்கச் செய்வது போல் தோன்றுகிறதாம்.

இந்தப் பாடலில், இராமன், சீதை என்னும் பெயர்களோ, இராமனோடு போர் புரிதல், சீதையை எடுத்துச் செல்லுதல், அவர்களால் அழிதல் என்னும் செயல்களோ வெளிப்படையாய்க் கூறப்படவில்லை.

கருதிய பொருளை விளக்குவதற்கு ஒத்த பொருளும் செயலும் கூறப்பட்டுள்ளன. அதாவது, இராமன் யானை; மண் உருண்டை எறிதல் = இராமனைத்துன்புறுத்தச் சீதையை எடுத்துச் செல்லுதல்; நஞ்சு உண்டால் அழிதல் = சீதையை எடுத்துச் சென்று இராமனைப் பகைத்துக் கொள்ளின் மாளுதல் - என்ற செய்திகள் ஒப்புமை வாயிலாகவே விளக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு, சொல்லக் கருதிய பொருளைத் தொகுத்து அதை விளக்குவதற்கு ஒத்த பொருளை உரைக்கும் அமைப்புக்கு 'ஒட்டு அணி' என்று அணியிலக்கண நூலார் பெயர் கூறுவர். இதனைத் தண்டியலங்காரத்தில் உள்ள -

**''கருதிய பொருள் தொகுத்து அது புலப்படுத்தற்கு**
**ஒத்தது ஒன்றுரைப்பின் அஃதுஒட்டு எனமொழிப''**

(52)

இது உவமை போன்றிருத்தலின் இதனை 'உவமைப் போலி அணி' எனவும், ஒன்றை மொழிதற்குப் பதிலாக அதனோடு ஒத்த பிறிதொன்றை மொழிதலால் 'பிறிது மொழிதல் அணி' எனவும், செய்தியை வெளிப்படையாக நுவலாமலேயே (சொல்லாமலேயே) குறிப்பாகச் சொல்லுதலால் 'நுவலாநுவற்சி அணி' என்றும் பெயர் கூறுவர்.

இவ்வாறு பாடுவது, கருத்து வெளிப்பாட்டில் ஒரு புதுமைச் சுவையாகும். வள்ளுவர் இதில் மிகவும் வல்லவர். கம்பருங் கூடத்தான்....!

## இரும்பு உண்ட நீர்

இவ்வாறு சடாயு பல அறிவுரைகள் கூறிச் சீதையை விடுவிக்குமாறு அறிவுறுத்தினான். அதற்கு இராவணன், காய்ச்சிய இரும்பில் பட்ட நீர் ஒடுங்கிவிடும் - அவ்வாறு ஒடுங்காமல் அந்த நீர் வெளியே திரும்ப வருமாயினும் என்னிடம் அகப்பட்ட சீதை மீளாள் - என்றான்:

**"இரும்பு உண்டநீர் மீள்கினும் என்னுழையின்**
**கரும்பு உண்ட சொல் மீள்கிலள் காணுதியால்"** (104)

காய்ச்சிய இரும்பில் பட்ட நீர் உள்ளே அடங்கிவிடும் என்ற செய்தி முன்னொரு பாடலிலும் விளக்கம் பெற்றுள்ளது. கரும்பு உண்ட சொல் = கரும்பு போன்ற இனிமையைக் கொண்டுள்ள பேச்சு. இங்கே, சொல் என்பது சொல் பேசும் சீதையைக் குறிக்கிறது. இது ஆகுபெயர்.

இராவணன் படைக் கருவிகளாலும், சடாயு இறக்கை அலகு கால் நகங்கள் ஆகியவற்றாலும் ஒருவர்க்கு ஒருவர் மோதிக் கடும்போர் புரிந்தனர்.

## மீண்டது வேல்

இராவணன் முத்தலை கொண்ட சூலம் என்னும் மூவிலை வேலைச் சடாயுவின் மார்பில் எறிந்தான். அவ்வேல் சடாயுவின் மார்பைத் துளைக்க முடியாமல் மீண்டதாம். வேல் மீண்டதற்கு மூன்று உவமைகள் கூறிக் கம்பர் கவிச் சக்கரவர்த்தி என்னும் சிறப்புப் பெயருக்கு மேலும் மெருகு கொடுத்துள்ளார். அவையாவன:-

விலைமாதர் வீட்டிற்குச் சென்ற ஏழையும், இனிய பார்வையின்றிக் கடுகடுத்துப் பார்ப்பவரின் வீட்டிற்குச் சென்ற விருந்தினரும், தவ முனிவரைக் காம எண்ணத்துடன் நோக்கும் தரங்கெட்ட பெண்டிரின் காமநோக்கும் மீள்வது போல் வேல் மீண்டதாம்:

**"பொன் நோக்கியர்தம் புலன்நோக்கிய புன்கணோரும்**
**இன்நோக்கியர் இல்வழி எய்தியநல் விருந்தும்**
**தன்நோக்கிய நெஞ்சுடை யோகியர்தம்மைச் சார்ந்த**
**மென்நோக்கியர் நோக்கமும் ஆம்என மீண்டது**
**அவ்வேல்"** (119)

பொன் நோக்கியர் = பொருளையே விரும்பும் விலை மாதர். இவர்களை வள்ளுவர் 'பொருள் விழையும் ஆய்தொடியார்' (911) என்றும், 'பொருள் பெண்டிர்' (913) எனவும் குறிப்பிட்டுள்ளார்.

புலன் நோக்குதல் = மாதரிடம் ஐம்புல இன்பத்தை நுகர விரும்புதல். ஐம்புல இன்பமும் அவர்கள் வாயிலாகப் பெறமுடியும் என்பதனை,

**"கண்டு கேட்டுஉண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்**
**ஒண்தொடி கண்ணே உள"** (1101)

என்னும் குறட்பாவாலும் அறியலாம்.

புன்கணோர் = பொருள் இல்லாமையால் எளிய நோக்கினராய் - எளிய தோற்றத்தினராய் உள்ள வறியவர். வறியவன் ஒருவன் பொருளின்றிப் பொருட் பெண்டிர் வீட்டிற்குச் செல்லின், வரவேற்பின்றித் திரும்ப வேண்டியது தான். வள்ளுவராவது பொருள் நோக்கம் உடையவர் என்றார்; உலோகத்தாலோ வேறு எதாலோ ஆன நாணயத்தைக் குறிப்பிடாமல் பொன்னை – பொன் கட்டியை விரும்புபவர் எனக் கம்பர் மேலே சென்றுவிட்டார்,

இங்கே, 'காசு இல்லாதவன் கடவுள் ஆனாலும் கதவைச் சாத்தடி' என்று பாடப்படும் ஒரு வகைப்பாடல் நினைவுக் கூரத் தக்கது.

இப்பேர்ப்பட்ட விலைமாது ஒருத்தியிடம், கடன் சொல்லி உடலுறவு கொண்டு போனானாம் ஒருவன். அந்தக் கடனைக் கேட்க அவள் நடையாய் நடந்தாளாம். இந்தக் கதை கம்பன் பாடலுக்கு விடும் அறைகூல் (சவால்) ஆகும். இதை விரிப்பின் பெருகும்.

அடுத்தது: இன் முகம் இன்றிக் கடுகடுப்புடன் நோக்குவோர் வீட்டிற்குச் செல்லும் விருந்தினர், எந்தப் போற்றுதலும் இன்றி வறிதே திரும்ப வேண்டியதுதான்.

**"மோப்பக் குழையும் அனிச்சம், முகம்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து"** (90)

என்னும் குறள் ஈண்டு எண்ணத் தக்கது.

பிடித்துத் தள்ளினும் போகாமல், எப்படியாவது உணவு கிடைத்தால் போதும் என்று அந்த இடத்திலேயே 'ஆணி அடித்துக் கொண்டு - வேர் பாய்ந்து அமர்ந்து விடுபவரைக் குறிக்காமல், முகம் திரிந்து நோக்கக் குழையும் விருந்தினரைக் குறிப்பதற்காக 'நல் விருந்து' என்றார் கம்பர் பெருமான்.

மூன்றாவது:- தவசியரை விரும்பிய பெண்ணின் நோக்குப் பயனின்றித் திரும்புமாம். எடுத்துக்காட்டுகள்: தவக்கோலமுடைய இராமனை விரும்பிய சூர்ப்பணகையின் நிலை இன்னதே. அல்லமர் என்னும் அருளாளரை விரும்பிய மாயை என்னும் பெண் எவ்வளவோ முயன்றும் அவரை அடைய முடியவில்லை என்பது பிரபுலிங்கலீலை என்னும் நூல் கதை. இன்ன பிற.

யோகியர் தன் நோக்கிய நெஞ்சு உடையவராம். தன் நோக்குதல் இறைவனை நோக்குதல். தான் என்பது

இறைவன். தன்னையே இறைவனாக நோக்கிச் செயல் படுபவர் யோகியர். திருமூலர் 'தான் அவனாகி' எனப் பல இடங்களில் கூறியுள்ளார். பிரபுலிங்கலீலையில் உள்ள

> **''பூதம் நீஅலை, பொறிகளும்அலை, அலைபுத்தி**
> **ஏதும் நீஅலை, இவற்றினை மயங்கி யான்என்னும்**
> **போதம் நீஅலை, என்றிவை அனைத்தையும் போக்கிச்**
> **சோதி ஆகிய பிரமமே நீ''** (17: 13)

> **''செறிந்தமூல ஆங்காரத்தின் வேறெனத் தீர்ந்திட்டு**
> **இறந்திடாது தன்கண்டவன் என்னையும் காண்பான்''**
> (19: 31)

என்னும் பாடல்களும்,

> **''தம்மை உணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்''**

என்னும் சிவஞான போதம் - அவையடக்கப் பகுதியும் இங்கே எண்ணத் தக்கன. இது மிகவும் சிக்கலானதும் கருத்து வேறுபாடு உடையதுமாகும்.

### பிழையா நெடுவாள்

என்ன செய்தாலும் சடாயுவை அழிக்க முடியவில்லை யாதலின், போரின் இறுதிக் கட்டமாக இராவணன், சிவன் தனக்குத் தந்த தவறாத வாளால் சடாயுவை வெட்டி வீழ்த்தினான். சடாயு கீழே விழுந்து விட்டான்.

> **''செவ்வே பிழையா நெடுவாள் உறைதீர்த்து எறிந்தான்''**
> (127)

### இன்னமும் இயற்றுமோ?

சடாயு வீழ்ந்ததும் சீதை வருந்துகிறாள். இலக்குவனை மறுத்துப் போகச் செய்தேன், சடாயு சிறகு இற்று வீழ்ந்தார். இன்னமும் என்னென்ன நேர உள்ளனவோ: விதி என்ன செய்யுமோ!

**"பின்னவன் உரையினை மறுத்துப் பேதையேன்**
**அன்னவன் தனைக் கடிது அகற்றினேன், பொரு**
**மன்னவன் சிறை அற, மயங்கினேன், விதி**
**இன்னமும் என் வினை இயற்று மோ என"** (132)

பின்னவன் = இராமானுஜன் = இலக்குவன். அனு = பின். இராமனுக்குப் பின் பிறந்த தம்பி. பொரு மன்னவன் = சடாயு. சீதை தன் பிழையையும் நொந்து கொண்டு விதியையும் துணைக்கு அழைக்கிறாள்.

மேலும் கூறுவாள்: அஞ்சாதே என்று கூறி என்னைக் காக்க வந்தவன் தோற்பதா? நரகனாகிய இராவணன் வெல்வதா? ஒருவேளை, தீவினை தான் வெல்லுமோ-மறை பொய்க்குமோ - அறம் இல்லையோ?

"அல்லல் உற்றேனை வந்து அஞ்சல் என்ற இந்
நல்லவன் தோற்பதோ நரகன் வெல் வதோ
வெல்வதும் பாவமோ வேதம் பொய்க்குமோ
இல்லையோ அறம் எனஇரங்கி ஏங்கினாள்" (133)

இப்போதைக்குச் சீதை இவ்வாறு கூறினும், இறுதியில் நரகனாகிய அரக்கனோ - பாவமோ வெல்ல முடியாது. வேதம் பொய்க்காது - அறம் தோற்காது, தீமை முதலில் நல்லதுபோல் தோன்றினும் பிறகு அழியும் என்பது முடிந்த முடிபு, இதனை,

"களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து
ஆவது போலக் கெடும்" (283)

என்னும் குறட்பாவும், பாரதியார் பாஞ்சாலி சபதம் என்னும் நூலில் கூறியுள்ள,

"தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்
தருமம் மறுபடி வெல்லும் எனும் இயற்கை"

என்னும் பாடல் பகுதியும் வலியுறுத்துவதை அறியலாம்.

தொடக்கத்தில் நிரம்பக் கையூட்டு (இலஞ்சம்) பெற்று

'வாழாதும் வாழ்ந்தவர்கள்' இறுதியில் கம்பி எண்ணுவது கண்கூடு. இதே நிலைதான் இராவணனுக்கு நேரும்.

இதுபற்றி எண்ணிச் சீதை ஏங்க, சடாயு உயிர் பிரியாமல் உணர்வற்றுக் கிடந்தான். இராவணன் சீதையை இலங்கைக்குக் கொண்டு சென்று அசோக வனத்தில் வைத்தான். இவர்களின் நிலைமை இவ்வாறு இருக்க,- இனி இராம இலக்குவரின் நிலைமை பற்றிக் காணலாம்.

சீதையைத் தனித்து விட்டு வந்தமைக்கு வருந்திய படியே இலக்குவன் இராமனைத் தேடிச் சென்றான். மாரீசனின் மாயக் குரலை நம்பிச் சீதை வருந்துவாள் என மயங்கியபடியே இராமன் குடில் நோக்கி வந்தான். இருவரும் ஒருவரை ஒருவர் கண்டு கொண்டனர்.

மாரீசனின் பொய்க்குரலை சீதை நம்பி அஞ்சி இலக்குவனை அனுப்பியிருக்க வேண்டும். அதனாலேயே, இலக்குவன் என் கட்டளையைக் கடந்து வந்திருக்க வேண்டும் என இராமன் எண்ணினான் (151).

இருவரும் தழுவிக் கொண்டனர். இராமன் நடந்ததை வினவ, இலக்குவன் நடந்ததை விவரமாகச் சொன்னான். கேட்ட இராமன் வருந்தலானான்:

**அழியா உள்ளம் அழிவு**

இலக்குவா! நீ வந்தது உன் குற்றமன்று; சீதை நடந்து கொண்டதும் குற்றமாகாது. மானைப் பிடிக்க வேண்டா என்று நீ தடுத்தும் கேட்காமல், சென்ற நானே குற்றவாளி என்று அழியாத தன் உள்ளம் அழியலானான்:

"வந்தாய் திறத்தின் உனதன்று குற்றம்,
மடவாள் மறுக்கம் உறுவாள்
சிந்தா குலத்தொடு உரை செய்த
செய்கை அதுதீதும் அன்று,

முந்தே தடுக்க, ஒழியா தெடுத்த
விணையேன் முடித்த முடிவால்
அந்தோ கெடுத்தது எனஉன்னி உன்னி
அழியாத உள்ளம் அழிவான்" (156)

சிந்தாகுலம் = மனத் துயர், இராமன் தன் குற்றத்தை ஒத்துக் கொண்டது உயரிய பண்பாகும். சீதை முன்பே தன் இரு குற்றங்களையும் ஒத்துக் கொண்டாள். ஒன்று மானைப் பிடித்துத் தரக் கேட்டது - மற்றொன்று இலக்குவனை அனுப்பியது. இவர்களுள் குற்றம் இலாதவன் இலக்குவனே.

பின்னர் இருவரும் சோலையினூடு புக்கு நோக்கிய போது குடிலோடு அங்கே சீதையைக் காணவில்லை.

**கூடு கண்டிலது**

கூட்டை விட்டுப் பிரிந்து சென்ற ஓர் உயிர், மீண்டும் திரும்பி வந்து பார்த்தபோது, கூட்டைக் காணவில்லை யெனின் அவ்வுயிர் எவ்வாறு திகைக்குமோ அவ்வாறு தேடி வந்த இராமன் திகைத்து நின்றான்:

"ஓடி வந்தனன் சாலையின் சோலையின் உதவும்
தோடு இவர்ந்த பூஞ்சுரி குழலாள் தனைக் காணான்
கூடு தன்னுடையது பிரிந்தா ருயிர் குறியா
தேடி வந்து அதுகண்டிலதாம் என நின்றான்" (158)

இராமன் உயிராம் - சீதை கூடாம். கூடு என்றால் உடம்பு என்றே கொள்வோமே! உடம்பைப் பிரித்து வைத்துவிட்டுச் சென்ற உயிர் மீண்டும் வந்து உடலைத் தேடிய போது காணவில்லை.

கூடு விட்டுக் கூடு பாயும் சித்துச் செயலில், உயிர் கூடாகிய உடம்பைப் பிரித்து ஓரிடத்தில் வைத்துவிட்டு வேறிடம் சென்று மீண்டும் திரும்பி வந்து வைத்துவிட்டுப் போன அந்தக் கூட்டிற்குள் புகுந்து கொள்ளுமாம், இது

ஒரு சித்துக் கலை. இதற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் காண்பாம்:

ஒன்று:- கைலையிலிருந்து யோகி ஒருவர் மண்ணுலகு அடைந்து தமிழ்நாட்டுத் திருப்பதிகளை வணங்கிக்கொண்டு சென்றார். காவிரிக் கரையிலுள்ள சாத்தனூர் என்ற ஊரில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த மூலன் என்னும் ஆயன் திடீர் என இறந்துவிட, ஆனிரைகள் கதறின. அதைக் கண்ட யோகி, தன் உயிரை மூலன் உடம்பில் புகுத்தி, தன் உடலை ஓரிடத்தில் மறைத்து வைத்துவிட்டு, ஆனிரைகளை மந்தையிலிருந்து ஊர் கொண்டு போய்ச் சேர்த்தார். பின் தன் உடலை வந்து பார்த்தபோது, அவர் இங்கிருந்தே தொண்டு செய்ய வேண்டும் என்பதற்காகச் சிவன் அவர் உடலை மறைத்து விட்டாராம். பிறகு மூலன் உடம்போடே திருமூலர் என்னும் பெயருடன் திருமந்திரம் இயற்றினார். இஃது ஒரு கூடு விட்டுக் கூடு பாய்ந்த கதை.

இரண்டாவது:- திருவண்ணாமலையில் அருணகிரிநாதர் பிரபுதேவன் என்னும் மன்னனுக்குக் கண்ணொளி பெறச் செய்யும் ஒரு மலரைக் கொண்டு வருவதற்காகத் தன் உடலை மறைத்து வைத்துவிட்டு, இறந்து கிடந்த ஒரு கிளியின் உடலில் தன் உயிரைப் பாயச்செய்து பறந்து சென்று மலரினைக் கொண்டு வந்து கொடுத்தார். அவரது பகைவனாகிய சம்பந்தாண்டான் என்பவன் அவரது உடலை அழித்து விட்டான், பிறகு அவர் கிளி உருவோடே இருந்தாராம்.

யோகி திருமூலருக்கும் அருணகிரிநாதருக்கும் தம் உடல் காணாத போது எவ்வளவு துயரம் ஏற்பட்டிருக்குமோ- அதுபோன்ற அளவு துயரம், தன் உயிர்க்கு உடல்போல் இருந்த சீதையைக் காணாதபோது இராமருக்கு ஏற்பட்டதாம்.

**மண்ணொடு மறைந்த நிதி**

*சீதையைக் காணாது கசந்து வெறுத்து நின்ற இராமனுக்கும் கம்பர் ஒரு சிறந்த உவமை கூறித் தமது புலமையை மேலும் கூர்மைப் படுத்தியுள்ளார். உவமை:-*

*இனிப் பிழைப்புக்கு வேறு எந்த வழியும் வாய்ப்பும் இல்லாத ஏழை ஒருவன், இனி உதவுவதற்காக மண் பாண்டத்தில் போட்டு மண்ணுக்குள் மறைத்து வைத்திருந்த செல்வப் பொருளை வஞ்சகன் ஒருவன் எப்படியோ அறிந்து மண்ணை அகழ்ந்து மண்பாண்டத்தோடு அப்பொருளைத் திருடிக்கொண்டு போய் விடின், வந்து பார்த்துக் காணாது எவ்வாறு திகைத்து வருந்துவானோ அவ்வாறு இராமன் திகைத்து நின்றானாம்.*

"கைத்த சிந்தையன் கணங்குழை
அணங்கினைக் காணாது,
உய்த்து வாழ்தர வேறொரு
பொருளிலான் உதவ
வைத்த மாநிதி மண்ணொடு
மறைந்தன வாங்கிப்
பொய்த்து ளோர்கொளத் திகைத்து
நின்றானையும் போன்றான்" (159)

*கைத்த சிந்தையான் = இராமன். அணங்கு = சீதை. வேறொரு பொருள் இலான் = மிக்க ஏழை.*

*இராமன் சீதையைத் தவிர வேறு பெண்ணை விரும்பாதவன். ஒரே மனைவி நோன்பினன் (ஏக பத்தினி விரதன்). இந்த இப்பிறவிக்கு இருமாதரைச் சிந்தையாலும் தொடேன் என்று சூள் உரைத்திருப்பவன். இதனாலேயே வேறு பொருள் இல்லாத வறிஞன் இராமனுக்கு உவமை யாக்கப் பட்டான்.*

*ஏழை வைத்த மாநிதி போன்றவள் சீதை. பொருள் மண் கலயத்தோடு எடுத்துச் செல்லப்பட்டமை, குடிலை*

மண்ணோடு பெயர்த்து இராவணன் எடுத்துச் சென்றமைக்கு உவமையாகும். பொருளை எடுத்துச் சென்ற பொய்யர் சீதையைத் திருடிச் சென்ற இராவணனுக்கு ஒப்புமை. வறிஞனது திகைப்பு இராமனது திகைப்புக்கு ஒப்பு.

வேறு மனைவியை மணந்து கொள்ளும் வாய்ப்பு உள்ளவர்களும் இருந்த மனைவி இறந்து போய் விடின் வருந்தவே செய்வார்கள் என்றால், அந்த வாய்ப்பு இல்லாதவர்களின் துயரத்திற்கு எல்லை ஏது?

**இலக்குவனின் வேண்டுகோள்**

இலக்குவன் கூறுகிறான்: வருந்துவதால், பயன் என்ன? தீண்டக் கூடாதென எவனோ குடிலோடு பெயர்த்து எடுத்துச் சென்றுள்ளான். தேரின் சுவடு தெரிகிறது. இந்தச் சுவடு வழியே செல்லின், கொண்டு போகிறவன் நெடுந்தொலைவு செல்லுமுன் கண்டு பிடித்து விடலாம்.

"தூரம் போதல்முன் தொடர்தும்" (162)

என்றான். அவ்வாறே செல்ல, சிறிது தொலைவில் தேர்ச் சுவடு, மறைந்து விடுகிறது. இராமன் வருந்துகிறான். இலக்குவன், வருந்தற்க; விண் வழி சென்றுள்ளான்; விண் நினது அம்பு போக முடியாத அளவுக்கு மிக உயர்ந்ததன்று.

"வானம் விற்கு நோக்கிய பகழியின் நெடிதன்று" (165)

என்று கூறித் தேற்றினான். போகப் போக, வழியில் இராவணனுடைய வீணைக் கொடி, வில், அம்பறாத் தூணி, கவசம், இறந்த குதிரையின் உடல், இறந்த தேர்ப்பாகனின் உடல் முதலியவற்றைக் கண்டனர். கொடி முதலியன அலகால் அறுக்கப்பட்டன போல் தெரிதலின் சடாயு போர் புரிந்திருக்கவேண்டும் என எண்ணுகின்றனர்.

**பல குண்டலங்கள்**

*பல குண்டலங்களைக் கண்டதும், பலர் போர் செய்துள்ளனர் என இராமன் எண்ணுகிறான். உடனே இலக்குவன், பலர் பொரவில்லை; இராவணனுக்குப் பத்துத் தலைகள் இருப்பதால்* (10×2=20) *பல குண்டலங்கள் போரில் சிதறி வீழ்ந்துள்ளன; எனவே பொருதவன் இராவணன் என்னும் ஒருவனே:*

"ஒருவனே அவன் இராவணனாம் என உரைத்தான்"
(178)

**வெள்ளிமேல் அஞ்சனம்**

*சிறிது தொலைவில் சடாயு வீழ்ந்து கிடத்தலைக் கண்டனர். சிவனது வெள்ளி மலைமேல் கரிய மைம்மலை வீழ்ந்தது போல் இராமன் சடாயு மேல் விழுந்து அரற்றினான் -*

"வெள்ளி ஓங்கலில் அஞ்சன மலையென வீழ்ந்தான்"
(180)

*சிறிது நேரம் உணர்வின்றிக் கிடந்த இராமனை இலக்குவன் எழுந்து இருக்கச் செய்து முகத்தில் தண்ணீர் தெளித்ததும் இராமன் விழித்துக் கூறலானான்* (181)

**தந்தையைக் கொன்ற மைந்தர்**

*சடாயுவே! உலகில் தந்தையைக் கொன்ற மைந்தர் யார் உளர்? முன்பு நாட்டில் என்னால் தந்தை தயரதன் இறந்தார். இங்கே நீயும் என் காரணமாய் இறந்தாய். அந்தோ! யான் எமனாக வாய்த்தேனே:*

"தம் தாதையாரைத் தனயர் கொலை நேர்ந்தார்
முந்து ஆரே உள்ளார்? முடிந்தான் முனை ஒருவன்
எந்தாய் ஓ எற்காக நீயும் இறந்தனையோ
அந்தோ வினையேன் அருங்கூற்றம் ஆனேனே"
(182)

திரேதா யுகத்தில் தந்தையைக் கொன்ற மைந்தன் இல்லை என இராமன் கூறியதாகக் கம்பர் பாடியுள்ளார்.

ஆனால், அந்தணன் ஒருவன் தந்தையைக் கொன்று தாயைப் புணர்ந்ததாகவும், அவனுடைய மாபாதகத்தையும் கடவுள் தீர்த்ததாகவும், பரஞ்சோதி திருவிளையாடல் புராணம் - மாபாதகம் தீர்த்த படலம் கூறுகிறது.

பலர் தந்தையைக் கொன்றதாக இக்காலத்தில் செய்தித்தாளில் படிக்கிறோம்.

இவற்றையெல்லாம் நோக்குங்கால், இராமர் மிக உயரிய பண்பினர் என்பதும் பண்டைக் காலம் மிகவும் உயர்ந்த காலம் என்பதும் தெரியவரும்.

**நெடுமரம்**

மேலும் இராமன் புலம்புகிறான்: என் மனைவியைக் கவர்ந்தவனை எதிர்த்து நீ இறக்கின்றாய்; உன்னைக் கொலைக்கு உள்ளாக்கிய இராவணன் உயிரோடு உள்ளான் யானோ வில்லும் அம்புக் கடலையும் சுமந்து கொண்டு நெடுமரம் போல் நிற்கின்றேன்.

> "என் தாரம் பற்றுண்ண ஏன்றாயைச் சான்றோயைக்
> கொன்றானும் நின்றான் கொலையுண்டு நீ கிடந்தாய்
> வன்தாள் சிலை ஏந்தி வாளிக் கடல் சுமந்து
> நின்றேனும் நின்றேன் நெடுமரம் போல் நின்றேனே"
> (185)

இராமன் தன்னை நெடுமரம் என மிகவும் தாழ்த்திக் கொள்கிறான். உலகியலில் பயனற்ற ஒருவனை நோக்கி, ஏண்டா மரம் போல் சுவர்போல் உலக்கைபோல் நிற்கிறாய் என்று பிறர் கேட்பதுண்டு. ஆனால் இராமன் தன்னைத் தானே அவ்வாறு சொல்லிக் கொள்கிறான்.

'நின்றேனும் நின்றேன் நெடுமரம் போல் நின்றேனே' என மும்முறை 'நின்றேன்' எனச் சொல்லியிருப்பது, இராமனது மனப்புண்ணை மிகுத்துக்காட்டி அவலச் சுவை - இரக்க உணர்வு அளிக்கிறது.

**இழந்தவை பெற்றனன்**

சடாயு உணர்வு வந்து விழித்து இராம இலக்குவரை நோக்கியதும், இராவணனால் இழந்த இரு சிறகுகளையும் இனிய உயிரையும் ஏழுலகையும் பெற்றதை ஒத்த மன மனநிறைவு எய்தினான்:

''இற்ற இருசிறகும் இன்னுயிரும் ஏழுலகும்
பெற்றானே ஒத்தான் பெயர்த்தேன் பழி என்றான்''

பிறகு, இருவரையும் அருகழைத்து மாறிமாறித் தன் அலகால் உச்சி மோந்தான்:

''மூக்கினால் உச்சி முறையே மோக்கின்றான்'' (189)

பெற்றோர் பிள்ளைகளின் உச்சியை மோத்தல் செய்வர். சடாயு தந்தை முறையினன் ஆதலால், பிள்ளை களாகிய இராம இலக்குவரை உச்சி மோந்தான். இதனால் இவனது அன்புப் பெருக்கு தெரிய வரும்.

சடாயு சிறப்புத் தந்தை. சொந்தத் தந்தையாகிய தயரதனும் உச்சி மோத்தல் உண்டு. இராமனைப் பிரிந்ததும், என்மகனை உச்சி மோக்கும் பேற்றை இழந்து விட்டேனே என்று தயரதன் வருந்தியதாகக் குலசேகர ஆழ்வாரின் பெருமாள் திருமொழியில் கூறப்பட்டுள்ளது:

''மோவது உச்சி ....
என்மகனை இழந்திட்ட இழிதகையேன்
இருக்கின்றேனே'' (9:6)

என்பது பாடல் பகுதி. இதனால், சடாயு, தந்தை என்னும் உறவு முறைக்கு மிகவும் தக்கவன் என்பது புலப்படும்.

சடாயு இருவரையும் நோக்கி நடந்ததை வினவ, இலக்குவன், மாயமான் வந்தது முதல் இதுவரை நடந்த அனைத்தையும் விவரமாகக் கூறினான்:

"வன்திறல் மாயமான் வந்தது ஆதியா
நின்றது நிகழ்ந்தது நிரப்பினானரோ" (191)

**விதியும் மதியும்**

கேட்ட சடாயு ஆறுதல் கூறலானான்: ஒருவராலும் ஒரு புதுமையும் செய்ய முடியாது. பிறவி எடுத்ததின் தொடர்பாக உண்டாகும் இன்பமோ - துன்பமோ விதியினால் வருவது. இதை நம்பா விடின், மதியினால் விதியை வெல்ல முடியுமோ? (முடியாது)

"அதிசயம் ஒருவரால் அமைக்க லாகுமே
துதியறு பிறவியின் இன்ப துன்பம்தான்
விதிவயம் என்பதை மேற்கொள்ளா விடின்
மதிவலியால் விதி வெல்ல வல்லமோ? (193)

இங்கே விதி என்பது குறித்துச் சிறிது ஆய்வு செய்ய வேண்டியுள்ளது. ஊழை வெல்லும் வல்லமை உடையது வேறு எதுவும் இல்லை. மதியாலோ வேறு எதாலோ ஊழை வெல்ல முயற்சி எடுத்தாலும், ஊழே முன்னின்று எதிராக எடுக்கும் முயற்சியைக் குலைத்து விடும் என்னும் கருத்துடைய

"ஊழின் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்" (380)

என்னும் குறள் ஊழின் வலிமையை வலியுறுத்துகிறது. இதுபற்றி 'ஊழ்' என்னும் தலைப்பு இட்டுப் பத்துப்பாக்கள் பாடியுள்ளார் வள்ளுவர்.

ஊழ் பிறந்த வரலாறாவது: நல்லவன் கேடும் தீயவன் நன்மையும் அடைவதற்குத் தீர்வு சொல்ல முடியாத நம்

முன்னோர்கள், இப்போது உள்ள நல்லவன் முன்பிறவியில் தீமை செய்திருக்க வேண்டும் - இப்போது தீமை செய்பவன் முன் பிறவியில் நல்லது செய்திருக்க வேண்டும் - என ஓர் ஊகமாக உய்த்துணர்வாக முடிவு எடுத்தனர்.

> "அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
> கேடும் நினைக்கப் படும்" (169)

என்னும் குறளும் ஈண்டு எண்ணத்தக்கது. 'நினைக்கப்படும்' என்பது இந்த உய்த்துணர்வாகத்தான் இருக்கவேண்டும்.

ஊழ் என ஒன்றில்லை; தற்செயலாய் - இயற்கையாய், எதிர்பாராமல் நிகழ்வுறும் இன்ப துன்பங்களை ஊழால் நிகழ்வதாகக் கூறமுடியாது. தற்செயலாகிய விதியை மதியால் வெல்லலாம் - என்பர் ஒரு சாரார். இதற்கு,

> "ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
> தாழாது உஞற்று பவர்" (620)

என்னும் குறளை அரணாக்குபவர். முடிவு என்ன?

தற்செயலாய் நடப்பதான விதியை மதியால் வெல்ல முடியாது. நிகழ்ந்து விட்ட பின்பு வேண்டுமானால், மதியின் கூர்மையால் நிலைமையைச் சரி செய்ய முயலலாம். எனவேதான், "மதி வலியால் விதி வெல்ல வல்லமோ" எனச்சடாயு வாயிலாகக் கம்பர் கூறியுள்ளார்.

என் குழந்தை ஒன்று இறந்து விட்டபோது யான் மிகவும் வருந்தினேன். அப்போது பெரியவர் ஒருவர் என்னை நோக்கி, 'படித்தபிள்ளையே இப்படி வருந்தலாமா அதற்கு விதி முடிந்து விட்டது - நாம் எவ்வளவு முயலினும் அதைக் காப்பாற்ற முடியாது - இதற்குப் போய் வருந்திக் கொண்டிருக்கலாமா? எழுந்து போய் வேலையைக் கவனி - என்று ஆறுதலும் ஊக்குதலும் ஒருசேரச் செய்தார்.

இதையே தான், அன்று, சடாயு இராம இலக்குவரிடம் செய்திருக்கிறான். அதாவது - விதியைத் துணைக்கு அழைத்து அவர்கட்கு ஆறுதல் கூறியிருக்கிறான்.

மற்றும், சடாயு, வல்லவர் பலர் விதிவலியால் துன்புற்ற வரலாறுகளை நினைவுபடுத்தி அவர்களைத் தேற்றினான். இறுதியாக, இராவணன் தன்னை வாளால் வெட்டி வீழ்த்தியதைக் கூறியதும், இராமன் பொறுக்கமுடியா தவனாய், உன்னை இவ்வாறு செய்தமைக்காக இந்த உலகையே அழித்து விடுகிறேன் பார் - என்றான்:

"இக்கணம் ஒன்றில் நின்ற
ஏழினோடு ஏழு சான்ற
மிக்கன போன்று தோன்றும்
உலகங்கள் வீயு மாறும்
திக்குடை அண்ட கோளப்
புறத்தவும் தீந்து நீரின்
மொக்குளின் உடையு மாறும்
காண் என முனியும்" (206)

இவ்வாறு எல்லாவற்றையும் அழித்து விடுவேன் என இராமன் கூறியது போர் ஊக்கமாகும்.

மூன்று அகவையுடைய குழந்தை, தன் விருப்பம் நிறைவேறாவிடின், அப்பா அம்மாவை அடிக்கிறது - எதிரே உள்ளனவற்றையெல்லாம் தள்ளுகிறது - எடுத்து வீசுகிறது - கண்டதை அடிக்கிறது - உடைக்கிறது இது போர் ஊக்கம்.

பெரியவர்களுள் சிலர், தமக்கு மாறான நிகழ்ச்சிகள் நாட்டில் நடைபெறின், கண்டதை இடிக்கிறார்கள் - உடைக்கிறார்கள்; பலவகை ஊர்திகளைக் கொளுத்து கிறார்கள் - புகைவண்டித் தண்டவாளத்தைப் பெயர்க் கிறார்கள் - இன்னும் என்னென்னவோ இதுபோல் செய்கிறார்கள்.

எனவே, சடாயுவை இராவணன் வாளால் வெட்டினான் என்பதை அறிந்ததும் உலகங்கள் யாவற்றையும் அழித்து விடுவதாகச் சொன்னதும் போர் ஊக்கமே. இராமன் நிலைக்கு உலக அழிப்பு கூறப் பட்டுள்ளது.

"தனி ஒருவனுக்கு உணவு இலையெனில்
சகத்தினை அழித்திடுவோம்"

என்று பாரதி சொன்னதும் இதே நிலைதான்.

உயிர்கட்கு பதினான்கு விதமான ஊக்கங்கள் இயல்பாகவே உள்ளன என உளநூல் கூறுகிறது. இவற்றை 'இயல்பூக்கங்கள்' என்பர். ஆங்கிலத்தில் Instincts என்பர். இந்தப் பதினான்கனுள் போர் ஊக்கம் (Instinct of Combat) என்பதும் ஒன்றாகும்.

கடவுளர்கட்கே போரூக்கம் இருந்ததெனில், மக்கள் பிறவியிலுள்ள இராமனுக்கு, உலகத்தையே அழிக்கப் போவதாகச் சொன்ன போரூக்கம் இருந்ததில் வியப்பில்லை.

இராமனது சினங்கொண்ட தோற்றத்திற்கு எல்லாம் அஞ்சினவாம் - எல்லாரும் அஞ்சினராம் - தம்பி இலக்குவனும் அஞ்சினான் என்றால் மற்றவர் நிலை என்ன?

"அஞ்சினன் இளைய கோவும் அயல் உள்ளோர்க்கு
அவதி உண்டோ?" (207)

**உம் பிழை**

இவ்வாறு சினங்கொண்டு துடித்த இராமனுக்குச் சடாயு பல ஆறுதல் கூறினான்; இடித்துரைத்தலும் செய்தான்:

சீதையைத் தனியே விட்டுவிட்டு மானின் பின்னே சென்று பழி தேடிக் கொண்டீர். ஆராய்ந்து நோக்குங்கால், இது உம் பிழையேயன்றி உலகத்தின் பிழை இல்லை;

"வம்பிழை கொங்கை வஞ்சி
வனத் திடைத்தமியள் வைகக்
கொம்பிழை மானின் பின்போய்க்
குலப்பழி கூட்டிக் கொண்டீர்
அம்பிழை வரிவில் செங்கை
ஐயன்மீர் ஆயுங்காலை
உம்பிழை என்ப தல்லால்
உலகம் செய்பிழையும் உண்டோ?" (211)

*சடாயு, பின்வாங்காமல் தெளிவாக இராம இலக்குவரின் பிழையைச் சுட்டிக் காட்டியது பாராட்டத் தக்கது.*

"ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கின்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு" (190)

*என்னும் குறள் ஈண்டு எண்ணத்தக்கது.*

*இராமன் உலகங்களை யெல்லாம் அழித்து விடுவேன் என்று கூறியதால், உம் பிழையே யன்றி உலகின் பிழை யில்லை என்று சடாயு கூறினான். இதைச் சுட்டிக் காட்டியதும் இராமன் ஆறுதல் பெற்றான். பணி முடித்த சடாயுவும் உயிர் நீத்தான்.*

**ஈமக் கடன்**

*இராமன், தரைமேல் நறுமணமிக்க அகில் கட்டை களையும் சந்தனக் கட்டைகளையும் அடுக்கி, மேலே தருப்பை, மலர் முதலியன பரப்பி, சடாயுவின் உடலை நீராட்டித் தன் கைகளால் எடுத்து ஈம மேடையில் வைத்துச் செய்ய வேண்டியவற்றை எல்லாம் முறைப்படிச் செய்தான்:*

"இந்தனம் எனைய என்னக்
கார் அகில் ஈட்டத்தோடும்
சந்தனம் குவித்து வேண்டும்
தருப்பையும் திருத்திப் பூவும்

சிந்தினன் மணலின் வேதி
தீதுஅற இயற்றித் தெண்ணீர்
தந்தனன் தாதை தன்னைத்
தடக்கையான் எடுத்துச் சார்வான்'' (221)

பின்னர் தீமூட்டி எரித்து, தந்தைக்கு மைந்தன் செய்ய வேண்டிய மரபுகளை யெல்லாம் செய்து தான் குளித்து விட்டு, சடாயுவுக்கு ஆற்ற வேண்டிய நீர்க் கடனையும் இராமன் முடித்தான். சடாயு கொடுத்து வைத்தவனே.

**வேலையின் வேலை சார்ந்தான்**

பலிக்கடன் முதலிய பல வகையான மரபுச் செயல் களையும் முடித்து இராமன் நின்ற வேலையில் (நேரத்தில்), ஞாயிறானவன், சடாயு தன் குலத்தில் (சூரிய குலத்தில்) தோன்றியவ னாதலின், தானும் வருந்தி, சடாயுவுக்கு ஆற்ற வேண்டிய கடன்களை யெல்லாம் ஆற்றுவதற்காக நீரில் குளித்தான் என்று சொல்லுமாறு மேற்கே உள்ள வேலையில் (கடலில்) மூழ்கினான்:

''பல்வகைத் துறையும் வேதப்
பலிக்கடன் பலவும் முற்றி
வெல்வகைக் குமரன் நின்ற
வேலையின் வேலை சார்ந்தான்.
தொல்வகைக் குலத்தின் வந்தான்
துன்பத்தால் புனலும் தோய்ந்து
செல்வகைக்கு உரிய வெல்லாம்
செய்குவான் என்ன வெய்யோன்'' (225)

குமரன் = இராமன். குலத்தில் வந்தான் = சடாயு. வெய்யோன் = ஞாயிறான். வேலை என்பதற்கு, செயல், கடல் என்னும் பொருள்களோடு வேளை - நேரம் என்னும் பொருளும் உண்டு. 'குமரன் நின்ற வேலையின் வெய்யோன் வேலை சார்ந்தான்' என்னும் தொடர் நயமா யுள்ளது.

ஞாயிறு இயற்கையாக மேலைக் கடலில் மூழ்கியதை, தன் குலத்தில் தோன்றிய சடாயுவின் சாவு தொடர்பாக மூழ்கியதாகக் கவிஞர் தன் குறிப்பை ஏற்றிக் கூறியிருக்கும் இந்த அமைப்பு 'தற்குறிப் பேற்ற அணி எனப்படும்.

# 9. அயோமுகிப் படலம்

*அயோமுகி என்னும் அரக்கியைப் பற்றிய நிகழ்ச்சிகளைக் கூறும் படலம் இது. இரும்புபோன்ற வன்மையான முகத்தோற்றத்தை உடையவள் என்பது இப்பெயரின் பொருள். இது, சில சுவடிகளில், அயோமுகி மூக்கரி படலம் எனவும், அதோ முகிப்படலம் எனவும் பெயர் குறிப்பிடப் பட்டுள்ளது.*

**விரி இருள்**

*சடாயவுக்கு இறுதிக்கடன் செய்த பின்னர், இராம இலக்குவர் அந்திமாலையில் மேற்சென்று ஒரு மலைப் பகுதியில் தங்கினர். உடனே கரிய அரக்கர் கூட்டம் போன்ற தோற்றத்தில், துன்பம் தரும் இருட்டு எங்கும் பரவியது- அதாவது இரவு வந்தது:*

"அந்தி வந்து அணுகும்வேலை
அவ்வழி அவரும் நீங்கிச்
சிந்துரச் சென்னித்து ஆண்டுஓர்
மைவரைச் சேக்கை கொண்டார்
இந்திரற்கு அடங்கல் செல்லா
இராக்கதர் எழுந்த தென்ன
வெந்துயர்க்கு ஊற்ற மாய
விரிஇருள் வீங்கிற்று அன்றே" (1)

*சிந்துரம் = செந்நிறம். சென்னி = உச்சி. அந்திமாலையின் செந்நிறம் பட்டதால், கரிய மலையின் உச்சி செந்நிறத் தோற்றம் கொண்டது. சேக்கை = இருப்பிடம்,*

இந்திரனுக்கு அடங்காதவர்கள் அரக்கர்கள். அவர்கள் கருநிறத்தராதலின் கரிய இருளுக்கு உவமையாக்கப் பட்டனர்.

ஊற்றம் = வலிமை, எழுச்சி. இரவு துன்பத்திற்கு வலிமை தருவதாம். அதாவது — காதலரைப் பிரிந்தவர்க்கு இரவு மிகவும் வேதனை தருமாம். இராமனும் இனி அத்தகைய வேதனையை அடையப் போகிறான்.

பொதுவாக, இரவில், கள்ளரால் அச்சம், பாம்பு, புலி முதலியவற்றால் அச்சம் - இவ்வாறு பல வகை அச்சத்தால் இரவு வேதனைக்கு உரியதாகிறது. மற்றும், பிணியுற்றவர்க்கு இரவிலே பிணி மிகவும் தொல்லை தருவதாகச் சொல்வதுண்டு.

இரவு தொல்லையான தாதலால், இரவு கழிந்து ஞாயிறு தோன்றும் காலை நேரம் மக்கட்கு மகிழ்வு தருகிறது. இதனை, நக்கீரரின் திருமுருகாற்றுப்படை நூலின் முகப்பில் உள்ள

"உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடல் கண்டாங்கு" (1, 2)

என்னும் பாடல் பகுதியும் உணர்த்துகிறது. மிக்க ஆற்றல் வாய்ந்த மின் விளக்குகள் எரியும் இந்தக் காலத்திலும், விளக்கெண்ணெய் விளக்கு எரிந்த அந்தக் காலத்தில் கொடிய விலங்குகட்கு அஞ்சி, அவற்றை அணுக முடியாத வண்ணம் அச்சுறுத்தி ஓட்டுவதற்காக நெருப்பு கொளுத்திக் காட்டிக்கொண்டிருந்த அந்தக் காலத்தில், ஞாயிறு தோன்றியதும் உலகம் உவகை எய்தியது என்பது மிகவும் இயற்கையான கருத்து வெளிப்பாடாகும்.

விரி இருள் வீங்கிற்று என்பது, இரவுப் பொழுது விரைவில் முடியாமல், உரிய காலத்திற்கு மேல் நீண்டு கொண்டிருந்தது என்று கூறும் ஒரு கற்பனையாகும்.

## குவியாத தாமரை

இராமனின் கண்ணாகிய தாமரை குவியவே இல்லை யாம். அதாவது, அவன் இரவு முழுவதும் தூங்கவே இல்லை யாம். இராமனாகப் பிறவியெடுத்த திருமாலுக்குச் செந்தாமரைக் கண்ணன் என்ற பெயர் உள்ளமை ஈண்டு நினைவு கூரற் பாலது.

இதற்கு இரண்டு காரணம் கற்பித்துக் கம்பர் கவிச்சக்கரவர்த்தி என்னும் சிறப்புப் பெயருக்கு அரண் செய்துள்ளார்.

ஒன்று:— வெளியில் சென்றிருக்கும் வீட்டிற்கு உரியவர் வீடு திரும்பும் வரையும் வீடு பூட்டப் பெறாமல் திறந்தே வைக்கப்பட்டிருக்கும்- (இது அந்தக் காலத்தில்) தாமரையை இருப்பிடமாகக் கொண்ட திருமகளாகிய சீதை பிரிந்துள்ளமையால், அவளை எதிர்பார்த்து இராமனின் கண்தாமரைகுவியவில்லை.

மற்றொன்று:— மதி (நிலா) தோன்றினால் தாமரை குவியும், இப்போது சீதையின் முகமாகிய மதி தோன்றாமை யால் - காணாமையால் இராமனின் கண்தாமரை குவியவில்லை.

இரவில் குவியக் கூடிய தாமரை இந்த இரண்டு காரணங்களால் குவியவில்லையாம்-

"யாமது தெரிதல் தேற்றாம்
இன்நகைச் சனகி என்னும்
காமரு திருவை நீத்தோ
முகமதி காண்கி லாதோ
தேமரு தெரியல் வீரன்
கண்ணெனத் தெரிந்த செய்ய
தாமரை கங்குல் போதும்
குவிந்திலாத் தன்மை என்னோ" (4)

இதனாலோ அல்லது அதனாலோ - எதனால் கண்தாமரை இரவிலும் குவியவில்லை என்பதை யாம் அறியேம் - உங்களுக்குத் தெரிந்தால் சொல்லுங்கள் - என்று வினவுவது போலக் கம்பர் நம்மை வியப்பில் ஆழ்த்தியுள்ளார்.

**தம்பி கண்:**

இராமனின் கண்கள் அவன் தம்பி இலக்குவனின் கண்கள் போலவே இமைக்கவில்லையாம்

"இமைத்தில இராமன் என்னும்
புண்ணியன் கண்ணும் வன்தோள் தம்பிகண்
போன்ற அன்றே" (5)

இலக்குவன் பதினான்கு ஆண்டு காலமும் தூங்காது கண் விழித்துக் காத்துவந்தான் என்பது ஒரு கருத்து. இங்கே, இலக்குவனின் கண்கள் போலவே இராமனின் கண்களும் இமைக்கவில்லையாம்.

'இமைத்தில' என்னும் சொல் ஈண்டு கவனிக்கத்தக்கது. துயின்றில (தூங்கவில்லை) என்றோ மூடவில்லை என்றோ சொல்லாமல் 'இமைத்தில' எனப்பட்டன. இமைத்தல் என்றால் கண்ணை மூடித்திறத்தல் என்பது பொருள். இமைத்தில என்றால் கண்ணை மூடவே இல்லை என்பது பொருள். இமை கொட்டாமல் பார்த்திருந்தார் என்கிறார்களே அதுதான் இது.

கண் இமைக்கும்போது மூடுதல் என்பது, கண் ஓய்வு எடுத்துக் கொள்வதைக் குறிக்கும். கண் வலிமை குறைந்தவர்கள் அடிக்கடி இமைப்பார்கள் இமைக்காமல் இருக்கமுடியாது. இமைத்தில என்பதற்கு, நீண்ட நேரத்திற்கு ஒருமுறை மூடித் திறக்கிறது-என்று பொருள் கொள்ளலாம். இமைப்பதற்குள் என்ன நேர்ந்துவிடுமோ என அஞ்சி இலக்குவன் இமைக்காது காத்தான். அதே போல, இப்போது

இராமனும் இமைத்திலனாம். உற்று நோக்கலின் (observation) வன்மை - திண்மையை இது அறிவிக்கிறது.

**தென்றல் பாம்பு**

பிரிந்திருக்கும் இராமனுக்குத் தென்றல் காற்று தவழ்வது, கொல்லும் பாம்பு தவழ்வதுபோல் தோன்றுகிறதாம்.

> "தண் தமிழ்த் தென்றல் என்னும்
> கோளராத் தழுவும் சாரல்" (6)

என்பது பாடல் பகுதி. கம்பரின் மொழிப் பற்றை நோக்குக. தமிழ்த் தென்றலாம் - தண் தமிழ்த் தென்றலாம். தமிழ் என்னும் சொல்லுக்கு இனிமை என்னும் பொருள் உண்மையைத் 'தமிழ் தழீஇய சாயலவர்' (2060) என்னும் சீவக சிந்தாமணிப் பாடல் பகுதியாலும் அறியலாம். கோள் அரா = கொல்லும் பாம்பு.

**கருமணியில் பாவை**

மேலும் இராமன் நாணி வருந்துகிறான் : உலகைக் காக்கும் அரச குலத்தில் பிறந்த யான், என் மனைவியைக் காக்கும் ஆற்றல் உடையேன் அல்லன்; என் வலிமை நன்று! என நாணிக் கூறுகிறான்:

> "நின்று பல் உயிர்காத்தற்கு நேர்ந்த யான்
> என் துணைக் குலமங்கை ஓர் ஏந்திழை
> தன் துயர்க் கடல் தீர்க்கும் சதிர்இலேன்
> நன்று நன்று என்வலி என நாணுமால்" (16)

ஏந்திழை = பெண். சதிர் = வல்லமை. நன்று நன்று என்பது எதிர்மறைக் குறிப்பு. 'என் துணை' என்பது, வள்ளுவர் மனைவிக்குக் கூறிய 'வாழ்க்கைத் துணை' என்னும் பெயரை நினைவூட்டுகிறது.

வள்ளுவரின் படைப்பாகிய காதலன் ஒருவன், தன் கண்ணின் கருமணிப் பாவையை நோக்கிக் கூறுகின்றான்:-

என் கண்ணின் கருமணிப் பாவையே – பாப்பாவே! என் காதலியை வைத்துக் காப்பதற்கு நீ இருக்கும் இடத்தைத் தவிர வேறு பாதுகாப்பான இடம் கிடைக்கவில்லை; எனவே, நீ உன் இடத்தைக் காலி செய்து விடு – அப்புறம் போய்விடு. அந்த இடத்தில் என் காதலியை வைத்து விழிப்புடன் காக்க வேண்டும் – என்று கூறுகிறான்.

> "கருமணியிற் பாவாய் நீ போதாய் யாம் வீழும்
> திருநுதற்கு இல்லை இடம்" (1123)

பாவை = பாப்பா: போதாய் = போய்விடு. வீழும் = விரும்புகின்ற. திருநுதல் = அழகிய நெற்றியை உடைய பெண் (காதலி).

"அவனா – கண்ணில் இருக்கும் பாப்பாவைக் கூடக் கொண்டு போய் விடுவானே"– என்னும் உலக வழக்கு மொழி, யாராலும் கொண்டு போக முடியாதபடி - கொண்டு போக முடியாத இடத்தில் பாப்பா உள்ளது என்பதை அறிவிக்கும். அந்த இடத்தில் தன் காதலியை வைத்துக் காக்கப் போகின்றானாம்.

நிலைமை இவ்வாறிருக்க, மனைவியைக் காக்க முடியாமல் இழந்து விட்ட இராமன் வருந்துவதில் வியப்பு இல்லை யன்றோ?

**நீள்வதற்கு ஏது**

இராமன் சீதையைப் பிரிந்த துயரால் மேலும் இன்னலுற்றுத் திங்கள் முதலியவற்றை நொந்து பலவாறு புலம்பலானான்.

இரவு விரைவில் கழியாமல் நீண்டு கொண்டே போகின்றதாம். அதனால், தம்பியை நோக்கி, இலக்குவா! நீ நாள் தோறும் இரவு முழுதும் கண் விழித்துக் காப்பாயே- இவ்வளவு காலமாய், ஓர் இரவு, இன்றுள்ளது போல் மிகவும்

*நீண்டிருந்த துண்டோ? இருந்திராது. ஆயின், இன்று மட்டும் இரவு நீள்வதற்குக் காரணம் என்ன என்று வினவுகிறான்:*

"வென்றி வேற்கை இளவலை மேலெலாம்
ஒன்று போல உவப்பில நாள்கள்தாம்
நின்று காண்டி யன்றே நெடுங் கங்குல்தான்
இன்று நீள்வதற்கு ஏது என் என்னுமால்" (19)

*மேல் எலாம் = முன்பு எல்லாம். இன்று நீள்வதால் 'நெடுங்கங்குல்' என்றான் - கங்குல் = இரவு.*

**நீண்ட மதி**

*இராமன் நிலவைப் பார்த்து வினவுகிறான் : நிலவே! முன்பு சீதை இருந்ததால், அவள் முகத்திற்கு நாணி நாள்தோறும் தேய்ந்து கொண்டிருந்தாய். இப்போது அவள் இல்லாததனால், தேய்தல் இன்றி முழுத் தோற்றத்துடன் நீண்ட நேரம் இருக்கின்றாய் போலும் - என்றான்.*

"நீண்ட மாலை மதியினை நித்தமும்
மீண்டும் மீண்டும் மெலிந்தனை வெள்குவாய்
பூண்ட பூணவள் வாள்முகம் போதலால்
ஈண்டு சால விளங்கினை என்னுமால்" (20)

**நாடு கடத்தல்**

*ஞாயிறானவன், தன் குலத்து இராமன் மனைவியை இராவணன் கடத்தியதால் ஏற்பட்ட பழிக்கு வெட்கி, நாடு கடந்தானோ? என்று ஐயுறுகிறான் இராமன்.*

"மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி" (1118)

*என்னும் குறள் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது. வெள் குவாய் = வெட்கப் படுவாய். பூணவள் = சீதை*

**நாடு கடத்தல்**

ஞாயிறானவன், தன் குலத்து இராமன் மனைவியை இராவணன் கடத்தியதால் ஏற்பட்ட பழிக்கு நாணி, நாடு கடந்தானோ! — என ஐயுறுகிறான் இராமன்.

"நீள் நிலாவின் இசைநிறை தன்குலத்து
ஆணி ஆய பழிவர அன்னது
நாணி நாடு கடந்தன னாம் கொலோ
சேண் உலாம் தனித் தேரவன் என்னுமால்" (21)

நிலாவே நீண்ட நேரமாய் உள்ளது. அதாவது இரவு நீடிக்கிறது. பொழுது விடிந்து ஞாயிறு தோன்ற வில்லை. எனவே, ஞாயிறு நாடு கடந்து விட்டானோ என்கிறான்.

தன் குலம் = ஞாயிறு குலம், இசை நிறை குலம் = புகழ் நிறைந்த குலம். நீள் நிலா = நீண்ட நேரம் உள்ள நிலா. நிலாவின் இசை = நிலாவைப் போன்ற புகழ். புகழ் வெண்ணிறமாகச் சொல்லப்படும் என்னும் விளக்கத்தை வேறு காண்டங்களின் விளக்கத்திலும் காணலாம். நிலா வெண்ணிறமானது — வெண் திங்கள் எனப்படும். நிலாப் போன்ற புகழ் என்பதற்கு, வெண்ணிறமாகக் கற்பனை செய்து கூறப்படும் புகழ் என்பது கருத்து.

ஆணி ஆய பழி = வன்மையான — முதன்மையான பெரிய பழி. ஆணி முத்து என்பது போல் ஆணிப்பழி எனப் பட்டது. ஒருவர் வீட்டுப் பெண்ணை இன்னொருவர் கடத்திச் செல்வது, மிகவும் நாணுதற்கு உரிய பெரும் பழியல்லவா?

சேண் உலாம் தேரவன் = வெகு தொலைவு விரைந்து செல்லக் கூடிய தேரை உடைய ஞாயிறு. அதனால், விரைந்து நாடு கடந்து வெகு தொலைவிற்குச் சென்று விட்டானோ?

பெரும் பழிக்கு ஆளானவர்கள் ஊரை விட்டு ஓடி விடுவதை நேரிலும், நாட்டை விட்டு ஓடி விடுவதை வரலாறு-செய்தித்தாள் வாயிலாகவும் அறிகிறோம். ஈண்டு இது நினைவு கூரத் தக்கது.

**சிறை இட்டனனே**

*ஒருவேளை, இராவணன், ஞாயிற்றானையும் சிறையில் இட்டனனோ எனப் புலம்புகிறான் இராமன்:*

"கட்டிவாள் அரக்கன் கதிரோனையும்
இட்டனன் கொல் இருஞ்சிறை என்னுமால்" (22)

*கதிரோன் = ஞாயிறு. சீதையையும் பலதேவர்களையும் சிறையிட்டதல்லாமல் கதிரோனையும் சிறை இட்டனனோ என்னும் பொருள் தோன்றச் செய்தலின், 'கதிரோனையும்' என்பதில் உள்ள 'உம்' இறந்தது தழுவிய எச்ச உம்மை யாகும்.*

**சிலம்பும் - சிலம்பும்**

*அலை ஒலிக்கும் பாற்கடலை விட்டு, வண்டு ஒலிக்கும் மலர் அணிந்த கற்புக் கடலாகிய சீதையின் நினைப்பிலே ஆழ்ந்திருக்கும் இராமனுக்கு, பொழுது புலரும் வேளை நெருங்கப் பறவைகள் ஒலிக்கும் - பொழில்கள் ஒலிக்கும் - நீரும் ஒலிக்கும். ஆனால், இனி அவனுடைய அம்புகள் ஒலித்து எய்யப்படாவேல், இராமனுக்கு உயிர் நிலைப்பதரிது:*

"வெள்ளம் சிலம்பு பாற்கடலின் விரும்பும்
துயிலை வெறுத்து அளியும்
கள்ளும் சிலம்பு பூங்கோதை
கற்பின் கடலில் படிவார்க்குப்
புள்ளும் சிலம்பும் பொழில் சிலம்பும்
புனலும் சிலம்பும் புனைகோலம்
உள்ளும் சிலம்பும் சிலம்பாவேல் உயிர்
உண்டாகும் வகை உண்டோ" (28)

*சிலம்புதல் = ஒலித்தல். அளி = வண்டு; கள் = வண்டு. நான்காம் அடியில் உள்ள. 'சிலம்பும்' என்பதனைச் சில் அம்பும் எனப் பிரித்துக் கொள்ளல் வேண்டும்.*

சிலம்பு என்னும் சொல் ஒரே பொருளில் பின்னால் தொடர்ந்து வந்திருக்கும் இந்த அமைப்பு 'சொல் பின் வரு நிலை அணி' எனப்படும்.

**இணைகள்**

மயில், மான், யானை ஆகியவை ஆணும் பெண்ணுமாய் இணையாக இயங்குவதை நோக்கிய இராமன் சீதையை எண்ணி வருந்தினானாம்:

"மயிலும் பெடையும் உடன் திரிய,
மானும் கலையும் மருவி வரப்
பயிலும் பிடியும் கடக்ரியும் வருவ
திரிவ பார்க்கின்றான்" (29)

கலை = ஆண் மான். பிடி பெண் யானை. கடகரி = மதம் பொழியும் ஆண்யானை. இவ்வாறு பல இலக்கியங்களிலும் கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

இவ்வாறு வருந்திய இராமனை இலக்குவன் ஆறுதல் கூறி அமைதி செய்தான். பின்னர் இருவரும், மலை, ஆறு முதலியன தாண்டி, பதினெட்டு யோசனை தொலைவு நடந்து சென்று ஒரு சோலையை அடைந்தனர்.

**அறிவிலார் சிந்தை**

அப்போது இரவு வந்தது. தெளிந்த அறிவு இல்லாதாரின் உள்ளம்போல், பத்துத் திக்குகளிலும் இருள் பரவியது.

"தெளிந்த அறிவு இல்லவர் சிந்தையின் முந்தி
இருண்டன மாநிலம் எட்டும் இரண்டும்" (36)

எட்டுத் திக்குகளோடு மேல் பகுதியும் கீழ்ப் பகுதியு மாகிய இரண்டும் சேரத் திக்குகள் பத்தாம்.

ஞாயிறோ திங்களோ வேறு செயற்கை விளக்குகளோ இல்லாவிடின் இருட்டாய் இருக்கிறது. இதனால், பரந்த

விண் வெளி இயற்கையாகக் கருமையாயிருக்கும் என்பது புலனாகிறது.

ஒரு கூடம் இருட்டாய் இருக்கிறது. அங்கே ஒரு விளக்கு வைத்தால் வெளிச்சமாயிருக்கிறது. கூடத்திலுள்ள தூண்களுக்குப் பின்னால் இருக்கும் இருட்டை நிழல் என்கிறோம். தூணாலோ வேறு பொருளாலே வெளிச்சம் மறைக்கப்பட்டிருக்கும் இருட்டுதான் நிழல் எனப்படுவது என்பது விளங்கும்.

இராம இலக்குவர் பளபளக்கும் ஒரு பளிங்கு அறையில் தங்கினர். இராமன், பருகுவதற்குத் தண்ணீர் கொணரும்படி இலக்குவனுக்குப் பணித்தான். இலக்குவன் நீர் கொணரத் தனியே சென்ற இடத்தில் அயோமுகி என்னும் அரக்கி கண்டு அவன் மேல் காதல் வலை வீசினாள்:

"அங்கு அவ்வனத்துள் அயோமுகி ஆன
வெங்கண் அரக்கி விரும்பினள் கண்டாள்" (39)

**யாவள் அடீ**

இலக்குவன், அருவருப்பான தோற்றம் உடைய அந்த அரக்கியை நோக்கி, காட்டிலே இருட்டு நேரத்திலே இங்கு வந்த நீ யாரடீ என்று வினவினான்:

"மாஇயல் கானின் வயங்கு இருள் வந்தாய்
யாவள் அடீ உரைசெய் கடிது என்றான்" (51)

கடிது = விரைவாக. அவளை உடனே விரட்டுவதற்காக விரைவில் யாரெனக் கூறு என்றான்.

**அறிமுகம்**

அன்போடு உன்னை அடைய வந்த அயோமுகி நான் என்றாள்:

"ஏசல்இல் அன்பினளாய் இனிது உன்பால்
ஆசையின் வந்த அயோமுகி என்றாள்" (52)

**தொடா முலை**

மேலும் கூறலானாள்: அழகிய வீரனே! இதுவரையும் யாரும் தொடாத என் முலைகளோடு உன் மார்பை இணைத்துத் தழுவி எனது உயிரை விரைவில் மீட்டுத் தருக:

"பின்னும் உரைப்பவள் பேரெழில் வீரா
முன்னம் ஒருத்தர் தொடா முலையோடு உன்
பொன்னின் மணித்தட மார்பு புணர்ந்து என்
இன்னுயிரைக் கடிது ஈகுதி என்றாள்" (53)

தொடா முலை என்பதனால், நான் கன்னிமையோடு இருக்கிறேன் என்பதாகக் கூறுகிறாள். நீ அருள் செயா விடின் என் உயிர்போய் விடும் - அதனால், கடிது (விரைந்து) ஈகுதி (உயிரைக் காப்பாற்றிக் கொடு) என்கிறாள்.

பெண்ணின் கன்னிமையை அறிவிக்க 'ஒருத்தர் தொடா முலை' என்று அயோமுகி சொன்னதாகக் கம்பர் கூறியுள்ளார். சிவப்பிரகாச அடிகளார் தம் பிரபுலிங்க லீலை நூலில், அல்லமர் என்னும் அருளாளரின் காமம் தோயாத தூய்மையை அறிவிக்க:

"படா முலை படாத தண் சோதி" (19:53)

என்று குறிப்பிட்டுள்ளார். தண்சோதி = அல்லமர். அவர் சோதி வடிவானவராம் – ஆனால், தண்ணிய - குளிர்ந்த சோதி வடிவினராம், 'படா முலை படாத' என்பதில் முதலில் உள்ள படா என்பதற்குத் 'தளராத' என்பது பொருள்.

பின், போய் விடு - இல்லையேல் 'நின் உடல் கூறிடும் என்றான், இலக்குவன்.

அயோமுகி மீண்டும் வற்புறுத்தினாள். நீ போகவில்லை யெனில் உன் காதுகளையும் மூக்கையும் அறுப்பேன் என்றான் (57)

பின்னர்ச் சிறிது நேரம் எண்ணிப் பார்த்து, அயோமுகி, மோகன மந்திரத்தால் இலக்குவனை மயக்கி வான் வழியாகத் தூக்கிக்கொண்டு சென்றாள்.

**சுந்தரன்**

இலக்குவனுடன் வான் வழிச் செல்லும் அயோமுகி, முருகன் ஊர்ந்து செல்லும் மயில்போல் காணப்பட்டாள்.

"வெந்திறல் வேல்கொடு சூர் அடும் வீரச்
சுந்தரன் ஊர்தரு தோகையும் ஒத்தாள்" (60)

முருகன் தனது வேல் படையால் சூரனை அழித்தவன். பின் அவனை மயிலாக்கி ஊர்தியாகக் கொண்டான். இங்கே முருகன் போல் இலக்குவன் - மயில் போல் அரக்கி எனக் கொள்ளல் வேண்டும்.

முருகன் 'சுந்தரன்' எனப்பட்டான். சுந்தரன் = அழகன். முருகு என்னும் சொல்லுக்கு இளமை - அழகு என்னும் பொருள் உண்டு. எனவே, முருகன் என்னும் சொல்லுக்குப் பதிலாகச் சுந்தரன் என்னும் சொல் அமைந்துள்ளது.

ஈண்டு, திருமுருகாற்றுப் படையின் பிற்சேர்க்கையாக உள்ள

"என்றும் இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே"

என்னும் பகுதி ஒப்பு நோக்கத்தக்கது.

**இராமனது கலக்கம்**

தம்பி போனவன் எவ்வளவோ நேரமாகியும் இன்னும் வரவில்லையே. காட்டில் நல்ல தண்ணீர் கிடைக்கவில்லையோ? அல்லது வேறு காரணமோ? விரைந்து செயல்படக் கூடியவனாயிற்றே - வாராமல் இருக்கமாட்டானே- அங்ஙனமிருக்க, ஏன் இன்னும் வரவில்லை என்று இராமன் லக்க முற்றான்:

"வெய்தாகிய கானிடை மேவருநீர்
ஐது ஆதலினோ அயல் ஒன்றுளதோ
நொய்தாய் வரவேகமும் நொய்திலனால்
எய்தாது ஒழியான் இது என்னை கொலாம்!" (63)

*ஐது = நுண்மையானது - குறைவானது - அரியது. வெப்ப மிகுந்த காடாதலின் தண்ணீர் கிடைக்க வில்லையோ என எண்ணினான். வேறு காரணமோ எனில், அரக்கர் களுடன் போர் புரிகின்றானோ - போரில் இராவணனால் இறந்து விட்டிருப்பானோ என்றெல்லாம் எண்ணத் தோன்றியதில் வியப்பில்லை.*

*ஒரு வேளை, அவன் சொல்லியும் யான் கேளாமல் மானை தொடர்ந்து சென்றதை எண்ணி வருந்தி உயிர் விட்டிருப்பானோ?* (66)

*இந்த இருளில் அவன் எனக்குக் கண்ணாய் இருந்தான் இப்போது வேறு கண் இல்லேன்:*

"உண்டாகிய கார் இருளோடு ஒருவென்
கண்தான் அயல் வேறொரு கண் இலெனால்" (67)

**உலகு கொள்ளாது**

*பிள்ளைகளுக்குப் பிள்ளையாய், பெரியவருக்குப் பெரிய வராய் இருக்கும் இலக்குவா! என்னதான் இருப்பினும், நீ என்னை விட்டுப் போயிருக்கும் உன்னை உலகம் ஏற்றுக் கொள்ளாது. தவறு! அந்தோ மிக மிகக் கொடிது என்றான் இராமன்:*

"பிள்ளாய் பெரியாய் பிழை செய்தனையால்
கொள்ளாது உலகு உன்னை இது ஓ கொடிதே" (68)

*இது பாடல். ஈண்டு,*

"எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு
கொள்ளாத கொள்ளாது உலகு" (470)

என்னும் குறட்பா ஒப்பு நோக்கத் தக்கது.

**முன்னவனாய்ப் பிறப்பான்**

*நல்லூழ் இருக்குமாயின், தம்பி மீண்டும் பிறவி எடுப்பானாயின், எனக்கு அவன் அண்ணனாகப் பிறக்க வேண்டும் என்று கூறிக் கொண்டே வாளை எடுத்துத் தன்னை மாய்த்துக் கொள்ள முயன்றான்:*

"அறப்பால் உளதேல் அவன் முன்னவனாய்ப்
பிறப்பான் உறின் வந்து பிறக்க எனா
மறப்பால் மடிவாள் கொடு மன் உயிரைத்
துறப்பான் உறுகின்ற தொடர்ச்சியின் வாய்" (77)

*அடுத்த பிறவியில் இலக்குவன் அண்ணனாகப் பிறக்க வேண்டுமெனில், அடுத்த பிறவியில் இராமன் தம்பியாகப் பிறப்பான் என்பதுதானே போதரும்.*

*இதற்குப் பொருத்தமாகக் கதை சொல்லப்படுகிறது: அடுத்த கிருட்ணாவதாரத்தில், இராமன் கிருட்ணனாகவும், இலக்குவன் கிருட்ணனின் அண்ணனாகிய பலராமனாகவும் பிறந்தார்களாம்.*

*அதாவது, இலக்குவன் இப்பிறவியில் தம்பியாக இருந்து அண்ணனாகிய தனக்குத் தொண்டு செய்தல் போலவே, மறுபிறவியில், நான் அவனுக்குத் தம்பியாக இருந்து தொண்டு செய்ய வேண்டும் என்று கூறியதாகக் கருத்து கொள்ளல் வேண்டும்.*

*இராமன் வாளால் தற்கொலை செய்துகொள்ள முயன்றானாம். இது ,அளவு மீறிய விரைவுச் செயலாகும்- அவசரப்பட்ட முடிபாகும் அல்லவா?*

**மூக்கரிவு**

இந்த நேரத்தில், இலக்குவன் தன் மெய்யுணர்வால் அயோமுகியின் பிடியிலிருந்து விடுபட்டு, அவரது மூக்கை அரிந்தான். அதனால் அவள் அலறிய ஓசை இராமனுக்குக் கேட்டது:

“பேர்த்தான் நெடு மாயையினிற் பிரியா
ஈர்த்தான் அவள் நாசி பிடித்து இளையோன்
சோர்ந்தாள் இடுபூசல் செவித் துளையில்
சேர்ந்து ஆர்தலுமே திருமால் தெருளா” (78)

சூர்ப்பணகையின் மூக்கை அரிந்த கத்தி இப்போதும் வேலை செய்திருக்கிறது. அயோமுகி அரற்றிய ஒலி திருமாலாகிய இராமனின் செவிக்குள் புகுந்தது.

தண்ணீருக்குப் போன இடத்தில் நிகழ்ந்த இந்தக் காதல் காட்சி போன்ற ஒன்று, சிலப்பதிகாரம் - காடுகாண் காதையிலும் இடம் பெற்றுள்ளது.

கோவலன் காட்டு வழியில் கவுந்தியையும் கண்ணகி-யையும் ஒரு பால் இருக்கச் செய்து தண்ணீர் கொணரச் சென்றஇடத்தில், அக் காடுறை தெய்வம் வயந்த மாலையின் வடிவில் வந்து கோவலனை மயக்கிற்று, கோவலன் உடனே பாவை (கொற்றவை) மந்திரத்தை உருவேற்றியதும் அத்தெய்வம் போய்விட்டது.

இராமாயணக் கதையில், காதல் கொண்டவள் அரக்கி யாதலாலும் காதல் கொள்ளப்பட்டவன் அரச குமாரன் ஆதலாலும் மூக்கரியும் ‘திருப்பணி’ நடைபெற்றது. சிலம்பில், காதல் கொண்டது காடுறை சிறு தெய்வ-மாதலாலும் காதல் கொள்ளப் பட்டவன் எளிய குடிமகனாகிய கோவலனாதலாலும் மூக்கரியும் திருப்பணி நடைபெற வில்லை.

ஒலி வந்த பக்கம் நோக்கி இராமன் விரைந்து சென்றான். இலக்குவனைக் கண்டதும், இழந்த கண்ணை மீண்டும் பெற்றாற் போன்ற மகிழ்ச்சி எய்தினான்.

**சிந்திய கண்**

"சிந்திய நயனம் வந்தனைய செய்கையான்" (83)

என்பது பாடல் பகுதி. விசுவாமித்திரன் தயரதனிடம் வந்து இராமனை அனுப்பும் படிக் கேட்டபோது, தயரதன், கண் இல்லாதவன் கண்ணைப் பெற்று மீண்டும் இழந்தாற் போன்ற துன்பம் எய்தினானாம்:

"கண்ணிலான் பெற்று இழந்தா லெண உழந்தான்
கடுந்துயரம் கால வேலரன்"

எனக் கம்பரே அயோத்தியா காண்டத்தில் பாடியுள்ளார். இங்கே, இராமன் பெற்ற கண்ணை இழந்து மீண்டும் பெற்றவன் போல் ஆனான் எனக் கூறியுள்ளார்.

**பால் பிலிற்றும் ஆ**

கண்ணீர் ஒழுக இராமன் கனிவுற்று, கன்றினைப் பிரிந்த பசு மீண்டும் கன்றைப் பெற்றது போன்ற மகிழ்வெய்தினான்:

"ஊற்றுறு கண்ணின் நீர் ஒழுக நின்றவன்
ஏற்றிளங் கன்றினைப் பிரிவுற்று ஏங்கி நின்று
ஆற்றலது அரற்றுவது அரிதின் எய்திடப்
பால்துறும் பனிமுலை ஆவின் பான்மையான்" (84)

ஆற்றலது = பிரிவைத் தாங்க முடியாதது. அரற்றுவது = கதறுவது. அரிதின் எய்திடல் - எப்படியோ அரிதாக வந்து சேர்தல் பால்துறும் பனிமுலை = பால் பீய்ச்சும் காம்பு மடி.

இலக்குவனைப் பிரிந்த இராமனுக்கு, கன்றைப் பிரிந்த பசு ஒப்புமை யாக்கப்பட்டுள்ளது. பசு அடைந்த துயரத்தினும்

மிக்க துயரத்தை இராமன் அடைந்ததாகக் கம்பர் பல பாடல்களில் விவரித்துள்ளார்.

**கண்ணீர் முழுக்கு**

இராமன் இலக்குவனைப் பலமுறை தழுவினானாம்; தன் கண்ணீர்ப் பெருக்கால் அவனது கனக மேனியை முழுக்காட்டினானாம்:

"தழுவினன் பலமுறை தாமரைக் கண்ணின்நீர்
கழுவினன் ஆண்டு அவன் கனக மேனியை" (85)

நடந்ததைக் கூறுமாறு இராமன் வினவினான். அயோமுகி என்னும் அரக்கி தன்னை வளைத்தது, அவளுடைய மூக்கு, காது, முலை ஆகியவற்றை அரிந்தது முதலாக அனைத்தையும் அறிவித்தனன் இலக்குவன்.

இராமன் தம்பியை மிகவும் பாராட்டி வாழ்த்தினான். இருவரும் பொழுது புலர்தலை எதிர்நோக்கி யிருந்தனர்.

இந்நிலையில் இராமன் சீதையை நினைந்து மிகவும் வருந்தினான்.

**உருவெளித் தோற்றம்**

காடு முழுவதும் எங்கு நோக்கினும் எதை நோக்கினும் சீதையின் உருவமே தெரிகிறதாம்: இதற்கு உருவெளித் தோற்றம் என்பது பெயர்;

"கானகம் முழுவதும் கண்ணின் நோக்குங்கால்
சானகி உருவெனத் தோன்றும் தன்மையே" (96)

பாரதிதாசன் 'அழகின் சிரிப்பு' என்னும் நூலில், இயற்கை அழகுக் காட்சி என்னும் பெண்ணாள் எங்கு பார்க்கினும் தெரிந்தாளாம் - என்னும் பொருளில்,

"தொட்ட இடமெல்லாம் கண்ணில் தட்டுப்பட்டாள்"

என்று பாடியுள்ளார், 'நாடும்பொழிலிலும்,ஆடும் புனலிலும், தேடும் பொருளிலும் அவளே காணப்படுகிறாள் என்று காதலன் கூறுவதாகவும் அவர் பாடியுள்ளார்.

"கண்துயில் இன்றியும் கனவு உண்டாகுமோ" (98)

என்பது பாரதியார் பாடல்.

மேலும் கூறுகிறான்; கனவு கண்டால் கனவில் அவளைக் காணலாம். கண் தூங்கினால் அல்லவா கனவு காண முடியும்?

## கொடிய கங்குல்

இரவு விரைவில் விடிய வில்லையே! முடிய வில்லையே! இரவு அவளுடைய கண்களிலும் நீண்டதாய் இருக்கும் போலும்!

"கண்ணினும் நெடியதோ கொடிய கங்குலே" (99)

பெண்களுக்குக் கண் நீண்டிருப்பது ஓர் அழகாம். காது வரை கண் நீண்டிருப்பதாகக் கம்பராமாயணம் உட்படப் பல இலக்கியங்களில் கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

சிவன் மனைவியாம் உமாதேவிக்கு 'விசாலாட்சி' என்னும் பெயர் ஒன்றுண்டு. கஞ்சி காமாட்சி - காசி விசாலாட்சி மதுரை மீனாட்சி - என அடுக்கிச் சொல்வர். விசால அட்சி = விசாலமான - பரந்த கண் உடையவள் என்பது இதன் பொருள். குறுகிய நோக்கின்றிப் பரந்த நோக்கு - பரந்து விரிந்த அருள்நோக்கு என்னும் பொருளை இப்பெயர் உள்ளடக்கியிருக்கிறது. இதைப் பொதுவாக எல்லாப் பெண்கட்கும் ஏற்றிக் கூறுவது மரபாய் விட்டது.

## ஞாயிறு தோற்றம்

தனது (சூரிய) குலத்தவனான இராமன் இரவு நீட்டிப்பதாக வருந்துகிறானே என்று இரங்கி, நாம் விரைவில் சென்று இருளைப் போக்கி அவனுக்கு ஆறுதல் உண்டாக்கு

வோம் என்றெண்ணி வந்தவன்போல் கதிரவன் தோன்றி னானாம்:

"இன்னது இன்னது பன்னி ஈடுஅழி
மன்னவர் மன்னவன் மதி மயங்கினான்
அன்னது கண்டனன் அல்கினான் எதை
துன்னிய செங்கதிர்ச் செல்வன் தோன்றினான்" (101)

பன்னி = பன்னுதல் = திரும்பத் திரும்பச் சொல்லுதல். பன்னிப் பன்னிப் பேசினான் என்னும் உலகு வழக்கு காண்க, அல்குதல் = கலங்குதல், செங்கதிர்ச் செல்வன் = ஞாயிறு.

இயற்கையாக ஞாயிறு தோன்ற, இராமனுக்கு ஆறுதல் உண்டாக்கத் தோன்றியதாகப் புலவர் தம் குறிப்பை ஏற்றிச் சொல்லியுள்ள இந்த அமைப்பு 'தற்குறிப்பேற்ற அணி' எனப்பெறும்.

# 10. கவந்தன் வதைப் படலம்

கவந்தன் என்னும் அரக்கனை வதைத்தது பற்றிய படலம் இது, வேறு ஓலைச் சுவடிகள் சிலவற்றில் கவந்தப் படலம், கவந்தன் படலம், கவந்த வதைப் படலம், கவந்தன் மோட்சப் படலம் என்றெல்லாம் இப்படலத்திற்குப் பெயர்கள் தரப்பட்டுள்ளன.

கவந்தம் என்பது தலையற்ற உடம்பை - முண்டத்தைக் குறிக்கும். இவனது தலை வெளியில் தெரியாமல் வயிற்றுக் குள்ளேயே இருப்பதால், தலையற்ற முண்டம் போன்ற தோற்றத்தினை உடையவனாயிருந்ததால் இவனுக்குக் கவந்தன் என்னும் பெயர் ஏற்பட்டது.

இவன் ஒரு முனிவரின் சாபத்தால் அரக்க உரு பெற்றானாம். ஒருநாள் இவன் இந்திரனை எதிர்த்தபோது, அவன் இவன் தலையை உள்ளே வயிறு வரை செல்லும்படி அழுத்தி விட்டான். பின், மிகவும் நீளமான இரண்டு கைகளைப் பெற்றானாம். அந்தக் கைகளை விரித்து நீட்டி மடக்கி ஒன்று சேர்க்கும்போது இடையிலே அகப்பட்ட உயிர்களையெல்லாம் தின்று விடுவானாம். இராம இலக்குவர் இவன் இருந்த காட்டையடைந்த போது, அவ்வாறே அவர்களையும் மடக்கி உண்ணத் தொடங்கிய போது, இராமன் இவனுடைய இரண்டு தோள்களையும் வெட்டி விட்டானாம். பின்னர் இந்த உடலால் இறந்த வனாகி, இராமன் கைப்பட்ட புண்ணியத்தால் பழைய உருபெற்று இராமனை வாழ்த்திச் சென்றானாம்.

இருவர் சண்டையிட்டுக் கொள்ளும்போது, ஒருவர் தம்மினும் வலி குறைந்தவரை நோக்கி, 'தலையில்'

அடித்தேனேயானால் தலை வயிற்றுக்குள் போய்விடும்' என்று சொல்வதுண்டு. அவ்வாறே கவந்தன் நிலை ஆயிற்று.

ஒருவர் மற்றொருவரைக் குறிப்பிட்டு, அவனுக்கு உடம்பெல்லாம் வயிறு - உடம்பெல்லாம் வாய் என்று கேலி பேசுவதுண்டு அவ்வாறே, கவந்தனுக்கு, பற்களோடு கூடிய வாய் வயிற்றில் இருந்ததாம். இது கதைச் சுருக்கம். இனிப் பாடலுக்குள் புகுவாம்:-

கவந்தன் வதைப்படலத்தின் முதல் பாட்டிலேயே கம்பர் சக்கைப் போடு போட்டுவிட்டார். அது வருக:-

**பொறை போற்றல்**

பொறுமைக்குப் பேர் போன நிலமே, சீதையின் பொறுமையைக் குறித்து, பொறை என்றால் இது அல்லவா பொறை - பொறை என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும் - என்று போற்றக் கூடிய அளவு பொறுமையுடைய சீதையை அலைந்து, தேடிக் கிடைக்காமையால் தாங்களும் புலம்புவதுபோல் ஒலி எழுப்பிக் கொண்டு பறவைகள் கூடு களிலிருந்து வெளிப்புறப்பட்டுப் போகும் விடியலில் இராம இலக்குவர் விரைந்து வழி கடந்து கொண்டிருந்தனர்.

"நிலம்பொறை ஈதென நிமிர்ந்த கற்பினாள்
நலம்பொறை கூர்தரு மயிலை நாடிய
அலம்புறு பறவையும் அழுவ வாமெனப்
புலம்புறு விடியலில் கடிது போயினார்" (1)

கற்பினாள், மயில் = சீதை. நிலமானது சீதையினது பொறுமையைப் போற்றுவதாகச் சொல்வது ஒரு வகைக் கற்பனையான இலக்கிய மரபு.

திருவள்ளுவர் பொறையுடைமை என்னும் தலைப்பின் தொடக்கத்திலேயே, பொறுமைக்கு நிலத்தை உவமையாக்கி,

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை" (151)

என்று பாடியுள்ளமை ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது.

அடுத்து, — இருள் கழிந்து ஞாயிறு தோன்றத் தொடங்கிய நேரத்தில் பறவைகள் இரைச்சலிட்டுக் கொண்டு கூடுகளிலிருந்து இரை தேட வெளியே புறப்பட்டன; அந்த இரைச்சல், சீதை கிடைக்காமையால் பறவைகளும் அழுது புலம்புவதாகத் தோன்றின எனக் கம்பர் தம் குறிப்பை ஏற்றிக் கூறியுள்ளார். இந்த அமைப்பு தற்குறிப்பேற்ற அணியாகும்.

**உயிர்களின் நிலை**

இவர்கள் போகும் வழியில் கவந்தன் இருகைகளையும் நீட்டி மடக்கி அகப்படச் செய்த உயிர்கள், திறமை அற்ற அரசனின் நாட்டு மக்கள் படுவது போன்ற துன்பம் எய்தினவாம்.

"மரபுளி நிறுத்திலன் புரக்கும் மாண்பிலன்
உரனிலன் ஒருவன்நாட்டு உயிர்கள் போல்வன
வெருவுவ சிந்துவ குவிவ விம்மலோடு
இரிவன மயங்குவ இயல்பு நோக்கினர்" (4)

மரபுளி = முறைப்படி. உரன்இலன் = வலிமையற்றவன். முறையுடன் இயங்கிக் காக்க முடியாத வலிமையற்ற வேந்தனின் குடிமக்களின் நிலைமையாவது:-
வெருவுவ = அஞ்சி நடுங்கும்.
சிந்துவ = அங்கும் இங்குமாகச் சிதறிப் போகும்.
குவிவ = பாதுகாப்பான ஓரிடத்தில் வந்து குவிந்துவிடும்.
விம்மலோடு இரிவன = விம்மி விம்மி நாட்டைவிட்டு ஓடும்.
மயங்குவ = செய்வ தறியாது மயங்கும்.

இவ்வளவும் அந்தக் காலத்தினும் இந்தக் காலத்தில் சில நாடுகளிலும் நடைபெறுகின்றன.

கவந்தனின் கைகளுக்குள் அகப்பட்ட உயிர்கள் இவ்வாறு துன்புறுவதை இராம இலக்குவர் நோக்கினர்.

கவந்தன் கைக்குள் இராம இலக்குவரும் அகப்பட்டுக் கொண்டனர். இருகைகட்கு இடையிலே ஒரு போர் நடப்பது போன்ற நிலையைக் கண்ட இராமன், அரக்கர் போருக்கு வந்து விட்டனர்; கிட்டத் தட்ட சீதை இருக்கும் இடம் அதாவது இராவணனது ஊர் அண்மையில்தான் இருக்கக் கூடும் என்றான் (8)

**அறிவாளி தம்பி**

இலக்குவன் இராமன் கூறியதை மறுத்து, இராவணன் முதலிய அரக்கர் போருக்கு வரின், போர் முரசு ஒலிக்கும் - சங்கு ஊதப்படும் - ஒன்றும் இல்லையாதலின், இது போர் அன்று; இதில் ஏதோ வேறொன்றுளது என்றான்:

"முற்றிய அரக்கர்தம் முழங்கு தானையேல்
எற்றிய முரசொலி ஏங்கும் சங்குஇசை
பெற்றில தாதலின் பிறிதொன் றாம்எனாச்
சொற்றனன் இளையவன் தொழுதுமுன் நின்றான்" (9)

இத்தகு செய்கையால் இலக்குவன் பெரிய அறிவாளி யாகக் காணப்படுகின்றான். ஆனால் அண்ணனைத் தொழுகிறான்.

**வயிற்றிலே வாய்**

கம்பர் சில பாடல்களில் கவந்தனின் தோற்றத்தைக் கட்டுரைத்துக் கற்பனை செய்கிறார்:

"வயிற்றிடை வாய் எனும் மகர வேலை யான்" (12)

என, அவனுக்கு வயிற்றிலே வாய் இருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார். பெருந் தீனிக்காரனை, 'அவனுக்கு உடம்பெல்லாம் வயிறு - வயிற்றிலே வாய்; அவனுக்குப் பசி

எடுத்தால் வயிறு மட்டுமன்றி உடம்பு முழுவதும் சுருங்கி விடும்; அவன் உண்ட பின்பு, வயிறு மட்டுமன்றி உடம்பு முழுவதும் புடைத்துக் கொள்ளும்' — என்று கேலியாகச் சொல்வதுண்டு. ஆனால், கவந்தனுக்கோ உண்மையிலேயே வயிற்றில் வாய் இருந்தது. இந்திரன் தலையை அமுக்கத் தலை வயிற்றுக்குள் வந்து விட்டதால் ஏற்பட்ட அமைப்பு இது.

சாமுவேல் டெய்லர் காலெரிட்ஜ் (Samuel Taylor Coleridge) என்னும் ஆங்கிலப் புலவர் இயற்றிய "Ancient Mariner" என்னும் மிகவும் நீளமான பாடல் பகுதி ஒன்று இங்கே ஒப்பு நோக்கத் தக்கது. அதாவது:-

மீகாமன் (கப்பல் ஓட்டி) ஒருவன் கடலில் வெகு தொலைவிற்கு அப்பால் கப்பலை ஓட்டிச் சென்று விட்டான். விரைவில் மீளும் வாய்ப்பு இல்லை. உணவும் தண்ணீரும் தீர்ந்து விட்டன. தாங்கக் கூடிய நாள்கட்கு மேல் நாள்கள் ஓடி விட்டன. நீர் வேட்கை நாக்கைப் பின்னியது. பார்க்கும் இடமெல்லாம் உப்புத் தண்ணீர் தெரிகிறது. ஆனால் பருக ஒரு சொட்டுத் தண்ணீரும் இல்லை. அப்போது எதிர்பாரா விதமாய்த் திடீரென மழை கொட்டிற்று. அவன் மழையில் நனைந்தபடி நின்றான். உதடு (வாய்) நீர் பருகியதன்றி அவனது உடல் முழுவதும் நீர் பருகியதாம். அப்படி யென்றால், அவனது உடல் முழுவதிலும் உள்ள மயிர்க்கால் துளைகளெல்லாம் வாயாக அமைந்து நீர் உறிஞ்சின என்பது கருத்து. இந்தக் கருத்து அமைந்த அந்தப் பாடல் பகுதி வருமாறு:-

"Water water, every where,
And all the boards did shrink
Water water, every where,
Nor any droh to drink.

... ... ... ... ... ... ... ... ...

"The silly buckets on the deck,
That had so long remained,
I dreamt that they were filled with dew;
And I awoke, it rained
My lips were wet, my throat was cold
My garments all were dank;
Sure I had drunken in my dreams,
And all my body drank"

என்பது அந்தப் பாடல் பகுதி. இது ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது. கவந்தனுக்கு வயிற்றிலே வாய் என்றால், அந்த மீகாமனுக்கு உடல் முழுதும் அதாவது மயிர்க்கால்களில் எல்லாம் வாய் இருந்த தாம் — என்பதாகக் கருத்து கொள்ளக் கிடக்கிறது.

**பூதமும் பாதகமும்**

விண், காற்று. தீ, நீர், மண் என்னும் ஐம்பூதங்களால் ஆனது உடம்பு என்பர். இதை, ஐம்பூதத் திரியாக்க உடம்பு எனத் தமிழிலும், பஞ்ச பூதப் பரிணாம சரீரம் எனச் சமசுகிருதத்திலும் சொல்லுவர்:

விண்: உடம்புக் குள்ளே காற்று போகும் வெற்றிடம் உள்ளது - அது விண்.

காற்று: மூக்கு வழியாகக் காற்றை உள்ளே இழுத்தும் வெளியே விட்டும் உயிர்ப்பு நடைபெறுகிறது - இது காற்று.

தீ: உணவை எரித்து விடுகிறது; மேலே போட்ட ஈரத் துணி உலர்ந்து விடுகிறது. அமர்ந்த இடமும் உறங்கிய இடமும் கொதிக்கின்றன — இது தீ.

நீர்: உடம்பில் நீர் உள்ளது; வாயில் நீர் சுரக்கிறது - இது நீர்.

மண்: நகம், மயிர் முளைக்கின்றன; இறுதியில் மண்ணாகவோ சாம்பலாகவோ ஆய் விடுகிறது - இது மண்.

இது தொடர்பான சமசுகிருதப் பாடல் ஒன்றின் கருத்து வருமாறு:- காதலியை அடையாத காதலன் கூறுகிறான்:-

நான் இறந்து விடின், என் உடம்பில் உள்ள விண்பகுதி என் காதலி உலவும் இடத்திலுள்ள விண்ணோடு கலப்பதாகுக.

என் உடம்பில் உள்ள காற்றுப் பகுதி, என் காதலி மேல் படும் காற்றோடு கலப்பதாகுக.

என் உடம்பில் உள்ள தீ, என் காதலி பார்க்கும் முகக் கண்ணாடியில் சேர்வதாகுக.

என் உடம்பில் உள்ள நீர், என் காதலி புனலாடும் பொய்கையில் கலப்பதாகுக.

என் உடம்பில் உள்ள மண் பகுதி, என் காதலி நடமாடும் தரைப் பகுதியோடு சேர்வதாகுக.

இவ்வாறு கூறினானாம். எனவே, உடம்பு ஐம்பூதங்களின் திரிபாக்கம் என்பது பெறப்படும்.

ஆனால் கம்பர், கவந்தனின் உடம்பு ஐம்பூதங்களால் ஆனது அன்று; பொய், களவு, காமம், குடி, கொலை என்னும் ஐம்பெருங் குற்றங்களால் (பஞ்சமாபாதகங்களால்) ஆனது என்கிறார்:

"ஓதநீர் மண்ணிவை முதல ஓதிய
பூதம்ஓர் ஐந்தினில் பொருந்திற் றன்றியே
வேதநூல் வரன்முறை விதிக்கும் ஐம்பெரும்
பாதகம் திரண்டு உயிர்படைத்த பண்பினான்" (16)

நீர் மண் இவை முதலிய ஐம்பெரும் பூதங்கள். ஐந்து பெரும் தீமைகளும் திரண்ட உடம்போடு உயிர் பெற்றிருப்பவனாம் கவந்தன்.

**செவியும் வயிறும்**

திங்களையும், ஞாயிறையும் கிரகண காலத்தில் விழுங்கும் இராகு, கேது என்னும் பாம்புகள், வேலை இல்லாத போது வந்து தூங்கி ஓய்வெடுத்தற்கு உரிய அளவு பெரிய தொளை பொருந்திய காதுகளை உடையவனாம் அவன். மேலும், பொய்ம்மை உடைய கீழ் மக்கள் சென்று புகும் நரகத்தையும் ஏளனம் செய்து சிரிக்கும் வயிறு உடையவனாம்:

> "வெய்யவெங் கதிர்களை விழுங்கும் வெவ்அராச்
> செய்தொழில் இலதுயில் செவியின் தொள்ளையான்
> பொய்கிளர் வன்மையில் பிரியும் புன்மையோர்
> வைகுறும் நரகையும் நகும் வயிற்றினான்" (17)

வெய்ய வெங் கதிர்கள் என்பதை, வெய்ய கதிர், வெம்கதிர் எனப் பாகுபாடு செய்து கொள்ளல் வேண்டும்.

வெய்ய கதிர் = விரும்பத் தக்க கதிர் - இது திங்கள்.

வெம் கதிர் = வெப்பமான கதிர் - இது ஞாயிறு.

இவற்றை விழுங்கும் இராகுவும் கேதுவும், வேலையில்லாத நேரத்தில், கவந்தனின் வலக்காதில் ஒன்றும் இடக் காதில் ஒன்றுமாகப் படுத்துத் தூங்குமாம். கவந்தன் காதுகள் 'தூங்குமூஞ்சி மடம்' போல அவ்வளவு பெரிய தொளைகளை உடையனவாம். இது இலக்கியக் கற்பனையே.

கலிங்கத்துப் பரணி என்னும் நூலிலும் இவ்வாறே பேய்களின் காதுகள் பெரியன எனக் கற்பனை செய்யப்பட்டுள்ளது:

பேய்களின் உடலிலே பாம்புகள் தொங்குவது போல் பருத்த மயிர்கள் தொங்குகின்றனவாம். மூக்குத் தொளைகள்

பாசி படிந்துள்ளனவாம். காதுகளின் பெரிய துளைகளில் போய்த் தங்குவதற்காகத் துரிஞ்சில்கள் (வௌவால்கள்) சென்றனவாம். அத்துளைகளில் முன்னமேயே ஆந்தைகள் தங்கியிருந்ததால், இடம் கிடைக்காமல், துரிஞ்சில்கள் வலப் புறமும் இடப்புறமுமாக அலைந்து கொண்டிருந்தனவாம்.

"பாந்தள் நால்வன போலும் உடல்மயிர்
பாசிபட்ட பழந்தொளை மூக்கின;
ஆந்தை பாந்தி யிருப்பத் துரிஞ்சில் புக்கு
அங்கும் இங்கும் உலாவு செவியன" (140)

என்பது கலிங்கத்துப் பரணிப் பாடல். பாந்தள் = பாம்பு. நால்தல் = தொங்குதல்.

பேய்களின் செவிகளில் ஆந்தைகள் உள்ளன - இங்கே கவந்தன் செவிகளில் இராகு கேதுகள் உள்ளனவாம். சுவைகககக் கூடிய உயர்வு நவிற்சிக் கற்பனை யிது.

நரகத்தில் கிடந்து வருந்தும் பல உயிர்களினும், கவந்தனின் வயிற்றில் கிடந்து உழலும் உயிர்கள் மிகுதி யாம். அதனால், கவந்தன் வயிறு நரகின் சிறுமையை எண்ணிச் சிரிக்கின்றதாம். இதுவும் ஒரு பெரிய கற்பனை.

**கோட்டை வாயில்**

கவந்தனின் வாய் வழியாகப் பல உயிர்களும் வயிற்றுக்குள் செல்வதால், எமனின் கோட்டை வாயில் போல் வயிறு இருக்கிறதாம்.

"எமன் கொற்ற வாய்தல் செயல்குறித்த வாயினான்" (18)

கொற்றம் = வன்மை. வாய்தல் = வாயில்.

கவந்தனின் கைகளிடையே அகப்பட்ட இராம இலக்குவர் அவனை ஒரு பூதமென்றெண்ணி அஞ்சினர். இராமன் தம்பியை நோக்கி, நான் பூதத்திற்கு இரை

யாவேன் - நீ தப்பிப் போ என்கிறான். இலக்குவன் தான் இரையாவதாகச் சொல்கிறான். பின்னர் இருவரும் ஒருவாறு துணிந்து அவன் அருகில் செல்ல அவன் அவர்களை விழுங்க முயன்றான். உடனே இருதோள்களையும் இராமன் வாளால் வெட்டி வீழ்த்தினான்.

உடனே கவந்தன் தனது பழைய உரு பெற்றான். தான் தனு என்பவனின் மகன்; ஒரு முனிவரின் வைவால் அரக்க உரு பெற்றேன்; இந்திரனை எதிர்த்ததால் தலையை வயிற்றுக்குள் அவன் அழுத்திவிட்டான். இராமர் கை பட்டதும் விடுதலை கிடைக்கும் என்றான்; அவ்வாறே இன்று பெற்றேன் - என்று கூறி, திருமாலின் பிறவியே இராமன் என்பதையறிந்து பலவாறு தொழுது புகழ்ந்து போற்றினான்.

பின்னர், அவன், இருவரையும் நோக்கி, நீவிர் சபரி என்பவரை அடைந்தால் அவர் வழி காட்டுவார்; சுக்கிரீவனைத் துணையாகக் கொண்டால் அரக்கரோடு போரிட்டுச் சீதையை மீட்கலாம் என்று கூறி வணங்கி விண்வழியே சென்று விட்டான்.

பின்னர் இராம இலக்குவர் காடு மலைகளை யெல்லாம் கடந்து வெகு தொலைவு சென்று மதங்க முனிவருடைய தவக்குடிலை அடைந்தனர். பொழுதும் போயிற்று.

# 11. சபரி பிறப்பு நீங்கு படலம்

சபரி என்னும் பெண்ணின் பிறப்பு நீங்கியதைப்பற்றி - அதாவது அவள் வீடுபேறு அடைந்ததைப் பற்றியது இப்படலம். இதற்கு, சில ஓலைச் சுவடிகளில் சவுரி பிறப்பு நீங்கு படலம், சவரிப்படலம், சவரி மோட்சப் படலம் என்றெல்லாம் பெயர்கள் காணப்படுகின்றன.

இவள் சபரர் என்னும் ஒரு வகை வேட்டுவ இனத்தாரைச் சேர்ந்த பெண். மதங்க முனிவரின் தவக் குடியில் பணிபுரிந்து கொண்டிருந்தவள்.

இராம இலக்குவர் வருதற்கு முன்பே, அவர்கள் வருவார்கள் என்பதை முன் கூட்டியறிந்து; உணவுப் பொருள்கள் திரட்டிவைத்து எதிர்பார்த்துக் காத்திருந்தாள். அவர்கள் வந்தபின் விருந்து படைத்தாள். சுக்கிரீவன் இருந்த உருசிய மலைக்குச் செல்லும் வழியை நன்கு அறிந்தவளாதலின், இராமனுக்கு அதைத் தெளிவாகத் தெரிவித்தாள். பின், அறவினையினால், உடலாகிய வீட்டைத் துறந்து பேரின்ப வீட்டை எய்தினாள். இது இப்படலத்தின் சுருக்கமாகும்.

**துறக்கம் போன்றது**

இராம இலக்குவர் வந்து தங்கிய சோலை, எண்ணியவற்றை யெல்லாம் ஈயும் கற்பகக்கா போல் உண்ணுதற்கு உரிய பொருள்களை யெல்லாம் அளிக்கத் தக்கதாம்; அறம் புரிந்தோர் அடையக் கூடியதும் இன்பமே தவிரத் துன்பம் என்பதே இல்லாததுமான சுவர்க்கம் போன்று இருந்ததாம் அச்சோலை:

"கண்ணிய தருதற்கு ஒத்த
கற்பகத் தருவும் என்ன
உண்ணிய நல்கும் செல்வம்
உறுநறுஞ் சோலை, ஞாலம்
எண்ணிய இன்பம் அன்றித்
துன்பங்கள் இல்லை யான
புண்ணியம் புரிந்தோர் வைகும்
துறக்கமே போன்றதன்றே" (1)

*கண்ணிய = எண்ணிய பொருள்கள். உண்ணிய = உண்ணுதற்கு உரிய பொருள்கள் - கனி, கிழங்கு முதலியன. துறக்கம் = சுவர்க்கம். இன்பத்தைத் தவிரத் துன்பம் என்பதே இல்லாததாம் துறக்கம். இது சோலைக்கு உவமை.*

**தீது இல்லையே!**

*அத்தகைய இடத்தில், நீண்ட நாளாகத் தன்னையே எண்ணி நோற்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த சபரி என்னும் பெண்ணைக் கண்டு, தீது இன்றி நலமாக இருக்கின்றாயா என்று இன்சொல்லால் வினவினான் இராமன்:*

"அன்னதாம் இருக்கை நண்ணி
ஆண்டுநின்று அளவு இல்காலம்
தன்னையே நினைந்து நோற்கும்
சவரியைத் தலைப்பட்டு அன்னாட்கு
இன்னுரை அருளித் தீதுஇன்று
இருந்தனை போலும் என்றான்" (2)

*நலமாயிருக்கிறாயா என்று கேட்பதற்குப் பதில் - அதே பொருளில் - தீமை எதுவும் இன்றி இருக்கின்றாயா - என நலம் உசாவுவதாக எழுதுவது கம்பரது கவிமரபு.*

*கேகய நாட்டில் இருந்த பரதன், அயோத்தியிலிருந்து வந்து தூதரை நோக்கி, தந்தை நலமாயுள்ளாரா என்று*

கேளாமல், 'தீது இலன்கொல் திருமுடியோன்'' என்று வினவியதாகவே கம்பர் பாடியுள்ளார்.

இதை ஒட்டினாற்போல் மற்றோர் இடம் உள்ளது. இராம இலக்குவர் தயரதனின் மக்கள் என்பதை அறிந்த சடாயு ''வேந்தர் வேந்தன் தன் தோள் இணை வலியவோ'' அதாவது மன்னனின் தோள்கள் இரண்டும் வலிமையுடன் உள்ளனவா? என்று வினவினான். கம்பரின் நலம் உசாவல் இத்தகையது.

**தந்தையும் தாயும்**

சபரி விருந்தளித்து இராமனிடம் சொல்கிறாள்: என் தந்தையே! நீ இங்கு வருவாயென முன்னமேயே அறிவேன். என் தவம் இன்றுதான் நிறைவேறியது என்றாள். இராமன் அவளை நோக்கி, தாயே! எங்கள் களைப்புத் துயரத்தை உணவளித்துப் போக்கினாய். நீ வாழ்க! என்றான்.

> ''இருந்தனென் எந்தை நீ ஈண்டு
> எய்துதி என்னும் தன்மை
> பொருந்திட இன்றுதான் என்
> புண்ணியம் பூத்தது என்ற
> அருந்தவத்து அரசி தன்னை
> அன்புற நோக்கி எங்கள்
> வருந்துறு துயரம் தீர்த்தாய்
> அம்மனை! வாழி என்றான்'' (5)

எந்தை = என் தந்தையே! அம்மனை = என் தாயே! சபரி இராமனைத் தந்தையே என்றதும், இராமன் சபரியைத் தாயே என்றதும், வியப்பும் அன்பும் கலந்த விளிகளாகும்.

இத்தகைய விளிகளைப் பெரிய புராணத்தில் காணலாம். காரைக்காலம்மையார் சிவன் வைகும் வெள்ளி மலைக்குச் சென்றபோது, சிவன், காரைக்கால் அம்மையாரை நோக்கித்

தாயே என்ற பொருளில் 'அம்மையே' வருக என்றாராம். சிவன் அம்மையே என்று அழைக்க, காரைக்காலம்மையார் சிவனை 'அப்பா' என அழைத்தாராம். இதனைப் பெரிய புராணம் - காரைக்காலம்மையார் என்னும் பகுதியில் படித்தறியலாம். வருக:

"அருகுவந்து அணைய நோக்கி
'அம்மையே' என்னும் செம்மை
ஒருமொழி உலக மெல்லாம்
உய்யவே அருளிச் செய்தார்" (58)

"அங்கணன் அம்மையே என்றருள் செய, 'அப்பா' என்று
பங்கயச் செம்பொன் பாதம் பணிந்து வீழ்ந்
தெழுந்தார்" (59)

என்பன பாடல்கள். இலக்கிய ஒப்புமை காண்டல் என்னும் முறையில் ஈண்டு இது எடுத்துக்காட்டப் பெற்றது.

இங்கே இராமன் - அங்கே சிவன். இங்கே சபரி - அங்கே காரைக்காலம்மையார்.

சபரி, சுக்கிரீவன் இருந்த உருசிய மலைக்குச் செல்லக் கூடிய வழியினைத் தெளிவாக இராமனிடம் தெரிவித்தாள்.

**தோட்ட செவி**

கேள்வியால் துளைக்கப்பட்ட செவிகளையுடைய நல்லறிஞர்கள் தங்கள் மெய்யுணர்வினால் நுகரத் தக்க அமிழ்தத்தின் சுவையாக (சுவைபோல்) அமைந்துள்ள இராமன், வீடுபேறு அடைவதற்கு உரிய அறநெறி முறையை வெளிப்படையாக அறிவிக்கும் அறிஞர்கள் போல் சபரி காட்டிய வழித் தடங்களை யெல்லாம் கேட்டுப் புரிந்து கொண்டான்.

"வீட்டினுக்கு அமைவ தான
மெய்ந்நெறி வெளியிற்று ஆகக்
காட்டுறும் அறிஞர் என்ன,
அன்னவள் கழறிற் றெல்லாம்
கேட்டனன் என்ப மன்னோ
கேள்வியால் செவிகள் முற்றும்
தோட்டவர் உணர்வின் உண்ணும்
அமுதத்தின் சுவையாய் நின்றான்" (7)

வீடு = மோட்ச வீடு. கழறுதல் = சொல்லுதல். செவிகள் தோட்டவர் = காதுகள் துளைக்கப்பட்டவர்கள்.

இப்போது காதுகட்கு இருக்கும் துளைகள் உண்மையான துளைகள் ஆகாவாம். பல உயர்ந்த அறநெறிக் கருத்துகளால் துளைக்கப்பட்ட துளைகளே காதுகட்கு உண்மையான துளைகளாம். அதாவது, உயர்ந்த கருத்துகளை நிரம்பக் கேட்க வேண்டும். உயர்ந்த கருத்துகளால் துளைக்கப் படாத செவிகள், வேறு எளிய செய்திகளைக் கேட்பினும் அவை கேளாத செவிட்டுச் செவிகளாகவே கருதப்படும் என்கிறார் வள்ளுவர்:

"கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி" (418)

என்பது குறட்பா. இவ்வாறு கேட்ட அறிஞரே தம் மெய்யுணர்வால் கடவுள் சுவையை நுகர முடியுமாம்.

அத்தகைய சுவையாய் உள்ளவனாம் இராமன். வீடு பேற்றிற்கு வழிகாட்டும் மெய்யறிஞர் போல், சபரி சுக்கிரீவன் மலைக்கு வழி காட்டினாளாம்.

மெய்ந்நெறி வெளியிற்றாகக் காட்டுறும் அறிஞர் என்னும் தொடரில் உள்ள 'வெளியிற்றாக' என்னும் சொல் ஆய்வுக்கு உரியது.

வைணவப் பெரியார் இராமாநுசர், தம் ஆசானாகிய திருக்கோட்டியூர் நம்பியிடம் திருமந்திரங்கள் பற்றி மெய்யறிவுரை (உபதேசம்) கேட்டார். ஆசான் இதை யாருக்கும் தெரிவிக்கக் கூடாது என்றாராம் ஆனால், இராமாநுசர் மாறாக அனைவருக்கும் மறைவின்றி வெளிப்படையாய்த் தெரிவித்தாராம் - கோபுரத்தின்மேல் ஏறிநின்று கூவியுரைத்தார் என்று கூடச் சொல்வார்கள்.

இக்காலத்திலும், 'மந்திர உபதேசம்' என்னும் பெயரில் சொல்லப் படுவதை மறைவாகவே வைத்திருக்க வேண்டும் என்கின்றனர். இவர்களைப்போல் இன்றி, 'வெளியிற்றாகக் காட்டுறும் அறிஞர்' என்றார் கம்பர்.

**புண்ணியம் உருகல்**

பின்னர்ச் சபரி, தான் இயற்றிய தவயோகப் பயனால் வீடு பேறடைந்தாள்.

இராம இலக்குவர் சபரி அறிவித்த வழியாகச் சென்று காடு மலை ஆறுகளை யெல்லாம் கடந்து பம்பைப் பொய்கைப் பக்கம் சென்றடைந்தனர்.

அப்பொய்கையில் நாள்தோறும் எண்ணற்ற மக்கள் நீராடுகின்றனர். நீராடும் மக்களின் தீவினைகள் நீராடியதும் அவர்களை விட்டு அகல்கின்றன. தீவினைகளின் வெப்பம் சுடுவதினாலே, புண்ணியம் உருகி நீரானது போல் பொய்கை தோன்றிற்றாம்:

"தண்ணெனும் கானும் குன்றும்
நதிகளும் தவிரப் போனார்
மண்ணிடை வைகல் தோறும்
வரம்பிலா மாக்கள் ஆடக்
கண்ணிய வினைகள் என்னும்
கட்டழல் கதுவலாலே
புண்ணியம் உருகிற் றன்ன
பம்பையாம் பொய்கை புக்கார்" (9)

தவிரப் போனார் = கடந்து சென்றார். தூய தெய்வத் தன்மையுடைய நீர் நிலைகளிலோ ஆற்றிலோ முழுகினால் தீவினை போக நல்லறம் சேரும். சிறப்புக் காலத்தில் கடலிலும் மூழ்குவர். இதனை,

'கடலிலும் மூழ்குவர் காலம் ஒன்றினே' (துதிகதி–12)

என்னும் பிரபு லிங்க லீலைப் பாடல் பகுதியால் அறியலாம். இங்கே, பட்டினப் பாலையில் உள்ள-

''தீது நீங்கக் கடலாடியும்
மாசு போகப் புனல் படிந்தும்'' (99, 100)

என்னும் பாடல் பகுதியாலும், ஞான சம்பந்தர் தேவாரத்தில் காவிரியைப் பற்றி உள்ள-

''பாவம் தீர் புனல் பாற்றுறை''
''ஆடுவோர் பாவம் தீர்த்து திகழுமா காவிரி
நதிப்படிய நின்று பழிதீர நல்கும் கோகரணம்''

என்னும் பகுதிகளாலும் இன்ன பிற வற்றாலும் அறியலாம்.

நீராடுவோரின் பாவங்களாகிய நெருப்பு அவரை விட்டு நீங்கவே, அந்த அனலால், புண்ணியம் என்னும் பொன் உருகி நீர்த்து இருந்தாற் போல் பொய்கை நீர் இருந்ததாம்.

இத்தகைய நீரைப் புண்ணிய நீர், புண்ணியத்துறை என்பர்.

''தண்ணருங் காவிரித் தாதுமலி பெருந்துறைப்
புண்ணிய நன்னீர் பொற்குடத்து ஏந்தி
மண்ணகம் மருள வானகம் வியப்ப
விண்ணவர் தலைவனை விழுநீர் ஆட்டி''
(5: 165 - 168)

என்னும் சிலப்பதிகாரப் பாடல் பகுதியிலும், புறப் பொருள் வெண்பா மாலையில் உள்ள—

"புண்ணிய நீரில் புரையோர் ஏத்த
மண்ணிய வாளின் மறம்கிளர்ந் தன்று" (6: 27)

என்னும் பாடலிலும் புண்ணிய நீர் எனப்பட்டுள்ளது.

கம்ப ராமாயணத்திலேயே, கைகேயி இராமனைக் காட்டிற்குச் செல்லுமாறு பணிக்கும் பாடலில்,

"பூழிவெங் கானம் நண்ணிப் புண்ணியத் துறைகள் ஆடி
ஏழிரண் டாண்டின் வாவென்று இயம்பினான்
அரசன் என்றாள்"

எனப் புண்ணியத்துறை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இத்தகைய புண்ணியப் பொய்கைப் பகுதியை இராமரும் இலக்குமணரும் அடைந்தனர்.

# இந்நூலுக்குக் கருத்து வழங்கிய கருவூல நூல்கள்

குறிப்பு: கீழே முதலில் இந்நூலின் பக்க எண்ணும், அடுத்து மேற்கோள் நூலின் பெயரும் உட்பிரிவும், மூன்றாவதாக மேற்கோள் நூலின் ஆசிரியர் பெயரும் முறையே அமைந்திருக்கும்.

9 திருப்புகழ் - 'முத்தைத்தரு' - அருணகிரிநாதர்
10 திருக்குறள் - 216 - திருவள்ளுவர்
11 புறநானூறு - 101: 1,2,3 - ஔவையார்
12 கம்பராமாயணம் - பாலகாண்டம் - கையடைப் படலம் - 7 - கம்பர்
14 மணிமேகலை - 5: 123 - கூலவாணிகன் சாத்தனார்
16 தொல்காப்பியம் - மெய்ப்பாட்டியல் - 4 - தொல்காப்பியர்
17 கம்பராமாயணம் - 4-2, கம்பர்
18 இசையமுதம் - பூனை - பாரதிதாசன்.
20 சிலப்பதிகாரம் - வழக்குரைகாதை - 5, 6, 7, 11, 12 - இளங்கோவடிகள்
21 திருக்குறள் - 774
22 புறப்பொருள் வெண்பாமாலை - 7: 23: 1,2 - ஐயனாரிதனார்
22 வில்லிபாரதம் - பீழ்சுமர் - வில்லிபுத்தூரார்
23 அனிருத்தன் வரலாறு
26 குற்றாலக் குறவஞ்சி - வசந்த வல்லி நிலாவை நிந்தித்தல் - 4 - திரிகூட ராசப்பக் கவிராயர்
27 நாலடியார் - 101 - சமணமுனிவர்
27 திருவாய் மொழி - 6: 10: 9 - நம்மாழ்வார்
31 கம்பராமாயணம் - 1:22;3 - கம்பர்
31 திருக்குறள் - 1089
33 திருக்குறள் - 59
34 நன்னூல் - 18 - பவணந்தி முனிவர்

36 தொல்காப்பியம் - மெய்ப்பாட்டியல் - 5
36 செயிற்றியம் - அழுகை - செயிற்றியனார்
37 தொல்காப்பியம் - மெய்ப்பாடு - 5 - இளம்பூரணர் உரை - பேராசிரியர் உரை
37 புறநானூறு - 19:12 - 15 - பழைய உரையாசிரியர் உரை - குடபுலவியனார்
37 திருவாசகம் - அன்னைப் பத்து - 2 - மாணிக்கவாசகர்.
39 திருக்குறள் - 872
39 பிரபுலிங்க லீலை - 3:15 - சிவப்பிரகாச அடிகளார்
40 திருக்குறள் - 5
44 திருக்குறள் - 10
48 திருக்குறள் – 1054
49 திருக்குறள் - 560
49 திருக்குறள் - 134
51,52 திருக்குறள் - 235, 220, 230, 1070
52 அகநானூறு - 61: 1,2 - மாமூலனார்
53 புறநானூறு - 9: 1,5 - நெட்டிமையார்
53 சீவக சிந்தாமணி - 443 - திருத்தக்கதேவர்
55 புறநானூறு - 204: 3,4 கழைதின் யானையார்
56 பெரிய புராணம் - 975 – சேக்கிழார்
57,59 பாரதியார் பாடல் - தமிழ் - 5
59 பெரியபுராணம் - 192
59,60 - திருவிளையாடல் புராணம் - 1: 57, 58 - பரஞ் சோதியார்
60 காஞ்சிப் புராணம் - சிவஞான சுவாமிகள்
61 மனோன்மணீயம் - தமிழ்த்தாய் வாழ்த்து - சுந்தரம் பிள்ளை
64 தொல்காப்பியம் - 2: 6: 32 - தொல்காப்பியர்
64 நன்னூல் - 2-2: 25,26 – பவணந்தி முனிவர்
65 பிரபுலிங்க லீலை - காப்புப் பாடல் - சிவப்பிரகாசர்
65 பெரியபுராணம் - நாட்டுச் சிறப்பு - 2 - சேக்கிழார்
66 மணிமேகலை - பதிகம் - 10, 11, 12, - சாத்தனார்
66 திருப்புகழ் - 926 - அருணகிரி நாதர்
66 கலிங்கத்துப்பரணி - 192 - சயங்கொண்டார்

67 மனோன்மணீயம் - தமிழ்த்தாய் வாழ்த்து - சுந்தரம் பிள்ளை.
70 பட்டினப்பாலை - 7,8 கடியலூர் உருத்திரங் கண்ணனார்
70 சிலப்பதிகாரம் - 5: 165, 166 - இளங்கோவடிகள்.
70 சிலப்பதிகாரம் 10 - கட்டுரை - 8
70,71 சம்பந்தர் தேவாரம் - திருப்பாற்றுறை, திருவலஞ்சுழி, திருக்கோகரணம்.
71 திருமாலை - 894 - தொண்டரடிப் பொடியாழ்வார்.
71 பெரியபுராணம் - 404, 3577 - சேக்கிழார்.
71 விக்கிரமசோழன் உலா - 81 - ஒட்டக்கூத்தர்.
72 திருக்குறள் - 1248, 1293.
73 திருக்குறள் - 782, 783.
73 வெற்றி வேற்கை - 34 - அதிவீர ராமபாண்டியன்.
76 சம்பந்தர் தேவாரம் - புள்ளிருக்கு வேளூர்.
77 திவ்யப் பிரபந்தம் - பெரியதிருமொழி - திருமங்கையாழ்வாரின் திருப்புள்குழிப் பாடல் - 1115.
80 திருக்குறள் - 151.
80 திருக்குறள் - 297.
82 புறநானூறு - 35 - 19 - 21 - வெள்ளைக்குடி நாகனார்.
82 சிலப்பதிகாரம் - 1:1-3 - இளங்கோவடிகள்.
82 அகநானூறு - 204 1,2 - நப்பாலத்தனார்.
82 பெருங்கதை - 1:36:104 - கொங்கு வேளிர்.
82 பெருங்கதை - 42:44-46- கொங்குவேளிர்.
83 புறநானூறு - பிசிராந்தையார், பொத்தியார்.
83 தேசிங்கு - மகமத்கான் - வரலாறு.
83 திருக்குறள் - 796,
84 திருக்குறள் - 787
87 புறநானூறு - 112 - பாரி மகளிர்
87 மணிமேகலை - 6: 100 - சாத்தனார்
88 நாவுக்கரசர் தேவாரம்
88 அருணகிரியார் பாடல்
88 புறநானூறு - 227: 1, 2 & 11 - ஆடுதுறை மாசாத்தனார்

90 அதிசயக் கோவை - 91 - நல்வழி 23 - ஔவையார்
92 அத்யாத்ம இராமாயணம்
93 நன்னூல் - 19 - பவணந்தி முனிவர்
93 மலரும் மாலையும் - 43:8 - கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை
93 ஆங்கிலப் பாடல் = Lord Tennyson
94 சிலப்பதிகாரம் - 13: 168 - 170
94 மதுரைக் காஞ்சி - 359 - மாங்குடி மருதனார்
94 மலைபடு கடாம் = இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார்
95 சிலப்பதிகாரம் - கானல் வரி
96 ஆழ்வார் பாடல் - திவ்யப் பிரபந்தம்
97 சிலப்பதிகாரம் 13: 170 - 173
97 சிலப்பதிகாரம் 13: 183 - 188
100 திருக்குறள்
101 தொல்காப்பியம் - மெய்ப்பாட்டியல் - 4
102 சம்பந்தர் தேவாரம் - 3: 91: 8
103 மூதுரை - 20 - ஔவையார்
103 திருக்குறள் 334
103 திருவாசகம் - திருச்சதகம் - 19, 20 - மாணிக்கவாசகர்
104 முத்தொள்ளாயிரம் - 130 - ஆசிரியர் பெயர் இல்லை
105 பெரிய புராணம் - 290 - சேக்கிழார்
108 கவுதமப் புத்தர் காப்பியம்-18: 11-சுந்தர சண்முகனார்
109 கம்ப ராமாயணம் - மிதிலைக் காட்சிப் படலம் - 34
109 திருக்குறள் - 232
110 நல்வழி - 22 - ஔவையார்
110 நாலடியார் - 273 - சமண முனிவர்
113 மணிமேகலை - 3: 25 - சாத்தனார்
114 தொல்காப்பியம் - மெய்ப் பாட்டியல் - 7
116 நன்னூல் - இடையியல் - 16 - பவணந்தி முனிவர்
121 திருக்குறள் - 1007
124 திருக்குறள் - 57
127 குறுந்தொகை - 160 - மதுரை மருதனிள நாகன்

127 குறுந்தொகை - 177 - உலோச்சனார்
127 மனோன்மணீயம் - தமிழ்த்தாய் வாழ்த்து - சுந்தரம் பிள்ளை
127 மணிமேகலை 5: 127, 128 - சாத்தனார்
129 திருமந்திரம் - 2615 - திரு மூலர்
129 திருக்குறள் 350
131 நக்கீரர்
133 திருமுருகாற்றுப்படை
134 தொல்காப்பியம் - புறத்திணையியல் - 11
134 சிலப்பதிகாரம் - 5: 91, 92
134 புறப்பொருள் வெண்பாமாலை - 39, 96 - ஐயனாரிதனார்
135 சீவக சிந்தாமணி - 1134 - திருத்தக்கதேவர்
135 புறநானூறு - 42: 10, 11 - கோவூர் கிழார்
136 சீவக சிந்தாமணி - 248 - திருத்தக்க தேவர்
140 பிரபுலிங்க லீலை - 19: 23 சிவப்பிரகாசர்
140 புறநானூறு - 266 - 4, 5, 6 - பெருங்குன்றூர் கிழார்
142 தெனாலி ராமன் கதை
144 பழமொழி நானூறு - 8 - முன்றுறை அரையனார்
153 திருப்புகழ் - திருவதிகைப் பாடல் - அருணகிரிநாதர்
154 மூதுரை - 20 - ஔவையார்
156 ஆத்தி சூடி - 53 - ஔவையார்
159 சிலப்பதிகாரம் -
சிலப்பதிகாரம் - 5: 237 - 239
சிலப்பதிகாரம் - ஆய்ச்சியர் குரவை - உரைப்பாட்டு மடை - 1, 2, 3
160 சூலியஸ் சீசர் வரலாறு - சேக்சுபியர்
163 பிரபுலிங்க லீலை - விமலை கதி - 23 - சிவப்பிரகாசர்
166 நல்வழி - 23 - ஔவையார்
166 சிலப்பதிகாரம் - 5: 131 - 134
166 கலித்தொகை - 34: 10, 11 - சேரமான் பாலைபாடிய பெருங்கருங்கோ
167 திருக்குறள் - 56
திருக்குறள் - 166, 306

169 சிலப்பதிகாரம் - 26:225 - 230
170 கலிங்கத்துப் பரணி - போர் பாடியது - 63 - 66 - சயங்கொண்டார்
176 திருக்குறள் - 56
179 திருக்குறள் - 783, 396
179 தஞ்சைவாணன் கோவை - 59 - பொய்யா மொழிப் புலவர்
184 மூதுரை - 5 - ஔவையார்
184 திருக்குறள் - 376,377
186 " 1249, 1297
186 திரை யோவியப் பாடல்
187 கலித்தொகை - 125:1,2,3 - நல்லந்துவனார்
188 திருக்குறள் - 1088
189 நாலடியார் - 20 - சமண முனிவர்
189 திருக்குறள் - 621
195 " 305,306
198 பிரபுலிங்க லீலை - 7:49 - சிவப்பிரகாசர்
198 பிரபுலிங்க லீலை - 5:62
200 திருக்குறள் - 911
200 " - 919
201 ஆத்திசூடி - 62 - ஔவையார்
204 ஆத்திசூடி
200 கவுதமப் புத்தர் காப்பியம் - 9:5 - சுந்தர சண்முகனார்
210 நறுந்தொகை - 34 அதிவீரராம பாண்டியன்
211 நான்மணிக் கடிகை - 13 - விளம்பி நாகனார்
211 புறநானூறு - 246:13,14,15 - பூதபாண்டியன் தேவி பெருங் கோப் பெண்டு
212 முத்தொள்ளாயிரம் - 110 - ஆசிரியர் பெயர் தெரிவில்லை
212 பிரபுலிங்க லீலை - 19:7 - சிவப்பிரகாசர்
214 திருக்குறள் - 126
214 தொல் காப்பியம் - மரபியல் - 70
215 புறநானூறு - 122-8- கபிலர்

215 பெரும்பாணாற்றுப்படை - 302,303 - கடியலூர் உருத்திரங் கண்ணனார்
215 கலித்தொகை - 2 சேரமான் பாலை பாடிய பெருங் கடுங்கோ
215 சிலப்பதிகாரம் - 1- 27 - இளங்கோவடிகள்
215 ,, - 5:129
215 ஐங்குறுநூறு - 442:4,5 - பேயனார்
215 திரிகடுகம் - நல்லாதனார்
217 பாரதியார் கவிதைகள் - 22 - தமிழ் -4
217 நாலடியார் – சமண முனிவர் பிங்கில நிகண்டு-பிங்கலர்
219 சிலப்பதிகாரம் - 13:101
219 நற்றிணை - 166:9,10 – ஆசிரியர் பெயர் தெரியவில்லை
219 பெரிய புராணம் - 294 - சேக்கிழார்
221 திருக்குறள் - 345
222 பெரிய திருமொழி - 4 : 10 : 6 - திருமங்கை ஆழ்வார்
223 பட்டினப் பாலை - 271, 272 - கடியலூர் உருத்திரங் கண்ணனார்
224 திருக்குறள் - 259
225 சிலப்பதிகாரம் - 10 : 227 - 230
226 தொல்காப்பியம் - செய்யுளியல் - 122
226 கலித்தொகை - 143: 22, 23, 24 - நல்லந்துவனார்
226 திருக்குறள் - 1118
227 நற்றிணை - 284 - தேய்புரிப் பழங் கயிற்றினார்
227 சிலப்பதிகாரம் - கானல் வரி
227 கலித்தொகை – 142 - 47, 48 – நல்லந்துவனார்
227 கலித்தொகை 108 - சோழன் நல்லுருத்திரன்
227 திருக்குறள் - 1244
227 நைடதம் - பிரிவுறு படலம் - 18 – அதிவீரராம பாண்டியன்
228 திருவாசகம் - திருச்சதகம் - 14, 20 - மாணிக்கவாசகர்
228 உளவியல் கருத்து
231 தண்டியலங்காரம் - 52 - தண்டியாசிரியர்
233 திருக்குறள் - 911, 913
233 திருக்குறள் 1101, 234 - திருக்குறள் - 90

234 பிரபுலிங்க லீலை கதை - சிவப்பிரகாசர்
235 திருமந்திரம் - 'தான் அவனாகி' - திருமூலர்
235 பிரபுலிங்க லீலை - 17 : 13; 19 : 31
235 சிவஞான போதம் - அவையக்கப் பகுதி – மெய்கண்ட தேவர்
236 திருக்குறள் - 253
236 பாஞ்சாலி சபதம் - 283 - சுப்பிரமணிய பாரதியார்
239 திருமூலர் - அருணகிரிநாதர் - வரலாறுகள்
244 பெருமாள் திருமொழி - 9 : 6 - குலசேகர ஆழ்வார்
245 திருக்குறள் - 380, 169, 620
248 பாரதியார் கவிதை - பாரத சமுதாயம் - 2
249 திருக்குறள் - 190
252 திருமுருகாற்றுப்படை - 1, 2 - நக்கீரர்
255 சீவக சிந்தாமணி - 2060 - திருத்தக்க தேவர்
255 திருக்குறள் - 51
256 திருக்குறள் - 1118
262 பிரபுலிங்க லீலை - 19 : 53 - சிவப்பிரகாசர்
263 திருமுருகாற்றுப்படை - பிற்சேர்க்கை
265 திருக்குறள் - 470
266 சிலப்பதிகாரம் - காடு காண் காதை
268 அழகின் சிரிப்பு - அழகு - 1 - பாரதிதாசன்
269 பாரதியார் பாடல் - கண்ணம்மா என் காதலி - குறியிடம் தவறியது - 1
273 திருக்குறள் - 151
275 Ancient Mariner - Coleridge
278 கலிங்கத்துப் பரணி - 140 - சயங்கொண்டார்
284 பெரியபுராணம் - 58, 59 - சேக்கிழார்
285 திருக்குறள் - 418
286 இராமாநுசர் வரலாறு
287 பிரபுலிங்க லீலை - துதி கதி - 12
287 பட்டினப்பாலை - 99, 100 - கடியலூர் உருத்திரங் கண்ணனார்
287 ஞானசம்பந்தரின் தேவாரப் பாடல் பகுதிகள்
288 சிலப்பதிகாரம் - 5 : 165 - 168
288 புறப்பொருள் வெண்பா மாலை - 6 : 27 - ஐயனாரிதனார்

☆☆☆

M. K. Color Process Ms. 14. Ph. 841478